

# எழுமின்! விழிமின்!

சுவாமி விவேகானந்தர்

# எழுமின்! விழிமின்!

## சுவாமி விவேகானந்தர்
## ஹிந்து ராஷ்டிரத்துக்கு விடுத்த
## அறைகூவல்

தொகுப்பாசிரியர் :
**ஏகநாத் ரானடே**

தமிழில் :
**ஆர். கோபாலன்**

31 JAN 2002
MADRAS-600

நூற்றாண்டு விழா வெளியீடு

| | | | |
|---|---|---|---|
| முதல் பதிப்பு | - | ஜனவரி | 1963 |
| இரண்டாம் பதிப்பு | - | மார்ச் | 1963 |
| மூன்றும் பதிப்பு | - | அக்டோபர் | 1963 |
| நான்காம் பதிப்பு | - | மே | 1971 |


G/2002

536427

294.542
VIV

மூலநூல் வெளியிடுவோர் :

**ஸ்வஸ்திக் பிரகாசன்**

**27/1-B, காரன்வாலிஸ் தெரு,**
**கல்கத்தா—6. (34-4829)**

மொழிபெயர்த்து வெளியிடுவோர் :

**தேசிய மறுமலர்ச்சி வெளியீடு**

**32, சுவாமி நாய்க்கன் தெரு,**
**சிந்தாதிரிப்பேட்டை,**
**சென்னை-2.**

**விலை ரூ. 3-00**

தேசிய மறுமலர்ச்சி அச்சகம்

32, சுவாமி நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

# பதிப்புரை

நம் நாட்டினருக்கு இந்த நூலை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எத்தனையோ நூல்கள் புகழ்மிக்க அறிஞர்களால் எழுதப்பட்டு வெளி வந்திருக்கின் றன. ஆயினும், சுவாமிஜியின் கருத்துக்களையும் அறிவுரை களையும் சுருக்கமாக, ஆனால் சாத்தியமான அளவில் தெளி வாக வெளியிட வேண்டும் என்பது எங்கள் ஆவல். சுவாமிஜியைப் பற்றி வெளியாகும் நூல்களின் எண்ணிக் கையில் ஒன்று அதிகமாக இருக்கவேண்டும் என்று நாங்கள் கருதவில்லை. சுவாமிஜி எந்த லட்சியத்தைக் கொண்டிருந் தாரோ, எதற்காகத் தம் வாழ்நாளெல்லாம் அரும்பாடுபட்டு உழைத்தாரோ, உயிர் நீத்தாரோ அத்தகைய பெருமானின் திருவாக்கிலிருந்து வெளிவந்த உரைகளையே கொண்டது இந்த நூல். எனவே முற்றிலும் இது ஒரு புதிய முயற்சி யாகும்.

மலர்கள் மிகவும் அழகானவைதான். என்றாலும் பல மலர்களைத் தொடுத்துப் புனைந்த மலர்மாலை ஒருதனி மலரை விட அதிகக் கவர்ச்சியளிப்பதில்லையா? அதுபோன்றது தான் இந்தமுயற்சியும். பெருமையெல்லாம் அழகுபட மாலை யாகக் கட்டிய மனிதனுக்குப் போய் சேருவது போல சுவாமிஜியின் கம்பீரமான சக்தி வாய்ந்த பேருரைகளை, அவற்றின் உட்கருத்தும் பொருள் அழகும் குன்றாதபடி சுருக்கமாகப் புனைந்த பெருமை இதைத் தொகுத்த தொகுப் பாசிரியருக்குரியதாகும். அந்த அரும்பெரும் நற்பணியை, பக்திபூர்வமான சிரத்தையுடனும், ஆத்ம சமர்ப்பணமாகவும் கொண்டு சாதித்திருக்கிறார், இந்த நூலின் தொகுப்பாசிரிய ரான ஸ்ரீ ஏகநாத் ரானடே அவர்கள். புத்துயிர் பெற்ற நவ பாரதத்தை உருவாக்கும் ஒரே லட்சிய நோக்காக அவர் இந்தப் பணியைத் திறம்படச் செய்து தந்திருப்பதை நாம் காண்கிறோம். அவரது நாட்டுப்பற்றும், பொதுநலப்பற்றும் இந்த அரிய பணியிலே மணப்பதை நாம் தெளிவாக உணருகிறோம்.

அந்த மகா வீர புருஷரான சுவாமிஜியின் நூற்றாண்டு நிறைவு விழாவினால் புது உத்வேகமும் ஊக்கமும்

நாடெங்கும் பொங்கிநிற்கும் இந்தநேரத்தில் எங்கள்பங்காக, எங்கள் சிறு காணிக்கையாக இந்த நூலைச் சமர்ப்பிக்கிறோம். தாய்நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான ஆண்மையையும் தொண்டு, தியாகம் ஆகிய உயர் பண்புகளையும் இது வாசகர்கள் உள்ளத்திலே கிளர்ந்தெழச் செய்யுமானால் அதுவே இந்த முயற்சிக்குக் கிடைக்கும் பெரிய கைம்மாறாகும்.

இறுதியாக, சுவாமி விவேகானந்தரின் திருவாக்கிலிருந்து வெளிவந்த உரைகளை அதே வேகத்துடன், அதே உணர்ச்சிகளுடன், அதேசுவையுடன் தமிழாக்கம் செய்வது என்பது எவராலும் ஆகாத காரியம். அதற்கு சுவாமிஜியே தான் மறுபிறவி எடுத்து வரவேண்டும் ஆயினும் அந்த மகத்தான பணியை பயபக்தியோடு, மெருகு கெடாமல், பொருள் குலையாமல், அழகும் சுவையும் குன்றாமல் இயன்ற வரையில் செய்து முடித்திருக்கிறார் நண்பர் ஸ்ரீ கோபாலன். ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் பிரசாரக்காக, உண்மைத் தொண்டர்களில் ஒருவராக இருந்துவரும் அவருடைய இந்தத் தொண்டு நிரந்தரமான பாராட்டுக்குரியதாகும். வாசகர்கள் இதைக் குறைவின்றி வழங்குவார்கள் என நம்புகிறோம்.

இந்த புத்தகத்தின் முதற்பதிப்பு ஜனவரி மாதம் நூற்றாண்டு விழா நாளில் வெளிவந்தது. வாசகர்களின் பாராட்டுக்கு எடுத்துக்காட்டாக இது அறுபது நாட்களுக்குள் இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்த ஆண்டு முழுவதும் சுவாமிஜியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள். இன்னும் பல பதிப்புக்கள் வெளிவரும் வண்ணம் வாசகர்களின் வரவேற்பு இதற்குக் கிடைக்கும் என நம்புகிறோம்.

சென்னை–4,
1-3-1963

—பதிப்பாளர்

## நான்காம் பதிப்பு

வாசகர்களின் வரவேற்புக்கு நன்றி.

1—5—71

—பதிப்பாளர்

# முதற் பதிப்பின் நூன்முகம்

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விவேகானந்தரவர்கள் பிறந்த அந்தத் திருநாளைக் கொண்டாட இப்பொழுது நாடு நெடுகிலும் பரந்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆகவே மகா புருஷரான சுவாமிகளுடைய வாழ்க்கையையும், உபதேசங்களையும் மீண்டும் ஆராய்ந்து அறிவதில் ஒரு புது ஆர்வம் இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் தலையாய சீடராக விளங்கிய சுவாமிகள், கடந்த ஒரு சில நூற்றாண்டு காலத்தில், வெளி நாடுகளுக்குச் சென்று உலகுக்கு உலக சமயத்தின், சனாதன தர்மத்தின் செய்தியை மீண்டும் ஒருமுறை தெளிவாக விளக்கிக் கூறிய முதல் ஹிந்து பிரசாரகராவார். அவர் மாபெரும் தேசபக்தர்; சீர் திருத்தவாதி; ஒன்று திரட்டும் அமைப்பாளர் என்பதுடன் தேசிய மறுமலர்ச்சிக்கான சக்திகளை முதன் முதலில் முடுக்கிவிட்டு, பிரிட்டிஷ் ஆட்சியின் முதல் தாக்குதலால் சிதறுண்டு நெறி குலைந்திருந்த நாட்டைப் புனர்நிர்மாணப் பாதையில் அமைத்து வைத்தவரும் ஆவார். சமயம்தான் பாரதத்தின் ஆத்மா; அதை மையப்புள்ளியாக வைத்தால்தான் நமது ராஷ்டிரத்தைப் பயனுள்ள முறையில், சக்தி வாய்ந்த ரீதியில் புனர் நிர்மாணித்து அமைக்க முடியும் என்பதை நாட்டுக்கு உணர்த்தி மறுமலர்ச்சியுற்ற பாரதத்துக்கு அஸ்திவாரம் அமைத்தவர் அவரே.

அந்த மாவீரருக்கு அஞ்சலி செலுத்த மக்கள் ஆயத்தமாகி, விழாக்-கமிட்டிகள் வேலை செய்யத் துவங்கப்போகும் வேளையில் நாடு திடீரெனத் தாக்கி உலுக்கப்பட்டு எழுந்தது. ஈவிரக்கமற்ற, நம்பிக்கைத் துரோகம் இழைக்கும் ஒரு வெறிக் கும்பல் வடக்கே நுழைந்ததால் நம் நாடு தனது எல்லாச் சக்திகளையும் அவசரமாகத் திரட்டிக் குவித்து, அவ்வெதிர்ப்பைச் சமாளிக்க நேரிட்டுள்ளது. எதிரி நய வஞ்சகமாகப் போருக்கும் எதிர்ப்புக்கும் ஏற்பாடு செய்து வந்துள்ளான்; நட்புப்பேச்சு, உடன்பாடு காண்பது என்ற போர்வையில் நமது பகுதிகளுக்குள் நுழைந்துவிட்டான். இது ஒரு புறம். மறு புறத்தில் நமது சொந்த ஆட்சியாளர்கள் கனவு உலகத்தில், கற்பனையுலகில் சஞ்சரிக்கிற போக்கில் ஆழ்ந்திருக்கிறார்கள். இதன் காரணமாக இமயமலையைக் கடந்து முழுச் சக்தியுடன் பகிரங்கமாக எதிரி தாக்கியபொழுது நாடு முற்றிலும் எதிர்பாராத நிலையில் இருந்து இருந்துவிட்டது.

நமது ராஷ்டிரம் இப்படியிருக்கும் நிலையில் சுவாமி விவேகானந்தரின் உபதேசச் செய்திக்கு ஒரு புது மகத்துவம் ஏற்பட்டுள்ளது: ஏனெனில், அவர் அளித்த உபதேசச் செய்தியானது சக்தியை ஆதாரமாகக் கொண்டது—உடல் வலிமை, உள்ள வலிமை, மனத்திண்மை

ஆகியவற்றை அது வலியுறுத்துவதாகும். இவ்வாறு எல்லா அம்சங்களிலும் வலிமைபெற்று விளங்குவது இந்த வேளையில் மிக முக்கியமான தேவை. சுவாமி விவேகானந்தர் தம் நாட்டினருக்கு 'இரும்பாலான தசையும், எஃகினாலான நரம்பும், அதனுள்ளே இடியை உருவாக்குகிற அதே பொருளால் உண்டாக்கப்பட்ட உள்ளமும் உறைந்திருக்க வேண்டும்' என்று விழைந்தார். தமது நாட்டினர் சக்தியும் ஆண்மையும், க்ஷத்திரிய வீரியமும் அத்துடன் பிரம்ம தேஜஸும் வாய்க்கப்பெற்றிருக்க வேண்டும்; அவற்றை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். அபாயமும் நெருக்கடியும் கலந்த இன்றைய நிலையில் குறிப்பாகத் தேவைப்படுகிற குணங்கள் இவைகளே. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுகபோகமே பெரிதென்ற வாதங்களாலும், வாழ்வு பற்றிய உலகாயுத நோக்காலும் நாம் கவரப்பட்டு, குறிப்பாக இக் குணங்களை உதாசீனம் செய்து விட்டோம்.

சுவாமிகளின் உபதேச மொழிகளை நாம் சுருங்கக் கூறின் அவர் நமக்கு ஒரு மகா மந்திரத்தை உபதேசம் செய்ததாகக் குறிப்பிடலாம். அதுதான் தெய்வ நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் தேவை என்பது. தன்னம்பிக்கையானது உபநிடதப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டது. "நான் ஆத்மா; என்னை வாள் வெட்டாது; ஆயுதங்கள் துளைக்காது; நெருப்பு எரிக்காது; காற்று உலர்த்தாது. நான் சர்வ சக்திமான்; எல்லா முணர்ந்தவன்" என்று உபநிடதம் முழங்குகிறது. இந்த மந்திரத்தைத்தான் சுவாமி விவேகானந்தர் சதாசர்வ காலமும் தமது நாட்டினருக்கு ஆணியடித்தாற்போலப் புகட்டினார். அவர் பேசியவற்றிலெல்லாம், அவரது அருள்மொழியிலெல்லாம் இந்த மந்திரமே முழங்கிற்று. இதுவே அவரது உபதேச கீதத்தின் பல்லவியாக இருந்தது. இவ்வுண்மையின் உட்பொருளை நாம் புரிந்துகொண்டு அதற்குத் தக வாழ்வதற்கான தக்க தருணம் இதுவே. அவ்வாறு நாம் செய்தால் உலகிலுள்ள எந்தச் சக்தியும் நமக்குத் தீங்கிழைக்க முடியாது.

அன்றியும் மோட்சத்தை எய்த விழையும்போது நமது தர்மத்தை நாம் நிறைவேற்றவேண்டும் என்று அவர் மேலும் கூறுகிறார். உண்மையில் பார்க்கப்போனால் தர்மமில்லாமல் மோட்சமில்லை. நமது சமயமானது வலிமை குலைந்து தாழ்வுறும் கட்டத்தில், இந்த உண்மையை மீண்டும் வலியுறுத்த வேண்டிய தேவையிருந்தது. கிருகஸ்தனின் வாழ்க்கையை அவர் புனரமைத்து அதற்கு ஒரு புதிய கௌரவத்தை அளிக்கிறார். "வீரர்களால் மட்டுமே உலகில் இன்பம் அனுபவிக்க முடியும்" என்று சாஸ்திரங்கள் முழங்குவதை அவர் நினைவுபடுத்தி "வீரம் காட்டுக" எனத் தூண்டி விடுகிறார். நாம் வாழ்கிற

காலத்திலுள்ள தர்ம நெறி நிலையை நாம் ஒப்புக்கொண்டு அதற்குட்பட்டு வேலை செய்யவும் வாழவும் வேண்டுமென்று சாஸ்திரம் விதிப்பதை அவர் நினைவிற் கொள்ளச் சொல்லுகிருர். "நாம் இருக்கிற சந்தர்ப்பச் சூழ்நிலையை இருக்கிறபடியே ஒப்புக்கொண்டால்தான் நாம் அவற்றை செம்மைப் படுத்தி உயர்த்த முடியும். ஆதலால் சாஸ்திரத்தின் கட்டளையை மறக்கக்கூடாது" என சுவாமி விவேகானந்தர் அறிவுறுத்துகிருர். "சந்தர்ப்பத்துக்குத்தக சாம, தான, பேத, தண்டம் எனும் நால்வகை அரசியல் உபாயங்களைக் கைக்கொண்டு உனது எதிரிகளை வென்று உலகில் இன்பம் அனுபவி. அப்படிச் செய்நால்தான் நீ தர்ம நெறிப்படி நடப்பவனுவாய். இல்லையேல், உனக்கு ஏற்படும் அவமானங்களைச் சகித்துக் கொண்டு, உன்னை உதைக்கவும், மிதிக்கவும், நினைக்கிறவன் தருகிற உதை மிதிகளை ஏற்று நீ வாழ்வாயானுல் உனது வாழ்க்கை இவ்வுலகில் நரகத்தை யொத்ததாக ஆவதுடன் மறு உலக வாழ்வும் அவ்வாறே ஆகிவிடும். மானங்கெட்ட வாழ்வு வாழ்வாய்" என்று சாஸ்திரம் விதிக்கிறது.

இன்று நாடானது தனது சுதந்திரத்தையும், தனது வருங்காலத்தையும், தனது ஸ்வர்தர்மத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுதந்தரிக்க வேண்டிய நெருக்கடியான சரித்திரக் கட்டத்தில் வாழ்கிறது. இந்த வேளையில் நமது நரம்புகளில் முறுக்கேற்றவும், நமது உறுதிக்கு வலிவூட்டவும்இந்த உபதேசம் மிக அரியதாகும்; உறுதுணை புரிவதாகும். "பாரதத்தில் தேசிய ஒற்றுமையென்பது சிதறிக்கிடக்கும் அதன் ஆத்மீக சக்திகளை ஒன்று குவிப்பதாகும்" என்று அவர் அடிக்கடி உபதேசித்தார். "ஒரே ஆத்மீக ராகத்துக் கிசையத் தாளமிடுகிற உள்ளங்களை இணைப்பதே பாரதத்தில் ராஷ்டிர ஒற்றுமையை அமைப்பது ஆகும்" என்று அவர் கருதினர். குறிப்பாக இன்றையகாலத்தில், எல்லாவித ஒற்றுமைகளும் தேவையாக உள்ள இவ்வேளையில், நாட்டின் சக்திகளை யெல்லாம் துரிதமாக ஒன்று குவிக்க வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில், அவரது இவ்வுபதேசத்தை நாம் மிகக் கவனமாகக் கருத்திற் கொள்ளவேண்டும்.

ஹிந்து ராஷ்டிரத் துக்கு சுவாமிகள் அருளுகிற மற்ரெரு உபதேசமும் உண்டு. தமோ குணத்தை நாம் கைவிட வேண்டுமென அவர் கூறுகிருர். ஏனெனில் தமோ குணமானது பலவீனத்தையும், மூடநம்பிக்கையையும், அற்பத்தனத்தையும், சிறு விஷயங்களுக்காகப் பரஸ்பரச் சண்டை பூசல்களையும் உண்டாக்குகிறது. இந்த இழிகுணங்களைக் கைவிட்டுவிட்டு ஒற்றுமை, சங்கம் சேர்த்தல் ஆகிய பாறை போன்ற அடிப்படைகளின் மீது மகாசக்தியை நாம் நிர்மாணிக்க வேண்டும். இவ்வாறு தனித்தனியான நமது விருப்பங்களை ஒன்றுக் கூட்டி இணைத்து, நமது பழங்காலத்தையும் மிஞ்சக் கூடிய சிறப்பு

யர்வு வாய்ந்த வருங்காலத்தை நாம் நிர்மாணிக்க வேண்டும். சுவாமி களின் இந்தச் செய்தி இன்றையக் காலத்துக்குத் தேவையானதாகும். ஏனெனில் நம்மை இன்று சூழ்ந்துள்ள அபாயத்தைப் போல ஓர் அபாயநிலை நேரும்போதுதான் ஒவ்வொரு நாடும் தனது பலாபலங் களைக் கணக்கெடுத்து ஆத்மசோதனை செய்து பார்த்துக் கொள்ளும்.

இன்றையக் காலத்தின் இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கா கவே இந்நூலை வெளியிட முயற்சித்தோம்.

சுவாமிகளின் கட்டுரைகளும் அருளுரைகளும், தத்துவம், சமயம், சமூக இயல் ஆகிய விஷயங்களைப்பற்றி மட்டுமின்றி கலை, சிற்பம், சங் கீதம் முதலிய விதவிதமான விஷயங்களைத் தாங்கியவை ஆகும். இங்ஙு னம் உலகியல் துறை, ஆத்மீகத்துறை ஆகிய இவ்விரு துறைகளையும் சார்ந்து அவை உள்ளன. ஆனால் நமது பழங்காலச் சிறப்பை உணர்த்துகிற சில பகுதிகளையும் நமது இன்றையத் தாழ்நிலையின் காரணங்களை ஆராய்ந்து நம்மை சிறப்பான வருங்காலத்தை நோக்கி உந்தித் தள்ளி, அதற்காக நம்மை ஆயத்தப் படுத்துகிற பகுதிகளை மட்டுமே தேர்ந்தெடுத்திருக்கிறோம். அதுவே நமது திட்டவட்ட மான சிறிய உத்தேசமாகும். இப்படிப் பொறுக்கியெடுக்கப்பட்ட பகுதி கள் கோர்வையான முழு வடிவம் பெறுகிற வகையில் ஒழுங்குற அமைக்கப்பட்டுள்ளன. எந்தெந்தப் பகுதிகள் பொதுவான கருத்தை வெளியிடுகின்றனவோ, மூலக் கட்டுரையின் அமைப்பிலிருந்து எடுப் பதால் அர்த்தம் கெட்டுப் போகாதோ, அப்படிப்பட்ட பகுதிகளையே தேர்ந்தெடுத்துள்ளோம்.

இந்த வெளியீடு ஒரு தொகுப்பாக மட்டுமே இருக்க வேண்டு மென்பது நம் உத்தேசம். சுவாமிகளின் உபதேசச் செய்தியை எவ் வித விளக்கமோ, கருத்துரையோ இன்றி அவரது சொந்தச் சொற்க ளாலேயே தொகுத்துப் புத்தகமாக சமர்ப்பிக்க வேண்டுமென்பது நம் கருத்து. ஆகையால், புத்தகம் முழுவதுமே சுவாமிகளின் சொந்தச் சொற்களாலேயே உருவாகியுள்ளது. தலைப்புகள், துணைத்தலைப்புகள் கொடுத்தது, விஷயங்களை ஒரு வடிவத்தில் தொகுத்து இணைத்தது, இவைமட்டுந்தான் தொகுப்பாளரின் வேலை. சில இடங்களில் தெளிவு ஏற்படுத்துவதற்காக உரிச்சொல்லுக்குப் பதிலாகப் பெயர்ச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்த நூலுக்கான விஷயங்கள் அத்வைத ஆசிரமத்தார் வெளியிட்ட "சுவாமி விவேகானந்தரது கருத்துக்களின் முழுத்தொகுப்பு" (Complete works of Swamy Vivekananda) "கீழை நாட்டு மேலை நாட்டுச் சீடர்கள் தயாரித்த சுவாமி விவேகானந்த சரித்திரம்" சுவாமிகளின்வாழ்நாளிலே துவக்கப்பட்ட பத்திரிகைகளான "பிரபுத்த பாரத", "பிரம்ம வாதின்", "உத் போதன்" ஆகியவற்றிலிருந்தும் மற்ற சமகாலப் பத்திரிகைகளி லிருந்தும் சேகரிக்கப்பட்டன.

ஆகையால், தனித்தனியான ஒவ்வொரு பகுதியும் மேற்கோள்குறி (Quotation Mark) யின்றி ஏன் உள்ளது என்பதன் காரணம் வாசகர்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஏனெனில் ஒரு விதத்தில் இந்த நூல் முழுவதுமே மேற்கோள் குறிக்குட்பட்டுத்தான் அமைந்துள்ளது.

இந்தப் புத்தகம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாகத்திலும் உள்ள விஷயத்தைக் குறிக்கிற தனித்தலைப்பு ஒவ்வொரு பகுதிக்கும் தரப்பட்டுள்ளது. அவையாவன: (1) உபதேச மொழி (2) பிரசங்கங்கள், உரைகள், கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த சில பகுதிகள் (3) சில கண்ணோட்டங்களும் கண்டனங்களும் (4) ஆண்மை ஊட்டுதல் அல்லது ஊழியர்களை உருவாக்குதல்.

## (1) உபதேச மொழி

நமது ராஷ்டிரத்தின் நிலையைப்பற்றி சுவாமிகள் கொண்டிருந்த கருத்துக்களை முக்கியமானதாகக் கொண்டது இப்பகுதி. அவர் வெளியிட்ட கருத்துக்களைக் கொண்ட ஒரு ஆராய்ச்சிப் பகுதியாகும். முன் குறிப்பிட்டுள்ளது போல் இந்தப்பகுதி யானது எண்ணிறந்த அவரது கருத்துரைகள், பேச்சுக்கள், கடிதங்கள், கட்டுரைகள் இவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். பலவிடங்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்டதானாலும் கூட, வண்ணக் கற்களால் அமைந்த சித்திரம் போல, அவை பொருந்த இணைக்கப்பட்டு சுவாமிகளின் சிந்தனை தங்குதடையற்ற ஓட்டத்துடன் செல்லுகின்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

## (2) பிரசங்கங்கள், உரைகள், கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த சில பகுதிகள்

இந்த பாகத்தில் தொடுக்கப்பட்டுள்ளவை, சில முக்கியமான விஷயங்களைப் பற்றி சுவாமிகள் கொண்டிருந்த கருத்தை வாசகர்களுக்கு உணர்த்தும் நோக்கத்துடன் தரப்பட்டுள்ளன. "உபதேச மொழி" ப் பகுதியுடன் தொடர்புடைய இக்கருத்துக்களை முதல் பாகத்தில் பொருத்தி வைக்க முடியவில்லை. அல்லது அங்கு மேற்போக்காக அவை கூறப்பட்டிருக்கும்.

## (3) சில கண்ணோட்டங்களும் கண்டனங்களும்

இந்தச் சில பகுதிகள் வாசகர்களுக்கு சுவாமிகளின் இதயத் துடிப்பையும், அவரது மனம் வேலை செய்த முறையையும் தெளிவாகச் சித்தரித்துக் காட்டுவதற்காகத் தொகுக்கப்பட்டவையாகும். சுவாமிகள் விஷயங்களை அமைதியாகவும், திட்டமிட்ட ரீதியிலும் அணுகி ஆய்ந்தார். ஆனால் அதற்குப் பின்னணியாக மகத்தான ஆவேசமும், உணர்ச்சியும் அவரை ஆட்டுவித்தன. இந்தப் பகுதி, வாசகர்களுக்கு அதன் தெளிவான காட்சியைக் காட்டும்.

## (4) ஆண்மை ஊட்டுதல் அல்லது ஊழியர்களை உருவாக்குதல்

சுவாமிகள் தமது கட்டுரைகளிலும் கடிதங்களிலும் தேச நிர்மாணப் பணியில் பங்கு கொள்ள விருப்பமுள்ள ஊழியர்கள் அல்லது "காரியகர்த்தர்கள்" என்பவர்களுக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட மன அமைப்பைப்பற்றியும், மனதுக்கும் அறிவுக்கும் தேவையான சில குணங்களைப் பற்றியும் குறிப்பிட்டார்.

உயர்ந்த படிப்பினையாக அமைந்த அந்தச் சொற்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. (1) ஒற்றுமை இயக்க அமைப்பு (2) தலைமை தாங்கும் குணம் (3) உண்மையான ஆசிரியருக்கான பண்புகள் (4) வெற்றிகரமான வாழ்க்கையின் ரகசியம் அல்லது பணி புரிகிற கலையும் அதன் விஞ்ஞான ரீதியான முறையும் என்பன அத்தலைப்புகள். சுவாமிகளின் உபதேசச் செய்திகளை நடைமுறையில் கொண்டு வரும் பகுதியாக அவ்விஷயங்கள் அமைந்திருப்பதால் அவை இந்நூலில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

புத்தகம் தொகுப்பதற்காகக் குறிப்பாகச் சில தலைப்புகளை மட்டுமே தேர்ந்தெடுத்ததால் விஷயம் குறைவாக இருப்பினும், ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஏராளமான அரிய கருத்துக்கள் கிடைத்தன கிடைத்த எல்லா விஷயங்களையும் சேர்த்துவிட வேண்டுமென்ற ஆசையை எதிர்த்து, தொகுப்பாளர் மல்லுக்கு நிற்க வேண்டியிருந்தது' ஏனெனில் கிடைத்துள்ள எல்லா அரிய விஷயங்களையும் தொகுத்து வெளியிடுவாதாயின் வாசகர்களில் பலராலும் வாங்க முடியாதபடி புத்தகத்தின் விலை அதிகமாக யிருக்கும். ஆனால் தொகுப்பாளரும் வெளியிடுவோரும் புத்தகம் கூடிய மட்டில் குறைந்த விலையுடனிருக்க வேண்டுமென விரும்பினர். அப்போதுதான் அதிகமான மக்கள் சுவாமிகளின் சிந்தனையாலும் கருத்துரையாலும் பயனடைய முடியும் என்பது எண்ணம். எனினும் இந்தப் புத்தகம், சுவாமிகளின் உபதேசங்களை முழு அளவில் படிக்க வேண்டுமென்ற விருப்பத்தைத் தூண்டுமென எதிர்பார்க்கிறோம். வாசகர்களில் பலர் அத்வைத ஆசிரமத்தார் வெளியிட்டுள்ள "சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களின் முழுத் தொகுப்பு" நூல்களைப் படிக்க இயல்பாகவே விரும்புவார்களென எதிர்பார்க்கிறேன்.

26, காரன் வாலிஸ் தெரு,
கல்கத்தா–6,

—ஏகநாத் ரானடே.

# பொருளடக்கம்

## முதல் பாகம்

## உபதேச மொழி

நமது புண்ணிய பூமி—அதன் புகழோங்கிய பண்டைக் காலம் ... 17
முற்காலம் முதல் தற்காலம்வரை ... 27
சமயமே, பாரதத்தின் ஆன்மா ... 38
மறுமலர்ச்சிப்பணி-அதன் அடிப்படையும் போக்கும் ... 47
மறுமலர்ச்சிப் பெரும்பணிக்கான களத்தில் இறங்குகிறவர்களுக்கு ... 73
மறுமலர்ச்சிப் பெரும்பணி-1. களத்தைத் தயாரித்தல் ... 85
மறுமலர்ச்சிப் பெரும்பணி-2. செயலுக்கான திட்டம் ... 102

## இரண்டாம் பாகம்

## பிரசங்கங்கள், உரைகள், கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த சில பகுதிகள்

ஹிந்து சமயத்தின் வரம்புகள் ... 121
உன் மதத்தைக் காக்க எழுந்து நில் ... 124
பாரதப் பெண்டிரின் பண்டைய, நிகழ்கால எதிர்கால வாழ்க்கை ... 124
பாரதப் பெண்ணினமும், ஐரோப்பியப் பெண்ணினமும் ... 129
சாயனாசாரியரே மாக்ஸ் முல்லராகப் புனர்ஜன்மமெடுத்தார். இது அர்த்தமற்ற வெற்றுக் கற்பனையா? ... 131
ஆரிய, ஐரோப்பிய நாகரிகங்களின் அமைப்பு முறை ... 132

## மூன்றும் பாகம்

## சில கண்ணோட்டங்களும் கண்டனங்களும்

**கண்ணோட்டங்கள்:**

சரித்திர உண்மையை மையமாகக் கொண்டிருந்தாலும் கொண்டிராவிடினும் ஒவ்வொரு புராணமும் ஒரு பேருண்மையைக் கற்பிக்கிறது ... 139

எதிர்ப்பு இயக்கங்கள் எப்பொழுதும் தாம் எதிர்க்கிற
வெறுக்கிற கொள்கைகளுடன் மடிந்து விடுகின்றன ... 140
தனிமனிதனை உயர்த்துங்கள்; தேசமும் அதிலுள்ள
ஸ்தாபனங்களும் தாமே உயரும் ... 142
இறைவனுடன் தொடர்பு கொள்வது தனிப்பட்ட ரீதியில்
அல்லாமல் கூட்டு ரீதியில் முடியாது ... 143
விக்கிரகங்களை உடைக்கிறவர்களிடையே
விக்கிரக ஆராதனை ... 144
தற்செயலாக சமாதி நிலையை எய்துவது
அபாயகரமானது ... 145

கண்டனங்கள்:

ஆங்கில மோஸ்தரில் ஆழ்ந்த என் நாட்டு
சகோதரர்களே! ... 147
வருக! மனிதராய் விளங்குக! ... 149
உங்களைத்தான், பாரத நாட்டின் மேல் வருப்பினரே! ... 149
சைதன்யரின் 'தெய்விக அன்பு' எப்படி
உருக்குலைந்து விட்டது! ... 152
கிறிஸ்தவப் பாதிரிகளே! கிறிஸ்துவின் பெயரால் ஹிந்து
சமயத்தைத் தூற்றுவதை நிறுத்துங்கள் ... 153
மனிதனுக்கும் பணத் தெய்வத்துக்கும் நீங்கள் ஒருங்கே ...
தொண்டாற்ற முடியாது ... 155
முகம்மது நபி ஒருவர் மட்டுமே உண்மையான தேவதூதர்
என்பது இஸ்லாம் சமயத்துக்கே முரணான பேச்சாகும் ... 158
தன்னைத்தானே கட்டிப் போட்டுக் கொண்டிருக்கும்
இளம் ... 159

## நான்காம் பாகம்

## ஆண்மை ஊட்டுதல் அல்லது ஊழியர்களை உருவாக்குதல்

ஒற்றுமை இயக்கம் ... 163
தலைமை தாங்கும் திறமை ... 168
உண்மையான ஆசிரியரின் பண்பு ... 171
உண்மையிலேயே வெற்றிகரமான வாழ்வின் ரகசியம்
அல்லது
வேலை செய்வதில் உள்ள விஞ்ஞான முறையும் கலையும் ... 174



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

முதல் பாகம்

# உபதேச மொழி

ஓம்

# தெய்விகச் செய்தி

•

**நான் கூறுவதைக் கவனத்திற் கொள்க:**

"ஹிந்து" என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே உங்களுக்குள்ளே சக்தி மின் அலையைப் போலப் பாய வேண்டும். அப்பொழுதுதான்—அப்பொழுது மட்டுமே— நீங்கள் "ஹிந்து" ஆவீர்கள்.

ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதன், எந்த நாட்டின னாயினும், நமது மொழியோ அல்லது வேற்று மொழியோ பேசினாலும், அந்தக் கணமே உங்களுக்கு மிகமிக நெருங்கிய வனாகவும் இனியவனாகவும் ஆகிவிட வேண்டும். அப்பொழுதுதான்—அப்பொழுது மட்டுமே—நீங்கள் "ஹிந்து" ஆவீர்கள்.

ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதனுக்கு ஏற்படும் துன்பம், உங்களது உள்ளத்தை வந்து தாக்கி, உங்களது மகனே துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான்—அப்பொழுது மட்டுமே— நீங்கள் "ஹிந்து" ஆவீர்கள்.

மகா புருஷனான குரு கோவிந்த சிங்கனைப் போல ஹிந் துக்களுக்காக எதையும் தாங்கச் சித்தமாக இருக்கும்பொழுது தான்—அப்பொழுது மட்டுமே—நீங்கள் ஹிந்து ஆவீர்கள். ஹிந்து சமயப் பாதுகாப்புக்காகத் தனது ரத்தத்தைச் சிந்திய பிறகும், தனது குழந்தைகள் போர்க்களத்தில் கொல்லப்படுவதைக் கண்ட பிறகும்-ஆகா! அந்த மகா புருஷனான குருவின் உதாரணந்தான் என்னே! யாருக் காகத் தமது உதிரத்தையும், தமது நெருங்கிய மக்களின், இனியவர்களின் உதிரத்தையும் சிந்தினாரோ அவர்களோ தம்மைப் புறக்கணித்துக் கைவிட்ட பிறகும்கூட—அவர், அந்தப் படுகாயமுற்ற சிங்கம்—களத்திலிருந்து ஒய்ந்து வெளிவந்தது, தெற்கே வந்து மடிய! நன்றி கெட்டுத் தம் மைக் கைவிட்டவர்களைக் குறித்து ஒரு பழிச்சொல்லைக்கூட, அவர் தப்பித்தவறியும் வெளியிடவில்லை,

•

நான் கூறுவதைக் கவனத்திற் கொள்க:

உங்களது நாட்டுக்கு நன்மை செய்ய நீங்கள் நினைத்தால் நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு குரு கோவிந்தசிங்கனாக ஆகவேண்டும். உங்களது நாட்டு மக்களிடையே ஆயிரக்கணக்கான குறைபாடுகளை நீங்கள் காணலாம். ஆனால் அவர்களது ஹிந்து இரத்தத்தைக் கவனியுங்கள். உங்களைத் தாக்கிப் புண்படுத்த அவர்கள் நினைத்தாலும் அவர்களே உங்கள் முதல் வழிபாட்டிற்குரிய தெய்வங்கள். அவர்களில் ஒவ்வொருவரும் உங்களை நோக்கிச் சாப மாரி பொழிந்தாலும் நீங்கள் அவர்களுக்கு அன்பு அருள் மொழிகளையே திருப்பியளிக்க வேண்டும். உங்களை அவர்கள் வெளியே துரத்தினால் மகா சக்திசாலியான அந்தச் சிங்கத்தைப் போல குரு கோவிந்த சிங்கனைப் போல, வெளியே வந்து அமைதியாக இறக்க வேண்டும். ஹிந்து என்ற பெயர் தாங்க அத்தகைய மனிதனே தகுந்தவன். அத்தகைய லட்சியத்தையே நாம் எப்பொழுதும் நம் முன் வைத்திருப்போமாக.

நம்மிடையே யிருக்கும் வேறுபாடுகளைக் குழி தோண்டிப் புதைத்து விடுவோம். நாற்றிசையிலும் இந்த அபாரமான அன்புணர்ச்சி அலையைப் பரப்புவோம்.

# நமது புண்ணிய பூமி
# அதன் புகழோங்கிய பண்டைக் காலம்

இந்தப் பூவுலகில் புனிதமான புண்ணிய பூமி என்று உரிமை கொண்டாட ஏதாவது ஒரு நாடு இருக்குமானால், பூவுலக ஆன்மாக்கள் தம் கர்ம பலன்களைக் கழிக்கவேண்டிய ஒரு நாடு என்று இருக்குமானால், இறைவழியை நோக்கிச் செல்லும் ஒவ்வோர் ஆன்மாவும் தன் இறுதி வீடாக வந்தடைய வேண்டிய நாடு என்று ஒன்று இருக்குமானால், மனிதகுலம் அன்பின் சிகரத்தை, பரந்த உள்ளத்தின் உச்ச நிலையை, தூய்மையின் உயரத்தை, அமைதியின் எல்லையை, எல்லாவற்றுக்கும் மேலாக ஆத்மீக உள்நோக்கின் சிகரத்தை எட்டிய நாடு என்று ஒன்று இருக்குமானால்-அது தான் பாரதமாகும்.

### பண்டைக்கால வரலாறு :

பாரதத்தின் பண்டைக்கால வரலாறு முழுவதும் பிரம்மாண்டமான சக்திகளின் பலதரப்பட்ட செயல்வகைகளும், கட்டுக்கடங்காத ஆர்வமும், பல்வேறு சக்திகளின் ஒடுக்க முடியாத தாக்குதல்களும் எதிர்த்தாக்குதல்களும் இணைந்து நிறைந்து விளங்குவதாகும். இவையனைத்துக்கும் மேலாக, தெய்வீகப் பரம்பரை ஒன்றின் ஆழ்ந்து பரந்த சிந்தனைக் கருவூலங்களால் நிரம்பியதும் ஆகும். சரித்திரம் என்ற சொல்லுக்கு, மன்னர்கள், சக்கரவர்த்திகளின் வரலாறு என்றும், வெற்றுக் கதை என்றும், சமூகத்தின் சித்திரம் என்றும் மட்டுமே பொருள் கொள்ளுவதனல் —அவ்வப்பொழுது ஆண்ட மன்னர்கள் தமது தீய விருப்பங்கள், இறுமாப்பு, பேராசை முதலிய தீய குணங்களால் சமூகத்தை ஒடுக்கிய விவரங்களும், மன்னர்களின் நல்ல குணங்கள், தீய குணங்களால் விளைந்த செயல்களின் விவரங்களும் அந்தச் செயல்களால் சமூகத்தில் என்ன விளைவு ஏற்பட்டது, என்ற விவரங்களும் ஆகிய இவைதான் சரித்திரம் எனக்கருதப் படுமானல்- அத்தகைய வரலாற்று நூல்கள் பாரதத்துக்குக் கிடையாது என்று கூறிவிடலாம். ஆனல் குறிப்பிட்ட சில மன்னர்கள், சக்கரவர்த்திகள் இவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களையும் அவர்களுடைய வம்சாவளியையும் விட, பாரத நாட்டின் எண்ணற்ற சமய இலக்கியங்களின் ஒவ்வொரு வரியும், கடலையொத்த பாடல்களும், தத்துவ ஞான, விஞ்ஞான நூல்களும் நமக்கு உலகில் நாகரீகம் உதயமாவதற்கு முன்பே மனிதக் கூட்டம்

பசி தாகத்தினுலும் ஆசை மோகத்தினுலும் தூண்டப்பட்டு எவ்வாறு, எந்தெந்த நிலையிலிருந்து படிப்படியாக முன்னேறி, மேலே சென்றது என்பதை ஆயிரம் மடங்கு தெளிவாகக் காட்டுகின்றது. அவர்களுடைய உள்ளத்தை அழகு கொள்ளைகொண்டது. அந்த மக்கள் தொகுதிக்கு மகத்தான, வெல்லுதற்கரிய, அறிவுச் சக்தி இருந்தது. பலவிதமான உணர்ச்சிகள் அவர்களுடைய உள்ளங்களில் அலை வீசின. அவர்கள் சிறப்பான ஒரு மேல் நிலையைப் பலவித வழித் துறைகளின் மூலம் எட்டிப் பிடித்தார்கள். இயற்கையுடன் அவர்கள் பற்பல நூற்ருண்டுகளாக நடத்திய போர்களில் எண்ணிலடங்காத வெற்றிகள் பெற்றனர். அப்பொழுது அவர்கள் திரட்டிய வெற்றிக் கொடிகள் மலைபோல் குவிந்தன. ஆனல் அவை சமீப காலமாக, பாதகமான சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் கிழிந்து சிதைந்து போயின. காலப்போக்கினுல் அவை மக்கி மாய்ந்தன. இருப்பினும் பண்டைப் பாரதத்தின் புகழ், பெருமைகளை அவை உலகுக்குப் பறைசாற்றுகின்றன.

ஆரிய இனம் :

இந்த மக்கள் இனத்தவர் மத்திய ஆசியாவிலிருந்தோ வட ஐரோப்பாவிலிருந்தோ வட துருவப் பிரதேசங்களிலிருந்தோ கிளம்பி மெல்ல முன்னேறி, படிப்படியாகக் கீழே வந்து கடைசியாகப் பாரதத்தில் குடிப்புகுந்து அதைப் புனிதப் படுத்தினுர்களா அல்லது பாரதமாகிற புனித பூமிதான் அவர்களது ஆதித் தாயகமா என்று அறிய நமக்கு இப்பொழுது தக்க சான்றுகள் கிடையா.

அல்லது மிக விரிந்துள்ள இந்த இனம், பாரதத்திற்குள்ளோ அல்லது வெளியிலோ வசித்திருந்து இயற்கையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, தனது ஆதி வீட்டிலிருந்து குடி பெயர்க்கப்பட்டு, காலப் போக்கில் ஐரோப்பாவிலும் மற்ற இடங்களிலும் குடிபுக வேண்டி வந்ததா? அந்த மக்கள் நிறம் வெளுப்பா, கறுப்பா? அவர்களது கண்கள் நீலமா, கறுப்பா? அவர்கள் தலைமயிர் தங்க நிறமா, கறுப்பு நிறமா? இதுபோன்ற விவரங்களை யெல்லாம் நிரூபிக்க இப்பொழுது போதுமான ஆதாரம் கிடையாது. ஆனல் விதிவிலக்காக ஓர் ஆதாரம் மட்டும் உண்டு. அதாவது சில ஐரோப்பிய மொழிகளுடன் சமஸ்கிருதத்துக்கு ஆழ்ந்த உறவு உள்ளது என்பதே அது.

அதேபோன்று இன்றைய நவீனகால பாரத மக்கள் அனைவரும் கலப்பின்றித் தூய்மையாக அந்த இனத்தின் வழி வந்தவர்கள் தானு? இவர்களின் இரத்தக் குழாய்களில் முந்தைய இனத்தின் இரத்தத்தில் எவ்வளவு அம்சம் ஓடுகிறது? அல்லது அந்த அளவுக்காவது

இரத்தபாசம் இக்குலத்துக்கு இருக்கிறதா?—இதுபோன்ற கேள்வி களுக்கு முடிவான பதில் கிடைப்பது எளிதல்ல.

இருப்பினும் இதைப்பற்றி நாம் முடிவு கட்டாததால் அதிகமாக எதையும் இழந்து விடவில்லை.

ஓர் உண்மையை மட்டும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எங்கே நாகரிக சூரியன் முதலில் உதயமாயிற்றோ, ஆழ்ந்த சிந்தனை தனது முழுச் சிறப்புடன் எங்கு முதலில் வெளிப்பட்டதோ, அந்த உள்ளத்தில் பிறந்த மைந்தர்கள் நூறாயிரக்கணக்கானவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அந்த இனத்தின் சிந்தனைகளையும் உணர்ச்சி களையும் குலச்செல்வமாகக் கொண்டாடுகிறவர்கள் இன்றும் அவற்றின்மீது உரிமை கொண்டாட ஆயத்தமாக இருக்கிறார்கள்.

மலைகளையும், நதிகளையும் கடந்து, தூரம், காலம் ஆகியவற்றின் எல்லைகளையெல்லாம் தாண்டி, பாரதச் சிந்தனையாகிற இரத்தம் உலகிலுள்ள பிற நாடுகளின் உதிரக் குழாய்களில் ஓடிப் பாய்ந்துள்ளது; இன்றும் பாய்ந்து வருகிறது. அது சிலசமயங்களில் தெளிவான முறையிலும் வேறு சில வேளைகளில் யாரும் அறியாத நுண்ணிய முறையிலும் ஓடுகின்றது. உலகிலுள்ள பண்டைய ஞானச் செல்வத்தின் பெரும்பங்கு ஒருவிதத்தில் நமக்கே சொந்த மானதாக இருக்கும்.

**பகுத்தறியும் உள்ளம் :**

"நாஸத : ஸத் ஜாயதே" — இல்லாததிலிருந்து (ஒரு பொருளிலிருந்து) இருப்பது என்பது உண்டாகாது.

எது இருக்கிறதோ அதற்கு, இல்லாத ஒன்று காரணமாக ஆக முடியாது. ஒன்றும் இல்லாததிலிருந்து ஏதோ ஒன்று வரமுடியாது. சர்வ வல்லமையும் பெற்ற காரணகாரிய விதி இல்லாத காலமோ, இடமோ இருந்ததேயில்லை. ஆரிய இனம் எத்தனை தொன்மை வாய்ந்ததோ அத்தனை தொன்மையானது இந்தக் கொள்கை. ஆதி கவிகளாலும், தத்துவ ஞானிகளாலும் நிலைநாட்டப்பட்டுள்ள இந்த எல்லைக் கல்லின் மீதுதான் ஹிந்து இன்றைக்கும் தன் வாழ்வின் திட்டத்தை எழுப்புகிறான்.

ஆரம்ப நிலையில் இருந்த இனத்தவருக்கு விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் ஓர் ஆர்வம் இருந்தது. அது விரைவிலேயே துணிச்சலாகப் பகுத்தாராய்ந்து பார்க்கும் திண்மை பெற்றது. தொடக்கத்தில் ஆரம்பகாலச் சிற்பியின் கை நடுக்கத்தைப் போல

இந்த முயற்சி இருந்தாலும், நாளாவட்டத்தில் அந்த முயற்சியானது ஒழுங்கான சாஸ்திரமாக உருப்பெற்று, துணிச்சலான முயற்சியாக மாறி, வியப்பூட்டக்கூடிய பெரும் பலன்களைத் தந்தது.

இந்த இனத்தவரின் துணிவு தம் யாககுண்டங்களின் ஒவ்வொரு கல்லையுமே துருவி ஆராயத் தூண்டியது. புனிதமான நூல்களின் ஒவ்வொரு சொல்லையும் அலசிப் பார்த்து, ஒட்டியும் இணைத்தும் பொடிப்பொடியாக்கியும் பார்க்க வைத்தது; சடங்குகளை ஓர் ஒழுங்கில் அமைத்தது; மாற்றியமைத்தது; சந்தேகித்தது; மறுத்தது, அல்லது விளக்கியது.

அந்தப் பகுத்தறிவால் தமது கடவுளைக் கீழ்மேலாக மாற்றினார்கள். எங்கும் நிறைந்த– எல்லாம்வல்ல– எல்லாமறிந்த உலகப் படைப்பாளனை, பிரபஞ்சத்தையே படைத்த கடவுளுக்கு– தொன்று தொட்டுச் சொர்க்கத்தில் வாழும் தந்தையான கடவுளுக்கு – இரண்டாந்தர இடந்தான் தந்தார்கள்; அல்லது அவனை உபயோகமற்றவனாகக் கருதி வெளியே எடுத்து வீசி விட்டார்கள்; பிறகு உலகச் சமய மொன்றை, (புத்த சமயத்தை) இன்றும் பெரும்பான்மையோர் பின்பற்றும் சமயத்தை, அவனில்லாமலே துவக்கினார்கள்.

பலவிதமான யாகமேடைகளைக் கட்டுவதற்காகக் கற்களைப் பல வடிவ முறைகளில் அமைத்து வைத்ததன் மூலம் "ஜியோமிதி" விஞ்ஞானத்தை வளர்த்தார்கள். தமது வழிபாட்டையும், அர்க்கிய ஆகுதிகளையும் சிறிதும் காலந்தவறாமல் நடத்துவதற்காக முயன்ற போது எழுந்த வான சாஸ்திர அறிவால் உலகைத் திடுக்கிட வைத்தார்கள்.

கணித சாஸ்திரத்தை வளப்படுத்த முற்காலத்தவரோ நவீன காலத்தவரோ செய்த பணியில் எந்த இனத்தவரையும் விட அதிகமாக ஆரிய இனத்தவரின் பங்கினை அமைய வைத்தது அந்தப் பகுத்தறிவு. ரசாயன சாஸ்திரம், மருந்தில் உலோகங்களின் கலவை, சங்கீத ஒலிகளின் ஒழுங்குமுறை, நரம்பு வாத்தியக் கருவிகளைப் புதிதாகக் கண்டுப்பிடித்தல், ஆகிய இந்த ஞானமெல்லாம் நவீன ஐரோப்பிய நாகரீகத்தை வளர்க்கப் பெரிதும் துணை செய்தன.

அழகான கற்பனை நீதிக் கதைகள் மூலம் குழந்தை உள்ளத்தை வளர்க்கும் விஞ்ஞானக் கலையை அப்பகுத்தறிவு கண்டுபிடிக்க வைத்தது. நாகரீகம் வாய்ந்த ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒவ்வொரு குழந்தையும் அதனை இன்று தனது குழந்தைப் பள்ளியிலோ, பாலர் பள்ளியிலோ கற்று, வாழ்க்கை முழுவதும் அந்த நினைவு முத்திரையைக் கொண்டு செல்கிறது.

**கவியின் ஞானதிருஷ்டி:**

அந்த இனத்தின் இந்தக் கூர்மையான பகுத்தாய்வுக்கு முன்னும் பின்னும், பட்டு உறைபோட்டாற்போல, மற்றொரு மகத்தான, சிறப்பான மனச்சக்தி ஒன்று உள்ளது. அது தான் கவியின் ஞான திருஷ்டி. அந்த இனத்தின் சமயம், அதன் தத்துவம், அதன் வரலாறு, அதன் அறநெறி அதன் அரசியல் அறிவு ஆகியவையெல்லாம் கவிஞனின் சொல்லோவியமாகிற பூந்தொட்டிகளில் மலரும்படி செய்யப்பெற்றன. மொழிகளிலே அதிஅற்புதமான சமஸ்கிருதம் (அல்லது பண்பட்டமொழி) அந்தத் தத்துவங்களை விளக்கவும், எளிதில் கையாளவும் மற்றெல்லா மொழிகளையும்விட நன்றாகத் துணை புரிந்தது; கணிதத்திலுள்ள கடினமான உண்மைகளை வெளியிடுவதில் கூட, கேட்பதற்கு இனிமையான கவிதைகள் துணை செய்தன.

ஹிந்து இனத்தினை உள்ளூர உந்தி உருவாக்கப் பெரிதும் காரணமாக இருந்த இரு பெரும் சக்திகளாக இந்தப் பகுத்தறியும் சக்தியும், கவிஞனின் திவ்ய திருஷ்டியுமே இருந்தன. தேசீய ஒழுக்கத்துக்கு இந்த இரண்டும் ஆதாரச் சுருதிபோல் அஸ்திவாரமாக அமைந்தன. இந்த இரண்டின் இணைப்புச் சேர்க்கைதான் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டு மேலே செல்ல இந்த இனத்தை முன் தள்ளுகிறது. இது தான் அவர்களது ஞான ஆராய்ச்சியின் ரகசியம். கொல்லர்கள் உற்பத்தி செய்யும் ரம்பத்தைப் போல அவர்களது கற்பனைச் சக்தி இருந்தது. அந்த ரம்பத்தால் இரும்புப் பாளங்களை அறுக்க முடியும். ஆனால் அதே சமயத்தில் வட்டமாக அதனை வளைக்கவும் முடியும். அத்தகைய ரம்பம்போல இருந்தது அவர்களது சிந்தனை.

வெள்ளியிலும் தங்கத்திலும் அவர்கள் கவிதைகளைச் செதுக்கினார்கள். நகைகளின் எழிற்கோவை, பிரமிப்பூட்டும் சலவைக்கல் அற்புதங்கள், வர்ண ஜாலங்களில் இன்னொளி, அருமையான ஆடையணிகள் – இவையெல்லாம் இந்த உலகத்துக்கல்ல, கனவுலகத்தின் தேவபூமிக்கே சொந்தமெனத் தோன்றும். இவற்றுக்கெல்லாம் பின்னணியாக, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, இந்தத் தேசியச் சிறப்புக் குணம் வேலை செய்து வந்துள்ளது.

கலைகளும் விஞ்ஞானங்களும், ஏன், வீட்டு வாழ்க்கையில் காணப்படும் கசப்பான நிகழ்ச்சிகள் கூட, ஏராளமான கவிதைக் கருத்துக்களில் தோய்ந்திருக்கின்றன. இவை வளர்ந்து முன்னேறின. புலனுணர்ச்சிகள், புலன்களுக்கு மேற்பட்ட ஒன்றைத் தொடும்

அளவுக்கு உயர்ந்து சென்றன. எது உண்மை என்று மதிக்கப் படுகிறதோ, அதுவே ரோஜா இதழ் நிறம் போல் கவித்திறன் மூலம் ஒரு மாய எழில் பெறுகிறது.

இந்த இனத்தின் ஆரம்பக்காலக் காட்சிக்கூட இந்தகுணப் பண்பு ஏற்கெனவே அதனிடம் இருந்ததைக் காட்டுகிறது. இந்தக் குணப் பண்பைத் தன் கைக் கருவியாக அது ஓரளவுக்குப் பயன் படுத்தியது. வேதங்களில் குறிக்கப்படும் இந்த இனத்தின் வர்ணனையைக் காண்கிறோம். அந்நிலையை அடையுமுன் பலவித சமய, சமூக அமைப்புக்களைத் தாண்டி அது முன்னேறி வந்திருக்க வேண்டும்.

வேத காலத்தில் ஒழுங்கான முறைப்பட்ட தெய்வ வடிவங்களைக் காண்கிறோம். விரிவான சடங்குகள் இருந்தன. பல்வேறு தொழில்கள் இருந்ததால் வழி வழியான ஜாதிகளாகச் சமூகம் பிரிக்கப்பட வேண்டிய அவசியமிருந்தது. எத்தனையோ விதமான தேவைப் பூர்த்திகளும், வாழ்க்கையில் பலதரப்பட்ட சுகபோகச் சாதனங்களும் அப்பொழுதே இருந்தன.

**ஆத்மீகத்தின் ஊற்றுமுகம்**

ஞானமானது வேறு எந்த நாட்டுக்கும் செல்லுமுன் இந்தப் புராதன பூமியையே தனது வீடாகக் கொண்டிருந்தது. கடலிலே கலக்கத் துள்ளியோடும் இந்த நாட்டு நதிகள் இந்த நாட்டு மக்களிடையே ஆத்மீக வெள்ளம் எப்படிப் பெருக் கெடுத்துப் பாய்கிறது என்பதை உணர்த்துகின்றன. இந் நாட்டில் சிரஞ்சிவியாய் எழுந்து நிற்கும் இமயமலை படிப்படியாக மேலெழுந்து, பனிமுடி அணிந்து, உயர்ந்து வானுலக ரகசியங்களை நோக்குவது போல உள்ளது. உலகில் எல்லாக்காலத்திலும் வாழ்ந்துள்ள ரிஷிகளிலே, மகத்தானவர்களின் திருவடிகள் நடமாடிய பாரதம் இதுவேதான்.

இங்கே தான் முதன் முதலில் மனிதனின் தன்மையைப்பற்றியும், ஆத்மாவின் இயல்பைப்பற்றியும் ஆராய்ச்சிகள் துவங்கின. "மனிதன் நித்தியமான, சிரஞ்சீவியான ஆத்மா ஆவான்; அனைவருக்கும் மேலான ஒரு கடவுள் உண்டு; அவர் இயற்கையிலும், மனிதனுக் குள்ளும், எங்கும் உறைகிறார்" என்ற உண்மைகள் இங்குதான் கண்டு பிடிக்கப்பெற்றன. சமயத்துக்கும் தத்துவ சாஸ்திரத்துக்கும் சிகரமாக விளங்கக் கூடிய பல உன்னதமான கருத்துக்களும் இங்கு தான் அதிஉச்ச நிலையை அடைந்துள்ளன. ஆத்மீக ஞானமும் தத்துவ ஞானமும் இந்த நாட்டிலிருந்துதான் பொங்கித் தாவும் அலை போல மீண்டும் மீண்டும் வெளியே பாய்ந்து உலகத்தை வெள்ளக் காடாக்கின.

## தெய்வநிலை எய்தப் போராட்டம்

எத்தகைய அற்புதமான நாடு! இந்தப் புனித நாட்டில் ஒருவன் நிற்பானாயின், அவன் அந்நியனாயினும் அன்றி இந்த மண்ணின் மகனாயினும் சரி, அவனது ஆத்மா கொடிய விலங்கு நிலைக்குத் தாழ்ந்திராவிடில் அவன் உயிர்த்துடிப்புள்ள சிந்தனை உள்ளம் தன்னைச்சுற்றிலும் சூழ்ந்துள்ளதை உணருவான். அது இந்தப் பூமியின் மிகச்சிறந்த, மிகத்தூய்மையான மைந்தர்களின் உயிர்ச் சிந்தனையாகும். அந்த மைந்தர்கள் நூற்றாண்டுகளாக மனிதனை மிருக உணர்ச்சி நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்தப் பணி புரிந்தார்கள். அவர்களது முதல் தோற்ற காலத்தைக் கண்டுப் பிடிப்பதில் சரித்திரம் தோல்வியுற்று விட்டது.

இந்த நாடு தத்துவ ஞானத்துக்குப் புனிதமான இடம். நீதிநெறி ஒழுக்கத்துக்கும் ஆத்மீகத்துக்கும் புனிதமான இடம். தனது மிருக சக்திகளுடன் இடையறாது போராடுகிற மனிதனுக்குச் சிறிது ஓய்வு தந்து, சிந்திக்கத் தூண்டுகிற புனிதமான பூமி இது. மிருக இயல்பாகிற ஆடையை மனிதன் கழற்றி எறிந்து விட்டு அமர ஆத்மாவாகப் பிறப்பு, இறப்பு அற்றவனாகவும் எப்பொழுதுமே அருள் பெற்றவனாகவும் விளக்கம் பெற்று எழுந்து நிற்கத் தேவையான பயிற்சிக் களமாக விளங்கும் இந்த நாடு, புனிதமான நாடாகும். மகிழ்ச்சியாகிற பாத்திரம் என்றுமே நிரம்பியிருந்த நாடு இது. அதை விடத் துன்பமும் நிரம்பித் ததும்பியிருந்தது இங்கே. கடைசி முடிவாக மனிதன் இவையெல்லாம் வெறும் பொய்த்தோற்றம் எனக் கண்டுக் கொண்டான். முதன் முதலில், இங்கேதான் அவன் அதனைக் கண்டான். இங்கேதான் முதன் முதலாக மனிதன் தனது காளை இளமையிலே, போகத்தின் மடி மீது கிடந்த போது சக்தி நிரம்பிப் புகழ் ஓங்கியிருந்த நிலையில், மாயையின் விலங்குகளைத் தகர்த்தெறிந்து வெளியேறினான்.

இங்கே, இந்த மனித சமூகக் கடலுக்கிடையே, சுகம்-துக்கம்; பலம்-பலவீனம்; செல்வம்-ஏழைமை; மகிழ்வு-வருத்தம்; சிரிப்பு-கண்ணீர்; வாழ்வு-சாவு ஆகிய பலமான கடுஞ்சுழல்கள் ஒன்றையொன்று தாக்குவதன் இடையில் எல்லாம் உருகி இணைந்து அமர சாந்தியும் அமைதியும் நிலவும் வண்ணம் துறவறத்தின் சிம்மாதனம் எழுந்தது.

இங்கே, இந்த நாட்டில் வாழ்வையும் மரணத்தையும் பற்றிய பெரும் பிரச்சினைகளை முதன் முதலில் ஆணித்தரமாகப் பற்றிப் பரிகாரம் கண்டார்கள். வாழ வேண்டுமென்ற தாகத்தைப்பற்றி ஆராய்ந்தார்கள். வாழ்க்கையை எப்படியாவது பாதுகாப்பதற்காக

மனிதன் பித்து பிடித்துப் போராடி அதன் விளைவாகத் துன்பங்களைச் சேர்த்துக் குவித்துக் கொண்டான். இந்த பிரசினையும் ஆராயப்பட்டுத் தீர்க்கப்பட்டது. இந்த நாட்டில் இப்பிரச்னை தீர்க்கப்பட்டது போல அதற்கு முன்னர் எங்குமே தீர்க்கப்பட்டதில்லை. இனி வருங்காலத்திலும் தீர்க்கப்படாது. ஏனெனில், இங்கேதான் உண்மையாக உள்ள ஒரு பொருளின் தீய நிழல்தான் வாழ்க்கை என்று கண்டு பிடித்தார்கள்.

இந்த ஒரு நாட்டில்தான் சமயம் நடைமுறையில் வாழ்ந்து காட்டக்கூடியதாக, உண்மையானதாக அமைந்தது. பிற நாடுகளில் மக்கள் ஆண்களும் பெண்களும் தம்மைவிடப் பலம் குறைந்த சகோதரர்களைக் கொள்ளையடித்து வாழ்க்கையின் போகங்களை அனுபவிப்பதற்காகக் கண்மூடித்தனமாகப் பாய்கிறார்கள். ஆனால் இந்த நாட்டின் மனிதர்கள், ஆண்களும் பெண்களும் பேருண்மை ஒளியைத் தம் அனுபூதிச் செல்வமாகப் பெறுவதற்காகவே துணிவுடன் இறங்குகிறார்கள்.

இங்கே, இந்த நாட்டில் மட்டுமே, மனித உள்ளமானது மனிதர்களை மட்டுமல்ல, பறவைகளையும் மிருகங்களையும், செடி, கொடிகளையும் தன்னுடன் சேர்த்து அரவணைக்கும் அளவுக்கு விரிவடைந்தது. மிக உயர்ந்த கடவுளர் முதல் சிறு தூசுவரை மிக உயர்ந்தோரும் மிகத் தாழ்ந்தோரும், எல்லோருமே மிக விரிவாக அகன்று, நீண்டு, ஓங்கி, வளர்ந்த மனித உள்ளங்களில் இடம் பெற்றுள்ளனர். அத்துடன் இங்கு மட்டுந்தான் பிரபஞ்சத்தை ஆராய்ந்து, எல்லாமே தொடர்புடைய ஒரே பொருள்தான் எனவும், பிரபஞ்சத்தின் நாடித் துடிப்பு, தம் சொந்த நாடித் துடிப்புத்தான் என்றும் கண்டார்கள்.

**“சாது ஹிந்து”**

நமது தாய் நாட்டிடம் உலகம் பட்டுள்ள கடன் அபாரமானது. ஒவ்வொரு நாடாக எடுத்துப் பார்த்தால் பொறுமையான, “சாது ஹிந்து” விடம் பட்டுள்ள கடனைப்போல இந்தப் பூமியிலுள்ள எந்த ஓர் இனத்திடமும் கடன் படவில்லை. “சாது ஹிந்து” என்ற சொல் வசைச் சொல்லாகச் சில சமயங்களில் பயன்படுத்தப் பெறுகிறது. ஆனால் நிந்தனைச் சொல்லில் எப்பொழுதாவது அருமையான ஓர் உண்மை மறைந்திருக்குமாயின், அதுதான் இந்தச் “சாது ஹிந்து” என்ற சொல். எப்பொழுதுமே “சாது ஹிந்து” கடவுளின் அருள் பெற்ற குழந்தை ஆவான்.

முற்காலத்திலும், இக்காலத்திலும், மகத்தான கருத்துக்கள் பலம் வாய்ந்த மகத்தான இனத்தவரிலிருந்து தோன்றி வந்துள்ளன. முற்காலத்திலும் இக்காலத்திலும் ஆச்சரியகரமான கருத்துக்கள் ஓர்

இனத்திலிருந்து மற்றோர் இனத்துக்குக் கொண்டு சேர்க்கப்பட்டு வந்துள்ளன. முற்காலத்திலும், இக்காலத்திலும், பேருண்மைகள், சக்தி ஆகியவற்றின் விதைகள், முன்னேறிச் செல்லும் தேசீய வாழ்க்கை அலைகளால் வெளி நாடுகளில் விதைக்கப்பெற்றன. ஆனால் நண்பர்களே, கவனியுங்கள்! அக்கருத்துக்கள் யுத்தபேரிகைகளுடன், அணிவகுத்துச் செல்லும் போர்ப் படைகளின் துணையுடன் சென்று பரவின. ஒவ்வொரு கருத்தையும் இரத்த வெள்ளத்தில் ஊறவைக்க வேண்டியிருந்தது. அந்தக் கருத்துக்களின் ஒவ்வொரு சொல்லையும் பின்தொடர்ந்து லட்சக் கணக்கானவர்களின் புலம்பலும், அநாதையாக விடப்பட்டவர்களின் அலறலும், விதவைகளின் கண்ணீரும் உடன்சென்றன. முக்கியமாக மற்ற நாடுகளின் வரலாறு இதனைக் கற்பிக்கின்றது.

கிரீஸ் என்ற நாடு உண்டாவதற்கு முன்பே, ரோம் நாட்டைப் பற்றி எவருமே சிந்திக்காத பொழுதே, இப்பொழுதிருக்கும் ஐரோப்பியர்களின் மூதாதையர்கள் காடுகளில் வசித்து, தமது உடலில் நீல நிறம் தீட்டி வாழ்ந்தபொழுதே இங்கு உயர்ந்த நாகரிகம் இருந்தது. அதற்கும் முன்னரே, சரித்திரம் எட்டிப் புக முடியாத அவ்வளவு பழங்காலத்திலிருந்து, அன்று முதல் இன்று வரை, ஒன்றன் பின் ஒன்றாகப் பல உயர்ந்த கருத்துக்களும் எண்ணங்களும் பாரத நாட்டிலிருந்தும் அணிவகுத்து வெளிச் சென்றன. ஆனால் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆரம்பத்தில் சாந்தியும் முடிவில் வாழ்த்தும் சேர்த்துக் கூறப்பட்டது. நாம் ஒரு போதும் பிறநாடுகளைப் பலாத்காரமாகப் பிடித்ததே இல்லை. அதன் காரணமாகப் பேரருள் பெற்று வாழ்கின்றோம்.

**அமர பாரதம்:**

முன்னொரு காலத்தில் பெரிய கிரேக்கப் படைகள் அணிவகுத்து வரும் ஒலிகேட்டு உலகம் நடுங்கியது. ஆனால் கிரேக்கர்களின் அந்தப் பழமையான நாடு அடியோடு அழிந்து விட்டது. பின்னால் ஒரு கதை சொல்லக்கூட எஞ்சியிராத நிலையில், நிலப்பரப்பிலிருந்து அது மறைந்து விட்டது. ஒரு காலத்தில் ரோம சாம்ராஜ்யத்தின் கழுகுக் கொடி உலகில் பெருமை வாய்ந்த தேசங்கள் அனைத்தின் மீதும் பறந்து கொண்டிருந்தது. எங்கே பார்த்தாலும் ரோம் நாட்டின் சக்தியை மக்கள் உணர்ந்தார்கள். மனித குலம் தலைத்தூக்க முடியாதபடி அச்சக்தி அழுத்தி வந்தது. ரோமின் பெயர் கேட்டு உலகமே நடுங்கியது. ஆனால் அவர்களது காபிடலைன் மலை (புராதனக்கோயில்) இன்று இடிபாடுகளின் குவியலாகத்தான் இருக்கிறது. சீஸர்கள் ஆண்ட இடத்தில் சிலந்திகள் வலை பின்னுகின்றன. மற்ற நாடுகளும் இது போலவே புகழ்ச் சிறப்புடன் தோன்றி

மறைந்தன. சில மணிநேரம் ஆரவாரக் களிப்புடன், சுக போகம் பெருகி வாழ்ந்து, பிறரை ஆக்கிரமித்துத் தீய முறையான தேசிய வாழ்வில் மூழ்கி, நீர்ப்பரப்பின் மீது தோன்றி மறையும் நீர்க்குமிழிகள் போல மாய்ந்தன.

ஆயினும் நாம் வாழ்கிறோம். இன்று மனு மீண்டும் வந்தால் கூடத் திகைப்படைய மாட்டார். இந்த நாடு அவருக்குப் புதிதாகத் தோன்றாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒழுங்குறச் சீர் படுத்தப்பெற்று, சிந்தித்து அமைக்கப்பட்டு வந்த அதே சட்டங்கள் சிற்சில இடங்களில் மட்டும் மாற்றம் பெற்று இன்னும் புழக்கத்தில் உள்ளன. நமது முன்னோர்களின் நுண்ணிய பகுத்தறிவின் விளைவாகவும் பல நூற்றாண்டுகளின் அநுபவ வாயிலாகவும் தோன்றிய பழக்க வழக்கங்கள் சாசுவதமானவைபோல் அப்படியே யிருக்கின்றன. அன்றியும் காலம் போகப்போக, அவற்றைத் துரதிர்ஷ்டம் தாக்கத் தாக்க—அந்தத் தாக்குதல்கள் ஒரே ஒரு பலனைத்தான் உண்டாக்கினதாகத் தோன்றுகிறது—அப்பழக்க வழக்கங்கள் மேலும் வலிமை பெற்று, நிலைத்துவிட்டன. இதற்கெல்லாம் மையப்புள்ளி, இரத்த ஓட்டத்தின் ஊற்றான இருதயம், தேசிய வாழ்க்கையின் ஊற்று, நமது சமயம்தான். உலகில் பெற்ற அநுபவத்துக்குப் பிறகு நான் கூறுவதை நம்புங்கள்.

பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட அதிர்ச்சிகளையும். நூற்றுக் கணக்கான அன்னியப் படையெடுப்புக்களையும், சமாளித்துத் தாங்கிய அதே பாரதம்தான் இன்றும் உள்ளது. உலகிலுள்ள எந்த ஒரு பாறையையும் விட உறுதியுடனும் இறவாத சக்தித் துடிப்புடனும் அழிக்க முடியாத ஜீவனுடனும் அது பழையபடியே வாழ்கிறது. அதன் வாழ்க்கை ஆத்மாவின் வாழ்க்கையைப் போன்று ஆரம்பம் முடிவு அற்று, அமர நிலையில் இருக்கிறது. அப்படிப்பட்ட நாட்டின் புதல்வர்கள் நாம்.

# முற்காலம் முதல் இக்காலம் வரை

பாரதத்தின் சமூகச் சட்டங்கள் எப்பொழுதுமே குறிப்பிட்ட சில காலத்துக்கு ஒரு தடவை மகத்தான மாறுதல்களுக்கு உள்ளாகி வந்துள்ளன. இந்தச் சட்டங்கள் ஆரம்ப காலத்தில் பிரம்மாண்டமான ஒரு திட்டத்தின் சேர்க்கையாக இருந்தன. காலப்போக்கில் இத்திட்டம் தானே மெல்ல மலர்ந்து விரிவதாக இருந்தது. பண்டைய பாரதத்தின் மகான்களான தீர்க்கதரிசிகள் நெடுங்காலத்துக்குப் பிறகு நிகழப் போவதை முன்னேக்கிப் பார்த்தார்கள். அவர்களது ஞானத்தைப் புரிந்துகொண்டு பாராட்ட உலகம் இன்னும் பல நூற்றுண்டுகள் காத்திருக்க வேண்டும். அந்தத் தீர்க்க தரிசிகளின் வழித்தோன்றல்களே இந்த ஆச்சரியகரமான திட்டத்தின் முழு நோக்கத்தையும் புரிந்து பாராட்டத் திறனற்று இருக்கிருர்கள்! இந்தத் திறமையின்மைதான் பாரதத்தின் சீர்கேட்டுக்கு ஒரே காரணமாகும். முந்தையர்களின் சட்டதிட்டங்களும் பழக்கவழக்கங்களும் கெட்டவை என்பதனுல் தாழ்வு வரவில்லை. அவற்றை உரிய முறையில் கடைசி வரையில் கடைப்பிடிக்காததுதான் சீரழிவுக்குக் காரணம்.

### இன்றைய பாரதத்தின் சித்திரம்:

பூரித்து எழுந்து ஆக்கிரோஷத்துடன் பாய்ந்தோடும் ஆழமான பெரிய நதிகளின் கரையோரங்களிலே, தேவலோகத்து நந்தவனங்களையும் பழிக்கும் எழில்மிகு உய்யான மலர்ச்சோலைகளும், வானளாவ ஓங்கி நிற்கும் அற்புதமான கலையழகு மிக்கப் பளிங்கு மாளிகைகளும் விளங்க, அவற்றின் முன்னும் பின்னும் அருகிலும் கூரைகள் சிதைந்து, மண் சுவர்கள் இடிந்து, எலும்புக் கூடுபோல் தெரியும் மூங்கில்கள் நீட்டிக் கொண்டிருக்கும் குடிசைகள் குப்பல் குப்பல்களாகக் காணப்பெறுகின்றன. சிறுவரும் முதியோரும் கந்தையணிந்து இங்குமங்கும் நடமாடிக் கொண்டிருக்கிருர்கள். நூற்றுண்டுகளாக அநுபவித்துவரும் மனச் சோர்வும் ஏழைமையும் அவர்கள் முகத்தில் ஆழமான கோடுகளைப் பதியவைத்துள்ளன. எங்கு நோக்கினும் பசுக்கள், எருதுகள், எருமைகள்—ஐயோ! அவற்றின் கண்களிலும் அதே சோகப் பார்வை! அதே பஞ்சடைந்த உடல் அமைப்பு. பாதையோரங்களில் குப்பை, அழுக்கு—இதுதான் நமது இன்றைய பாரதம்,

அரண்மனைகளுக்கு அருகிலேயே சிதைந்த குடிசைகள் ; கோயில்களுக்கு அருகாமையிலேயே குப்பை மேடுகள்; பகட்டான ஆடை அணிந்தோரிடையே ஒற்றைச் சிறு கோவணமணிந்த சந்நியாசிகள்; உண்டு களித்திருப்போருக்கும் தேவைக்கதிகமாகவே வசதி பெற்றிருப்போருக்கும் இடையே பரிதாபகரமான, பஞ்சடைந்த கண்களுடைய பட்டினிகள்,—இதுதான் இன்று நாம் வாழும் நாடு. இதுதான் நமது சொந்தப் பூமியின் நிலை.

**அந்நியனுக்குத் தெரிகிற சித்திரம் :**

பயங்கரமான பிளேக் நோயும், காலராவும் நாட்டை நாசமாக்குகின்றன. நாட்டின் மூலநாடியை மலேரியா நோய் அரித்துத் தின்கிறது. முழுப் பட்டினியும் அரைப் பட்டினியும் சகஜமாகவே ஆகிவிட்டன. சாக்காடு போன்ற பஞ்சம் கொடூரத் தண்டாவமாடுகிறது. நோயும் துன்பப் பேயும் போரிடும் குருக்ஷேத்திரப் போர்க்களம் போன்ற இந்தப் பெரும் மயான பூமியில் செத்துப் போன நம்பிக்கைகள், சுறுசுறுப்பு, மகிழ்ச்சி, தைரியம் இவற்றின் எலும்புகள் எங்கும் சிதறிக் கிடக்க, அவற்றுக்கிடையே கம்பீரமான மௌன நிலையில், ஆத்மாவுடன் ஆழ்ந்த உறவுத் தொடர்புகொண்டு வாழ்க்கையில் மோட்சத்தைத் தவிர வேறு எந்தக் குறிக்கோளுமில்லாமல், அமர்ந்திருக்கிறான் யோகி—பாரதத்துக்கு யாத்திரையாக வரும் ஐரோப்பியரது கண்ணில் படுகிற காட்சி இதுதான்.

முப்பது கோடி மக்களின் தொகுதி, பார்வைக்குத்தான் மனிதர்களைப்போல் தோற்றமளிக்கிறார்கள்; அவர்களது சொந்த மக்களாலும் அந்நிய நாட்டினராலும் நசுக்கி மிதிக்கப் பட்டவர்கள்; அவர்களது சொந்த சமயத்தைச் சார்ந்தவர்களாலும் மாற்று மதத்தினராலும் ஒடுக்கப்பட்டவர்கள்; உழைப்பிலும் துன்பத்திலும் பொறுமையோடிருப்பவர்கள்; அடிமைகளைப்போல் சுயமுயற்சியற்றவர்கள்; அவர்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. கடந்த காலமுமில்லை; வருங்காலமுமில்லை; இப்பொழுதுள்ள வாழ்க்கையை அதில் எவ்வித உறுதியும் இல்லாதிருப்பினும் கூட அப்படியே நீடிப்பது ஒன்றிலேயே விருப்பமும் தம்முடன் வசிப்பவர்கள் வளமாக வாழ்வது கண்டு சகியாத அடிமையைப்போல் பொறுமைக் குணமும் வாய்ந்தவர்கள்; நம்பிக்கைகள் எல்லாம் குலைந்து பக்தி சிரத்தையில்லாத மனிதனைப் போல் வாழ்கிறவர்கள்; ஓநாயைப்போல நயவஞ்சகமும், துரோகமும், மட்டரகமான தந்திரப் போக்கும்தான் அவர்களது தற்காப்பின் அடித்தளம்; சுயநலத்தின் உருவகம்; தம்மைவிடப் பலசாலிகளானவர்களின் கால் தூசியை நக்குகின்ற அவர்கள் அதே நேரத்தில் தம்மைவிடப் பலங்குறைந்தவர்கள் மீது மரண அடி வீசுபவர்கள்; பலமற்றவர்கள்; வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கையற்ற மக்களுக்கு

இயற்கையாக ஏற்படுகிற ஆபாசமான, மிருகத்தனமான மூட நம்பிக்கைகளால் நிறைந்தவர்கள்; முதுகெலும்பாக எத்தகைய தார்மிக ஒழுக்கத் தரத்தையும் அமைத்துக் கொள்ளாதவர்கள்; இத்தகைய முப்பது கோடி ஆன்மாக்கள், அழுகி நாற்ற மெடுத்த உடலில் புழுக்கள் நெளிவது போல பாரதத்தின் உடலில் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கில அதிகாரியின் கண்முன் நம்மைப் பற்றி இயல்பாகத் தெரிகிற சித்திரமே இது.

**பாரதீயன் நோக்கில் மேநாட்டவர் :**

புதிதாகப் பெற்ற சக்திகளால், குடிபோதை ஏறிப்போனவர்கள்; நல்லது எது, தீயது எது என்ற விவேகமற்றவர்கள்; காட்டு மிருங்களைப்போலக் கொடூரமானவர்கள்; மனைவிக்கு அடிமைகள்; காம வெறியர்கள்; மதுவில் ஊறிப்போனவர்கள்; கற்பு, தூய்மை பற்றி ஒன்றுமே அறியாதவர்கள்; சுத்தமான வழி முறைகளோ, பழக்கங்களோ அற்றவர்கள்; ஜடப் பொருள்களை மட்டுமே நம்பி, ஜடப் பொருளை அஸ்திவாரமாக்கி அதனைப் பல்வேறு முறைகளில் பயன் படுத்துகிற நாகரிகத்துடன் வாழ்கிறவர்கள்; தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காகப் பிறரது நாடுகளையும், பிறர் செல்வங்களையும் பலாத்காரத்தால், தந்திரத்தால் நயவஞ்சகத்தால் சுரண்டுகிறவர்கள்; இவ்வுலக வாழ்வுக்குப் பிறகு வேறு வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையற்றவர்கள்; அவர்களுக்கு உடல்தான் ஆன்மா; அவர்களது வாழ்க்கை முழுவதும் அவர்களது புலன்களிலும் உடலைச் சார்ந்த சுகபோகங்களிலும் அமைந்துள்ளது; இங்ஙனம் பாரதீயன் நோக்கிலே மேலை நாட்டவன் சாட்சாத் அசுரனைத்தான் காட்சி தருகிறான்.

**வெளித் தோற்றத்திலிருந்து பெற்ற கருத்துக்கள்:**

இரு தரப்பினரையும் பாரபட்சமாகவும் அறியாமையினாலும் மேலெழுந்தவாரியாகவும் நோக்குகிறவர்களுடைய கருத்துக்கள் இவை. அந்நியர்கள், ஐரோப்பியர்கள், பாரதத்துக்கு வருகிறார்கள். நமது நகரங்களில் வளப்பமான, சுத்தமான பகுதிகளில் அமைந்த அரண்மனை போன்ற மாளிகைகளில் தங்கியிருந்து விட்டு, தங்கள் தாய் நாட்டிலுள்ள நகரங்களில் அழகாகவும் ஒழுங்காகவும் அமைந்த பகுதிகளோடு நமது சுதேசிகள் வாழும் பகுதிகளை ஒப்பிட்டுப்பார்க்கிறார்கள். தமக்குக் கீழ் வேலை செய்கிற பாரதீயர்களுடன்தான் அவர்களுக்குத் தொடர்பு ஏற்படுகிறது. கொடுந்துன்பத்தையும் ஏழைமையையும் பாரதத்தில் காண்பது போல வேறு எங்கும் காணமுடியாது என்பது உண்மையே. அத்துடன் அழுக்கும் நாற்றமும் எங்குந் தான் உள்ளது என்பதையும் மறக்க முடியாது. இத்தகைய அழுக்கு, அடிமைத்தனம், வீழ்ச்சி ஆகியவற்றுக்கிடையே நல்லதும்கூட இருக்க முடியும் என்று ஐரோப்பிய மனம் கற்பனை செய்வதில்லை,

மறுபுறம் ஐரோப்பியர்கள் பாகுபாடின்றிக் கிடைப்பதையெல்லாம் உண்பதைப் பார்க்கிறோம். நம்மைப்போல் தூய்மை பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. ஜாதிப் பாகுபாடுகளை அவர்கள் கடைப் பிடிப்பதில்லை. மாதருடன் தாராளமாகப் பழகுகிறார்கள். மது அருந்துகிறார்கள். நாட்டியக் கச்சேரியில் ஆணும் பெண்ணும் வெட்கமின்றித் தழுவி நடனமாடுகிறார்கள். இப்படிப்பட்ட நாட்டில் நல்லது எதுவும் இருக்க முடியுமா என்று வியப்புடன் நம்மையே நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த இரு கருத்துக்களும் மேற்போக்கான பார்வையிலிருந்து உதித்தவை; உள்ளுக்குள்ளே, வெளித்தோற்றத்தின் அடித்தளத் தில் உள்ளத்தை நாம் பார்ப்பதில்லை. அந்நியர்களை நமது சமூகத் துடன் கலந்து பழகி நாம் அநுமதிப்பதில்லை. அவர்களை மிலேச்சர் கள் என்று அழைக்கிறோம். அவர்களோ நம்மை அடிமைகளாகக் கருதி வெறுத்து, கறுப்பன் என்று அழைக்கிறார்கள். இந்த இருதரப் பினரில் எவரும் மறு தரப்பினரின் பின்னால் உள்ள உண்மைப் பொருளைக் கண்டிராவிடினும் இந்த இரு கருத்துக்களிலும் ஏதாவது ஓர் அம்சம் உண்மையாகவே இருக்க வேண்டும்.

**வாழும் ஒவ்வொரு ராஷ்டிரமும் ஒரு கருத்தின் உறைவிடமாகும்:**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு கருத்து உள்ளது. அவனுக் குள்ளே உறைந்து வாழும் கருத்துக்கு அந்த மனிதன் ஒரு புற வடிவம் தான். உள் கருத்தை வெளியிடும் மொழியாகவே அவனு டைய புறச்செயல்கள் உள்ளன. அதுபோலவே, ஒவ்வொரு ராஷ்டி ரத்துக்கும் பொருந்தமான ஒரு தேசியக்கருத்து இருக்கிறது. இந்தக் கருத்து உலகத்துக்காக வேலை செய்கிறது. உலகத்தைப் பாது காக்க அந்தக் கருத்து அவசியம். உலகத்தைப் பாதுகாப்பதற்காக அந்தக் கருத்தும் தேவையான ஓர் அம்சம் என்ற நிலைமாறிப்போனால் அதே நாளில் அந்தக் கருத்தின் கருவூலம், அது தனிமனிதனாயினும் ராஷ்டிரமாயினும் சரி, அழிவை எய்துகிறது. பாரதீயர்களான நாம் இன்னமும் நாம் வாழ்ந்து வருகிறோம். ஏராளமான இடர்கள், துன்பங்கள், ஏழ்மை, உள்ளேயிருந்தும் வெளியிலிருந்தும் ஏற்பட்ட அடக்குமுறைகள்—இருப்பினும் நாம் வாழ்கிறோம். அதற்குக் காரணம் நமக்கு ஒரு தேசீயக் கருத்து இருப்பது தான். உலகத்தைப் பாது காக்க அக்கருத்து இப்பொழுதும் தேவைதான்.

பாரதம் இப்பொழுதும் உயிர் வாழ்கிறது, ஏனெனில் உலக நாகரீகமாகிற பொதுநிதிக்குப் பாரதம் தனது சொந்தப் பங்கினைத் தர வேண்டியிருக்கிறது.

ஒரு நாட்டுக்கு மட்டும் ஏகபோக உரிமையாக எந்தநல்ல குணங்களும் கிடையாது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் தனி மனிதர்களைப் போல ஒரு நாட்டிலும் கூட மற்ற நாடுகளை விடச் சில நல்ல குணங்கள் அதிக அளவிலோ குறைந்த அளவிலோ இருப்பது காணப்படும்.

**தர்மமும் மோட்சமும் :**

நமக்கு முக்கியமான கருத்து மோட்சம்; மேல் நாட்டினருக்கு முக்கியமானது தர்மம். நாம் விரும்புவது முக்தி. அவர்கள் வேண்டுவது தர்மம். இங்கே தர்மம் என்ற சொல் மீமாம்ஸகர்களின் கருத்துப்படி உபயோகிக்கப்படுகிறது. தர்மம் என்றால் என்ன ? மனிதனை இந்த உலகிலாவது மறு உலகிலாவது இன்பத்தை தேட வைப்பது தர்மம் எனப்படும். தர்மம், செயல் புரிவதன் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இன்பத்தை நோக்கி இரவு பகலாக மனிதனை ஓடவைத்து, இன்பத்துக்காக வேலை செய்ய வைப்பது தர்மமாகும்.

முக்தி என்றால் என்ன ? இந்த வாழ்க்கையில் காணப்படும் இன்பம் கூட அடிமைத்தனமாகும். வரப்போகிற வாழ்க்கையின் இன்பமும் அப்படியேதான். ஏனெனில் இந்த உலகமோ மறு உலகமோ இயற்கையின் சட்டங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. ஒரு வித்தியாசம்: இந்த உலக இன்பம் இரும்புச் சங்கிலியால் ஆன விலங்கு என்றால் மறு உலக இன்பம் தங்கச் சங்கிலியாலான விலங்கு ஆகும். அன்றியும் இன்பம் எங்கே இருந்தாலும் சரி, இயற்கையின் சட்டத்துக்கு உட்பட்டதால் அது சாவுக்கும் உட்பட்டதாகும். முடிவின்றி அது நீடிக்காது. ஆகவே மனிதன் முக்தனாக ஆக, வீடுபெற விழைய வேண்டும். உடலாகிற பந்தத்தை மீறிக் கடந்து அவன் அப்பால் செல்ல வேண்டும். அடிமைத்தனம் கூடாது. இந்த மோட்சப் பாதை பாரதத்தில் மட்டுமே தான் உள்ளது. வேறெங்குமில்லை.

தர்மம் முக்தியுடன் சேர்ந்து பொருந்தி வாழ்ந்த ஒரு காலம் பாரத நாட்டில் இருந்தது. யுதிஷ்டிரர், அர்ஜுனன், துரியோதனன், பீஷ்மன், கர்ணன் போன்று தர்மத்தை வழிபட்டவர்கள் இருந்தனர். அவர்களுடன் கூடவே முக்திக்காக விழைந்த வியாசர், சுகர், ஜனகர் போன்றோரும் இருந்தனர். புத்த மதம் தோன்றியபோது, தர்மமானது அடியோடு புறக்கணிக்கப்பட்டு, மோட்சப் பாதை மட்டுமே செல்வாக்குப் பெற்றதாக ஆயிற்று.

**ஹிந்து சாஸ்திரங்களும் பௌத்தர்களும் :**

"வாழ்க்கையில் மோட்சத்தைத் தவிர மேலானதாக விரும்பத்தக்கது வேறு எதுவுமில்லை. நீங்கள் யாராயினும் சரி, அனைவரும்

வந்து அதனைப் பெறுங்கள்'' என்று பௌத்தர்கள் அறிவித்தனர். அது எப்பொழுதாவது நடக்கக்கூடிய காரியமா என்று நான் கேட்கிறேன். "நீ குடும்பஸ்தன். மோட்சம் போன்ற விஷயங்களைப் பற்றி நீ கவலைப்படக் கூடாது. நீ உனது ஸ்வதர்மத்தைச் செய்'' என்று ஹிந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதுதான் சரி. ஓர் அடி தூரம் தாண்டிக் குதிக்க முடியாதவன் ஒரே தாவாகக் கடலைத் தாண்டிக் குதிக்கப் போகிறான் போலும்! இது பகுத்தறிவுக்கு உகந்ததா? உன்னால் உன் குடும்பத்திற்கே உணவளிக்க முடியவில்லை, அல்லது உனது இனத்தாரில் இரண்டு பேர்களுக்கு உதவ முடியவில்லை; மற்றவர்களுடன் சேர்ந்து இணைந்து பொது நன்மைக்காக ஒரு சிறு வேலையைக்கூட உன்னால் செய்ய முடிவதில்லை. நீ முக்தியை நோக்கி ஓடுகிறாய். "தர்மத்தைவிடப் பல மடங்கு உயர்ந்தது மோட்சம் என்பதில் சந்தேகமில்லைதான். ஆனால் முதன் முதலில் தர்மத்தை முழுவதும் முடித்துவிட வேண்டும்'' என்று ஹிந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த இடத்தில் தான் பௌத்தர்கள் குழப்பமடைந்து எல்லாவிதமான விஷமங்களையும் செய்தார்கள். அஹிம்சை சரியானதுதான். 'தீமையை எதிர்க்காதே' என்பது பெரிய விஷயம்தான். உண்மையாகவே இவை மகத்தான தத்துவங்கள்தான். ஆனால், 'நீ ஒரு குடும்பஸ்தன். யாராவது ஒருவன் உன்னைக் கன்னத்தில் அறைந்தால், நீ அவனைக் கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் திருப்பித் தாக்காது போனால் உண்மையில் பாவியாகப் போவாய்' என்று சாஸ்திரம் கூறுகிறது.

> குரும் வா பாலவ்ருத்தௌ வா பிராம்மணம் வா பஹுச்ருதம்
> ஆததாயின பரயாந்தம் ஹன்யாதேவா விசாரயன்
>
> (மனு, 8·350)

"உன்னை ஒருவன் கொல்ல வந்தால், அவன் பிராம்மணனாயினும் சரி, நீ அவனைக் கொல்வதில் எவ்விதப் பாவமும் இல்லை'' என்று மனு (மனு, 8·350) கூறுகிறார். இது மிக மிக உண்மையானது. இந்த விஷயத்தை மறப்பதற்கில்லை.

**உனது ஸ்வதர்மத்தைச் செய் —**
**இதுவே உண்மைகளில் பேருண்மையாகும்:**

வீரர்கள்தான் உலகில் இன்பம் அனுபவிக்கிறார்கள். உனது வீரத்தைக் காட்டு. சாம தான பேத தண்டம் என்ற நால்வகை உபாயங்களையும் சந்தர்ப்பங்களுக்குத்தக உபயோகப்படுத்தி, உனது எதிரியை வென்று, உலகில் இன்பம் அநுபவி. அப்பொழுதுதான் நீ தார்மிகன் ஆவாய். அப்படியில்லாமல் யாரவது ஒருவன் தன் மனத்தில் தோன்றியபடி உன்னை உதைத்து மிதித்தால், நீ அந்த

அவமானத்தைச் சகிப்பாயானுல் அவமானகரமான வாழ்க்கையை வாழ நேரும். இவ்வுலகில் உனது வாழ்க்கை சரியான நரகமாக ஆகிவிடுவதுடன் மறு உலக வாழ்வும் அவ்வாறே ஆகும். சாஸ்திரங்கள் இதைத்தான் கூறுகின்றன. "உனது ஸ்வதர்மத்தைச் செய்து வா; இதுதான் உண்மை. உண்மைக்கெல்லாம் உண்மை." எனது மதத்தைச் சார்ந்தவர்களே! உங்களுக்கு நான் கூறும் ஆலோசனை இதுதான். ஆனுல் ஒன்று: எவருக்கும் தீங்கு செய்யாதீர்கள். எவரையும் துன்புறுத்தவோ, கொடுமைப்படுத்தவோ கூடாது. உங்களால் முடிந்தவரையில் பிறருக்கு நன்மை செய்யப் பாருங்கள். ஆனுல் இல்லறத்தானுக இருப்பவன் பிறர் செய்யும் தீமைகளுக்குத் தலை வணங்குவானுயின், அது பாவமாகும். அவன் அப்பொழுதே அந்த இடத்திலேயே பதிலுக்குப் பதில் திருப்பித்தர வேண்டும். இல்லறத்தான் பெரு முயற்சி செய்து, உற்சாகத்துடன் பணம் ஈட்ட வேண்டும். அதைக் கொண்டு தனது குடும்பத்துக்கும் பிறருக்கும் ஆதரவு தந்து, வசதிகளைச் செய்வதுடன் முடிந்தவரை நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். உன்னுல் அவ்வாறு செய்ய முடியாது என்ருல் மனிதன் என்று உன்னை எப்படி அழைத்துக் கொள்ளுகிருய்? நீ சரியான கிருகஸ்தன் ஆகமாட்டாயே? உனக்கு மோட்சம் கிடைப்பதுபற்றி என்ன சொல்வது?

**இரண்டு விதமான சுபாவங்களுக்கு வெவ்வேறு பாதை:**

இப்பொழுது பின்பற்ற வேண்டிய நல்ல பாதை எது? மோட்சத்தை (விடுதலையை) விழைகிற மனிதனுக்கு உகந்த பாதை ஒன்று; தர்மத்தை விரும்புகிறவனுக்கு உகந்த பாதை மற்ருென்று; இந்தப் பேருண்மையைத்தான் கீதாசாரினுன பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் விளக்க முயன்ருர். இந்தப் பேருண்மையின் மீதுதான் வர்ணுசிரம அமைப்பு, ஹிந்து சமாஜத்தின் ஸ்வதர்ம தத்துவம் முதலியனவெல்லாம் நிறுவப்பட்டுள்ளன.

அத்வேஷ்டா ஸர்வபூதானும் மைத்ர: கருண ஏவ ச
நிர்மமோ நிரஹங்கார: ஸமதுஃக்கஸுக க்ஷமீ

(கீதை—அ. 12. சு. 13)

"எதிரியற்றவன், எல்லோரிடமும் நட்பும் தயையும் வாய்ந்தவன்; 'நான், எனது' என்ற உணர்ச்சிகளிலிருந்து விடுதலை பெற்றவன், துக்கத்திலும் சுகத்திலும் சமமான மன நிலை கொண்டவன், பொறுமை வாய்ந்தவன்." இதுவும் இதுபோன்ற மற்ற அடைமொழிகளும் மோட்சத்தைக் குறிக்கோளாகக் கொண்டவனுக்கே பொருந்துவன.

க்லைப்யம் மாஸ்மகம : பார்த்த நைதத்வய்யுபபத்யதே
க்ஷுத்ரம்ஹ்ருதய தௌர்பல்யம் த்யகத்வோத்திஷ்ட பரந்தப

(கீதை—அ. 2, சு. 3)

"ஆண்மையின்மைக்கு இடம் கொடாதே. பிருதனின் குமரனே! அது உனக்குப் பொருந்தாது. இந்த அற்பமான பஞ்சை மனத்தை உதறிவிட்டு எழுந்துநில், எதிரிகளைப் பொசுக்குவோனே!"

தஸ்மாத் த்வமுத்திஷ்ட யசோ லபஸ்வ
ஜித்வா சத்ரூன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம்
மயைவைதே நிஹதா : பூர்வமேவ
நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசின்

(கீதை—அ. 11, சு. 33)

"ஆகவே நீ எழுந்து புகழ் தேடுவாய்; உனது எதிரிகளை வென்ற பின்னர் ஈடிணையற்ற அரசாட்சியை அநுபவிப்பாய். உண்மையில் என்னல் இவர்கள் முன்னரே கொல்லப்பட்டு விட்டனர். ஸவ்யஸாசியே (அர்ஜுனு), நீ கருவியாக மட்டும் இருப்பாய்."

**சாத்விக அமைதிக்கும் தாமச குணத்தின் மந்த நிலைக்கும் இடையே உள்ள வேறுபாடு :**

வெளியிலிருந்து பார்த்தால் நீ இருப்பது சத்துவ குண நிலையிலா அல்லது தாமச குண நிலையிலா என்று நமக்கு எப்படிப் புரியும்? நாம் இருப்பது எல்லா இன்ப துன்பங்களுக்கும் அப்பாற்பட்டு, எல்லாவிதச் செயல்களையும் வேலைகளையும் கடந்து சாத்விகமான அமைதி நிலையிலா, அல்லது உயிரற்று, செயலற்று, ஜடப் பொருள்போல நம்மிடம் வேலை செய்யச் சக்தி இல்லாததால் வேலை எதுவும் செய்யாமல் இருந்துகொண்டு அமைதியாக, படிப்படியாக உளுத்துப்போய் உள்ளுக்குள்ளே இழிகுணம் சூழ்ந்து மட்டரகமான தாமச நிலையில் இருக்கிறேமா? இந்தக் கேள்வியை நான் உண்மையாகவே கேட்கிறேன். பதில் தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கிறேன். உனது சொந்த மனத்திடமே கேள். உண்மை எதுவென உனக்குத் தெரியும்.

**சாத்வீக அமைதி—மகத்தான சக்திகளின் உறைவிடம் :**

ஆனல், பதிலுக்காகக் காத்திருப்பதற்கு என்ன அவசியம்? மரத்தை அதன் பழத்திலிருந்து அறியலாம். சத்துவ நிலையில் ஒரு மனிதன் இருக்கும்பொழுது நிச்சயமாகவே செயல் புரியாமல் அமைதியாக இருப்பான்! அந்தச் செயலின்மை மகத்தான சக்திகளை ஒருமுனைப் படுத்திக் குவித்ததன் விளைவாக ஏற்பட்டதாகும். அந்த

அமைதி அபார சக்தியின் பிறப்பிடம் ஆகும். மிக உயர்ந்த சாத்வீக நிலையிலுள்ள அந்த மனிதன் நம்மைப்போல் கைகளாலும் கால்களாலும் இனிமேல் வேலை செய்ய வேண்டியதில்லை. அவன் மனத்தால் நினைத்தாலே எல்லா வேலைகளும் உடனே மிகச் செம்மையாக நிறைவேறிவிடும். சத்துவ குணம் மேலாதிக்கம் செலுத்தும் அந்த மனிதன்தான் அனைவராலும் வணங்கப்படுகிற பிராம்மணன். வீட்டுக்கு வீடு போய்த் தன்னை வணங்கும்படி மற்றவர்களை அவன் கெஞ்சிக் கேட்க வேண்டுமா? சர்வ சக்தி வாய்ந்த உலக அன்னையானவள் தனது சொந்தத் திருக்கரத்தால் பொன்னெழுத்துக்களில் அவனது நெற்றியில், "இந்த மகனை, என் புதல்வனை, அனைவரும் வழிபடுக" என்று எழுதுகிருள். உலகம் அதனைப் படிக்கிறது, கவனிக்கிறது, பணிவுடன் அவன் முன் தன் தலையைத் தாழ்த்தி வணங்குகிறது. உண்மையில் அந்த மனிதன்:

"அத்வேஷ்டா ஸர்வபூதானும் மைத்ர; கருண ஏவ ச
நிர்மமோ நிரஹங்கார; ஸமதுஃக்கஸுக க்ஷமீ

(கீதை—12, 13)

("எதிரி அற்றவன்; எல்லோரிடமும் நட்பும், தயையும் வாய்ந்தவன். 'நான், எனது' என்ற உணர்ச்சியிலிருந்து விடுதலை பெற்றவன். துக்கத்திலும் சுகத்திலும் சமமான மனநிலை கொண்டவன், பொறுமை வாய்ந்தவன்.")

**தாமச குணம் வாய்ந்த மந்த நிலை - மரணத்தின் சின்னம்:**

கோழைகள், பெண்தன்மை வாய்ந்தவர்கள், மூக்கால் முணுமுணுத்து வார்த்தைகளைக் கடித்துப் பேசுகிறவர்கள், ஒருவார கால மாகப் பட்டினி கிடப்பவனைப் போல மெல்லிய இழைந்த குரல் உடையவர்கள், இழிந்த கிழிந்த ஈரமான துணிபோன்று தெம்பற்றவர்கள், எதையும் கண்டிக்காமல், யார் உதைத்தாலும் கோபமடையாதவர்கள்-இது மட்ட ரகமான தாமச குணம் வாய்ந்தவர்களின் சின்னம். சத்துவ குணத்தின் அறிகுறியல்ல; சாவின் சின்னமாகும். முழுவதும் இழிகுணமும், நாற்றமும் நிறைந்தவர்கள். அர்ஜுனன் இத்தகையவர்களின் கோஷ்டியில் விழ இருந்தான். அதற்காகவே தான் பகவான் விஷயங்களை இவ்வளவு விரிவாக விளக்குகிருர். இது தான் உண்மையல்லவா? பகவானின் திருவாக்கிலிருந்து வெளிப்பட்ட முதற் சொல்லைக் கவனியுங்கள்- "க்லைப்யம் மாஸ்மகம: பார்த்த நைதத்வய்யுப பத்யதே" (ஆண்மையற்ற குணத்துக்கு இடங்கொடாதே, பார்த்தனே! அது உனக்கு அழகல்ல) அதன் பின்னர் 'தஸ்மாத்வம் உத்திஷ்ட யசோ லபஸ்வ' ("ஆகவே, நீ எழுந்து நில், புகழ் பெறுவாய்.")

கடந்த ஆயிரமாயிரமாண்டுகளாக நாட்டு மக்கள் ஆகாயம் முழுவதையும் பகவானின் பெயரால் நிரப்பி வருகிறார்கள். பிரார்த்தனை செய்துவருகிறார்கள். கடவுள் ஒருபோதும் அதற்குச் செவி சாய்க்கவில்லை. மூடனின் ஓலத்தை மனிதனே ஒருபோதும் கேட்பதில்லையே, கடவுளா கேட்பாரென நினைக்கிறீர்கள்? இப்பொழுது கடைத்தேற ஒரே வழிதான் உண்டு. அது, கீதையில் பகவான் கூறியுள்ள சொற்களைக் கவனித்துக் கேட்டு நடப்பது—க்லைப்யம் மாஸ்மகம; பார்த்த: (பார்த்தனே! ஆண்மையின்மைக்கு இடங்கொடாதே) - தஸ்மாத்வமுத்திஷ்ட யசோ லபஸ்வ (ஆகவே நீ எழுந்து நில். புகழ் பெறுவாய்.)

**விதியின் பெரிய வேடிக்கை:**

இதிலிருக்கிற வேடிக்கையைக் கவனியுங்கள். ஐரோப்பியர்களின் தெய்வமான ஏசு கிறிஸ்து போதித்தார்— "எதிரியே உனக்கு இருக்கக் கூடாது. உன்னைச் சபிக்கிறவர்களை நீ ஆசீர்வதி; உன் வலது கன்னத்தில் அறைந்தால், நீ இடது கன்னத்தையும் காட்டு; உனது வேலைகளனைத்தையும் நிறுத்திவிட்டு மறுவுலகுக்குச் செல்ல ஆயத்தமாகு; உலக முடிவு மிக நெருக்கத்தில் உள்ளது" என்றார். ஆனால், கீதையில் நமது பகவான், "எப்பொழுதும் மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்: உனது எதிரிகளை அழித்து உலகத்தை அநுபவி" என்றார். ஆனால் கடைசி முடிவில், கிறிஸ்துவும் கிருஷ்ணனும் உட்பொருளாக எதைக் குறிப்பிட்டார்களோ அதற்கு நேர் எதிரிடையான முடிவு ஏற்பட்டது. ஏசு கிறிஸ்துவின் சொற்களை ஐரோப்பியர் ஒரு போதும் கருத்துடன் கவனித்து ஏற்கவில்லை. எப்பொழுதும் சுறுசுறுப்பான பழக்க வழக்கங்களுடன், அபாரமான ராஜஸ குணங்கள் வாய்ந்து, துணிகரமாக, இளமைத் துடிப்புடன், உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் சுகபோகங்களையும், வசதிகளையும் திரட்டிச் சேர்த்து, மனம் அலுக்கிறவரை அவற்றை அநுபவிக்கிறார்கள். நாமோ மூலையில் உட்கார்ந்து கொண்டு, இரவு பகலாகச் சாவை பற்றி நினைந்து,

"நலினீ தலகத ஜலமதிதரலம் தத்வஜ்ஜீவனமதிசயசபலம்"

("தாமரை இலைமீதுள்ள தண்ணீர் நடுங்குகிறது, நிலையில்லாதிருக்கிறது; அதுபோல் மனிதனின் ஆயுள் அற்பமானது, அநித்தியமானது") என்று பாடுகிறோம். அதன் விளைவாக நமது ரத்தம் உறைந்துபோய், நமது உடலின் மாமிசம் மரண தேவனான யமனின் பயத்தால் அஞ்சிக் கெஞ்சுகிறது. அந்தோ! யமன்கூட நமது சொல்லையே சரியென நம்பிவிட்டான் போலும்! பிளேக் நோயும் மற்றும் பல நோய்களும் நமது நாட்டினுள் நுழைந்து

விட்டன. கீதை உபதேசத்தைப் பின்பற்றுவோர் யார்? ஐரோப்பியர்கள்! ஏசு கிறிஸ்துவின் விருப்பப்படி நடப்பவர்கள் யார்? ஸ்ரீ கிருஷ்ணனின் சந்ததியார்! இதனை நன்குபுரிந்துகொள்ள வேண்டும்.

**புத்தர் உபதேசங்கள்:**

புத்த சமயம், வேத சமயங்கள் ஆகியவற்றின் குறிக்கோள்கள் ஒன்றேதான். ஆனால் புத்த சமயத்தவர்கள் கடைப்பிடித்த வழிமுறைதான் சரியில்லை. பௌத்தர்களின் வழிமுறை சரியாக இருந்திருக்குமானால் ஏன் மீண்டும் ஈடேற முடியாதபடி அழிந்து குலைந்து போனார்கள்? காலவெள்ளம் இயற்கையாக இதனை விளைவித்து விட்டது என்று கூறினால் போதாது. காரண-காரிய சட்டங்களை மீறிக் காலத்தால் செயல்பட முடியுமா?

**ஐரோப்பா கிறிஸ்துவைக் கைகழுவி விட்டதால் உயிர் பிழைத்தது:**

வேத சமயங்கள்தான் வழிமுறைகளைப் பற்றிக் கவனித்து, மனிதன் எய்த வேண்டிய நான்கு நிலைகளான அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றுக்கான சட்ட திட்டங்களை வகுத்து வைத்துள்ளன. புத்தர் நம்மை அழித்தார்; அதுபோல கிறிஸ்து கிரீஸையும், ரோம் நாட்டையும் அழித்தார். பின்னர் காலப்போக்கில், அதிர்ஷ்டவசமாக, ஐரோப்பியர்கள் பிராடஸ்டெண்டுகளாக மாறினார்கள். போப்பின் அதிகார பீடத்தினர் விளக்கம் தந்தபடி இருந்த கிறிஸ்துவின் உபதேசங்களை உதறி எறிந்தனர்; நிம்மதியாகப் பெருமூச்சு விட்டனர். பாரதத்தில் குமாரிலபட்டர் 'கர்மம் மட்டுமே பாதை' என்ற கர்ம மார்க்கத்தை மீண்டும் புழக்கத்துக்குக் கொண்டு வந்தார். சங்கரரும் ராமானுஜரும் தக்க அளவில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை இணைத்து, சம நிலைப்படுத்தி அநாதியான வேத சமயத்தை உறுதியாக நிலைநாட்டினார்கள். இவ்வாறாக நமது ராஷ்டிரமானது இழந்த தனது வாழ்க்கையை மீண்டும் எய்துவதற்கான பாதைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் பாரத நாட்டில் முப்பது கோடி ஆத்மாக்களை விழிப்படையச் செய்யவேண்டியிருப்பதால், இந்தக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. முப்பது கோடி மக்களை எழுப்புகிற பணியை ஒரே நாளில் செய்துவிட முடியுமா?

## சமயமே பாரதத்தின் ஆன்மா

ஒவ்வொரு ராஷ்டிரமும் நிறைவேற்ற வேண்டிய ஒரு விதிக்கடன் உள்ளது. வழங்கவேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது. பூர்த்தி செய்யவேண்டிய தெய்வீகப் பணி யொன்று உள்ளது. ஆகவே ஆரம்பமுதலே நமது சொந்த இனத்தின் தெய்வீகப் பணியை, அது நிறைவேற்ற வேண்டிய விதிக் கடனை, உலக நாடுகளின் அணி வகுப்பில் அமைந்து இருக்கவேண்டிய இடத்தை, எல்லா இனங்களும் இணைந்து எழுப்பும் இன்னிசையில் சேர்க்க வேண்டிய சுருதியை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**நாம் ஹிந்துக்கள் :**

நாம் ஹிந்துக்களாவோம். ஹிந்து என்ற சொல்லைத் தப்பான அர்த்தத்தில் நான் பயன்படுத்தவில்லை. அல்லது அதற்கு ஏதாவது மோசமான பொருளுண்டு என நினைக்கிறவர்களின் கருத்தை நான் ஏற்கவுமில்லை. பழங்காலத்தில் அச்சொல் சிந்துவுக்கு மறு புறம் வசிப்பவர்கள் என்று மட்டும் பொருள்பட்டது. இன்று நம்மை வெறுப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அதற்குத் தவறான விளக்கம் தரலாம் என்றாலும் பெயரைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஹிந்து என்ற பெயர் உயர்ந்த லட்சியங் கள் அனைத்தையும், ஆத்மீகத் தொடர்புடைய அனைத்தையும் குறிக்கும் சொல்லாக விளங்குமா அல்லது நிந்தனைச் சொல்லாக, நசுக்குண்டவர்களை, உதவாக்கரைகளை, பாவிகளைக் குறிப்பதாக விளங்குமா என்பது நம்மைப் பொறுத்த விஷயமாகும். தற்பொழுது "ஹிந்து" என்ற சொல் இழிவான எதையாவது குறிப்பதானால் கவலைப்பட வேண்டாம். எல்லா மொழிகளிலும் இருக்கக்கூடிய எந்த ஒரு வார்த்தையைக் காட்டிலும், இதை உயர்ந்த பொருளுடைய தாக ஆக்க நமது செயல்மூலம் முற்படுவோம்.

என்னுடைய முன்னோர்களைக் குறித்து வெட்கப்படாமலிருக்க வேண்டும் என்பது எனது வாழ்க்கையின் கொள்கைகளில் ஒன்று. உலகில் தோன்றிய பெருமை மிக்க மாந்தரில் நான் ஒருவன். ஆனால் வெளிப்படையாக உங்களுக்குக் கூறுகிறேன். நான் எனக்காகப் பெருமைப்படவில்லை. என் மூதாதைகளின் காரணமாகவே பெருமை கொள்கிறேன். பழமையைப் படிக்கப் படிக்க, பின் நோக்கிப் பார்க்கப் பார்க்க இந்தப் பெருமை இன்னும் அதிகரிக்கிறது. அது எனக்கு

வலிமையையும், வீர நம்பிக்கையையும் தருகிறது. பூமியில் புழுதியாகக் கிடந்த நிலையிலிருந்து அது என்னை மேலே உயர்த்தி யுள்ளது; பெரியோர்களான நமது முன்னோர்களின் மகத்தான திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அது என்னை வேலை செய்ய வைத்துள்ளது. தொன்மைப் புகழ் வாய்ந்த அந்த ஆரியர்களின் புதல்வர்களே! இறைவனருளால் உங்களுக்கும் அதே பெருமிதம் உண்டாகட்டும். உங்களது முன்னோர்களிடம் இருந்த அந்த நம் பிக்கை உங்கள் உதிரத்தில் கலக்கட்டும்; அது உங்கள் வாழ்க்கை யோடு பிரிக்க முடியாத பகுதியாக ஆகட்டும். அது உலகை உய் விக்கத் தொண்டு புரியும்படி உங்களைத் தூண்டட்டும்.

**ஒவ்வொரு ராஷ்டிரமும் நிறைவேற்ற வேண்டிய விதிக் கடன் ஒன்று உண்டு.**

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனிச் சிறப்புத் தன்மை இருப்பது போல ஒவ்வொரு ராஷ்டிரத்துக்கும் ஒரு தனிச்சிறப்புத் தன்மை உள்ளது. ஒவ்வொரு மனிதனும் பிற மனிதரிலிருந்து சில குறிப்பான விஷயங்களில், அவனுக்கே உரித்தான சில சிறப்புக் குணங்களில் வேறுபட்டுத் தனியாக உள்ளதுபோல் ஓர் இனம் பிற இனத்தி லிருந்து சில குறிப்பான குண விசேஷங்களில் வேறுபட்டுள்ளது. இயற்கையின் ஏற்பாட்டின்படி ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய வேண்டியது அவன் விதிக்கடனாகும். அவனது முந்தைய கர்மாவின்படி அவனுக்கு ஒரு குறிப்பிட்ட பாதை வகுக்கப் பட்டிருக்கிறது. அதுபோலவேதான் தேசங்களின் நிலையும். ஒவ்வொரு தேசமும் பூர்த்தி செய்ய வேண்டிய விதிக்கடன் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு ராஷ்டிரமும் விடுக்கவேண்டிய செய்தி யொன்று இருக்கிறது; ஒவ்வொரு ராஷ்டிரமும் ஆற்றி முடிக்க வேண்டிய தெய்வீகப் பணியொன்று இருக்கிறது. ஆகவே ஆரம்பம் முதலே நமது சொந்த இனத்தின் தெய்வீகப் பணியை, அது நிறை வேற்ற வேண்டிய விதிக்கடனை, உலக நாடுகளின் அணிவகுப்பில் அமைந்திருக்கவேண்டிய இடத்தை, எல்லா இனங்களும் இணைந்து எழுப்பும் இன்னிசையில் சேர்க்கவேண்டிய சுருதியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**ராஷ்டிரத்தின் ஆன்மா :**

நமது நாட்டில் குழந்தைகளுக்குச் சொல்லப்படும் கதையொன்று உண்டு; சிலவகைச் சர்ப்பங்களின் தலையில் மாணிக்கம் இருந்தன வாம். ஒருவன் அந்தச் சர்ப்பத்தை என்ன செய்தாலும் மாணிக்கம் தலையில் இருக்கும்வரை கொல்ல முடியாது என்று கேட்டிருக்கிறோம். அரக்கர்களைப் பற்றிக் கதை கேட்டிருக்கிறோம். அவர்களது

ஆத்மாவை, குறிப்பிட்ட சில சிறு பறவைகளில் வைத்திருந்தார்களாம். அந்தப் பறவை பத்திரமாக இருக்கிறவரையில் அந்த அரக்கனைக் கொல்ல உலகத்தில் எந்தவிதமான சக்தியினாலும் இயலாதாம். அவர்களைத் துண்டு துண்டாகச் சிதைத்தாலும் இஷ்டப்படி என்ன செய்தாலும் அவ்வரக்கர்கள் சாகமாட்டார்களாம். அது போலத்தான் தேசங்களும். ஒரு நாட்டின் ஜீவன் ஒரு குறிப்பிட்ட மையப் புள்ளியில் உறைந்துள்ளது. அதில்தான் அந்த ராஷ்டிரத்தின் 'ராஷ்டிரத்வம்' (தேசீயம்) அமைந்துள்ளது. அதைத் தொடாத வரை அந்த ராஷ்டிரம் இறவாது.

மீண்டும் மற்றொரு விஷயத்தையும் நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஒரு தேசத்தின் தேசீயக் குறிக்கோளுடன் தொடர்பில்லாத சில உரிமைகளை இழந்தால் அந்தத் தேசம் பிரமாதமாக முணுமுணுக்காது. அத்தகைய எல்லா உரிமைகளையும் பிடுங்கினாலும் சரி, அது குமுறாது. ஆனால் அதன் தேசீய வாழ்க்கை எதன் மீது உறைகிறதோ அதனை மெல்லத் தாக்கினாலும்கூட, அக்கணமே அபார சக்தியுடன் அது எதிர்த்துத் தாக்குகிறது.

**பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரின் குணப்பண்புகள் :**

உதாரணமாக உயிருடன் வாழும் மூன்று தேசங்களை எடுத்துக் கொள்வோம். அவற்றின் வரலாறு ஓரளவு உங்களுக்குத் தெரியும். அதாவது பிரான்ஸ், இங்கிலாந்து, ஹிந்து தேசம். அரசியல் சுதந்திரம் பிரெஞ்சுக் குணப்பண்பின் முதுகெலும்பாகும். பிரெஞ்சுக் குடிமக்கள் எல்லாவிதமான கொடுமைகளையும் அமைதியாகச் சகிப்பார்கள். வரிச்சுமையை ஏற்றி வையுங்கள்; அவற்றுக்கு விரோதமாகச் சிறிதும் குரலெழுப்ப மாட்டார்கள். நாடு முழுவதையும் ராணுவத்தில் சேர வற்புறுத்தினாலும் ஒருபோதும் குறைகூறமாட்டார்கள்; ஆனால் யாராவது அரசியல் சுதந்திரத்தின் மீது கைவைத்தால் நாடு முழுவதும் ஒரே மனிதனைப்போலெழுந்து, வெறி பிடித்தாற் போல் எதிர்த்துத் தாக்குவர். 'எந்த ஒரு தனி மனிதனும் எங்கள் மீது அதிகாரம் செலுத்த அனுமதியோம். படித்தவனோ, பாமரனோ, பணக்காரனோ, ஏழையோ, உயர்குடிப் பிறந்தவனோ, தாழ்ந்த மக்களைச் சார்ந்தவனோ நாங்கள் யாராயினும் சரி—எங்கள் சமூகத்தைச் சுதந்திரமாக வழி நடத்துவதில் எங்கள் நாட்டு ஆட்சியில் அனைவருக்கும் சமமான பங்குள்ளது' இதுதான் பிரெஞ்சு நாட்டினரின் குணப் பண்பினுடைய மூலக் கொள்கையாகும். இந்தச் சுதந்திரத்தில் குறுக்கிடுகிறவன் அவதிப்பட்டே தீரவேண்டும்.

ஆங்கிலேயரின் குணப்பண்பில், வியாபாரியின் வியாபாரக்கொள்கையான "கொடுத்து, வாங்குதல்" முக்கியமாக இயற்கையாகவே பொதிந்துள்ளது. ஆங்கிலேயருக்கு நேர்மை, உரிமைகளைச் சம

மாகப் பங்கிடுதல் என்பன முக்கியமான நாட்டமாகும். ஆங்கிலேயன் மன்னனுக்கும் பிரபுக்களின் உரிமைகளுக்கும் வணக்கத்துடன் கீழ்ப்படிகிறுன். ஆனுல் தனது பையிலிருந்து ஒரு சல்லிக்காசாவது கொடுக்க வேண்டுமென்ருல் அதற்கான கணக்கை அவன் கேட்டே தீர்ப்பான். மன்னர் இருக்கிருர். அதெல்லாம் சரிதான். அவருக்குக் கீழ்ப்படியவும் மரியாதை செலுத்தவும் சித்தமாக இருக்கிருன். ஆனுல் அரசன் பணம் கேட்டால் ஆங்கிலேயன் சொல்வான், 'சரிதான். முதலாவதாக, அது எதற்காகத் தேவைப்படுகிறது என்பதை எனக்குப் புரியவையுங்கள்; அதனுல் என்ன நன்மை வரும்; அடித்தபடியாக, அது எப்படிச் செலவிடப்படும் என்ற விஷயத்தில் எனது அபிப்பிராயத்துக்கும் இடமிருக்க வேண்டும். அதன் பிறகே நான் கொடுப்பேன்' என்பான். மன்னர், ஒரு தடவை ஆங்கில மக்களிடமிருந்து பலவந்தமாகப் பணம் பறிக்க முயன்றபோது ஒரு பெரிய புரட்சி எழுந்துவிட்டது. அரசனையே கொன்று விட்டார்கள்.

**ஹிந்துவின் குணப்பண்பு :**

அரசியல், சமூக சுதந்திரங்களெல்லாம் நல்லதுதான்; ஆனுல் உண்மைப்பொருள் ஆத்மீக விடுதலேதான், முக்திதான் என்கிருன் ஹிந்து. இதுதான் நமது தேசீயக் குறிக்கோள். வைதீகர், ஜைனர், பௌத்தர், அத்வைதிகள், விசிஷ்டாத்வைதிகள் அல்லது துவைதிகள் ஆகிய எவரைப் பார்த்தாலும் அந்த விஷயத்தில் அவர்கள் அனைவரும் ஒரே கருத்துடன்தான் இருக்கிருர்கள். அந்த விஷயத்தின் மீது கைவைக்காமல், எதை வேண்டுமானுலும் செய்துகொள். ஹிந்து சிறிதும் கவலேப்படமாட்டான், மௌனமாக இருப்பான். ஆனுல் அந்த ஆத்மீக விடுதலே விஷயத்தில் தவருக நடந்தால் ஜாக்கிரதை, நீ தொலேந்தாய்! அவனிடமுள்ளது அனைத்தையும் கொள்ளே கொண்டு விடு; அவனேக் காலால் உதைத்துத் தள்ளு, "கறுப்பன்" என்ரே வேறு வசையோ பேசு; அவன் அதிகமாகக் கவலேப்பட மாட்டான். ஆனுல் சமயம் என்கிற ஆசாரவாயிலேச் சுதந்திரமாகவும் கறைப்படுத்தாமலும் விட்டுவை. அதுதான் அவன் உயிர் மூச்சு. நவீன காலத்தில் பட்டாணிய வம்சங்கள் வந்தன; போய்க் கொண்டேயிருந்தன; ஆனுல் பாரத சாம்ராஜ்யத்தில் காலூன்ற உறுதியான பிடி அவர்களுக்குக் கிடைக்கவில்லே என்பதைக் கவனியுங்கள். ஏனெனில் அவர்கள் எப்பொழுதும் ஹிந்துவின் சமயத்தைத் தாக்கி வந்தார்கள். முகலாய சாம்ராஜ்யம் எவ்வளவு உறுதியான அஸ்திவாரமுள்ளதாக, மகத்தான சக்தி வாய்ந்ததாக இருந்தது, பாருங்கள். ஏன்? முகலாயர்கள் சமயத்தைத் தொடாமல் விட்டனர். உண்மையில் முகலாய சாம்ராஜ்யத்துக்கு ஹிந்துக்கள்தான் ஊன்றுகோலாக விளங்கினுர்கள்.

நமது சக்தித் துடிப்பு, நமது பலம், ஏன் நமது தேசீய உயிர் நாடியே நமது சமயத்தில்தான் உறைந்துள்ளது என்று கண்டோம். அது சரியா, தவறு? நல்லதா, கெடுதலா? நாளடைவில் அது லாபகரமானதா, இல்லையா என்பது குறித்து நான் இப்பொழுது விவாதிக்கப் போவதில்லை. நல்லதோ, கெடுதலோ அது அப்படித் தான் இருக்கிறது. அதிலிருந்து மீள முடியாது. அவ்வாறே இப்பொழுதும், எப்பொழுதும் இருக்கும். நமது சமயத்தில் எனக் கிருக்கும் நம்பிக்கை உங்களுக்கு இல்லாவிடினும் கூட அதற்குப் பக்க பலமாக நீங்கள் நிற்கவே வேண்டும். நாம் அதனுடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கிறோம். அதனைக் கைவிட்டால் உருக்குலைந்து சிதறிப் போவோம். அதுதான் நமது இனத்தின் ஜீவன். அதனைப் பலப்படுத்தியே தீர வேண்டும்.

**சோமநாதபுரம் ஏராளமான படிப்பினையை அளிக்கும் :**

சமயத்தைப் பற்றி நீங்கள் மிகுந்த அக்கறை செலுத்திப் பேணி வந்தீர்கள். அதற்காக மற்ற அனைத்தையும் தியாகம் செய்தீர்கள். அந்த ஒரு காரணத்தினால் தான் பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட கோரமான படையெடுப்புகளின் அதிர்ச்சிகளை உங்களால் தாங்க முடிந்தது. உங்களது முன்னோர்கள் கொடுமைகள் அனைத்தையும் தீரத்துடன் அநுபவித்தார்கள். மரணத்தையும் ஏற்றார்கள். ஆனால் சமயத்தை பாதுகாத்தார்கள். அந்நிய ஆக்கிரமிப்பாளன் ஒவ்வொரு கோயிலாக இடித்து தள்ளினான். ஆனால் அந்த அலை திரும்பியவுடன் கோயிலின் கோபுரமும் மீண்டும் உயர்ந்தெழுந்தது.

தென்னாட்டின் சில பழைய கோயில்களும், குஜராத்திலுள்ள சோமநாதபுர ஆலயமும் ஏராளமான சரித்திர ஞானத்தை உங்களுக்கு அளிக்கும்; எத்தனையோ புத்தகங்களைப் படிப்பதைவிட அதிகக் கூர்மையான சூட்சுமப் பார்வையை உங்களுக்கு அவை தரும். கவனித்துப் பாருங்கள். இந்தக் கோயில்களில் நூற்றுக்கணக்கான தாக்குதல்களின் வடுக்களும், புனர்நிர்மாணத்தின் நூற்றுக்கணக் கான சின்னங்களும் உறைந்துள்ளதைப் பாருங்கள். தொடர்ந்து அவை அழிக்கப்பட்டன. இடிபாடுகளிலிருந்து தொடர்ந்து, மீண்டும் புத்துணர்ச்சியுடன், வழக்கமான வீறுடன் எழுந்தன. அதுவே தான் தேசீய ஜீவசக்தியாகும். அதனைப் பின்பற்றிச் செல்வீராகுக; உங்களைப் புகழ் நிலைக்கு அது இட்டுச் செல்லும். அதனைக் கைவிட்டால் இறந்தொழிவீர்கள். செத்து மடிவதே முடிவாகும். அந்த ஜீவசக்தியை மீறிப் புறக்கணித்தால் அக் கணமே—பூண்டற்றுப் போவது தான் ஒரே முடிவு.

அரசியல் அல்லது சமூக முன்னேற்றங்கள் தேவையில்லையென நான் கூறுவதாக நீங்கள் கருதக் கூடாது. நான் நினைப்பது இது

தான்: நீங்கள் இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும். மற்ற முன்னேற்றங்களெல்லாம் இரண்டாம் பட்சமானவை. சமயம் தான் முதல் தேவை.

**ஆயிரக்கணக்கான நூற்றுண்டுகளாக வளர்த்து உருவான குணப் பண்பு:**

இந்த தேசத்தின் ஆத்மா எங்கே உள்ளது என்று இப்பொழுது உங்களுக்குத் தெளிவாகப் புரியும். அது சமயத்திலே உறைந்துள்ளது. அதனை எவராலும் அழிக்க முடியாது. ஆகவே ஹிந்து ராஷ்டிரம் பல விதமான கஷ்டங்களையும் இடர்களையும் அனுபவித்தும் உயிர்தப்பி இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. "தேசத்தின் ஆத்மாவைச் சமயத்தில் அமைத்து வைத்திருப்பதால் என்ன பயன்? மற்ற தேசங்களைப் போலச் சமூக சுதந்திரத்திலோ, அரசியல் சுதந் திரத்திலோ, அதை ஏன் அமைத்து வைக்கக் கூடாது?' என்று ஒரு பாரதீய அறிஞர் வினவுகிருர். அதுபோல பேசுவது மிக எளிது.

சமயம், ஆத்மீக சுதந்திரம், ஆத்மா, கடவுள், முக்தி ஆகிய எல்லாமே பொய் என்று விவாதத்திற்காகவே ஒப்புக்கொண்டாலும் அதற்குப் பிறகு நிலைமை எப்படியிருக்கிறது எனப் பார்ப்போம். நெருப்பானது பலவித வடிவங்களில் தோற்றமளிக்கிறது. அது போலவே அந்த ஒரே பெரும் சக்தி பிரெஞ்சுக்காரர்களிடம் அரசியல் சுதந்திரமாகவும், ஆங்கிலேயர்களிடம் வியாபார சாமர்த்தியமாகவும் நேர்மைக் கொள்கையை எங்கும் விஸ்தரிப்பதாகவும், ஹிந்துக்களிடம் முக்தியில் விருப்பமாகவும் அல்லது ஆத்மீக சுதந்திரமாகவும் காட்சி தருகிறது. பற்பல நூற்றுண்டுகளாகப் பலவிதமான காலமாறுபாடுகளுக்கிடையே ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் குணப்பண்பானது இந்த மகத்தான தெய்வச் சக்தியால் தூண்டப்பட்டு உருவாகி வந்திருக்கிறது. அத்துடன் அந்த மாபெரும் சக்தியின் உத்வேகத்தின் காரணமாக, ஆயிரக் கணக்கான நூற்றுண்டுகள் உருண்டோடிய பிறகு, இன்றுள்ள ஹிந்து தேசீய குணப்பண்பு உருப்பெற்றது. நான் யதார்த்தமாகவே கேட்கிறேன்: எது எளிது? ஆயிரக்கணக்கான நூற்றுண்டுகளாக வளர்ந்து உருப்பெற்ற நமது தேசீய குணப் பண்பைக் கைவிடுவது எளிதா? அல்லது சில நூற்றுண்டுகளாக நீங்கள் ஒட்டவைக்கப் பார்க்கிற அந்நிய குணப்பண்பைக் கைவிடுவது எளிதா? ஆங்கிலேயர்கள் தமது யுத்த ரீதியான பழக்க வழக்கங்களை மறந்து, போரிடுவதையும் ரத்தம் சிந்துவதையும் கைவிட்டுவிட்டு, சாந்தமாக, அமைதியாக உட்கார்ந்து சமயத்தையே தமது வாழ்வின் ஒரே குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளுவதில் தமது சக்தி முழுவதையும் ஏன் ஒருமுகப் படுத்தக்கூடாது?

உண்மை இதுதான். நதியானது மலைகளிலிருக்கும் தனது உற்பத்தி ஸ்தானத்தை விட்டுவிட்டு ஆயிரம் மைல்கள் கீழிறங்கி வந்துவிட்டது. அது தனது உற்பத்தி ஸ்தானத்துக்கே திரும்பிப் போகுமா? போக முடியுமா? அது தனது பழைய இடத்துக்கே திரும்பிப் போக எப்பொழுதாவது முயற்சிக்குமானால் எல்லாத் திசைகளிலும் அதன் சக்தி விரயமாகி அது அப்படியே வற்றிப் போகும். எப்படியாயினும் இப்பொழுதோ நாளையோ, திறந்த அழகான சமதரையில் பாய்ந்தோ, கரடுமுரடான நிலத்தைக் கடந்தோ, அந்த நதி கடலில் விழப்போவது திண்ணம். நமது இந்தப் பதினாயிரம் ஆண்டுத் தேசீய வாழ்க்கையானது தவருகி விட்டது என்ருல் இனி மீளமுடியாது. மேலும் நாம் புதியதொரு குணப் பண்பை உருவாக்க இப்பொழுது முயன்ருல் அதன் விளைவாகத் தப்பாமல் மடிவது உறுதி.

**நமது தேசிய வாழ்க்கையில் மறைந்துள்ள சக்தித் தீ:**

நமது தேசீய லட்சியம் தவருக ஆகிவிட்டது என்று நினைப்பது வெறும் அறிவீனமாகும். உண்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையாகும் என்று நான் கூறுவேனாயின் என்னை மன்னித்து விடுங்கள். முதலில் பிறநாடுகளுக்குச் செல்லுங்கள். அவர்களது பழக்க வழக்கங்களையும், நிலைமையையும் உங்கள் கண்களாலேயே—பிறரைக் கொண்டு அல்ல—கவனமாக ஆராய்ந்து பாருங்கள். சிந்தனைப் பாங்குள்ள மூளையுடன்—அத்தகைய மூளை இருந்தால்—அவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்; பிறகு உங்கள் சொந்த சாஸ்திரங்களையும், உங்கள் புராதன இலக்கியங்களையும் படியுங்கள். பாரதம் முழுவதும் யாத்திரை செல்லுங்கள். பாரதத்தின் பல பகுதிகளிலுமுள்ள மக்களையும், அவர்களது வழிமுறை, பழக்க வழக்கங்களையும் புத்திசாலியான கூரிய பார்வையுள்ள, பார்வையாளரின், விழிப்புள்ள கண்களுடன்—முட்டாளின் பார்வையுடன் அல்ல—கவனித்துப் பாருங்கள். அப்பொழுது இந்த ராஷ்டிரம் இன்னும் பத்திரமாக வாழ்ந்து கொண்டிருப்பதும் அதன் உயிர் நிச்சயமாகவே துடித்துக் கொண்டிருப்பதும் நண்பகல் ஒளிபோல் உங்களுக்குத் தெரியும்.

அங்கு மற்ருெரு விஷயத்தையும் காண்பீர்கள்—வெளிப் பார்வைக்குச் செத்தது போல, சாம்பலால் மூடப்பட்டிருப்பினும் நமது தேசீய வாழ்க்கையின் தீயானது, இன்னமும் கனிந்து குமுறிக் கொண்டிருப்பது தெரியவரும். அன்றியும் இந்தத் தேசத்தின் ஜீவன் சமயந்தான் என்பதும், சமயமே அதன் குரல், சமயமே அதன் கருத்து என்பதும், புரியும். உங்களுடைய அரசியல், சமூகம், நகராட்சி, பிளேக் தடுப்பு வேலை, பஞ்ச நிவாரண வேலை முதலியனவெல்லாம் இத்தனை காலமாக இங்கு செய்யப்பட்டு வந்ததுபோல்

சமயத்தின் மூலமாக மட்டுந்தான் செய்து முடிக்க வேண்டும். இல்லாவிடில் பரபரப்புடன் நீ கூச்சலிட்டு கூக்குரலிட்டு வருவதெல்லாம், நண்பா, ஒன்றுமில்லாததாய் முடிந்து விடும்!

**தேசீய வாழ்க்கையாகிற கீதத்தின் ஆதார சுருதியும் அதன் ராக பேதங்களும் :**

ஒவ்வொரு ராஷ்டிரமும் தனக்கே உரித்தான வழியில் வேலை முறைகளைக் கொண்டிருக்கிறது. சில நாடுகள் அரசியல் மூலம், சில சமூகச் சீர்திருத்தங்கள் மூலம், சில வேறு வழிகள் மூலம் வேலை செய்து வருகின்றன. நமக்குச் சமயந்தான் ஒரே அடிப்படை. அந்த அடிப்படையின் மீதுதான் நாம் இயங்க முடியும். அரசியல் மூலமாகக்கூட ஆங்கிலேயன் சமயத்தைப் புரிந்து கொள்ளக்கூடும். அமெரிக்கன் ஒருகால் சமூகச் சீர்த்திருத்தங்கள் மூலமாகக்கூட சமயத்தைப் புரிந்து கொள்ளக் கூடும். ஆனால் ஹிந்துவானவன் அரசியலைக் கூட சமயத்தின் மூலமாக அளிக்கும்போதுதான் புரிந்து கொள்கிறான். எல்லாமே சமயத்தின் வழியாக வந்தால்தான் அவனுக்குப் புரியும். ஏனெனில் அதுதான் மையக் கருத்து; ஆதார சுருதி. மற்றவை யெல்லாம் தேசீய வாழ்வின் இசையில் ராக பேதங்கள்தான்.

அரசியல் ஆதிக்கமே ஒரு தேசத்தின் மையக் கருத்தாக இருக்கலாம். சமயமும் மற்ற அனைத்தும் வாழ்க்கையின் மகத்தான அந்த ஒரு மையக் கருத்துக்கு உட்பட்டே இருக்க வேண்டும். ஆனால் இது முற்றிலும் வேறான தேசம். இதனுடைய வாழ்க்கையின் மகத்தான மையக் கருத்து ஆத்மீகமும் துறவும்தான். இந்த உலகம் முழுவதும் வெறும் வெளிமயக்கு மூன்று நாட்களில் மாண்டு போகக் கூடியது என்பதுதான் இந்தத் தேசத்தின் குறிச்சொல் ஆகும். மற்ற அனைத்துமே அது ஞானமாயினும், விஞ்ஞானமாயினும் அதிகாரப் பதவிகளாயினும், சுக போகங்களாயினும் செல்வம், பெயர் அல்லது புகழ் ஆகிய அனைத்துமேயாயினும் அந்த ஒரு மையக் கருத்துக்குக் கீழடங்கியே இருக்க வேண்டும். உண்மையாக ஹிந்துவின் குணப்பண்பினுடைய ரகசியம், ஐரோப்பிய விஞ்ஞானங்களையும், கல்வியையும் அந்த ஒரே மையக் கருத்துக்கு உட்பட்டதாக்குவதில் தான் பொதிந்துள்ளது. தனது செல்வம், தகுதி, புகழ், பெயர் இவை அனைத்தையும் அந்த ஒரு மையக் கருத்துக்கு உள்ளடக்கியிருக்கவேண்டும். அக்கருத்து ஒவ்வொரு ஹிந்துக் குழந்தையோடும் கூடப் பிறந்ததாகும். அதுதான் ஆத்மீகமும் இனத்தூய்மையும்.

**ஆத்மீக முறையில் உறுதியான பிடிப்பு வேண்டும் :**

ஆனால், கவனத்திற் கொள்ளுங்கள். அந்த ஆத்மீக முறையை நீங்கள் கைவிட்டால், அதை ஒதுக்கிவிட்டு மேநாடுகளின் உலகாயத

நாகரிகத்தின் பின்னே செல்வீர்களானால், அதன் விளைவாக் மூன்றே தலைமுறைகளில் நீங்கள் பூண்டற்ற இனமாக ஆகிவிடுகிறீர்கள். ஏனெனில், தேசீயத்தின் முதுகெலும்பு முறிந்துபோகும். தேசீய மாளிகையின் அஸ்திவாரம் குலைந்து போகும். அதன் விளைவாக எல்லாத் துறைகளிலுமே படுநாசம்தான் ஏற்படும்.

ஆகவே, நண்பர்களே, ஆத்மீக முறையில் நாம் உறுதியான பிடிப்பைக் கொள்ளுவது நமது முதல் வேலை, தலையாய வேலை-மீளுவதற்கு அதுவே வழி. நமது தொன்மையான முன்னோர்கள் வழி வழியாக நமக்குத் தந்த விலை மதிப்பற்ற நன்கொடை, இந்த ஆத்மீக முறையாகும். நம்நாட்டில் மாபெரும் மன்னர்கள் தமது வம்சத்தின் முதல்வர் என்று அரசனைத் தேடிக் கொண்டிருக்கவில்லை; ஏழை யாத்ரிகர்களை வழிப்பறி செய்யும் பழைய கோட்டைக் குறுநில மன்னர்களின் வம்சத்தவரோ என்று பார்க்கவில்லை. ஆனால் அரை நிர்வாணமாகக் காடுகளில் வசித்த முனிவர்களில் யார் தமது வம்சத்தின் முதல்வர் என்றுதான் கண்டு பிடிக்க முயன்றார்கள். அப்படிப்பட்ட ஒரு நாட்டைப் பற்றி எங்கேயாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அதுவே இந்த நாடு. மற்ற நாடுகளில் பெரிய மதகுருமார்கள் தமது பரம்பரை முதல்வர் ஒரு மன்னர் என்று ஆராய்ந்து சொல்வார்கள். இங்கே மாமன்னர்கள் ஆராய்ந்து பார்த்தால் பழைய ஆசாரியர் ஒருவரின் வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதைக் காண்பார்கள்.

ஆதலால், ஆத்மீக முறையில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிடினும், (ராஷ்டிர) தேசீய வாழ்க்கைக்காக, ஆத்மீக முறையை ஒரு கையால் பிடித்து வைத்துக் கொண்டு, அதனை விடாது காக்கவேண்டும். பிறகு மறுகையை நீட்டி மற்ற இனத்தவரிடமிருந்து உங்களால் முடிந்தவற்றையெல்லாம் கூட்டிச் சேர்த்துக் கொள்ளுங்கள்; ஆயினும் மற்ற அனைத்தும் அந்த முக்கிய வாழ்க்கை லட்சியத்துக்குக் கீழ்ப்பட்டதாக ஆக்கப்பட வேண்டும். அதிலிருந்து ஆச்சரியகரமான வருங்கால பாரதம் தோன்றும். அது நிகழப் போகிறது என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். முன்னர் எக்காலத்தும் இருந்ததை விட மகத்தான பாரதமாக அது திகழும்.

# மறுமலர்ச்சிப் பணி-அதன் அடிப்படையும் போக்கும்

ஓ பாரத நாடே!

பிறருடைய கருத்துக்களை வெறுமனே எதிரொலிப்பதன் மூலம், மட்டரகமாகப் பிறரைப் பின்பற்றி நடிப்பதன் மூலம், பிறரை நம்பி வாழ்வதன் மூலம், நாகரிகத்தின் சிகரத்தையும் சீர் சிறப்பின் சிகரத்தையும் நீ எய்திவிட முடியுமா?

அவமானகரமான இந்தக் கோழைத்தனத்தின் மூலம் வீர தீரர்களுக்கே உரித்தான சுதந்திரத்தை நீ அடைய முடியுமா?

ஓ பாரத நாடே!

சீதை, சாவித்திரி, தமயந்தி முதலிய கற்பில் சிறந்த உத்தமிகளை மறவாதே. உனது பெண்மையின் லட்சியத்துக்கு அவர்களே உதாரணம்!

யோகிகளுக்கெல்லாம் யோகியும், எல்லாவற்றையும் துறந்தவருமான உமாபதியாம் சங்கரனே நீ வணங்கும் கடவுள் என்பதை மறவாதே!

உனது திருமணம், உனது செல்வம், உனது உயிர் முதலானவை, உனது பிரத்தியேக இந்திரிய சுகபோகத்திற்கும் உனது சொந்த நன்மைகளுக்கும் ஏற்பட்டவையல்லவென்பதை மறவாதே!

நீ தேவியின் பலி பீடத்துக்கான ஒரு யாகத் திரவியமாகப் பிறந்திருக்கிறாய் என்பதை மறவாதே!

வர்ணாசிரம தர்மமானது அகிலாண்டேசுவரியான பராசக்தியின் பிரதி பிம்பந்தான் என்பதை மறவாதே!

தாழ்த்தப்பட்டவர்களும் அறியாத மூடர்களும், ஏழைகளும் எழுத்து வாசனையற்றவர்களும் சண்டாளர்களும் தோட்டிகளும் உன் சகோதரர்கள், உன் இரத்தக் கலப்புள்ளவர்கள் என்பதையும் மறவாதே!

வீரனே!

தீரனாக இரு! கோழைத்தனத்தை அகல ஓட்டு! நீ ஒரு பாரத வாசி என்பதில் பெருமைகொள். "நான் ஒரு பாரத வாசி; ஒவ்வொரு பாரதீயனும் என் சகோதரன்!" என்று பெருமையுடன் உரக்கக் குரல் எழுப்பு.

மூடபாரதீயனும், பிராம்மண பாரதீயனும், பறையனுகிய பாரதீயனும் எனது சகோதரன் என்று சொல்வாய். இடுப்பில் ஒரு கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டிருக்கிறவனுயினும், உரத்த குரலெடுத்து, "பாரதீயரே எனது சகோதரர்; பாரதீயரே எனது உயிர்; பாரதத்தின் தேவ, தேவிகளே நான் வணங்கும் தெய்வங்கள்; பாரதத்தின் ஜன சமூகமே நான் குழந்தையாக இருந்தபோது படுத்து வளர்ந்த தொட்டில்! இளமையில் விளையாடிக் களித்த எழிற்பூங்கா. மூப்படைந்த தருணத்தில் அடையும் வாராணசியான மோட்சம்" என்று பெருமையுடன் சொல்வாயாக!

சகோதரனே! "பாரத பூமியே எனது அதியுயர்ந்த மோட்ச லோகம்: பாரதத்தின் நன்மையே எனது நன்மை!" என்று சொல்வாயாக!

இரவிலும் பகலிலும் "கௌரி வல்லப! அகிலாண்டேசுவரி! ஆண்மைத்தனத்தை எனக்கு அருள்வீர்களாக! வல்லமையை அருளும் தாயே! எனது கோழைத்தனத்தை அகற்றுவாய். எனது பேடித்தனத்தைப் போக்குவாய்! என்னை ஓர் ஆண்மகனுக ஆக்கு!" என்று இடையருது பிரார்த்தனை செய்!

**'மேநாட்டிலிருந்து வருவதே தலைசிறந்தது':**

இந்நூற்ருண்டின் துவக்கத்தில் மேநாட்டின் செல்வாக்கு பாரதத்துக்குள் பொழியத் துவங்கியபோது, வெற்றி கொண்ட மேநாட்டவர்கள் வாள்கரத்துடன், ரிஷிகளின் புதல்வர்களிடம் வந்தார்கள். "நீங்கள் வெறும் காட்டுமிராண்டிகள். நீங்கள் கனவு காண்கிறவர்களின் இனத்தவர். உங்களது சமயம் வெறும் கட்டுக் கதைதான். உங்களது கடவுளும் ஆத்மாவும், நீங்கள் எதை எய்த விரும்பிப் போராடினீர்களோ, அவையும், எல்லாமே அர்த்தமற்றவை. ஆயிரமாண்டுகளாக நீங்கள் நடத்திய போராட்டம், ஆயிரம் ஆண்டுகளாக நீங்கள் பூண்ட முடிவற்ற துறவறம் ஆகியவையெல்லாம் வீணுகிவிட்டன"—என்று நிரூபித்துக் காட்ட வந்தார்கள். அப்பொழுது பல்கலைக் கழக மாணவர்களிடையே இந்தப் பிரச்னை பரபரப்பை உண்டாக்கியது. 'இதுவரையில் வாழ்ந்து வந்த நமது தேசிய வாழ்க்கை தோற்று விட்டதா? மேநாட்டுத் திட்டப்படிப் புதிதாக ஆரம்பிக்க வேண்டியது தானு? நமது பழைய புத்தகங்களைக் கிழித்து, தத்துவ ஞானங்களைக் கொளுத்தி, உபதேசகர்களை ஓட்டி விரட்டிக் கோயில்களை இடித்துத் தள்ளலாமா?' என்றெல்லாம் எண்ணினுர்கள். தங்கள் சமயத்தை

வாள் கொண்டும் துப்பாக்கி கொண்டும் நிரூபித்துக் காட்டிய வெற்றியாளனை மேநாட்டவன், நமது பழைய வழி முறைகளெல்லாம் வெறும் மூடநம்பிக்கையென்றும், வெறும் விக்கிரக ஆராதனை தானென்றும் கூறவில்லையா? மேநாட்டவன் திட்டப்படி துவக்கப் பட்ட புதிய கல்விக் கூடங்களில் பழக்கப் படுத்தப்பட்டு, கல்விப் பயிற்சி பெற்றவர்கள் மேற்கூறிய கருத்துக்களைத் தமது சிறு பிராயம் முதலே உட்கொண்டார்கள். ஆகவே, அவர்களுக்குச் சந்தேகங்கள் எழுந்ததைக் குறித்து வியப்படைய வேண்டியதில்லை. ஆனால் மூட நம்பிக்கைகளைத் தூர எறிந்துவிட்டு, சத்தியம் எது என்று உண்மை யான ஆராய்ச்சியைத் துவக்காமல், 'மேநாடு என்ன சொல்கிறது?' என்ற கேள்விதான் உண்மைக்கு ஓரே உரைகல்லாகியிருக்கிறது குருமார்கள் ஒழிய வேண்டும்; வேதங்கள் ஒழியவேண்டும் ஏனெனில் அவ்வாறு மேநாடு கூறுகிறதே?

**பலசாலியை அண்டி அனைவரும் போகிறார்கள் :**

இங்கிலாந்திலும்கூட கவனித்திருக்கிறேன் — பலங்குறைந்த தேச மக்களுக்குப் பிறந்த குழந்தைகள் இங்கிலாந்தில் பிறந்தால், தாம் கிரேக்கர், போர்த்துகீசியர், ஸ்பெயின் நாட்டவர் என்று முறைப்படி தம்மை அழைத்துக் கொள்ளாமல் ஆங்கிலேயன் என்றே தம்மைக் கூறிக்கொள்கின்றன. பலமுள்ளவனையே அனைவரும் அண்டிப் போகிறார்கள். 'பலமுள்ளவனின் புகழொளி நமது உடலின் மீதும் பட்டுப் பிரதிபலிக்காதா? பலசாலியின் புகழ் ஜொலிப்பிலிருந்து கடன் வாங்கி நாமும் மினுக்கிக் கொள்ளலாமே?' என்பது பலமில்லாதவனின் விருப்பமாக இருக்கிறது.

**பாரதம் உறக்கத்திலிருந்து விழித்து வருகிறது :**

இப்பொழுதுள்ள பாரத அரசாங்கத்திடம் சில குறைகள் உள்ளன. அத்துடன் மிகப்பெரிய நல்ல அம்சங்களும் அதில் உள்ளன. அதில் உள்ள மிகப்பெரிய நன்மை இதுதான்: பாடலி புத்திர சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பிறகு இதுவரை பாரத நாடானது பிரிட்டனைப் போன்று, நாடு நெடுகிலும் தனது செங்கோலைச் செலுத்திவரும் சக்திவாய்ந்த ஓர் இயந்திரத்தின் கண்காணிப்பின் கீழ் இருந்ததில்லை. வைசியர்களின் ஆதிபத்தியத்தில் (வைசியனிடம் இயற்கையாகவே இருக்கும் கடும் உழைப்புக் குணத்துக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்) உலகத்தின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்கு வியாபாரப் பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன. அதே நேரத்தில் அதே இயல்பின் விளைவாகப் பற்பல நாடுகளின் கருத்துக் களும், சிந்தனைகளும் பாரதத்தின் எலும்புக்குள்ளும், ஊன் உதிரத் துக்குள்ளும் பலவந்தமாக நுழைந்து வருகின்றன. இந்தக் கருத்துக்

களிலும் சிந்தனைகளிலும் பாரதத்துக்கு மிகுந்த நன்மை தருவதாக உள்ளவை சில. வேறு சில தீமை விளைவிக்கக் கூடியவை. மற்றக் கருத்துக்களெல்லாம், இந்த நாட்டுவாசிகளான மக்களுக்கு எது உண்மையாகவே நல்லது என்பது பற்றி முடிவு கட்ட முடியாத அந்நியர்களின் அறிவீனத்தையும், திறமையின்மையையும் வெளிப் படுத்துகின்றன.

ஆனால் தன்னை மூடி மேடுபோலச் சூழ்ந்திருக்கும் நன்மை—தீமை களைத் துளைத்துக்கொண்டு பாரதத்தின் வருங்கால வள வாழ்வு எழுந்து வருகிறது. இதற்கான நிச்சயமான அறிகுறி காணப்படு கிறது. ஒருபுறம் பாரதத்துக்குச் சொந்தமான பழைய தேசீய லட்சியங்கள். மறுபுறம் அந்நிய நாடுகளால் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட விசித்திரமான லட்சியங்கள். இவை இரண்டும் ஒன்றையொன்று தாக்குகின்றன. அதனிடையே மெல்ல நீளுறக் கத்திலிருந்து சாவதானமாகக் கண் விழித்து வருகிறது பாரதம்.

இந்தச் சிறு விழிப்பிலிருந்து, நவபாரதத்தில் சுதந்திரமான வெளிச்சார்பு அற்ற சிந்தனையானது ஓரளவுக்கு உதித்து வரு கிறது. ஒருபுறம் நவீன மேநாட்டு விஞ்ஞானம் கோடிசூரியப் பிரகாசத்துடன் கண்ணைப் பறிக்கிறது. நேர்முகமாக வேலை செய்யும் கண்கண்ட கூரிய சக்திகளைக் கொண்டு திட்டவட்டமான உண்மை களை அவர்கள் திரட்டிச் சேர்த்திருக்கிறார்கள். அந்தத் திட்டவட்ட மான உண்மைகள் என்ற ரதத்தின் மீதேறி வந்து நம்மைத் தாக்கிக் காயமுறச் செய்கிறார்கள். பாரதநாடு புகழின் சிகரத்திலிருந்த காலத்தில் அதன் பண்டைய முன்னோர்கள் நம்பிக்கையும் சக்தியும் ஊட்டுகின்ற ஞான சம்பிரதாயங்களை வகுத்தார்கள். அதன் சம்பிர தாயங்களைப் பாரத நாட்டிலும் வெளி நாட்டிலும் வாழ்ந்த மகரிஷிகள் சரித்திரத்தின் ஏடுகளிலிருந்து திரட்டி வெளிக் கொணர்ந்தார்கள். அந்தப் பாரம்பரியங்கள் எண்ணிலடங்காத ஆண்டுகளாக, நூற்றாண்டுகளாக ஓடி வருகின்றன. உலகனைத்திடம் கொண்டுள்ள அன்பினால் அதிகமான துடிப்பைப் பெற்று, பாரதத்தின் இரத்தக் குழாய்களில் பாய்ந்து வந்துள்ளன. அந்தப் பரம்பரை எவராலும் மிஞ்சப்படாத வீரத்தைக் காட்டுகிறது; மனித சக்திக்கு மீறிய மேதா விலாசத்தையும் மிகவுயர்ந்த ஆத்மீகத்தையும் வெளிக்காட்டுகிறது. தேவர்களும் அது கண்டு பொறாமைப்படுகிறார்கள். இந்தக் கட்சிகள் வருங்கால பாரதத்தைப் பற்றிய நம்பிக்கையைத் தூண்டுகின்றன.

ஒருபுறம் அப்பட்டமான உலகாயத வாதம், செல்வக் கொழிப்பு, பிரம்மாண்டமான சக்திகளின் குவியல், தீவிரமான போக உணர்ச்சி ஆகியவை எல்லாம் அந்நிய இலக்கியங்கள் மூலம் மகத்தான கிளர்ச்சியை உண்டாக்கின. மறுபுறம் இத்தகைய கர்ணகடூரமான

குழப்பக் கூச்சலுக்கிடையே, மெல்லிய, ஆனால் தெளிவான, தவறற்ற குரலில் தனது பழைய தெய்வங்களின் உள்ளமுருக்கும் ஓலத்தைக் கேட்டு பாரதத்தாய் திடுக்கிட்டெழுகிருள்.

536427

அவள் முன்னிலையில் மேநாடுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட பலவிதமான விசித்திர போகப் பொருள்கள் உள்ளன. தேவ லோகப் பானங்கள், சுவையாகச் சமைக்கப்பட்ட விலையுயர்ந்த உணவு, நேர்த்தியான ஆடையணிகள், மேன்மை வாய்ந்த அரண் மனைகள், புதுவிதமான வண்டி, வாகனங்கள், புதிய பழக்கங்கள், புதிய நாகரிக முறையில் ஆடையணிந்து கொண்டு நன்கு கற்றுத் தேர்ந்த பெண்கள் வெட்கமில்லாத சுதந்திரத்துடன் நடமாடும் காட்சி–இவையெல்லாம் இதற்கு முன் உணர்ந்திராத ஆசைகளைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

294.542 VIV

மறுபடியும் காட்சி மாறுகிறது. அதே இடத்தில் உக்ரமான தோற்றமளிக்கும் புதுக்காட்சி விரிகின்றது: சீதை, சாவித்திரி, கடுமையான ஞான சம்பந்தமான விரதங்கள், உபவாசங்கள், காட்டிலுள்ள தனி இடம், அரை நிர்வாணமான துறவியின் சடை முடியும் காவியாடையும், சமாதியும் பிரம்மத்தைத் தேடும் முயற்சியும் ஆகிய இக்காட்சிகளே தோன்றுகின்றன. ஒரு பக்கம் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட மேலை நாட்டுச் சமூகங்களின் சுதந்திரம்; மறுபக்கம் ஆரிய மக்கள் சமூகத்தினது தன்னல மறுப்பின் எல்லை. இத்தகைய உக்ரமான போராட்டத்தில், பாரத சமுதாயம் மேலும் கீழும் தூக்கியெறியப்படுவதில் என்ன புதுமையிருக்கிறது?

மேலை நாட்டின் லட்சியம்: தனி மனிதனின் சுதந்திரம்; அதன் மொழி: பணந் திரட்டும் கல்வி; அதற்கான வழி: அரசியல். பாரதத்தின் லட்சியம்: முக்தி; அதன் மொழி: வேதம்; அதன் வழி: துறவு.

சிறிது நேரம் தற்காலப் பாரதம், "இனி வரப்போகும் நிச்சய மற்ற ஞான நலத்தின் கவர்ச்சிக்கு நான் உள்ளாகி, அதனை வீணாக எதிர்பார்த்து இந்த எனது உலக வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டு வருகிறேன்" என்று நினைப்பது போன்று உள்ளது. ஆனால் என்ன ஆச்சரியம்! மறுபடியும் அது—இதி ஸம்ஸாரே ஸ்புடத்ரதோஷ: கதமிஹ மானவ தவ ஸந்தோஷ: — 'மரணமும் மாறுபாடும் நிறைந்த பிறவியாகிய இதிலே மனிதனே, உனக்கு மகிழ்ச்சி எவ்வாறு உண்டாகும்?' என்ற வாக்கியத்தைக் கேட்டு, மந்திரத்தால் கட்டுண்டவரைப் போன்று அதைக் கூர்ந்து கவனிக்கிறது.

புதிய பாரதம் ஒரு பக்கம், "மேலை நாட்டினரின் கருத்துக்களையும், மொழியையும், உணவையும், உடையையும் நடையையும் நாம் கைப்பற்றினால்தான் மேலை நாட்டினரைப் போன்று ஆற்றலும்

31 JAN 2002

சக்தியும் உடையவராவோம்'' என்று கூறிக்கொண்டிருக்கிறது பழைய பாரதமோ மறுபக்கத்தில், "பேதைகளே! 'காப்பி'யடிப்பதனுல் பிறருடைய கருத்துக்கள் ஒருவனுக்கு ஒருநாளும் தனது சொந்தக் கருத்துக்கள் ஆவதில்லே-உழைத்துப் பெறுவதனுலன்றி எதுவும் ஒருவனது உரிமையாகாது. சிங்கத்தின் தோலேப் போர்த்த கழுதை சிங்கமாவதுண்டோ?'' என்று மறுத்துரைக்கிறது.

புதிய பாரதம் ஒரு பக்கம், "மேலே நாட்டினர் செய்வது நன்மை யாவது திண்ணம்; அன்றேல் அவர்கள் அவ்வளவு பெருமையை எவ்வாறு அடைந்தனர்?'' என்று கேட்க, பழைய பாரதம் மறுபக்கம், "மின்னலின் ஒளி, கடும் பிரகாசமாக இருக்கிறது, ஆனுல் அது ஒரு கணத்திற்கே! சிறுவர்களே, பாருங்கள், அது உங்கள் கண்ணேப் பறிக்கின்றது. ஜாக்கிரதை!'' என்று எச்சரிக்கிறது.

**கற்றுக்கொள்! ஆனுல் அடிமையைப்போலப் பின்பற்றி நடிக்காதே:**

அவ்வாருயின் மேநாட்டினரிடமிருந்து கற்றுக்கொள்ளத் தக்கது நமக்கு ஒன்றுமே இல்லேயா? இப்பொழுது பெற்றுள்ளவைகளேவிட மேலானவற்றை அடைய நாம் முயலுவதும், உழைப்பதும் தேவை யில்லேயா? நாம் முழுமை அடைந்துவிட்டோமா? நமது சமூகம் யாதொரு குற்றங் குறையுமின்றி முற்றிலும் மாசற்றதாய் உள்ளதா? இல்லே, இல்லே. நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல உள்ளன. நாம் சாகுமளவும் முன்னேக் காட்டிலும் மிக உயர்ந்த, புதிய பொருள் களேப் பெறக் கட்டாயம் பாடுபடல் வேண்டும். பாடுபடுவதே மனித வாழ்க்கையின் பயன். "வாழுமளவும் நான் கற்கிறேன்'' என்று சொல்வார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். கற்றுக் கொள்ளுவதற்கு ஒன்றுமில்லே என்று கருதுகிற மனிதனே, சமூகமோ மரணத்தின் வாய்க்குள் முன்னரே புகுந்து விட்டதாக அறிந்து கொள்ளுங்கள். ஆம்! மேலே நாட்டவரிடமிருந்து நாம் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல உள்ளன. ஆனுல் அஞ்ச வேண்டுவனவும் உள்ளன.

அற்ப அறிவுள்ள ஒருவன் ஸ்ரீ ராமகிருஷ்ணரது முன்னிலேயில் ஹிந்து சாஸ்திரங்களே எம்பொழுதும் குறை கூறுவது வழக்கம். அவன் ஒருநாள் பகவத் கீதையைப் புகழலானுன். அதைக்கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர், "யாரோ ஓர் ஐரோப்பியப் பண்டிதர் கீதையைப் புகழ்ந்துள்ளார் போலும்! அதனுல் இவனும் அந்த மாதிரியே புகழ் கிருன்'' என்ருர்.

ஓ! பாரத நாடே, உன்னேப் பயமுறுத்தும் இன்னல் இதுவே. மேல் நாட்டாரைப் பின்பற்றி நடிக்கும் மயக்கத்தில் நீ மூழ்கியிருக் கிருய். ஆதலால் எது நல்லது, எது கெடுதல் என்பதை இனிமேல் நீ ஆராய்ச்சியாலோ, பகுத்தறிவாலோ, விவேகத்தாலோ அல்லது

சாஸ்திரங்களின் அபிப்பிராயத்தைக் கொண்டோ தீர்மானிக்கப் போவதில்லை. வெள்ளேயர் புகழ்கிற, விரும்புகிற எந்த ஒரு கருத்தோ அல்லது பழக்க வழக்க முறையோ நல்லனவாகின்றன. அவர்கள் வெறுக்கிற, இகழ்கிற விஷயங்கள் எவையானாலும் அவை தீயனவாகின்றன. அந்தோ! இதைக்காட்டிலும், அறிவீனத்தை நிரூபிக்கக்கூடிய மிகத்தெளிவான சான்று வேறு என்ன இருக்க முடியும்?

**அவர்களுக்கு உணவு ஆவது நமக்கு நஞ்சு ஆகலாம் :**

நமது இயல்புக்குத் தக்கபடி நாம் வளர்ந்து முன்னேற வேண்டும். அந்நிய நாட்டுச் சமூகங்கள் நம்மீது ஒட்டவைத் திருக்கும் முறைகள் மூலம் நாம் செயல்பட முயலுவது வீண் ஆகும். அது நடவாது. நம்மைத் திரித்து, மாற்றிச் சித்திரவதை செய்து பிற தேசங்களின் உருவில் ஆக்க முடியாது. இங்ஙனம் அருளிய ஈசனை நாம் போற்றுவோமாக, இதனால் பிற இனத்தவரின் சமூக ஏற்பாடுகளை நான் கண்டிக்கவில்லை. அவை அவர்களுக்கு நல்லது. நமக்கல்ல. அவர்களுக்கு அமுதம் ஆவது நமக்கு நஞ்சாக ஆகலாம். நாம் கற்கவேண்டிய முதற்பாடம் இது. அவர்களின் சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கும் சமூக ஏற்பாடுகளுக்கும் அவர்களது பரம்பரை யான கொள்கைகளுக்கும் ஏற்றவாறு அவர்கள் தற்கால நிலையை அடைந்திருக்கின்றனர். நமக்கு நம்முடைய புராதன அநுஷ்டான முறை உள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் கர்ம பலன் பின்னணியாக இருக்கிறது. நாம் நமது இயற்கைக்கு ஒத்த முறை யில்தான் வளர்ந்து முன்னேற வேண்டும். நமது பாட்டையில்தான் நம்மால் ஓடமுடியும்.

**இரு விதமான நாகரிகங்கள் :**

சமூக வாழ்க்கையை நிர்மாணிப்பதற்காக உலகத்தில் இரு முயற்சிகள் செய்யப்பட்டன. ஒரு முயற்சி சமயத்தை ஆதாரமாகக் கொண்டும், மற்றது சமூகத் தேவையை அடிப்படையாகக் கொண் டும் நிறுவப்பட்டன. ஒன்று, ஆத்மீகத்தின் அடிப்படையிலும், மற்றொன்று உலகாயத வாதத்தின் அஸ்திவாரத்தின் மீதும் எழுப்பப் பட்டது. ஒன்று மானசீக தத்துவத்தின் அடிப்படையிலும், மற்றது பிரத்தியட்ச வாதத்தின் அடிப்படையிலும் கட்டப்பட்டது. ஒன்று இந்தச் சிறிய உலகிலுள்ள சிருஷ்டியைத் தாண்டித் தன் பார்வை யைச் செலுத்துகிறது. இவ்வுலக வாழ்க்கையைத் தவிர மறு உல கிலும் வாழ்க்கையைத் துவக்குவதற்குத் துணிவுடனிருக்கிறது. இரண்டாவது, இவ்வுலகத்திலுள்ள விஷயங்களில் நிலைகொண்டு இங்கு உறுதியான ஆதாரத்தைக் காண வேண்டுமென எதிர் பார்க்கிறது.

ஒவ்வொன்றுக்கும் அதனதற்கு இசைந்த பாணி உண்டு. சமய ரீதியான, உள்நோக்கி வினவுகின்ற பாரதத்துக்கும், விஞ்ஞான ரீதியான, வெளியில் நோக்குகின்ற மேல் நாட்டுக்கும் தனித்தனிப் பாணியில் மரபுகள் அமையும். சமூக முன் னேற்றத்தின் மூலம் ஆத்மீக தத்துவத்தின் ஒவ்வொரு சிறு அம்சத் தையும் மேநாடு பெற விரும்புகிறது. கீழ்த்திசை நாடு ஆத்மீக தத்துவத்தின் மூலம் சமூக சக்தியின் ஒவ்வோர் அம்சத்தையும் பெற விரும்புகிறது. ஆகவேதான், பாரதத்தின் சமயத்தை முதலில் நசுக்கி அகற்றினல் ஒழிய, சீர்த்திருத்தத்துக்கு வேறு வழியில்லை என்று நவீனச் சீர்திருத்தவாதிகள் கருதினர்கள். அவர்கள் முயன்று தோல்வியுற்றுர்கள். ஏன்? ஏனெனில் தமது சொந்த சமயத்தைப் பற்றி அவர்களில் எவரும் ஆராயவில்லை. சமயங்களனைத்துக்கும் தாயானவளைப் புரிந்துகொள்ளத் தேவையான பயிற்சியை எவரும் பெறவில்லை. ஹிந்து சமூகத்தை முன்னேற்றுவதற்காக அதனுடைய சமயத்தை அழிப்பது தேவையில்லை என நான் ஆதார பூர்வமாகக் கூறுகிறேன். சமூகம் இன்றுள்ள இழிநிலை சமயத்தின் காரணமாக ஏற்பட்டதில்லை; சமூக நன்மைக்காகச் சமயமானது எந்த முறையில் பயன்படுத்தப் படவேண்டுமோ அந்த முறையில் பயன்படுத்தப் படாமையே இழிவுக்குக் காரணம்.

**இணக்கம் தேவைதான். ஆனல் பாரதம் ஐரோப்பாவாக ஒருபோதும் ஆக முடியாது!**

பாரதத்திலுள்ள சமூக ஏற்பாடுகளைப் புதிதாக மாற்றி இணக்க முண்டாக்க வேண்டுமென்று புதிய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றன. கடந்த முக்கால் நூற்றுண் டாகப் பாரதம் சீர்திருத்தச் சங்கங்களாலும் சீர்திருத்தவாதிகளாலும் நிறைந்து பொங்கி வருகிறது. ஆனல் அந்தோ! அவர்கள் ஒவ் வொருவரும் தோற்றுப்போனது நிரூபணமாகி விட்டது. இவர் களுக்கு ரகசியம் தெரியாது. கற்கவேண்டிய மகத்தான படிப்பினையை அவர்கள் கற்கவில்லை. அவர்கள் தமது அவசரத்தில் சமூகத்தில் காணப்படும் குறைகளுக்கெல்லாம் பொறுப்பைச் சமயத்தின் மீது சுமத்தினர்கள். ஒரு கதையில் ஒருவன் தனது நண்பனின் நெற்றி யில் உட்கார்ந்திருந்த கொசுவைக் கொல்ல விரும்பிக் கொடுத்த பலமான அடியில் கொசுவுடன் நண்பனும் இறக்கத்தக்க நிலை ஏற்பட்டதாம். அது போலத்தான் இவர்கள் நிலையும். ஆனல் இந்த விஷயத்தில், அதிர்ஷ்டவசமாக, அந்தச் சீர்திருத்தக்காரர்கள் அசைக்க முடியாத கற்பாறை மீதுதான் மோதிக் கொண்டார்கள். மோதிக்கொண்ட அதிர்ச்சி வேகத்தில் அடியோடு நசுக்குண்டு மறைந்தார்கள். தவருன வழியில் முயற்சி நடத்தித் தோற்றுப்போன அந்த உயர்ந்த தன்னலமற்ற ஆத்மாக்களைப் பாராட்டுகிறேன்.

சீர்திருத்தவாதியின் ஆவேச மனோவேகம் மின்சார அதிர்ச்சி போல ஆகி, தூங்குகிற இந்தப் பிரம்மாண்டமான சமூகத்தை எழுப்ப அவசியமாகவே இருந்தது. ஆனால் அவர்கள் நிர்மாணிப்ப வர்களாக இராமல், தகர்க்கிறவர்களாக இருந்தனர். ஆகவே அவர் களே அழிந்து போகும் தன்மையினராதலால் மடிந்தனர்.

அவர்களை நாம் ஆசீர்வதிப்போம். அத்துடன் அவர்களது அநுபவத்தின் மூலம் இலாபமடைபோம். வளர்ச்சி எல்லாமே உள்ளுக்குள்ளேயிருந்து வெளியே வருகிற வளர்ச்சி தான் என்ற பாடத்தை அவர்கள் கற்கவில்லை. உயிர்கள் வளர்ச்சி அடைவதற்கு முன் உள்ளே சுருங்குகின்றன. எல்லாப் பரிணும வளர்ச்சிகளும் அதற்குமுன் ஏற்பட்ட உள்சுருக்கத்தின் வெளித் தோற்றம்தான். விதையானது தன்னைச் சூழ்ந்துள்ள பஞ்சபூதங்களிலிருந்து ஜீவ ரசத்தை உறிஞ்சி ஜீரணிக்கமுடியும். ஆனால் தனது இயல்புக்குத் தகுந்த மரத்தையே அது வளர்க்கிறது. ஹிந்து இனம் மறைந்து போக வேண்டும்; இந்த நாட்டை புதிய ஓர் இனம் பிடித்துக் கொள்ள வேண்டும்- அப்படி ஒருகாலும் ஏற்பட முடியாது- அப்படி நிகழ்ந்தாலொழிய கிழக்கிலோ மேற்கிலோ நீ எவ்வளவு முயன்றாலும் பாரதம் ஐரோப்பாவாக ஒரு நாளும் மாற முடியாது.

மற்றத் தேசங்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய ஏராளமான பாடங்கள் உள்ளன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன், பல படிப்பினைகளை நாம் கற்க வேண்டும். ஆனால் நமது தற்காலச் சீர்திருத்த இயக்கங்கள் பலவும் ஆலோசியாமல் மேல் நாட்டு வழி துறைகளையும் வேலைமுறைகளையும் பின்பற்றி வெறும் பிரதிபிம்பமாக இருக்கின்றன. நிச்சயமாகவே பாரதத்துக்கு அவை ஏற்கா. ஆகவே தான் நமது தற்காலச் சீர்திருத்த இயக்கங்களெல்லாம் பலனற்றுப் போயின. மக்கள் என்ற ரீதிலே சரித்திர பூர்வமாக நாம் தேடிப் பெற்றுள்ள குணப்பண்பை நாம் காக்க முயல வேண்டும்.

**மாறாத மையப்புள்ளியைச் சுற்றி மாறுகின்ற வெளி வடிவங்கள் :**

ஒவ்வொரு காரியத்திலும் அத்தியாவசியமானவற்றுக்கும் தேவை யில்லாதவற்றுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அத்தியாவசியமானவையெல்லாம் நிரந்தரமானவை. தேவையில்லாதவற்றுக்குச் சில காலத்துக்குத் தான் மதிப்பு இருக்கும்.

ஜாதிகள் தொடர்ச்சியாக மாறி வருகின்றன. சடங்குகள் தொடர்ச்சியாக மாறிவருகின்றன. வெளி அமைப்புகளும் அவ்வாறே தான். மூலதத்துவம், அதன் சாரம் மாறுவதில்லை. நமது சமயத்தை நாம் வேதங்களில் படிக்க வேண்டும். வேதம் விதிவிலக்கு. அது ஒரு போதும் மாறாது. மற்ற ஒவ்வொரு புத்தகமும் மாறவேண்டும்...

...வேதங்கள் அநாதியாதலால் எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும். ஸ்மிருதிகளுக்கு முடிவு உண்டு. காலம் உருண்டோட ஓட, ஸ்மிருதிகள் மேலும் மேலும் இல்லாமற் போய் விடும். ரிஷிகள் வருவார்கள். அவர்கள் சமூகத்தை மாற்றி முன்னை விட நல்ல பாதைகளில் செலுத்துவார்கள். காலத்தின் தேவைக்குத் தக்க கடமைகளிலும் தகுந்த பாதைகளிலும் செலுத்துவார்கள். அப்படி இல்லையேல் சமூகம் உயிர் வாழ்வது இயலாது.

இந்த நாட்டில் கடந்த காலத்தில் பெரிய காரியங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. அதைவிடப் பெரிய காரியங்களை எதிர்காலத்தில் செய்வதற்கு இடமிருக்கிறது. நாம் ஒன்றும் செய்யாமல், இருக்கிற இடத்திலேயே தேங்கி நிற்க முடியாதென்பதை நீங்கள் அறிவீர்கள் என்பது திண்ணம். நாம் ஒரு இடத்தில் தேங்கி நின்றால், அது சாவுக்கு அறிகுறி. ஒன்று நாம் முன் செல்ல வேண்டும்; அல்லது பின் செல்லவேண்டும். ஒன்று நாம் முன்னேற வேண்டும்; அல்லது தாழ்வுறவேண்டும், பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் மகத் தான செயல்களைச் செய்தார்கள், நாம் இன்னும் அதிகமான பலம் பெற்று அவர்கள் செய்த காரியங்களைவிட உயர்ந்த காரியங்களைச் செய்ய வேண்டும். பெருத்த சாதனைகளைத் தாண்டி அணிவகுத்துச் செல்ல வேண்டும். நாம் எங்ஙனம் பின்சென்று நம்மைத் தாழ்த்திக் கொள்ள முடியும்? அது இயலாது. அப்படி நிகழக்கூடாது. பின் செல்வது தேசியத் தாழ்வுக்கும் சாவுக்கும் வழியாகும். ஆகவே நாம் முன்னால்சென்று, முன்னைவிட மகத்தான செயல்களைச் செய்வோமாக. இதுதான் நான் உங்களுக்குக் கூற வேண்டியது.

**காலத்தால் மதிப்புப் பெற்ற பாரதநாட்டுச் சமூக அமைப்பு முறைகள் :**

நமது ஜாதிகளும் நமது சமூக அமைப்பு முறைகளும், வெளிப் பார்வைக்கு நமது சமயத்துடன் இணைந்திருப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் அவ்வாறு இல்லை. தேசம் என்ற ரீதியிலே நம்மைப் பாதுகாக்க இந்த சமூக ஸ்தாபனங்கள் தேவைப் பட்டு வந்துள்ளன. தற்காப்புக்கான தேவை இல்லாதொழியும் போது அவை இயற்கையான மரணத்தை அடையும்.

ஆனால் வயது முதிர்ச்சியடைய அடைய காலத்தால் மதிப்புப் பெற்ற இத்தகைய பாரத நாட்டு ஸ்தாபனங்களைப் பற்றி முன் பிருந்ததைவிட நல்ல தெளிவு கொள்கிறேன். அவற்றில் பலவும் உபயோகமற்றவை, தகுதியற்றவை யென்று நான் எண்ணிய காலம் உண்டு. ஆனால் வயது முதிர்ச்சி பெறப்பெற அவற்றில் எந்த ஒன்றையும் திட்டுவதற்கு அதிகமான தயக்கமும் அதைரியமும் அடை கிறேன். ஏனெனில் அவை ஒவ்வொன்றும் பல நூற்றாண்டு அனு

பவங்களின் வடிவம் ஆகும். நேற்றுப் பிறந்த ஒரு குழந்தை, நாளை மறுதினம் விதிப்பயனால் சாகப் போவது, என்னிடம் வந்து எனது திட்டங்கள் அனைத்தையும் மாற்றிக் கொள்ளச் சொல்லுகிறது. அந்தக் குழந்தையின் யோசனையைக் கேட்டு எனது சுற்றுப்புறச் சூழ்நிலையை அதனுடைய கருத்துப் படியே மாற்றிக் கொள்வேனாயின் நான்தான் முட்டாளே தவிர, வேறு எவருமில்லை.

வெவ்வேறு நாடுகளிலிருந்தும் வருகிற ஆலோசனைகள் இது போன்றதேயாகும். அந்த மேதாவிகளிடம், "உங்களுக்காக நீங்களே சாசுவதமான சமூகத்தை நிர்மாணித்துக் கொண்ட பிறகு நீங்கள் கூறுவதை நாங்கள் கேட்போம். உங்களால் இரண்டு நாட்களுக்குத் தொடர்ந்தாற்போல ஒரு கருத்தைக் கடைப்பிடிக்க முடிவதில்லை; சண்டையிட்டுத் தோற்கிறீர்கள். வசந்த காலத்தில் தோன்றும் விட்டில் பூச்சியைப்போலப் பிறந்து, அவற்றைப் போலவே ஐந்து நிமிடங்களில் மடிகிறீர்கள். நீர்க் குமிழிகளைப்போல மேலே வந்து, அது போலவே வெடித்துப் போகிறீர்கள். முதன் முதலில் எங்களுடையதைப் போன்று சாசுவதமான ஒரு சமூகத்தை நிறுவுங்கள். பற்பல நூற்றுண்டுகளுக்குப் பிறகும் வலிமை குன்றாமல் வாழக்கூடிய சட்டங்களையும் ஸ்தாபனங்களையும் முதலில் அமையுங்கள். அதன் பிறகு தான் இந்த விஷயத்தைக் குறித்து உங்களிடம் பேசுவதற்கான தக்க தருணம் வரும். நண்பனே, அதுவரை நீ மயக்க நிலையிலுள்ள சிறு குழந்தைதான்" என்று கூறுங்கள்.

**மனிதகுல முன்னேற்றத்துக்கான நமது திட்டமும் அதன் நிறைவேற்றமும் :**

தற்காலிகமான சமூக சீர்திருத்தத்தைப் பிரசாரம் பண்ணுகிறவன் அல்ல நான். அல்லது சிறு சிறு குறைகளை நீக்கவும் நான் முயன்று கொண்டிருக்கவில்லை. "முன்னே செல். மனித குல முன்னேற்றத்துக்கான திட்டத்தை நமது மூதாதையர்கள் மிக உத்தமமான முறையிலே வகுத்து வைத்துள்ளார்கள். நடைமுறையில் அதனை நிறைவேற்றுவதற்காக வேலை செய்து அதனைப் பூரணமாக்கு" என்று மட்டும் நான் கூறுகிறேன். "மனிதன் ஏகப் பொருளாவான்; அவனோடு தெய்விக இயல்பு கூடப் பிறந்ததாகும் என்ற வேதாந்தக் கருத்துக்களை நீங்கள் நன்றாக அநுபவித்து உணர்ந்து வேலை செய்யுங்கள்" என்று மட்டும் கூறுகிறேன்.

நமது பண்டைய சட்ட நிர்மாணகர்கள், ஜாதிகளை உடைப்பவர்களாகவும் இருந்தனர். ஆயினும் அவர்கள் நமது தற்காலச் சீர்திருத்தக்காரர்களைப்போல இருக்கவில்லை. ஜாதியை உடைப்பது என்றால் ஒரு நகரத்திலுள்ள எல்லா மக்களும் ஒன்றாக உட்கார்ந்து மாட்டிறைச்சியும் மது பானமும் பருக வேண்டும்; எல்லா முட்டாள்

களும் பைத்தியக்காரர்களும் எந்த இடத்திலாவது, தாம் தேர்ந்தெடுக்கும் யாரையாவது திருமணம் செய்துகொண்டு நாடு முழுவதையும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக ஆக்கவேண்டும் என்று அவர்கள் கருதவில்லை. ஒரு நாட்டின் நல்வளம், அந்த நாட்டு விதவைகளுக்கு எத்தனை கணவன்மார்கள் கிடைத்திருக்கிறார்கள் என்பதன் மூலம் அளவிடப் படவேண்டும் என்றும் அவர்கள் நம்பவில்லை. மேற்கூறிய செயல் முறைகளால் வளமுற்ற நாட்டை இனிமேல்தான் நான் காண வேண்டும்.

**ஹிந்து இனத்தின் லட்சியநிலை பிராம்மணத்துவம் ஆகும் :**

நமது முன்னோர்களின் லட்சிய மனிதன் பிராம்மணன். பிராம்மணனின் இந்த லட்சியம் நமது எல்லா நூல்களிலும் எடுப்பாகக் காணப்படுகிறது. ஐரோப்பாவில் ஒரு சாராரின் மத குருக்களாகக் 'கார்டினல்' கள் விளங்குகிறார்கள். அவர்கள் மிகுந்த கஷ்டப்பட்டு, ஆயிரக்கணக்கான பவுன்களைச் செலவிட்டு தமது மூதாதையர்களின் சிறப்புத் தன்மை நிலையை நிரூபிக்க முயலுகிறார்கள். யாரோ ஒரு பயங்கரக் கொடுங்கோலன்; அவன் மலைமீது வாழ்ந்தான். அந்தப் பக்கமாகப் போகும் ஜனங்களைக் கவனித்துக் கொண்டேயிருந்து, சந்தர்ப்பம் கிடைத்தபோது, அவர்கள் மீது தாவிப் பாய்ந்து, கொள்ளையிடுவான். தாம் அப்படிப்பட்ட பயங்கரக் கொடுங்கோலனின் வம்சம் என்று நிரூபணமாகும் வரை, இப்படிப்பட்டவர்களே தமது முன்னோர் என்று ஆராய்ந்து பார்க்காதவரை அந்த மதத் தலைவர்கள் திருப்தியடையமாட்டார்கள். ஒரு மனிதனுக்குப் பெருந்தன்மை வழங்குகிற முன்னோர்களின் தொழில் இது. மகாப் பிரபுக்களான அந்த மதத் தலைவர்கள் இப்படிப்பட்டவர்கள் தமது முன்னோர் என்று ஆராய்ந்து பார்க்காதவரை திருப்தியடையமாட்டார்கள்.

மறுபக்கம் பாரதத்தில் மிக உயர்ந்த ராஜகுமாரன் புராதனமான ரிஷியைத் தனது வம்ச முதல்வராக ஆய்ந்து காண விழைவான். அந்த முனிவர் ஒரு சிறு கோவணத்துணியுடுத்து, காட்டில் வசித்து கிழங்கு வகைகளைப் புசித்து, வேதங்களை ஆராய்ந்து வருவார். பாரதத்தின் ராஜகுமாரன் தனது மூதாதையரைத் தேடி அங்கேதான் போகிறான். உனது மூதாதையர் ரிஷி எனக் கண்டு பிடிக்க முடிந்தால் நீ உயர்ந்த வகுப்பினன்; இல்லையேல் இல்லை.

ஆதலால் உயர்பிறப்பைப் பற்றிய நமது லட்சியம் மற்றவர்களுடையதைவிட முற்றிலும் மாறுபட்டதாகும். ஆத்மீகப் பண்பாடும் பற்றின்மையும் வாய்ந்த பிராம்மணனே நமது லட்சியம். பிராம்மண லட்சியம் என நான் கூறும்போது எனது கருத்து என்ன? லௌகிக குணங்கள் நிறைவையே லட்சியப் பிராம்மணத்துவமாக நான் கருதுகிறேன். ஹிந்து இனத்தின் லட்சியம் அதுதான்.

"பிராம்மணன் சட்டத்துக்கு உட்படுபவனல்லன்; அவனுக்கு சட்டமில்லை; அவன் மன்னனால் ஆளப்படுவதில்லை; அவனது உடலை வருத்தக்கூடாது" என்று பிரகடனம் செய்யப்பட்டதை நீங்கள் கேள்வி பட்டதில்லையா? அது முற்றிலும் உண்மை. சுயநல லாபநோக்க முள்ளவர்களும் பேதையான முட்டாள்களும் அதற்குத் தருகிற விளக்கத்தின் மூலம் அதனைப் புரிந்துகொள்ளக் கூடாது. உண்மை யான, மூலமான வேதாந்த நோக்குப்படித் தரப்படும் விளக்கத்தின் மூலமே அதனைப் புரிந்துகொள்ளல் வேண்டும்.

**ஆட்சி நிர்வாகம் தேவையற்று உதிர்ந்துபோகும் நிலை :**

எல்லாவிதமான சுயநலன்களையும் கொன்றவன்; அன்பின் வலிமையையும் ஞானத்தையும் எய்துவதற்காகவும் அவற்றைப் பிரசாரம் செய்வதற்காகவும் வாழ்ந்து வேலை செய்கிறவன், பிராம்மணன் ஆவான். ஒரு நாடு அப்படிப்பட்ட பிராம்மணர்களால் நிறைந்து ஆத்மீக உணர்ச்சியும், ஒழுக்க நேர்மையும், நற்பண்பும் வாய்ந்த ஆண், பெண், குழந்தைகளால் நிறைந்து விளங்குமாயின், அந்த நாடு சட்டத்துக்கு அப்பாற்பட்டது, சட்டங்களுக்கு அந் நாட்டில் அவசியமில்லை எனச் சொல்லுவதில் என்ன ஆச்சரியமிருக் கிறது? அம்மக்களை நிர்வகிக்கப் போலீஸோ, ராணுவமோ எதற்காக? அவர்களை யார், ஏன், ஆள வேண்டும்? ஓர் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் அவர்கள் ஏன் வாழ வேண்டும்? அவர்கள் நல்லவர்கள்; பெருந் தன்மை படைத்தவர்கள்; அவர்கள் இறைவனின் மக்கள்: அவர்களே நமது லட்சியப் பிராம்மணர்கள். சத்திய யுகத்தில் ஒரே ஒரு ஜாதி இருந்ததாகவும், அந்த ஜாதியே பிராம்மண ஜாதி என்றும் நாம் படித்திருக்கிறோம்.

**சத்திய யுகத்தில் ஜாதியே இல்லை-எல்லோரும் பிராம்மணர்கள் :**

ந விசேஷோ அஸ்திவர்ணானம் ஸர்வம் பிராம்மமிதம் ஜகத்
பிரம்மணா பூர்வஸ்ருஷ்டம் ஹி கர்மபிர்வர்ணதாம் கதம்

(மகாபாரதம் – சாந்தி பர்வம்.)

"உலகம் முழுவதும் ஆரம்பத்தில் பிராம்மணர்களால் நிறைந் திருந்தது; அவர்களது தன்மை குலையவே, பற்பல ஜாதிகளாகப் பிரிந்தார்கள்; காலச் சக்கரம் சுற்றித் திரும்பினால் அவர்கள் அனைவரும் மீண்டும் பிராம்மண நிலைக்கே திரும்பி விடுவார்கள்" என்றும் நாம் மகாபாரதத்தில் படிக்கிறோம். இந்தக் காலச் சக்கரம் இப்பொழுது திரும்பி வருகிறது.

இதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். ஆதலால் ஜாதிப் பிரச்னைக்கு நாம் காணும் மாற்று ஏற்கனவே மேல்

நிலையிலிருப்பவர்களைத் தாழ்த்துவது அல்ல. அன்றி அளவின்றி உண்டு, குடிப்பதன் மூலம் மூளை தடுமாறி ஓடுவதல்ல. வரம்புமீறி போகங்களை அனுபவிப்பதற்காக முன்னோர் வகுத்த எல்லையைத் தாண்டிச் செல்லுவதுமல்ல. நமது வேதாந்த சமயத்தின் கட்டளைகளை நாம் ஒவ்வொருவரும் நிறைவேற்றுவதன் மூலம்தான் அது ஏற்படும். நாம் ஆத்மீக சக்தி எய்துவதன் மூலம், லட்சியப் பிராம்மணனாக நாம் ஆவதன் மூலம், அந்தப் பிரச்னை தீர்ந்துபோகும்.

**லட்சியப் பிராம்மணனாக ஒவ்வொருவரும் மீண்டும் ஆக வேண்டும்:**

நீங்கள் ஆரியராயினும், ஆரியரல்லாதவராயினும், ரிஷிகளாயினும், பிராம்மணராயினும், அல்லது மிகத் தாழ்ந்த ஜாதியினராயினும் சரி—உங்களது மூதாதையர்களால், உங்கள் ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்ட கடமை ஒன்று உள்ளது. உங்களனைவருக்கும் இடப்பட்ட கட்டளை பொதுவானது. நீங்கள் இந்த லட்சியத்தை நோக்கி, நிற்காமல் முன்னேற வேண்டும். மிக உயர்ந்த மனிதன் முதல் தாழ்ந்த பறையர்வரை இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முயற்சி செய்து, லட்சியப் பிராம்மணராக ஆகுதல் வேண்டும். இந்த வேதாந்தக் கருத்து இங்கு மட்டுமல்ல, உலகம் முழுவதுக்கும் பொருத்தமானதாகும். நமது ஜாதிப் பாகுபாட்டின் லட்சியம் இத்தகையதாகும். மனித குலம் முழுவதையும் மெல்ல, மெதுவாக உயர்த்தி, எதையும் எதிர்க்காத, அமைதியான, உறுதியான, வழிபாட்டுத் தன்மையுள்ள, தூய, தியான வடிவான ஆத்மீக மனிதனாக ஆகும் லட்சிய நிலைக்கு ஏற்றி வைக்க வேண்டும். அந்த லட்சியத்திலேயே தெய்வமுள்ளது.

**ஐரோப்பியமயமான சீர்திருத்தவாதிகளின் கோஷ்டி:**

இக்காலத்தில் நம்மிடையே சில சீர்திருத்தக்காரர்கள் இருக்கிறார்கள். நமது சமயத்தை அவர்கள் சீர்திருத்த விரும்புகிறார்கள். அதாவது ஹிந்து தேசத்தை மறுமலர்ச்சியடையச் செய்ய, நமது சமயத்தை தலைகீழாக மாற்ற விரும்புகிறார்கள். அவர்களிடையே சிந்திக்கக் கூடியவர்கள் சிலரும் இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் பெரும்பாலானவர் பிறரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறார்கள். என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் மிகவும் முட்டாள்தனமாக நடக்கிறார்கள். இந்த ரகச் சீர்திருத்தக்காரர்கள் நமது சமயத்தில் அந்நிய நாட்டுக் கருத்துக்களை நுழைக்க வெகு உற்சாகமாக இருக்கிறார்கள். அவர்கள் 'உருவ வழிபாடு' என்ற சொல்லைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். ஹிந்து சமயம் நேர்மையானதல்ல; ஏனெனில் அது உருவ வழிபாடு நடத்துகிறது என்று துணிந்து பேசுகிறார்கள். "உருவ வழிபாடு" என்று அழைக்கப்படுவது எத்தகையது? அது நல்லதா கெட்டதா என்று கண்டுபிடிக்க அவர்

கள் ஒருபோதும் முனைவதில்லை. பிறரிடமிருந்து கருத்துக்களைக் கடன் வாங்கி, “ஹிந்து சமயம் நேர்மையானதல்ல” என்று கூச்ச லிட்டுத் தாக்க அவர்களுக்குப் போதுமான துணிச்சல் இருக்கிறது.

உருவ வழிபாடு தவறு என்பது புளித்துப்போன பேச்சாகி விட்டது. ஒவ்வொரு மனிதனும் சற்றும் நிதானித்துப் பார்க்காமல் அதனை உடனே ஒப்புக் கொண்டே வருகிறான். ஒரு சமயம் நானும் அவ்வாறு நினைத்திருந்தேன். அந்தக் குற்றத்துக்குத் தண்டனையாக, எல்லாவற்றையும் விக்கிரகங்கள் மூலம் அநுபவித்து உணர்ந்த ஒருவருடைய திருவடியின் கீழ் அமர்ந்து உபதேசத்தைப் பெற வேண்டியவனானேன். நான் குறிப்பிடுவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரைப் பற்றியே.

உருவ வழிபாட்டால் அத்தகைய ராமகிருஷ்ண பரம ஹம்ஸர்கள் உண்டாக்கப் பட்டார்கள் என்றால் உங்களுக்கு எது வேண்டும்? சீர்திருத்தவாதியின் கொள்கைகளா? அல்லது ஏராளமான விக்கிரகங்களா? எனக்குப் பதிலளிக்க வேண்டும். உருவ வழிபாட்டால் ராமகிருஷ்ண பரமஹம்ஸர்களை உண்டாக்க முடியுமானால் மேற்கொண்டு ஆயிரம் உருவங்களைக் கொண்டு போங்கள். இறைவனருளால் உங்களுக்கு வெற்றி கிட்டட்டும். எந்த வழிமுறை மூலமாவது அத்தகைய சீரிய இயல்பினரை உண்டாக்குங்கள்.

இருந்தாலும் உருவ வழிபாடு கண்டிக்கப்படுகிறது! ஏன்? எவருக்கும் தெரியாது. ஏனென்றால் சில நூறு ஆண்டுகளுக்கு முன் யூத வம்சத்தில் தோன்றிய ஒருவர் அதனைக் கண்டிக்க நேர்ந்தது என்பதற்காகவா? அதாவது, அந்த மனிதர் தமது சொந்த உருவத்தைத் தவிர மற்றெல்லா உருவங்களையும் கண்டித்தார். ஏதாவது ஓர் அழகான வடிவத்தில் குறிப்பான விக்கிரகத்தில் கடவுள் இருப்பதாகப் பாவித்தால் அது மகா மோசம், பாபம் என அந்த யூதர் சொன்னார். ஆனால் அவர் ஓர் இருதய வடிவத்தில் குறிக்கப் பட்டு இரு பக்கங்களிலும் இரு தேவ தூதர்கள் உட்கார்ந்து அதன் மீது மேகம் ஊசலாடிக் கொண்டிருந்தால், அது மேலானதாக, புனிதமானதாக ஆகிறது. கடவுள் புறாவின் உருவில் வந்தால் அது புனிதமானது; ஆனால் அவர் பசுவின் உருவத்தில் வந்தால் அது காட்டுமிராண்டியின் மூடநம்பிக்கையாகிறது. அதைக்கண்டிக்க வேண்டும்!—உலக நடப்பு இப்படித்தான் இருக்கிறது.

**முற்காலத்தில் வாழ்ந்த உண்மைச் சீர்திருத்தக்காரர்களின் தெய்வீகக் குழாம் :**

பாரதத்தில் சீர்திருத்தக்காரர்களுக்குப் பற்றுக்குறை எப்பொழுதாவது இருந்ததா? நீங்கள் பாரதத்தின் வரலாற்றைப் படித்திருக்

கிறீர்களா? ராமாநுஜர் யார்? சங்கரர் யார்? நானக் யார்? சைதன்யர் யார்? கபீர் யார்? தாது யார்? ஒருவர் பின் ஒருவராகத் தோன்றிய முதல்தரமான நட்சத்திரங்களின் குழாமெனத் தோன்றிய இந்த ஆசாரியர்கள் யார்?

தாழ்ந்த வகுப்பாரிடம் ராமாநுஜர் இரக்கம் காட்ட வில்லையா? பறையரைக் கூடத் தமது ஜாதியில் சேர்த்துக் கொள்ள அவர் தமது வாழ்நாள் முழுவதும் முயன்று வரவில்லையா? தமது சொந்த அரவணைப்பில் முஸ்லீம்களையும் கூடச் சேர்த்துக்கொள்ள அவர் முயல வில்லையா? ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் கூட்டிச் சேர்த்து, புதிய ஒரு நிலைமையைச் சிருஷ்டிக்க நானக் முயலவில்லையா? அவர் களனைவரும் முயன்ருர்கள். அவர்களது வேலை இன்றளவும் நடந்து வருகிறது. வித்தியாசம் இவ்வளவுதான்: இன்றைய சீர்திருத்தக் காரர்களைப்போல அவர்கள் வீண் ஆடம்பர ஆரவாரம் செய்து பெருமை பேசவில்லை. இக்காலச் சீர்திருத்தக்காரர்களைப் போல அவர்கள் பிறரைச் சபிக்கவில்லை. அவர்களது உதடுகளினின்றும் சதா ஆசி மொழிகளே ஒலித்தன.

**வரம்பில்லாத இரக்கமும் பொறுமையும் வாய்ந்த சீர்திருத்தக்காரர்கள்**

ஓர் உண்மையை நீங்கள் நினைவிற்கொள்ள வேண்டும். உலகத்திலுள்ள மகத்தான ஆசாரியர்கள் அனைவரும், "நாங்கள் அழிப்பதற்காக அல்ல, குறையை நிறைவாக்கவே வந்தோம்'' என்று பிரகடனம் செய்தார்கள். பல சமயங்களில் இதனை எவரும் புரிந்து கொள்ள வில்லை. அவர்களுடைய பொறுமை பல சந்தர்ப்பங்களில் தவருகவே பொருள் கொள்ளப்பட்டது, பொதுமக்களுக்கு மிகவும் பிடித்தமான கருத்துக்களுடன் அவர்கள் சிறிதும் தகுதி இல்லாத முறையில் சமரசமாக போகவிரும்புகிருர்கள் என்று கருதப்பட்டது. இன்றுங்கூட பெரிய மகான்களும் அவதார புருஷர்களும் கோழைத்தனமாக நடந்து கொள்வதாகச் சிலர் குறைகூறுவதை நீங்கள் கேட்கலாம். எது சரியென்று படுகிறதோ அதை அவர்கள் வெளிப்படையாக எடுத்துச் சொல்லத் துணியவில்லை என்று குறை கூறப்படுகிறதைக் கேட்கிருேம்.

இந்த மகான்களுடைய இதயங்களிலே கனியும் அன்பின் அளப்பரிய சக்தி இந்த வெறியர்களுக்குப் புரியாது. இந்த மகான்கள்தான் உண்மையில் மக்களுடைய தந்தை போன்றவர்கள். இவர்கள்தான் பிரத்தியட்ச தெய்வங்கள். இவர்களுடைய உள்ளமெல்லாம் எல்லையற்ற பரிவினுலும் பொறுமையினுலும் நிறைந்தது. இவர்கள் என்றும் சகித்துக் கொள்ளவும் பொறுத்துக் கொள்ளவும் சித்தமாக இருப்பவர்கள். மனித சமுதாயம் எப்படி வளர்ச்சி பெறவேண்டும் என்ப

தும் இவர்களுக்குத் தெரியும். பொறுமையுடனும் நிதானத்துடனும் ஆனால் நிச்சயமாகவும் இவர்கள் தங்கள் பரிகாரங்களைப் பிரயோகிப்பார்கள். மக்களைப் பழித்தும் பயமுறுத்தியும் இவர்கள் எதையும் திணிக்க விரும்புவதில்லை. படிப்படியாக இவர்கள் மக்களை அன்புடனும், நோகாமலும் உயர்நிலைக்கு அழைத்துச் செல்கிறவர்கள்.

உபநிடதங்களை இயற்றியவர்களும் அத்தகையவர்களே. தெய்வத்தைப் பற்றிய பழையகாலக் கருத்துக்கள் அந்தக் காலத்தில் இருந்த முற்போக்கான நீதிநெறிக் கருத்துக்களுக்கு ஒத்ததாக இல்லையென்பதை முற்றிலும் உணர்ந்திருந்தார்கள். அந்தக் காலத்தில் நாத்திகர்கள் நடத்தி வந்த பிரசாரத்தில் பெருமளவு உண்மையிருந்தது என்று மட்டுமல்ல, தங்கக்கட்டி போன்ற மகத்தான உண்மை உள்ளது என்றும் மிக நன்ருக உணர்ந்திருந்தார்கள். ஆனல் அதே நேரத்தில், மணிகளைக் கோர்த்து வைத்திருக்கிற நூலை அறுக்க நினைக்கிறவர்களும், ஆகாயத்திலே புதிய சமூகத்தைக் கட்டிப்படைக்க விரும்புகிறவர்களும், படுதோல்வியடைவார்கள் என்றும் அறிந்திருந்தார்கள்.

நாம் ஒரு போதும் புதிதாகக் கட்டுவதில்லை, நாம் அவற்றை இடம் மாற்றி வைக்கிறோம். புதிதாக நமக்கு எதுவும் கிடைக்காது. பொருள்களின் அமைப்பு நிலையைத்தான் மாற்ற முடியும். விதை பொறுமையாக, மெதுவாக மரமாக வளர்கிறது. உண்மைக்காக நமது சக்திகளைச் செலவிட வேண்டும். புதிய உண்மைகளை உற்பத்தி செய்ய முயற்சிக்கக் கூடாது.

நமது ரிஷிகள் கடவுளைப் பற்றிய பழையகாலக் கருத்துக்கள், நவீன காலத்துக்குப் பொருந்தாதவை என்று கண்ட போது, அவற்றை வெறுமனே கண்டிக்காமல் அவற்றுள் உறைந்திருந்த உண்மைப் பொருளைத் தேடிக் கண்டுப்பிடிக்க முற்பட்டனர். அதன் முடிவு தான் வேதாந்த தத்துவமாகும். பழைய தெய்வங்களிலிருந்து உலகை ஆளுகின்றவனை ஒரே ஒரு கடவுள் தான் உண்டு என்ற நம்பிக்கையிலிருந்து, மேன்மேலும் உயர்ந்த கருத்துக்களைக் குணங்குறியற்ற பரம்பொருள் தத்துவத்தில் கண்டார்கள். பிரபஞ்சம் முழுவதிலும் ஒருமையே பரவியுள்ளதைக் கண்டார்கள்.

**சீர்திருத்தம் என்ருல் சிதைப்பதல்ல, புதுப்பிப்பதாகும்:**

உருவ வழிபாட்டை எதிர்த்துப் பிரசாரம் செய்து, அதை பழிக்கிறவர்களுக்கு நான் கூறுகிறேன்: சகோதரர்களே! எல்லா விதமான வெளி உதவிகளையும் கைவிட்டு விட்டு உருவமற்ற கடவுளை வழிபட உங்களுக்குத் தகுதி இருக்குமாயின் அவ்வாறே செய்யுங்கள். ஆனல் அதுபோல செய்ய முடியாதவர்களைக் கண்டிக்க உங்களுக்கு உரிமையில்லை. ஏன் கண்டிக்கிறீர்கள்?

அழகான பெரிய மாளிகை, மிகத் தொன்மையான புகழ்மிக்க புராதனச் சின்னம் அக்கறையின்மையாலோ, பயன் படுத்தாமையினுலோ, இடிந்து சிதைந்த நிலைக்கு இழிந்துவிட்டது. அதனுள்ளே எங்கு பார்த்தாலும் அழுக்கும் தூசியும் படிந்து கிடக்கலாம். ஒருக்கால் அதன் சில பாகங்கள் தரை மட்டமாக இடிந்து கிடக்கலாம். அந்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? தேவையானபடி தூய்மைப்படுத்தல், பழுது பார்த்தல் முதலிய வேலைகள் நடத்தி அதன் மூலம் பழயனவற்றைப் புதுப்பிப்பீர்களா, அல்லது மாளிகை முழுவதையும் தரைமட்டமாக இடித்துத் தள்ளிவிட்டு அந்த இடத்தில், அசிங்கமான—அது நிரந்தரமாக இருக்குமா, இராதா என்பது நிரூபிக்கப்படாத நிலையிலுள்ள—நவீன காலத் திட்டப்படி வேருெரு கட்டிடம் கட்டுவீர்களா? நாம் அதனைச் சீரமைக்கவேண்டும்; தேவையானபடி சுத்தப்படுத்தி, பழுது பார்த்து, தகுதிப் படுத்தவேண்டும், அல்லது நிறைவுறச் செய்யவேண்டும்; அதைத் தரைமட்டமாக்கக் கூடாது. சீர்திருத்தத்தின் உண்மையான பொருள் இதுவே ஆகும். அத்துடன் சீர்திருத்த வேலை முடிவடைகிறது.

ஒரு சீர்திருத்தக் குழு வெறும் சீர்திருத்தத்தில் மட்டும் ஈடுபடுமாயின் அது உயிர் வாழாது; அதிலுள்ள ஆக்க சக்திகள், உண்மையான துடிதுடிப்பு, அதாவது கொள்கைத் தத்துவங்கள் மட்டுமே எப்பொழுதும் வாழ்கின்றன. ஒரு சீர்திருத்தத்தைச் செய்ய முயலும் போது அதன் ஆக்க அம்சத்தையே வலியுறுத்த வேண்டும். கட்டிடம் கட்டி முடித்துவிட்டால் முட்டுக் கொடுத்திருக்கும் சாரங்களை அகற்றிவிட வேண்டும்.

**ஹிந்துத் தன்மையை ஏன் கைவிடவேண்டும்? நாம் ஒன்ருகவே நீந்துவோம் அல்லது மூழ்குவோமே.**

நமது நாட்டிலுள்ள சீர்திருத்தக் குழுவினர், அதற்கு மாருகத் தமக்கெனத் தனியானதொரு வர்க்கத்தை நிர்மாணித்துக் கொள்ள விரும்புகிருர்கள். எப்படியாயினும் அவர்கள் நல்ல வேலை செய்திருக்கிருர்கள். அவர்கள் மீது இறைவன் அருள்பாலிக்க வேண்டும். ஆனல் சீர்திருத்தவாதிகளே! ஹிந்துக்களாகிய நீங்கள் மகத்தான பொதுப் பிணைப்பிலிருந்து பிரிந்து போக ஏன் விரும்புகிறீர்கள்? உங்களுக்கு மகத்தான மிகப்பெரும் புகழ்வாய்ந்த உடைமையான ஹிந்து என்றுபெயரை வைத்துக்கொள்ள ஏன் வெட்கப்படுகிறீர்கள்?

அமரத் தன்மை வாய்ந்தவர்களின் புதல்வர்களே! எனது நாட்டினரே! நமது தேசியக் கப்பலானது யுகக்கணக்காக, நாகரிகத்தை ஏற்றிக்கொண்டு தனது மதிப்பிட முடியாத பெருநிதி மூலம் உலகையெல்லாம் வளப்படுத்தி வந்துள்ளது. ஒளி மிகுந்து விளங்கிய பல நூற்ருண்டுகளாக வாழ்க்கைக் கடலைக் கடந்து நமது

தேசியக் கப்பல் ஓடி வந்துள்ளது. துன்பமெல்லாம் கடந்த ஆனந்த நிலையாகிற மறுகரைக்குக் கோடிக்கணக்கான ஆன்மாக்களை கொண்டு சேர்த்திருக்கிறது. ஆனால் இன்றைக்கோ—நமது குற்றத்தினாலோ அல்லது வேறெந்தக் காரணங்களினாலோ எப்படியாயினும் கவலையில்லை—அதில் ஓட்டை விழுந்து, சிதைந்துள்ளது. இந்தக் கப்பலில் அமர்ந்துள்ள நீங்கள் இப்பொழுது என்ன செய்வீர்கள்? அதைச் சபித்துக் கொண்டும், உங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டும், உங்களுக்குள்ளேயே பூசலிட்டுக் கொண்டும் நிற்பீர்களா? நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து ஓட்டைகளை அடைக்கச் சிறந்த முறையில் முயற்சிக்க மாட்டீர்களா? இப்பணியைச் செய்வதற்காக நாம் அனைவரும் நமது நெஞ்சத்து உதிரத்தை மகிழ்வுடன் அளிப்போம். அந்த முயற்சியில் தோற்போமாயின், நமது வாய்களில், வசைமொழியுடனல்லாமல் ஆசிமொழியுடன், நாம் அனைவரும் ஒன்றாக மூழ்கி மரிப்போம்.

**தீமைகள் எல்லாம் நாள்பட்ட கீல்வாதத்தைப் போல :**

நமது சமூகத்தில் தீமைகள் மிகுந்துதான் உள்ளன. அதைப் போலவே மற்ற எல்லாச் சமூகங்களிலும் இருந்தே வருகின்றன. இங்கே சில வேளைகளில் விதவைகளின் கண்ணீரால் பூமி நனைகிறது என்றால், அங்கே மேநாடுகளிலோ விவாகமாகாதவர்கள் விடும் பெருமூச்சு வானவெளியை நிறைக்கிறது. இங்கு வறுமைப் பிணியானது வாழ்க்கையில் நஞ்சாக உள்ளது என்றால், அங்கே மிதமிஞ்சிய சுகபோகங்களினால் ஏற்பட்ட வெறுப்பு அந்த இனத்துக்கே நஞ்சாக ஆகியுள்ளது. இங்கே வயிற்றுக்கில்லாத கொடுமையால் மக்கள் தற்கொலை செய்துகொள்ள விரும்புகின்றனர். அங்கே அளவு கடந்த சாப்பாட்டின் பயனாகவே தற்கொலை செய்து கொள்ளுகின்றனர்.

நாள்பட்ட கீல்வாதத்தைப் போல் தீமை எல்லாவிடத்தும் இருந்து வருகிறது. காலிலுள்ள வாதத்தை மருந்து முதலியனமூலம் போக்கினால் அது உடனே தலைக்கு வந்து விடுகிறது. அங்கிருந்து விரட்டினால் இன்னோர் இடத்துக்குச் சென்று விடுகிறது. இவ்விதம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் துரத்தலாமே ஒழிய அடியோடு ஒழித்து விடுவதென்பது இயலாது. ஏ குழந்தைகளே! தீமையை ஒழிப்பது என்பது சரியான வழியல்ல. நல்லது, கெட்டது இவை இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் எக்காலத்தும் இணைபிரியாதவை என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒன்று உங்களுக்குக் கிடைத்தால், மற்றதும் கிடைத்தே தீரும். கடலின் நீர்ப்பரப்பில் ஓர் அலை எழுமானால் அதற்கு ஈடாக வேறோர் இடத்தில் குழி விழுவது திண்ணம். அதுமட்டுமல்ல; வாழ்வென்பதே

தீமைதான். வேறொரு ஜீவ ஜந்துவைக் கொல்லாமல் மூச்சு விடவே முடியாது. ஒருவன் ஒரு கவளம் உணவு அருந்தியபோதும் அவன் அதன் மூலம் வேறு ஏதாவது ஒரு ஜீவனை மோசம் செய்தவனே ஆகிறான். இதுதான் சட்டம்; இதுவே தத்துவஞானம்.

ஆகவே நாம் செய்யக்கூடியதெல்லாம் ஒன்றுதான். தீமையை எதிர்த்துப் புரியும் காரியங்கள் அனைத்தும் புறச் செயல்களைவிட உள்ளம் சம்பந்தபட்டதாகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எத்தனை வாய்கிழியப் பேசினாலும் சரிதான்; தீமையை எதிர்ப்பது என்பதெல்லாம் நிகழ்வதைவிட பயிற்சி பூர்வமானது என்பதுதான் அதன் உட்கருத்து. அதுதான் நமக்கு அமைதி தரும்; அதுதான் நம்முடைய இரத்தத்தில் பாயும் வெறியைத் தணிக்கும்.

**வெறித்தனமான சீர்திருத்தங்களால் பலன் விளையாது :**

எங்கெங்கே குருட்டு வெறித்தனமான பிடிவாதங்களைக் கொண்ட சீர்திருத்தக்காரர்கள் இருந்தனரோ அங்கெல்லாம் அவர்கள் தமது வேலையில் சித்தியடையவில்லை என்பதை உலக வரலாறுகள் கற்பிக்கின்றன. அமெரிக்க நாட்டில் உரிமையையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட, அடிமைத்தனத்தைப் போக்குவதற்காக ஏற்பட்ட ஒரு யுத்தத்தைவிடப் பெரியதொரு எழுச்சியை ஊகிப்பதும் சாத்தியமில்லை. அதைப்பற்றி உங்களெல்லோருக்கும் தெரியும். அதனால் விளைந்த பயன் என்ன? அடிமைத்தன ஒழிப்புக்கு முன்னிருந்ததைவிட நூறு மடங்கு கேவலமான நிலையில் அவ்வடிமைகள் இன்று உள்ளனர்.

ஒழிப்புக்கு முன்னால் இவ்வேழை நீக்ரோக்கள் யாரோ ஒருவருடைய உடைமைகளாயிருந்து வந்தனர். ஆகவே சொத்துக்களைக் கவனிப்பதுபோல அவர்களது எஜமானர்கள் அவர்கள் கெட்டு அழியாவண்ணம் பாதுகாத்து வந்தனர். இன்றைக்கோ அவர்கள் யாருடைய சொத்தாகவும் இல்லை. அவர்களது உயிருக்கு மதிப்பென்பது கிடையாது. அற்பக் காரணங்களுக்காக அவர்கள் உயிருடன் கொளுத்தப்படுகிறார்கள்; சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். அவர்களைக் கொல்லுகிறவர்களுக்கு எதிரான சட்டமில்லை. ஏனெனில் அவர்கள் கறுப்புத் தோலுடைய 'நீக்ரோக்கள்'. அவர்கள் மனிதர்களல்ல; மிருகங்களாகக் கூட அவர்கள் ஆகமாட்டார்கள்; பலாத்காரமாகச் சட்டத்தின் மூலமோ அல்லது குருட்டுப் பிடிவாதத்தின் மூலமோ தீமையை அகற்ற முயலுவதால் மேற்கண்ட விளைவுகள் நிகழ்ந்தன.

இஷ்ட தெய்வ வழிபாட்டை, புத்தர் இடைவிடாமல் நிந்தித்து வந்தார். அதன் விளைவாக விக்கிரகங்கள் பாரதத்தில் நுழைவு

பெற்றன. வேதங்களுக்கு உருவங்களைப் பற்றித் தெரியாது. படைப் பாளனாகவும் நண்பனாகவும் இருந்த கடவுள் தத்துவத்தை இழந்த போது அதற்கு எதிர்செயலாக மகான்களான ஆசான்களின் உருவங் களைச் சமைக்கத் துவங்கினார்கள். புத்தரே விக்கிரகமாக ஆக்கப் பட்டார். அப்படியே அவரை லட்சக்கணக்கான மக்கள் வழிபடுகிறார் கள். பலாத்காரமான சீர்திருத்த முயற்சிகள் உண்மையான சீர் திருத்தத்தை முட்டுகட்டையிட்டுத் தடுப்பதில் வந்து முடிகின்றன.

நல்லது செய்வதற்காகவேனும், முரட்டுப் பிடிவாதமான இயக் கத்தை துவக்கினால் சரித்திரம் அதற்கு விரோதமாக இவ்வாறு தீர்ப்பளிக்கிறது.

**யாருக்குச் சீர்திருத்தம் தேவை?**

மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கவனிக்கலாம்......பாரதத் தின் பாமரமக்கள் பிறப்புரிமையாக பெற்று வந்துள்ள ஞான ஒளியை வெளிப்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு ஒரு காலத்திலும் அளிக்கப் படவில்லை. கடந்த சில நூற்றாண்டுகளாக மேநாட்டு மக்கள் சுதந் திரத்தை நோக்கி வெகு வேகமாக முன்னேறி வருகின்றனர். பாரதத் தில் குல நிர்ணயம் முதற்கொண்டு மனிதர்கள் எதைச் சாப்பிடலாம் எதைச் சாப்பிடக்கூடாது என்பதுவரை எல்லா விவரங்களையும் தீர் மானித்துத் தருபவன் மன்னன்தான். மேலை நாடுகளில் மக்கள் தாமே எல்லாவற்றையும் செய்து கொள்வது வழக்கம்.

...பாரத மக்களுக்குத் தங்களிடம் சிறிதளவுகூட நம்பிக்கையில்லை. அவர்கள் தம் காலில் நிற்பது பற்றிச் சிந்திக்கவும் முடியுமா? தனது ஆத்மாவில் நம்பிக்கை கொள்வதுதான் வேதாந்தத்தின் அடிப்படை. இது நடைமுறையில், மிகச் சிறிய அளவுக்குக்கூட, இன்னும் கொணரப்படவில்லை.

சமூகச் சீர்திருத்தப் பிரச்னை முழுவதும் ஒரு கேள்விக்குள் ஒடுங்கி விடுகிறது. சீர்திருத்தம் யாருக்குத் தேவை? முதலில் அவர்களை உண்டாக்குவோம். ''யாருக்குத் தலையே இல்லையோ அவர்களுக்குத் தலைவலி வரச் சந்தர்ப்பமேயில்லை'' என்பது போலப் 'பொது மக்கள்' எங்கேயிருக்கிறார்கள்? எங்கே யிருக்கிறார்கள் 'ஜனங்கள்'?

**நமது நாடு ஆழ்ந்த தாமச குணத்தில் மூழ்கியுள்ளது:**

உலகம் முழுவதும் சுற்றிவந்துள்ளேன். மற்ற நாட்டு மக்களுடன் ஒப்பிடுகையில் இந்நாட்டு மக்கள் ஆழ்ந்த தமோ குணத்தில் (மந்த நிலையில்) ஆழ்ந்துள்ளதைக் காண்கிறேன். வெளித் தோற்றத்தில் சாத்துவிக நிலையில் (அமைதியும் சமசித்தமும் வாய்ந்து) இருப்பது போலப் பொய்ப் பாசாங்கு பண்ணுகிறார்கள். ஆனால் உள்ளுக் குள்ளே ஜடவஸ்துக்களையும் கல்லையும் போல அடிமட்டமான மந்தத்

தன்மை உள்ளது. இப்படிப்பட்ட மக்களால் உலகில் என்ன காரியம் செய்ய முடியும்?

இது போன்று மந்தமான, சோம்பேறிகளான, புலனுணர்ச்சியில் மூழ்கிய மக்கள் உலகில் எத்தனை நாள் வாழ முடியும்? முதலில் மேநாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பிறகு என் வார்த்தைகளை மறுத்துப் பேசுங்கள். மேநாட்டு மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு துணிச்சல், வேலையினிடம் பக்தி, எவ்வளவு உற்சாகத் துடிப்பு, ரஜோ குணத்தின் பிரத்தியட்ச தரிசனம் தெரிகின்றது! இந்நிலையில் உங்களது நாட்டில் இரத்தம் இதயத்திலேயே உறைந்து விட்டது போலவும், அது இரத்தக்குழாய்களில் ஓடிப் பெருகுவதில்லை போலவும், உடலைப் பாரிசவாய்வு தாக்கி உடல் பலவீனப்பட்டு விட்டது போலவும் உள்ளது.

**தமோ குண அலையை ரஜோ குண எதிரலையால் மூழ்கடிப்போம் :**

பாரதத்தில் ரஜோ குணம் இல்லையென்றே சொல்லலாம். அது போன்றே மேலை நாடுகளில் சத்துவகுணம் அமைந்திருக்கவில்லை. ஆதலால் பாரதத்திலிருந்து பெருகிவரும் சத்துவமாம் பெருவெள்ளம் அல்லது ஞானச்சுடர் வெள்ளத்தை ஏற்பதைப் பொறுத்துத்தான் மேநாட்டவரின் உண்மை வாழ்க்கை என்பது அமையும். அதே போல நம் தாமசத் தன்மையை அதன் எதிரிடைக் குணமான ரஜோ குணத்தின் எதிரலையால் வென்று மூழ்கடித்தாலன்றி நாம் ஒரு போதும் இவ்வுலக நன்மையையோ, இல்வாழ்க்கையின் நலத்தையோ இந்தப் பிறவியில் பெற முடியாது என்பது உறுதி. அத்துடன் நம் மறுமை வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட மிகச்சிறந்த லட்சியங்களையும் விருப்பங்களையும் அடைவதற்கான பாதையில் கணக்கில்லாத பிரம்மாண்டமான தடைகளையும் நாம் எதிர்கொள்ள நேரிடும் என்பது நிச்சயம்.

துறவைத் தவிர அதிகமான அமைதி தருவது வேறு எது? ஒரு கணத்தில் அழியக்கூடிய உலக இன்பம் தருவதைக் காட்டிலும் மாளாத பெருநலம் அளிக்கும் ஒன்று மிகச்சிறந்ததல்லவா? இதில் சந்தேகமே இல்லை. கலப்பற்ற தனி உள்ளத் தூய்மையைக் காட்டிலும் சத்துவ குணத்தைக் காட்டிலும்—வலிவுமிக்க சக்தி வேறொன்று உண்டோ? ஆன்ம ஞானப் பேரொளிக்குமுன் மற்ற அறிவனைத்தும் அஞ்ஞான இருட் பிழம்புகளே என்பதுதான் உண்மை. சத்துவகுணத்தைப் பெற இந்த உலகத்தில் எத்தனை பேர்கள் பாக்கியம் செய்திருக்கிறார்கள் என்று நான் வினவுகிறேன். பாரதநாட்டில் எத்தனை பேர்கள் இருக்கின்றனர்? கூறுங்கள். "நான், என்னுடைய" என்ற எண்ணத்தை வேருடன் பிடுங்கி எறிந்து தங்களுக்குரிய எந்தப்பொருளையும் துறக்கக் கூடிய உயர்வீரத்தைப் பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

உலக இன்பங்கள் எல்லாம் மிகப்பெரிய வீண்பெருமைகள் என்ற பெருநோக்கு வாய்ந்த ஞானத்தை, அருளைப் பெற்றவர்கள் எத்தனை பேர் உள்ளனர்? கடவுளின் அழகையும் மகிமையையும் குறித்துத் தியானித்து அதிலேயே தனது சொந்த உடலைக்கூட மறந்துவிடக் கூடிய பரந்த உள்ளம் வாய்ந்த மனிதன் எங்கே இருக்கிறன்? நாடு முழுவதிலுமுள்ள ஜனத்தொகையில் இத்தகையோர் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுதான் இருப்பார்கள். இச்சிறு தொகையினர் மோட்சம் அடைவதற்காகக் கோடிக்கணக்கான ஆண்களும் பெண் களும் இக்கால சமூகம், சமயம் இவற்றின் சக்கரத்தின் கீழ் நசுக்கப்பட வேண்டுமா?

அப்படி நசுக்கப்படுவதால் என்ன பயன்?

சிறுகுழந்தைக்கு நாம் துறவறத்தின் உண்மையைக் கற்பிக்க முடியாது. ஏனெனில், அது பிறவி மூலம் ஆசைகள் நிரம்பிய நம்பிக்கைவாதி. அதன் வாழ்க்கை முழுவதும் அதன் புலன்களில் இருக்கிறது. அதன் வாழ்க்கை முழுவதும் புலன்வழி இன்பம் அனுபவிப்பதிலேயே ஊறி நிறைந்துள்ளது. அதுபோல ஒவ்வொரு சமூகத்திலும் குழந்தையைப் போன்ற உணர்ச்சி பெற்றவர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஓரளவு சுகபோக அனுபவம் தேவை. அப்பொழுது தான் அவர்களுக்கு போகமெல்லாம் வீண் ஆடம்பரம் என்பது தெரியவரும். அதன் பின்னர் துறவு நிலை வரும். அப்படிப் பட்டவர்களுக்காக நமது நூல்களில் போதுமான ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் துரதிஷ்டவசமாக, பிற்காலத்தில் சன்னியாசிகளைக் கட்டிப்பிணைத்திருக்கிற சட்டங்களைக் கொண்டு ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தி ஒடுக்கி வைக்கிற மனப்பான்மை ஏற்பட்டது. அது பெருத்த தவருகும். அப்படி மட்டும் அது நடந்திராது போனல் பாரதத்தில் நீங்கள் காண்கிற பெருமளவு ஏழ்மையும் துன்பமும் ஏற்பட்டிருக்கவே போவதில்லை.

**தமோ குண மயக்கத்தினல் நாம் தாழ்வுற்று விட்டோம்;**

மக்கள் சத்துவகுணம் என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு சிறிது சிறிதாக அஞ்ஞானம் என்ற காரிருளில் தமோகுணம் என்ற மாபெரும் கடலில் மூழ்கிப் போவதை நீங்கள் கண்கூடாகக் காண வில்லையா? அறிவு சிறிதும் இல்லாத மூடர்களும், தங்களுக்கு மேலான ஆன்மஞானம் அடையும் அவா இருக்கிறது என்று சொல்லி கொண்டு தங்களது முட்டாள்தனத்தை மறைப்பது உங்கள் கண் ணுக்கு புலப்படவில்லையா? உடற் செயல்களுக்கும், உள்ளச் செயல் களுக்கும் அப்பாற்பட்டுக் கடந்த பரம்பொருளை அறியும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறதா? பிறவி முதல் கொண்டே சோம்பித் திரிந்து கொண்டிருந்தவன், வேலை செய்யத் திறமையின்மையைக் காட்டிக் கொள்ளாமல், திடீரென சன்னியாசியின் உடையைப்

போர்த்துக் கொள்வதாகச் சொன்னால், நம்பலாமா? மிருக சுபாவமுள்ளவர்கள் தமது கொடிய தன்மையை தவ வேடத்தில் மூடி மறைத்திருக்கிறார்கள். ஒருவனுக்கும் தனது சக்தியின்மை தெரியவில்லை. ஆனால் முழுக் குற்றத்தையும் பிறர் மீது சுமத்த ஆயத்தமாயிருக்கிறார்கள். தெய்வீக ஞானம் என்றால் மற்றவர்கள் அசை போட்டுத் தின்றதை தானும் அசை போடுவதுதான் என்று கருதுகிறார்கள்; முன்னோர்களின் பெயரைப் பெருமையுடன் முழங்குவது மிகப் பெரும் புகழ்ச் செயல் என எண்ணுகிறார்கள். நாடு பயங்கரமான தமோ குணத்தில் ஆழ்ந்து கொண்டுவருகிறது என்பதை நிரூபிக்க இதைத் தவிர வேறு ஏதாவது சான்று தேவையா, என்ன?

ஆதலால் சத்துவகுணம் அல்லது கலப்பற்ற தூய்மை என்பது நம்மிடமிருந்து வெகு தொலைவிலிருக்கிறது. ஆனால் நம்மில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் தகுதி பெறவில்லை. எனினும் கலப்பற்ற தூய பரமஹம்ச நிலையை எய்துவதற்குத் தகுதி பெறுவோம் என்ற நம்பிக்கையிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் ராஜஸ குணத்தில் பழகி சுறுசுறுப்பான வேலையில் ஈடுபடுவது மிகுந்த நன்மை தரும். ஒருவன் ராஜஸ குணத்தின் வாயிலாகச் சென்றாலன்றி சாத்துவிக நிலையை அடைவது என்பது சாத்தியமாகுமா? ஒருவன் போகத்தையோ இன்பத்தையோ முன்னரே அநுபவித்து தீர்க்காமற் போனால் யோகமோ அல்லது கடவுளுடன் இரண்டறக் கலத்தலோ முடியாது என்பது திண்ணம். போகத்தைப் புறக்கணித்து அவற்றின் மீது வெறுப்பு ஏற்பட்டு அவற்றின் மோகவலைகளை அறுக்காமற் போனால் துறவு வாழ்க்கையை அடைய முடியுமா? எண்ணிப்பாருங்கள்.

**உண்மையான தேசம் குடிசையில் வாழ்கிறது:**

கடந்த நூற்றாண்டில் புழக்கத்தில் கொண்டுவரப் பெற்ற சீர்திருத்தங்களில் பெரும்பான்மையானவை வெறும் அலங்காரத்துக்குத்தான். இந்தச்சீர்திருத்தங்களில் ஒவ்வொன்றும் முதலிரண்டு ஜாதியினரைத் தவிர வேறு எவரையும் தீண்டுவதில்லை. பாரத மாதர்களில் நூற்றுக்கு எழுபது பேர்களை விதவா விவாகப் பிரச்னை பாதிப்பதில்லை. அது போன்ற பிரச்னைகளெல்லாம்-நான் கூறுவதை கவனியுங்கள்-பாமர மக்களின் செலவினால் படித்துக் கல்வி பெற்ற பாரத மக்களில் உயர்ந்த வகுப்பினரையே பாதிக்கிறது. நமது சொந்த வீடுகளைத் தூய்மைப் படுத்துவதிலேயே ஒவ்வொரு முயற்சியும் செலவாகியிருக்கிறது. அது சீர்திருத்தமல்ல. அந்த விஷயத்தின் மூலகாரணத்தை, ஆணிவேரை நீங்கள் ஆராய வேண்டும். அடிப்படைச் சீர்திருத்தம் என்று நான் அதனையே குறிப்பிடுகிறேன். அடியிலே தீ மூட்டுங்கள். அது மேலே கொழுந்து விட்டெரிந்து பாரத தேசத்தை நிர்மாணிக்கட்டும்.

இதற்காகச் சமயத்தைக் குறை கூறக் கூடாது. ஏனெனில் ஒரு விக்கிரகம் கூடுவதோ குறைவதோ மாறுதலே உண்டு பண்ணாது. குறை முழுவதும் இங்கே தான் இருக்கிறது. குடிசைகளில் வாழும் உண்மையான தேசம் தனது தனிச்சிறப்பை மறந்து விட்டது ...... அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்........

**அவர்கள் இழந்த தனிச்சிறப்புத் தன்மையை மீட்டுத்தர வேண்டும்;**

அவர்களுக்குக் கருத்துக்களை அளிக்க வேண்டும்; அவர்களைச் சுற்றியுள்ள உலகில் என்ன நடக்கிறது என்பது குறித்து அவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டும். அதன் பின்னர் தமது சொந்த முன்னேற்றத்திற்கு அவர்களே வழி வகுத்துக் கொள்ளுவார்கள். ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு ஆணும் பெண்ணும், தமது முன்னேற்றத்துக்காகத் தாமேதான் வேலை செய்யவேண்டும். அவர்களுக்குக் கருத்துக்களை அளியுங்கள். அவர்களுக்குத் தேவையான உதவி அதுவே. மற்றவையெல்லாம் பிறகு நிழலைப்போலப் பின் தொடர்ந்து வரும். நாம் ரசாயனப் பொருள்களைக் கூட்டி சேர்த்து வைப்போம். இயற்கை விதிப்படி அவை படிகங்களாக ஆகும். அவர்கள் அறிவில் நாம் கருத்துக்களை ஊன்றுவோம்; மற்றவற்றை அவர்கள் தாமே செய்வார்கள். பாரதத்தில் செய்யப்பட வேண்டியது இதுதான்.

"பாமர மக்களின் சமயத்தைத் தாக்கிப் புண்படுத்தாமல் அவர்களை உயர்த்த வேண்டும்" என்ற குறிக்கோளை நம்முன் கொள்வோம்.

**பாமர மக்களிடையே கல்வியைப் பரப்புதல் ஒன்றே பரிகாரம் :**

கல்வியும் கலாசாரமும் மேன்மக்களிலிருந்து பாமர மக்களுக்குப் படிப்படியாகப் பரவி வரத் தொடங்கியது. அதிலிருந்து மேலை நாடுகளில் நிலவும் இக்கால நாகரிகத்துக்கும், பாரதம், எகிப்து, ரோம் முதலியவற்றில் நிலவிய தொன்மையான நாகரிகத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு வளரத் தொடங்கியது. ஒரு நாட்டின் முன்னேற்றம் அது பொது மக்களுக்குக் கல்வியும் ஞானமும் பரப்புகிற அளவைப் பொறுத்துத்தான் உள்ளது. இதை நான் கண்கூடாகக் காண்கிறேன்.

கர்வமும் அரசியல் அதிகாரமும் கொண்ட சிலர் இந்நாட்டின் கல்வியையும், புத்திசாலித்தனத்தையும் தமது ஏகபோக உரிமையாகத் தம்மிடமே குவித்துக் கொண்டார்கள். இதுதான் பாரதத்தின் அழிவுக்கு முக்கியமான காரணம். நாம் மீண்டும் உயர வேண்டுமானால் அதே முறையைத்தான் பின்பற்ற வேண்டும்; அதாவது பாமர மக்களிடையே கல்வியைப் பரப்பவேண்டும்.

**கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது :**

முஸ்லிம்கள் தம்முடன் எத்தனை போர்வீரர்களைக் கொண்டு வந்தார்கள்? எத்தனை ஆங்கிலேயர்கள் இப்பொழுது உள்ளார்கள்? ஆறே ரூபாய்களுக்காகத் தங்களுடைய தகப்பன், தம்பிமார் இவர்களுடைய கழுத்தை வெட்டும் லட்சக்கணக்கான மக்கள் பாரதத்தைத் தவிர, வேறு எங்கே தான் இருக்கப் போகிறார்கள்? எழுநூறு ஆண்டுகள் முஸ்லிம் ஆட்சியில், அறுநூறு லட்சம் முசல்மான்களும், ஒரு நூற்றாண்டு ஆங்கில ஆட்சியில் இருபது லட்சம் கிறிஸ்தவர்களும் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

தாமே சொந்தமாக ஒரு காரியத்தைச் செய்கிற திறமை நாட்டை விட்டு ஏன் அழிந்து விட்டது? மிகுந்த கைத்திறன் வாய்ந்த தொழிலாளர்கள் நாளுக்கு நாள் ஐரோப்பியர் போட்டியைத் தாங்கமாட்டாமல் மடிகிறார்களே ஏன்? ஜெர்மானிய உழைப்பாளி, பல நூற்றாண்டுகளாக உறுதியாகக் கால்லூன்றி நிமிர்ந்து நின்ற ஆங்கிலத் தொழிலாளியின் நிலையை எந்தச் சக்தியினால் குலைத்தான்?

கல்வி! கல்வி! கல்வியே இதற்குக் காரணம். ஐரோப்பாவிலுள்ள பல நகரங்களையும் நான் சென்று பார்த்ததில் அந்தந்த நாட்டு ஏழை மக்களின் இன்ப நிலையையும், கல்வியறிவையும் கண்டேன்! அப்பொழுது என் நாட்டு ஏழை மக்களின் நிலை பற்றியே கண்ணீர் உகுப்பது வழக்கம். ஏன் இந்த வித்தியாசம்? எனக்குத் தோன்றிய விடை 'கல்வியே' என்பதுதான். கல்வி மூலம்தான் ஒருவனுக்குத் தன்னம்பிக்கை வருகிறது.

உங்களது புராணத்திலுள்ள முப்பத்துமுக்கோடி தெய்வங்கள் அனைத்திடமும் உங்களுக்குப் பக்தியிருந்து, அந்நியர்கள் அவ்வப்போது உங்களிடையே நுழைத்து வரும் எல்லாத் தெய்வங்களிடமும் பக்தியிருந்து, அதன் பிறகும் கூட உங்களிடம் உங்களுக்கே நம்பிக்கை யில்லையென்றால் நீங்கள் கடைத்தேற முடியாது. தன்னம்பிக்கை பூணுங்கள். இந்த நம்பிக்கையின் மீது எழுந்து நின்று வலிமை பெறுங்கள்; அதுதான் நமக்குத் தேவை.

உரிய காலத்தில் நாட்டு மக்களிடையே சுறுசுறுப்பும், சுயபலத்தை நம்பி எழும் நிலையும் வந்தே தீரும். நான் தெளிவாக அதனைக் காண்கிறேன். அதிலிருந்து தப்ப முடியாது. புத்திசாலியான மனிதன் அடுத்து வரப்போகும் மூன்று யுகங்களின் காட்சியைத் தெளிவாக முன்கூட்டிக் காணமுடியும். ஸ்ரீராம கிருஷ்ணரின் அவதாரகாலம் முதல் கீழ்த்திசையின் அடி வானத்தில் இளஞ்சூரியனின் கதிர்களினால் அருணோதய ஒளி தோன்றியுள்ளது. காலம் செல்லச் செல்ல அது இந்த நாட்டை மத்தியான காலச் சூரியனின் வெளிச்சத்தால் ஒளிபெறச் செய்யும்.

## மறுமலர்ச்சிப் பெரும்பணிக்கான களத்தில் இறங்குகிறவர்களுக்கு

பாரதம் ஊனுடம்பின் பலத்தால் அல்ல, ஆத்மாவின் பலத்தாலேயே உயர்த்தப்படும். அழிவுக் கொடியினால் அல்ல; அமைதி, அன்பு இவற்றின் கொடியால், சந்நியாசியின் துவர் ஆடையால் உயர்த்தப்படும்.

உனக்குள்ளே உறைந்திருக்கும் தெய்வீக சக்தியை வெளியே அழை. அது பசி, தாகம், வெப்பம், குளிர் இவற்றை நீ சகிக்கத் துணைபுரியும். சுகவசதி நிரம்பிய வீடுகளில் உட்கார்ந்து கொண்டு வாழ்க்கையிலுள்ள எல்லாச் சௌகரியங்களாலும் சூழப்பட்டு, பண்படாத சமயத்தைப் பற்றிச் சிறிதளவு பிறருக்கு உபதேசம் செய்தல் மற்ற நாடுகளுக்கு நல்லதாக இருக்கலாம். ஆனால் பாரதத்துக்குப் பிறரைவிட உண்மையான உள்ளுணர்ச்சி இருக்கிறது. இயற்கையாக அமைந்த உள்ளுணர்வினால் அது போலி முகமூடிகளைக் கண்டுபிடித்து விடுகிறது. நீ தியாகம் செய்ய வேண்டும். உயர்ந்தோனாக இரு. தியாகத்தாலன்றிப் பெரிய காரியங்களைச் செய்ய முடியாது.

உங்களது சுக சௌகரியங்கள், உங்களது இன்பங்கள் உங்களது பெயர், புகழ், பதவி, அல்லது உங்கள் உயிர்களையே சமர்ப்பணம் செய்யுங்கள். மனிதர்களாகிய சங்கிலித் தொடரைக் கொண்ட ஒரு பாலத்தை உண்டுபண்ணுங்கள். அவற்றின் மீது நடந்து லட்சக்கணக்கானவர்கள் இந்த வாழ்க்கைக் கடலைக் கடப்பார்கள்.

நல்ல சக்திகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துத் திரட்டுங்கள். எந்தக்கொடியின்கீழ் அணிவகுத்துச் செல்கிறீர்கள் என்பது பற்றிக் கவலைப்பட வேண்டாம். உங்கள் கொடியின் நிறம் எப்படியிருக்க வேண்டும் என்பதுபற்றிக் கவலைப்படாதீர்கள். பச்சையோ, நீலமோ, சிவப்போ எல்லா நிறங்களையும் சேர்த்துக் குழைத்து அன்பின் நிறமான தீவிர வெண்மை ஒளியை உண்டாக்குங்கள். பணி புரிவதே நம் கடன். பலன்களைப் பற்றிக் கவலை வேண்டாம். அது தானே வந்தெய்தும்.

என்னால் வருங்காலத்துக்குள் நுழைந்து பார்க்க முடியாது. பார்ப்பதற்குக் கவலைப்படவுமில்லை. ஆனால் ஒரு காட்சி உயிருள்ளதைப்போல ஜீவசக்தியுடன் கூடியதாகத் தெளிவாக என்முன் உள்ளது. அதுதான் புராதனமான அன்னை மீண்டும் எழுந்துவிட்ட காட்சி, புத்துயிர் பெற்றவளாக, இதற்குமுன் இருந்ததைவிட மிகுந்த புகழ்ப் பொலிவுடன் தனது சிங்காதனத்தில் வீற்றிருக்கிறாள். அமைதியும் ஆசியும் கலந்த குரலுடன் உலகனைத்துக்கும் அவளைப் பிரகடனம் செய்க.

### உண்மையான சீர்திருத்தவாதிக்குத் தேவையான மூன்று முதல் தேவைகள்.

**முதலாவது: மனப்பூர்வமாக உணர்ச்சிகொள் :**

நீ உண்மையான சீர்திருத்தவாதியாக ஆக விரும்பினால் மூன்று பொருள்கள் தேவையாகின்றன.

முதலாவதாக, இதயத்திலிருந்து எழும் உணர்ச்சி தேவை. அறிவிலோ, புத்தியிலோ என்ன இருக்கிறது? சில அடிதூரம் அது நடந்து சென்றுவிட்டு அங்கேயே நின்றுவிடுகிறது. ஆனால் இதயத்திலிருந்தே தெய்வீக உணர்ச்சி வருகிறது. மிகமிக முக்கியமானது உள்ளம்தான். இறைவனை உள்ளத்தின் மூலமாகத்தான் தரிசிக்க முடியுமேயன்றி அறிவின் மூலமாக அல்ல. அறிவு தெருப் பெருக்குகிறவன்தான். நமக்காகப் பாதையை அது தூய்மைப் படுத்துகிறது. அது போலீஸ்காரனைப் போன்றது; இரண்டாந்தர வேலைக்காரன். ஆனால் சமூக வேலை செய்வதற்குப் போலீஸ்காரன் அத்தியாவசியத் தேவை அல்ல. அவன் ஒழுங்கீனங்களை நிறுத்தி தவறு நடப்பதைத் தடுக்கிறான். அறிவிலிருந்து தேவைப்படுகிற வேலை அவ்வளவேதான்; அறிவு ஒரு குருடு. தானாக அதனால் நகர முடியாது. அதற்குக் கைகளோ கால்களோ இல்லை. உணர்ச்சிதான் வேலை செய்கிறது. மின்சாரத்தைவிட அல்லது வேறொன்றைவிட மிக அபாரமான வேகத்துடன் அது வேலை செய்கிறது. நீ இதய பூர்வமாக உணருகிறாயா? அதுதான் கேள்வி.

அறிவு தேவைதான். அது இல்லையேல் நாம் மோசமான தவறுகளில் வீழ்ந்து, எல்லாவிதமான பிழைகளையும் செய்வோம். அறிவு தவறுகளைத் தடுக்கிறது. ஆனால் அதற்கு மேலே, அறிவின் அடிப்படையில் வேறு எதனையும் நிர்மாணித்து விட வேண்டாம். அது செயலற்றது; இரண்டாந்தர உதவிதான் அது. உண்மையான உதவி உணர்ச்சி, அன்பு.

**திறக்கவே முடியாத கதவுகளை அன்பு திறந்து விடுகிறது:**

திறக்கவே முடியாத கதவுகளை அன்பு திறந்து விடுகிறது. எனது வருங்காலச் சீர்திருத்தக்காரர்களே! வருங்கால தேசபக்தர்களே! நீங்கள் உண்மையான உணர்ச்சி கொண்டிருக்கிறீர்களா? தேவர்கள், முனிவர்கள் இவர்களின் சந்ததிகளான கோடானு கோடி மக்கள் மிருகங்களினின்றும் அதிக வேற்றுமையில்லாமல் வாழ்கிறார்கள் என்பதை உணர்கிறீர்களா? கோடிக்கணக்கான மக்கள் இன்று பட்டினி கிடக்கிறார்கள் என்பதையும், லட்சக்கணக்கானவர்கள் பல்லாண்டுகளாகவே பட்டினி கிடந்து வருகிறார்கள் என்பதையும் உணர்கிறீர்களா? அறியாமை எனும் இருண்ட மேகம் இந் நாட்டைக் கவிழ்ந்திருக்கிறதென்பதை உணர்கிறீர்களா? அவ் வுணர்ச்சி உங்கள் மன அமைதியைக் குலைத்து, உங்களுக்குத் தூக்கமில்லாமல் செய்து விடுகிறதா? அது உங்கள் குருதியில் கலந்து, இரத்தக் குழாய்களில் ஓடி, இதயத்துடிப்போடு சேர்ந்து துடிக்கிறதா? ஏறக்குறைய அவ்வுணர்ச்சி உங்களைப் பைத்தியமாகவே ஆக்கி விடுகிறதா? இந்தப் பெரிய துன்பம் ஒன்றே உங்கள் மனத்தை முற்றும் கவர்ந்திருக்கிறதா? அழிவு பற்றிய, துன்பம் பற்றிய கவலைகளால் பீடிக்கப்பட்டு உங்கள் பெயர், புகழ், மனைவி, மக்கள், உடைமை இவையனைத்தையும் உங்கள் உடலையும் கூட மறந்து விட்டீர்களா?

**ஆழ்ந்த அநுதாபம்- இதுவே அனைத்திலும் மகத்தான சேவை:**

சதா ஏழ்மையிலும் அறிவீனத்திலும் அழுந்திக்கிடக்கிற இருபது கோடி ஆண்களையும் பெண்களையும் பற்றி ஆழ்ந்த உணர்ச்சி கொண்டிருப்பவன் யார்? தாமும் மனிதர் என்பதை அம்மக்கள் மறந்து விட்டனரே! அதன் விளைவு தான் அடிமைத்தனம். சிந்தனையாளர்கள் கடந்த சில ஆண்டுகளுக்குள் அதன் காரணத்தைக் கண்டு கொண்டார்கள். ஆனால் அதற்கான பொறுப்பை ஹிந்து சமயத்தின் தலைவாசற்படியில் சுமத்தி வைத்து விட்டார்கள். அவர்களது கருத்துப்படி, இந்நிலை திருத்துவதற்கு ஒரே வழி, உலகிலேயே பிரமாதமான இந்தச்சமயத்தை நசுக்கி விடுவது தான். நண்பனே! நான் கூறுவதை கேள். இறைவனின் திருவருளால் நான் இரகசியத்தைக் கண்டுப்பிடித்து விட்டேன்: நம் சமயத்தின் மீது ஒரு குற்றமுமில்லை.

அதற்கு மாறாக, ஒவ்வொருவரும் உனது சொந்த ஆத்மாவின் பல வடிவங்களே என்று உனது மதம் கற்பிக்கிறது. அதனை நாம் நடைமுறையில் பயன் படுத்தவில்லை. பிறரிடம் நமக்கு அநுதாபம் இல்லாமல் போய் விட்டது. இதய பூர்வமான அன்பு உணர்ச்சி இல்லாது போய் விட்டது. இறைவன், உங்களிடம் மறுபடியும்

புத்தராக வந்தார். ஏழைகள் துன்பப்படுகிறவர்கள், பாவிகள் ஆகியோரிடம் எப்படி அனுதாபம் காட்டுவது, எப்படி இதயபூர்வமாக அன்பு பாராட்டுவது என்று கற்பித்தார். ஆனால் நீங்கள் அவருக்குச் செவிசாய்க்கவில்லை.

ஹிந்து சமயத்தைப் போல, மிக உயர்ந்த முறையில் மனித குலத்தின் மேன்மைச் சிறப்பைப் பற்றி வேறெந்தச் சமயமும் இந்த உலகத்தில் போதிக்கவில்லை. அத்துடன் ஏழை எளியவர் களின் கழுத்தின் மீது ஏறி மிதிக்கிற சமயமாக இவ்வுலகில் ஹிந்து சமயத்தைப் போல வேறெதுவும் இல்லை. இக்குற்றத்திற்குச் சமயம் பொறுப்பு அல்ல; ஹிந்து சமயத்திலுள்ள வெளிவேஷக்காரர்கள், வரட்டு ஆசாரவாதிகள் ஆகியோரே காரணம்; அவர்கள் இறை தத்துவம்வேறு, நடைமுறை விவகாரம் வேறு என்பது போன்ற கொள்கைகளின் வடிவத்தில் பலவிதமான கொடுஞ் செயல்கள் புரியும் பொறிகளைக் கண்டுப்பிடித்தார்கள். கடவுள் இதனை எனக்குக் காட்டியுள்ளார்.

**மருத்துவரின் இதயம் கொண்டு பணி செய்க :**

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன

(கீதை அ. 2 சு. 47)

தளர்ச்சியடையாதீர்கள். இறைவன் கீதையில் கூறுவதை நினைவிற் கொள்ளுங்கள்: "பணி செய்வதற்கே உங்களுக்கு உரிமை; பயனுக்கு உரிமை கிடையாது." வரிந்து கச்சைக் கட்டுங்கள். கடவுள் இதற்காகவே என்னை அழைத்திருக்கிறார். என் வாழ்நாளெல்லாம் இடைஞ்சல்களும், சித்திரவதைகளுமாக நிறைந்து இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறேன். எனது உற்றாரும் உறவினரும் அமோகப் பசியினாலேயே மடிந்ததை நான் பார்த்திருக்கிறேன். என்னைக் கேலி செய்திருக்கிறார்கள். என்னிடம் அவநம்பிக்கை காட்டியிருக்கிறார்கள். என்னைக் கேலி செய்து, பழித்தவர்களுக்குக் கருணை காட்டியதற்காக வும் துன்பப்பட்டிருக்கிறேன். ஆமாம்! உலகமே துன்பங்கள் நிறைந்த கல்விச் சாலைதான்; அத்துடன்கூட மகாத்மாக்களும், தீர்க்க தரிசிகளும் உயர்ந்த பண்புகளைப் பயிலும் பள்ளியும் ஆகும். கருணை, பொறுமை இவற்றுடன் எல்லாவற்றுக்கும் மேலாக நம் காலின் கீழுள்ள பிரபஞ்சமே பொடிப் பொடியாகப் போனாலும் நடுங்காத, வெல்ல முடியாத, எஃகினை ஒத்த உறுதி ஆகிய உயர்ந்த பண்பு களைப் பயிலும் பள்ளியாகும்.

பெரிய மனிதர்களைக் கண்டு நான் பரிதாபப்படுகிறேன். அவர் கள் சமூகத்தில் பெரியவர்களாகவும், உயர்ந்த நிலையில் இருந்தாலும் அது அவர்கள் குற்றமல்ல, அவர்கள்குழந்தைகள். ஆம்; உண்மை

யான குழந்தைகள். அவர்கள் தம்மைச் சுற்றி சில கஜ தூரத்தி லுள்ள சிறு வட்டத்தைத் தாண்டிப் பார்வையைச் செலுத்துவதில்லை. இயந்திரம் போன்று அன்றாட வேலைகளைச் செய்வது, உண்பது, குடிப்பது, பணம் சம்பாதிப்பது, கணக்குத் தவறாமல் குழந்தைகளைப் பெறுவது- இதுவே அவர்களது சிறுவட்டம். அதனைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது. சந்தோஷமான ஆத்மாக்கள்! அவர்கள் தூக்கம் ஒருபோதும் கலைந்ததில்லை.

பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட அடக்குமுறையின் விளைவாகப் பாரத நாட்டுச் சூழ்நிலையானது துயர ஓலம், துன்ப ஓலம், தாழ்வின் கதறல், ஏழ்மைக் கூக்குரல்களினால் நிறைந்துள்ளது. ஆனால் அந்தக் கனவான்களின் அமைதிமயமான வாழ்வில் எவ்வித அதிர்ச்சியும் ஏற்பட்டதில்லை. எத்தனையோ தலைமுறைகளாக மக்களது மனத்தை, நீதிநெறியுணர்வை, உடலை அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்தி யதன் விளைவாக இறைவனது பிரதிபிம்பமாக விளங்கிய மக்கள், பொதி சுமக்கும் மிருகங்களாகி விட்டார்கள்; தெய்வீக அன்னையின் சின்னமான பெண்கள், குழந்தைகளைப் பெறும் அடிமைகளாகி விட்டார்கள்; வாழ்க்கையே ஒரு சாபக்கேடாகி விட்டது, கனவான் களுக்கு இத்தகைய பயங்கர கால நிலையைப் பற்றிய கனவுகூட ஏற்பட்டதில்லை.

இந்த பாமர மக்களுக்குத் தர்ம நெறி வாழ்வில் அவா இல்லை, வருங்காலம் பற்றிய நம்பிக்கை செத்து விட்டது. அவர்களுக்கு நல்லது செய்ய முயலுகிறவர்கள் மீது தாவிப்பாய்ந்து தாக்க அவர் கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார்கள். நடைப்பிணங்களான இந்த பாமரமக்களிடையே உங்களால் உயிர் ஊட்ட முடியுமா? உதைத்துக் கொண்டு முரட்டுப் பிடிவாதம் பிடிக்கிற குழந்தைக்கு மருந்து புகட்ட முயலும் வைத்தியரைப் போல உங்களால் சேவை செய்ய முடியுமா?.........

ஜப்பானியப் பெண் குழந்தைகளிடையே நிலவிவரும் ஒருநம்பிக் கையைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். தமது பொம்மைகளை முழு உள்ளத்துடனும் நேசித்தால் அவற்றுக்கு உயிர் வந்து விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஜப்பானியப் பெண் குழந்தை தனது பொம்மையை உடைப்பதே இல்லை. ஓ! அதிர்ஷ்டசாலிகளே! அவ்வாறே இந்நாட்டு மக்களை யாராவது தமது முழு உள்ளத் துடனும் நேசிக்க முடியுமானால் பாரதம் மீண்டும் எழுந்து விடும் என்று நானும் நம்புகிறேன். இந்த மக்களின் உடலில் செல்வத் தால் தோன்றும் அழகு இல்லை. அதிர்ஷ்டம் தகர்ந்து விட்டது. விவேகம் அடியோடு அழிந்து விட்டது. நசுக்குண்டு கிடக்கிறார்கள்; எப்பொழுதும் பட்டினி; பூசலிடும் மனப்பாங்கும் பொறாமையும்

கொண்டு வாழ்கிருர்கள். பரந்த மனம் படைத்த நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் வாழ்க்கையில் சுகபோகங்களே அநுபவிக்கும் ஆசைகளே அறவே ஒழித்து விட்டு, இந்த மக்களுக்காக ஏங்கித் துடிக்க வேண்டும். தமது முழுச் சக்தியுடன் உழைக்க வேண்டும். லட்சக்கணக்கான நம் நாட்டினர் அநாதைகளாகவும் ஆகி, இழிநிலையாகிற பயங்கரச் சுழலில் சிக்கி நாளுக்கு நாள்தாழ்ந்து மூழ்கி வருகிருர்களே, இத்தகைய மக்களுடைய க்ஷேம நலனுக்குப் பாடுபட முன்வர வேண்டும்.

**இரண்டாவது : இதற்குப் பரிகாரம் நீங்களே காண வேண்டும்.**

உங்கள் உள்ளத்தில் பரிவு உணர்ச்சி நிறைந்திருக்கிறதா? அப்படியானல் அது முதற்படி மட்டுமேயாகும். அடுத்தபடியாக ஏதாவது பரிகாரமாக, நோய் தீர்க்கும் மருந்து ஒன்றைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும். பழைய காலக் கருத்துக்கள் எல்லாம் மூடநம்பிக்கைகளாக இருக்கலாம். ஆனல் அந்த மூடநம்பிக்கையின் உள்ளேயும் மேலேயும் தங்கப்பாளங்களும் சத்தியமும் உள்ளன. அந்தத் தங்கத்தின் மீது பாசியோ மாசோ படியாமல் காப்பாற்றி வைக்க நீங்கள் ஏதாவது வழி கண்டு பிடித்திருக்கிறீர்களா ?

**மூன்ருவது : உங்களது நோக்கம் தூயதாகவும், உங்களது உறுதி தகர்க்க முடியாததாகவும் இருக்க வேண்டும்.**

உங்கள் சக்திகளையெல்லாம் வெட்டிப் பேச்சில் செலவிடுவதற்குப் பதில் ஏதாவது வழி, நடைமுறையில் கையாளக் கூடிய உபாயம் கண்டு பிடித்திருக்கிறீர்களா ? குறை கூறிக் கண்டிப்பதற்குப் பதிலாக உதவி செய்வதற்கும், அவர்களது துயர்களுக்கு ஆறுதலாக இதமான மொழிகளைக் கூறவும், நடைப்பிண வாழ்க்கையிலிருந்து மக்களை மீட்கவும் ஏதாவது ஒரு வழியைக் கண்டுப் பிடித்திருக்கிறீர்களா ?

அப்படிச் செய்திருந்தால் அது இரண்டாவது படிதான். மற்ருெரு விஷயமும் தேவை. உங்கள் தொண்டின் நோக்கம் என்ன? பணத்தாசை பிடித்தோ. பெயர், புகழ் ஆசையால் தூண்டப்பட்டோ நீங்கள் வேலை செய்யவில்லை என்பது நிச்சயந்தானு?

அதுவும் போதாது, உங்கள் வேலையில் இடையூறுகள், மலை போல திரண்டுவரினும் அவற்றை எதிர்த்துத் தயங்காது செல்ல உங்களுக்கு மனவலிமையிருக்கிறதா? உலகமனைத்தும் சேர்ந்து கொண்டு, கையில் வாள் கொண்டு எதிர்த்து நின்ருலும், அந்த நிலையிலும், நீங்கள் சரியென்று நினைக்கும் செயலைச் சிறிதும் பின் வாங்காமல் செய்யும் தைரியம் உங்களிடம் இருக்கிறதா? உங்கள் மனைவி மக்களே உங்களுக்கு விரோதமாக நின்ருலும், உங்கள் செல்வத்தை

யெல்லாம் நீங்கள் இழக்க நேரிட்டாலும், உங்களது புகழ் கெடுவதானு லும், எல்லாச் சொத்து சுதந்திரங்களும் பறிபோனலும் அப்பொழுதும் கூட ஏற்றுக்கொண்ட பணியிலேயே ஊன்றி நிற்பீர்களா? நீங்கள் கருதிய லட்சியம் கைகூடுகிறவரையில், இடைவிடாது தொடர்ந்து முன்னேறிச் செல்வீர்களா? மாமன்னனுன பர்த்ரிஹரியார் கூறியது போல,

நிந்தந்து நீதிநிபுணு யதி வா ஸ்துவந்து
லக்ஷ்மீ: ஸமாவிசது கச்சது வாயதேஷ்டம்
அத்யைவ வா மரணமஸ்து யுகாந்தரே வா
நியாய்யாத்பத: ப்ரவிசலந்தி பதம் ந தீரா:

(பர்த்ரிஹரி நீதி சதகம்)

"ஞானிகள் நிந்திப்பதானுலும் நிந்திக்கட்டும் அல்லது புகழட்டும். சகல பாக்கியங்களையும் கொடுக்கும் லக்ஷ்மிதேவி யானவள் வந்தாலும் வரட்டும், அல்லது தான் விரும்புகிற இடத்துக்குப் போனலும் போகட்டும். மரணமானது இன்றே வந்தாலும் வரட்டும்; எவனெருவன் உண்மைப் பாதையின்றும் மயிரிழையேனும் பிறழா திருப்பானே அவனே உறுதியுடையவனுவான்'' என்கிற உறுதி உங்களிடம் உள்ளதா?

இந்த மூன்று விஷயங்களும் உங்களிடம் இருக்குமாயின் நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள். நீங்கள் செய்தித் தாளில் எழுத வேண்டியதில்லை. ஊர் ஊராகச் சென்று சொற் பொழிவாற்ற வேண்டியதில்லை. உங்கள் முகமே ஒளிவீசிக் கொண் டிருக்கும். நீங்கள் குகையினுள் வசித்தாலும்கூட, உங்களது எண்ணங்கள் குகைச் சுவரையும் ஊடுருவி, உலகமெல்லாம் பாய்ந்து, பரவிப் பல நூற்றுண்டுகள் வரை, அதாவது தக்க ஒரு மனிதனின் மூளையில் புகுந்து அங்கே வேலை செய்யும்வரை சூழ்ந்து கொண் டிருக்கும். உயர்ந்த சிந்தனையின், உண்மையுள்ளத்தின், குறிக் கோளில் தூய்மையாக இருப்பதன் சக்தி இப்படிப்பட்ட ஆற்றல் வாய்ந்ததாகும்.

**இந்த லட்சியத்துக்காக வாழ்வையே அர்ப்பணிக்க விரதம் பூணுங்கள்!**

இது ஒருநாள் வேலையல்ல; அத்துடன் பாதையும் பயங்கர விஷமயமான முட்களால் நிறைந்ததாகும். ஆனல் பார்த்தனுக்குச் சாரதியாக இருந்தவர் நமக்கும் சாரதியாக இருக்கச் சித்தமாக இருக் கிறர். நமக்கு அது தெரியும். அவருக்காக, அவரிடம் மீளாத நம்பிக்கை பூண்டு, பாரதத்தின் மீது பல சகாப்தங்களாகக் குவிந்து, மேடிட்டுக்கிடக்கும் துன்பமலைக்குத் தீ வையுங்கள். அது எரிந்து சாம்பலாகட்டும்.

பார்த்தசாரதியின் கோயிலுக்குச் செல்லுங்கள். கோகுலத்து எளிய ஆயர்களின் தோழனான கண்ணனுக்கு முன்னால்சென்று அந்த உறுதியை எடுத்துக் கொள்ளுங்கள். கண்ணன் ஏழைகளின், தாழ்ந்த இடையர்களின் நண்பனாக இருந்தான். பறையனான குகனைக் கட்டித் தழுவ அந்தக் கண்ணன் (பார்த்தசாரதி) தயங்கவில்லை. புத்தாவதாரமாக அவன் வந்தபோது சீமான்கள் விடுத்த அழைப்பை விட்டு விட்டு, ஒருவேசியின் அழைப்பை ஏற்று அவளைக் காப்பாற்றினான். அந்தப் பார்த்தசாரதியின் சந்நிதியில் சென்று தலை தாழ்த்துங்கள்; மகத்தானதொரு தியாகத்தை அங்கே சங்கற்பம் செய்யுங்கள். யாருக்காக அவர் அவ்வப்பொழுது அவதரிக்கிறாரோ அந்த ஏழைகள் தாழ்ந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள்—இவர்களுக்காக உங்களது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிப்பதாகச் சபதம் செய்யுங்கள். அதன்படி நாளுக்கு நாள் தாழ்வுற்று வரும் முப்பது கோடி மக்களை மீட்பதற்காக வாழ்நாள் முழுவதையும் அளித்து விடுங்கள்.

**நம்பிக்கை :**

சகோதரர்களே! வாருங்கள்!! நாம் ஏற்றுக் கொண்டுள்ள வேலையின் வடிவத்தை நேருக்கு நேர் பாருங்கள். வேலை மிக மேன்மை வாய்ந்தது, நாம் மிக எளியவர்கள். ஆனால் நாம் தெய்விக ஒளிச்சுடரின் மைந்தர்கள், இறைவனின் புதல்வர்கள். வாழ்க, இறைவன் திருநாமம். நாம் வென்றே தீருவோம். இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் மடிந்து வீழ்வார்கள்; நூற்றுக் கணக்கானவர்கள் வீழ்ந்தவர்களின் இடத்தை நிரப்பி நிற்பார்கள். வெற்றி பெறாமல் நான் மடிந்து போகலாம்: வேறொருவர் இந்தப் பெரும் பணியை ஏற்றெடுப்பர். வியாதி என்னவென்று உங்களுக்குத் தெரியும்; மருந்தும் தெரியும். நம்பிக்கை மட்டும் இருந்தால் போதும். பணக்காரர்களென்றும், பெரிய மனிதர்களென்றும் அழைக்கப் படுகிறவர்களின் தயவை நாட வேண்டாம். இதயக் கனிவு இல்லாத அறிவு படைத்த இலக்கிய ஆசிரியர்களையும் அவர்களது ஈவிரக்க மற்ற செய்தித்தாள் கட்டுரைகளையும் பற்றி அக்கறைப் பட வேண்டாம். உங்களது உள்ளத்தில் நம்பிக்கையும் அநுதாபமும், தீச்சுடர் போன்ற நம்பிக்கையும், தீச்சுடர் போன்ற அநுதாப உணர்ச்சியும் குடி கொள்ளட்டும். நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடமே தன்னம்பிக்கை; பக்தி, பக்தி, இறைவனிடம் பக்தி. மேன்மை பெறுவதற்கான ரகசியம் இதுதான்.

**நசிகேதனின் சிரத்தையுணர்வு உங்கள் உள்ளத்தில் குடிபுகட்டும் :**

தன்னம்பிக்கை யில்லாதவன் தான் நாஸ்திகன். உபநிடதங்கள் யாவற்றினும் அழகானதான கடோபநிஷத்தைப் படித்தவர்களுக்கு இந்த கதை நினைவிருக்கும். அரசன் பெரிய யாகமொன்றைச் செய்து

கொண்டிருந்தான். தானமாக நல்ல பொருள்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, உபயோகமற்ற பசுக்களையும் குதிரைகளையும் தானம் கொடுத்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் சிரத்தையுணர்வு அரசகுமாரனை நசிகேதனின் உள்ளத்தில் குடி புகுந்தது. 'சிரத்தை' என்ற சொல்லை நான் இங்கே மொழிபெயர்க்கப் போவதில்லை. மொழி பெயர்த்தால் தவறு ஆகிவிடும். சிரத்தை என்ற சொல்லுக்கு அற்புதமான பொருள் உண்டு. அதைப் புரிந்துகொள்வது மிக அடிப்படையான தேவை. நசிகேதனின் மனதில் அவ்வுணர்ச்சி எப்படி வேலை செய்கிறதென்று பார்ப்போம். உடனே அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டான்:

பஹூனாமேமி பிரதமோ பஹூனாமேமி மத்யம:
கிம்ஸ்வித்யமஸ்ய கர்த்தவ்யம் யன்மயாத்ய கரிஷ்யதி

(கட உபநிஷத். 1–1–5)

"நான் பலரிலும் மேம்பட்டவன்; எவருக்கும், தாழ்ந்தவனல்லன்; எங்குமே நான் கடைசியல்ல; ஏதாவதொன்றைச் செய்ய முடியும்."

இந்தத் தைரியம் அவனது மனதில் வளர்ந்தோங்கியது. "மரணம் என்றால் என்ன?" என்ற கேள்வி அவன் மனத்திலிருந்தது. அக்கேள்விக்கு விடைகாண அவன் விழைந்தான். யமலோகம் சென்று யமனைக் கேட்டால்தான் அதற்கு மறுமொழி கிடைக்கும். எனவே அங்கும் சென்றான். ஆண்மைமிக்க அந்த நசிகேதன் மரண தேவனின் இல்லத்து வாசலில் மூன்று நாட்கள் காத்திருந்த பின்னர் அவனைச் சந்தித்தான். அதற்குமேல் அவன் விரும்பிய ஞானத்தை எவ்வாறு பெற்றான் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

இந்த சிரத்தையுணர்ச்சி உங்களுக்குள் குடிபுக வேண்டும்; மேநாட்டு இனத்தவரிடையே காணப்படுகிற உலகாயத சக்தியெல்லாம் இந்தச் சிரத்தையுணர்வின் பலனாக உண்டானவைதான். அவர்கள் தமது உடல் பலத்தில் நம்பிக்கை வைத்தே இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்றால், நீங்கள் உங்களது ஆத்மாவில் நம்பிக்கை கொண்டால் இன்னும் எவ்வளவு அதிகமாக முன்னேற முடியும்!

நான் வேண்டுவது இத்தகைய சிரத்தையுணர்வுதான். நம்மிடமே நமக்கு நம்பிக்கை வேண்டும். நம் அனைவருக்கும் இது வேண்டும். இந்த நம்பிக்கையைப் பெற வேண்டிய பெரும் கடமை உங்களுக்கு உள்ளது. எல்லாவற்றையும் பரிகாசம் பண்ணுவது, எதைப் பற்றியும் முனைந்து சிந்தியாதிருப்பது, இந்த நோய் நமது தேசிய இரத்தத்தில் நுழைந்திருக்கிறது. இந்தப் பயங்கர வியாதியை

விட்டுத் தொலையுங்கள். முழுக்குப் போடுங்கள். வலிமையுடனிருங்கள்; சிரத்தையுடன் இருங்கள், மற்றவையெல்லாம் தாமாக வந்தடைந்தேதீரும்.

**துறவறம் :**

வேலையில் ஈடுபடுங்கள்; அப்பொழுது உங்களால் தாங்க முடியாத அளவுக்கு மகத்தான சக்தி உங்களுக்குள் வருவதைக் காண்பீர்கள். பிறருக்காகச் செய்யப்படுகிற சிறு வேலை கூட நமக்குள்ளிருக்கும் சக்தியை எழுப்பவல்லது. பிறர் நலத்தைப் பற்றிச் சிறிதளவேனும் சிந்திப்பதனுல் படிப்படியாக நமது உள்ளத்தில் சிங்கத்தைப் போன்ற பலம் உண்டாகிறது.

மிக முக்கியமான விஷயம் துறவறம் பூணுவது. துறவு பூணமல், பிறருக்காகத் தொண்டாற்றுவதில், தனது முழு உள்ளத்தையும் ஈடுபடுத்த எவராலும் முடியாது. துறவு பூண்டவன் எல்லோரையும் சமமான பார்வையுடன் நோக்கி, அனைவருக்கும் தொண்டாற்றுவதற்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்கிருன்.

**தொண்டின் மூலம் வழிபாடு:**

வைராக்கியம் பூணுங்கள். மகத்தான காரியங்களைச் செய்வதற்காக உங்கள் முன்னேர்கள் உலகைத் துறந்தார்கள். தாங்கள் மோட்சமடைவதற்காக உலகைத் துறக்கிற மக்கள் இக்காலத்தில் உண்டு. ஆனல் நீங்கள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிடுங்கள். ''நான் மோட்சமடைய வேண்டும்'' என்ற விருப்பத்தைக்கூட வீசி எறிந்து விட்டுப் பிறருக்கு உதவி செய்யச் செல்லுங்கள்.

நமது மனத்திலிருந்து வெறும் கடவுளர்கள் இப்பொழுது மறைந்து போகட்டும். நமது சொந்த மக்களினமாகிற கடவுள் மட்டும்தான் இப்பொழுது விழித்துக் கொண்டிருக்கிருர். எங்கு நோக்கினும் அவரது கைகள், எங்கும் அவரது திருவடிகள்; எங்குமே அவரது காதுகள். எல்லாவற்றையும் வியாபித்து மூடி அவர் நிற்கிருர். நம்மைச் சூழ்ந்து காணப்படும் விராட புருஷனை வழிபடாமல் வீணை மற்ற தெய்வங்களின் பின்னுல் ஏன் போக வேண்டும் ? இந்த தெய்வத்தை வழிபட்டால், மற்றெல்லாத் தெய்வங்களையும் வழிபட முடியும்.

பிறருக்காகத் தனது உடமைகள் எல்லாவற்றையும் கைவிடுகிற மனிதனுக்குத்தான் முக்தி கிடைக்கும். ''எனது விடுதலை, எனது விடுதலை'' என்று இரவு பகலாக முழங்கி மூளையை வருத்திக் கொண்டிருப்பவர்கள், தமது தற்கால க்ஷேம நலனையும் வருங்கால நலனையும் பாழாக்கிக் கொண்டு திரிந்து வருபவர்கள் ஆவார்கள்.

சித்த சுத்திதான் தேவை. அதாவது உள்ளத்தூய்மை. அது எப்படி வரும் ? அதனை எய்துவதற்காக எல்லா வழிபாடுகளுக்கும்

முதலில் செய்யப்பட வேண்டியது'விராட வழிபாடு ஆகும். அதாவது நம்மைச் சுற்றிலுமுள்ளவர்களை வழிபட வேண்டும். பூஜை செய்ய வேண்டும். வழிபாடு என்பதுதான் சரியான சொல் ஆகும். ஆங்கில வார்த்தை எதுவும் பயன்படாது. இந்த மக்களும் பிராணிகளும் நமது தெய்வங்களாகும். நாம் முதலில் வழிபட வேண்டிய கடவுள் நமது நாட்டு மக்களே ஆவர்.

**துறவும் தொண்டும் உடையவர்களே இன்றைய தேவை :**

துறவு, தொண்டு இவைதான் பாரதத்தின் தேசிய லட்சியங்கள் ஆகும். அந்தப் பாதைகளில் பாரத நாட்டு மக்களின் உணர்ச்சிகளை தீவிரப்படுத்துங்கள்; மற்றவை தாமே நடக்கும். ஆத்மீகக் கொடியினை இந்த நாட்டில் எவ்வளவு உயரத்தில் ஏற்றினாலும் அது பொருத்தமேயாகும். அதில்தான் நம் நாட்டின் விமோசனம் உள்ளது.

நான் வேண்டுவது இரும்பினையொத்த தசைநார்கள்; எஃகினையொத்த நரம்புகள்; இவற்றினுள்ளே இடியேறு போன்ற வலிமையுள்ள மனம், பலம், ஆண்மை, க்ஷத்திரிய வீர்யம், பிரம்ம தேஜஸ் இவையே நான் வேண்டுவது. நமது அழகான, நம்பிக்கையுள்ள இளைஞர்களிடம் இவையெல்லாம் உள்ளன. ஆனால் லட்சக்கணக்கில் அவர்கள் திருமணம் என்று அழைக்கப்படுகிற பலிமேடையிலே பலியாக்கப்படுகிறுக்களே! இறைவனே! எனது ஓலத்துக்குச் செவி சாய்ப்பாயாக!

சிலபேர் மட்டும் தனித்து நின்று இறைவனுக்காக வாழ்ந்து, உலக நன்மைக்காக நமது சமயத்தைப் பாதுகாக்கட்டும். உண்மையில் மாயைகளுக்கு நீ காரண பூதனாக, மூதாதையாக இருந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் ஜனகரைப் போல இருப்பதாகப் பாசாங்கு பண்ணாதே. (ஜனகர் என்ற சொல்லுக்கு மூதாதை என்று பொருள். இந்தப் பெயர் தாங்கிய மன்னர் தமது மக்களின் நலத்துக்காக அரசாட்சியை நடத்தி வந்த போதும் எல்லாவற்றையும் மனத்தால் துறந்து விட்டார்) யோக்கியனாக இருந்து கொண்டு, "எனது லட்சியம் எனக்குத்தெரிகிறது. ஆனால் நான் இன்னும் அதனை நெருங்கவில்லை" என்று சொல்லுக. எதையும் நீ துறக்காத போது துறப்பதாகப் பாசாங்கு பண்ணாதே. ஒருமுறை துறவு பூண்டால் உறுதியாக நில். போரில் உன் தரப்பினர் நூறுபேர்கள் மடிந்து வீழ்ந்தாலும் அவர்களிடமிருந்து கொடியைப் பிடுங்கி உன் கையில் எடுத்துக் கொண்டு முன்னேறிச் செல். யார் வீழ்ந்தாலும் சரி, இறைவன் சத்திய வடிவானவன். வீழ்கின்றவன் மற்றொருவனது கையில் கொடியைத் தரட்டும். அவன் அதை ஏந்திச் செல்வான். ஒரு போதும் கொடி கீழே விழாது.

தூய்மையின் காரணமாக உற்சாகத் தீ கொழுந்து விட்டெரிய, இறைவனிடம் குன்றாத பக்தியெனும் கவசமணிந்து, சிங்கத்தின் தைரியம் நரம்புகளில் துடிக்க, நூறாயிரம் ஆண்களும் பெண்களும், முன்வருவார்கள். அவர்களது உள்ளத்தில் ஏழைகளிடம் தாழ்ந்தோரிடமும் ஒடுக்கப்பட்டவர்களிடமும் கருணை பொங்கும். அவர்கள் நாட்டின் மூலை முடுக்கெங்கும் அலைந்து, முக்திக்கான உபதேசத்தை, ஒருவருக்கொருவர் உதவிபுரிந்துவாழவேண்டுமென்ற உபதேசத்தை, சமூக எழுச்சியின் உபதேசத்தை, சமத்துவத்தின் உபதேசத்தைப் பிரசாரம் செய்வார்கள்.

**இறைவனின் தொண்டர்களாகக் களத்தில் இறங்குங்கள் :**

நமது பாரதத்தாய் பல தடவை மயங்கி வீழ்ந்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் பாரதத்தின் மகாப் பிரபுவான இறைவன் தமது அவதாரங்களின் மூலம் அவளை மூர்ச்சை தெரிவித்திருக்கிறார்.

இறந்தவர்கள் மீள்வதில்லை. கழிந்த இரவு திரும்புவதில்லை; எழுந்து மறைந்த அலை புதிதாக மீண்டெழுவதில்லை. அது போலவே மனிதன் ஒரே உடலில் மீண்டும் வசிக்க வருவதில்லை. ஆகையால் மாந்தர்களே! செத்தொழிந்த பழமையை வழிபடுவதை விடுத்து உயிருடனிருக்கும் இக்காலத்தை வழிபட உங்களை நாம் அழைக்கிறோம். நடந்து போன செயல்களைப்பற்றிச் சிந்தித்துச் சிந்தை கலங்கி வருந்துவதை விட்டுவிட்டு, இக்கால நடவடிக்கைகளில் ஈடுபட அழைக்கிறோம். இழந்து போன, இடிந்து தகர்ந்து போன பாதைகளைத் தேடிக் கண்டுப்பிடிப்பதில் சக்தியை வீணடிப்பதை விடுத்து, அருகிலே உள்ள அகலமான, புதிய நெடுவழிப்பாதைக்கு வருமாறு உங்களைத் திருப்பி அழைக்கிறோம். அறிவுள்ளவன் எவனோ அவன் புரிந்து கொள்ளட்டும்.

அந்த மகாசக்தியின் முதல் துடிதுடிப்பின் மூலம் உலகின் திக்கெட்டிலும் தூரத்து எதிரொலிகள் எழுந்துள்ளன என்றால் அந்தச் சக்தி முழுமைபெற்றுக் காட்சி தரும் பெருநிலையைக் கற்பனை செய்து பாருங்கள். அடிமைப்பட்ட மக்களிடம் இருக்கக் கூடிய இழி குணங்களான அர்த்தமற்ற தவறான கருத்துக்களையும் பலவீனத்தையும் பொறாமையையும் ஒழித்துக் கட்டிவிட்டு வாருங்கள். இந்தப் புதிய தெய்வீக அமைப்பாகிற சக்கரம் சுழலுவதற்குத் துணை புரியுங்கள்.

''நாங்கள் இறைவனின் தொண்டர்கள்; அவரது புதல்வர்கள்; அவரது விருப்பங்களை ஈடேற்றுவதில் துணை புரிகிறவர்கள்'' என்ற திடநம்பிக்கை, பணி புரியும் களத்தில் புகும்போது உங்களது உள்ளத்தில் உறுதியாக வேரூன்றியிருக்கட்டும்!

# மறுமலர்ச்சிப் பெரும்பணி–1
## களத்தைத் தயாரித்தல்

நமது மானிட இனத்தைப் படைத்து, நிலைக்கச் செய்து காத்து வருபவரும், நமது முன்னோர்களின் தெய்வமாகவும், விளங்கிய அந்தப் பரம்பொருள், அவரை விஷ்ணு, சிவன், சக்தி என்றோ கணபதி என்றோ எப்படி அழைத்தாலும், உருவ (சகுண)மாக அல்லது உருவமற்ற (நிர்குணமான) தாக எப்படி வழிபட்டாலும் "ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி" — "பரம்பொருள் ஒன்றே; மகான்கள் அவரைப் பல பெயர்களால் அழைக்கின்றனர்" என்று நம் முன்னோர்கள் தெளிந்து கூறிய அந்தப் பரம்பொருள் எல்லையில்லாப் பெருங்கருணையுடன் நம்முன்னே நீக்கமற நிறைந்து, நம் மீது பேரருளைப் பொழியட்டும்! நாம் ஒருவரை ஒருவர் சரிவர அறிந்துணரவும், ஒருவருக்காக ஒருவர் உண்மை அன்போடு தொண்டுசெய்யவும், உண்மையிடத்தே பேரன்பு கொள்ளவும் செய்யட்டும்! பாரதத்தின் புனர் நிர்மாணம் என்கிற இந்த மகத்தான பணியில் நம்மில் யாரும் சொந்தப் புகழையோ, சொந்த கௌரவத்தையோ சொந்த அநுகூலத்தையோ சிறிதும் சிந்தியாதிருக்க அருள் பாலிக்கட்டும்!

**நம் நிலையை உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் :**

மிகப் பழங்காலத்தில் நம்நாடு ஆத்மீகத்துறையில் அபாரமாக முன்னேறிற்று. அந்தப் பண்டைய வரலாற்றை இன்று நம் மனக் கண் முன் கொண்டுவருவோம். ஆனால் நெடுநாட்களுக்கு முன்னர் இருந்த உயர்நிலையைப் பற்றித் தியானம் செய்வதில் பெரும் அபாயமும் உள்ளது. அதாவது நாம் புதியன பெறுவதற்கு உழைத்துக் கஷ்டப்படாமலிருந்து விடக்கூடும். மூதாதையர்களின் கழிந்து போன புகழ், பெருமையைப் பற்றி நினைத்துச் சோம்பிக் கிடந்து திருப்தியடைந்து விடலாம். பெருமையடித்துக் கொண்டிருந்துவிடலாம். அதிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்.

பாரதத்தினிடம் எனக்கு எவ்வளவுதான் அன்பிருந்தாலும், எவ்வளவுதான் தேசபக்தியிருந்தாலும், முந்தையர்களிடம் எவ்வளவுதான் மதிப்பு இருந்தாலும் கூட, நாம் மற்ற நாடுகளிடமிருந்து பல விஷயங்களைக் கற்கவே வேண்டும் என்பதை என்னால் எண்ணுமலிருக்க முடியாது. எல்லோருடைய கால்களின் கீழும் அமர்ந்து கற்க

நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஏனெனில் கவனித்துக் கொள்ளுங்கள்: ஒவ்வொருவரும் நமக்குப் பெரும் பாடங்களைக் கற்பிக்க முடியும். அதே சமயத்தில் உலகத்துக்கு நாமும் மகத்தான ஒரு பாடத்தைக் கற்பிக்க வேண்டுமென்பதை நாம் மறக்கக் கூடாது.

பாரதத்துக்கு வெளியே உள்ள உலகத்தின் தொடர்பு இன்றி நாம் எதுவும் செய்ய முடியாது; செய்ய முடியும் என நினைத்தது நமது பேதைமை. அதற்குத் தண்டனையாக ஆயிரமாண்டுகள் அடிமையாகக் கிடந்தோம். நாம் நமது நாட்டுக்கு வெளியே சென்று உலக நாடுகளுடன் நமது நிலையை ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. நம்மைச் சுற்றி உலகெங்கும் நடக்கும் பலவிதமான வேலைகளை நாம் கவனிக்கவில்லை, பாரதத்தின் உள்ளம் தாழ்வுற்றதற்கு இது முக்கிய மான ஒரு காரணம். இதற்கான தண்டனையை அனுபவித்து விட்டோம். இனிமேலாவது அவ்வாறு செய்யாமலிருப்போம்.

பாரதீயர்கள் நாட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்பது போன்ற அறிவீனமான கருத்துக்கள் எல்லாம் சிறுபிள்ளைத்தனமான எண்ணங்கள். "நீ அதிகமாக வெளியில் சென்று உலக நாடுகளி டையே பிரயாணம் செய்து வந்தால் அது உனக்கும் உனது நாட்டுக்கும் நல்லது" என்ற விஷயத்தை மூளையிற் பதியவைக்க வேண்டும். இதனைக் கடந்த பல நூற்றுண்டுகளில் செய்திருந்தால் நாம் இன்றுபோல், பாரதத்தை ஆள விரும்புகிற ஒவ்வொரு நாட்டின் காலின் கீழும் கிடந்திருக்க மாட்டோம்.

**வாழவேண்டுமாயின் விரிவு கொள்ள வேண்டும் :**

உயிருள்ள பொருள் வளர்ந்து பெருகும். உயிர் இருப்பதற்கு முதல் அறிகுறி அது. நீ விரிவடைவதை நிறுத்தினால், அந்தக் கணமே மரணம் உன்னைத் தாக்கும். அபாயம் உன்னைத் தாக்க விருக்கிறது. நான் அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் போயி ருந்தேன்; நான் போக வேண்டியிருந்தது! ஏனெனில் விரிவு பெறுவது தேசிய வாழ்க்கையினுடைய மறுமலர்ச்சிக்கு முதற் சின்ன மாகும். இவ்வாறு மறுமலர்ச்சியடைந்துவரும் தேசிய வாழ்க்கை, உள்ளே வளர்ந்து பெருகி, என்னை வெளியே போகச் செய்தது. ஆயிரக்கணக்கானவர்களை அது போலவே வெளியே போகச் செய்ய வேண்டும். நான் கூறுவதைக் கவனியுங்கள், இந்த நாட்டில் உயிர் இருக்கின்றதென்றால் நான் கூறுவது போல நடந்தே தீர வேண்டும். ஆதலால், இந்தப் பிரச்னை தேசிய வாழ்க்கையின் மறு மலர்ச்சிக்கு மிகப் பெரியதோர் அறிகுறியாகும். இந்த விஸ்தரிப்பின் மூலம் உலக ஞானமென்னும் பொது நிதிக்கு நமது பங்கினை, உலகப் பொது உயர்வுக்கு நமது பங்கினை சேர்த்து விட முடியும். வெளி நாடுகளுக்குச் செல்லத்தான் வேண்டும்.

அன்றியும் இது புது விஷயமல்ல; ஹிந்துக்கள் ஆயிரக்கணக்கன ஆண்டுகளாக எப்பொழுதும் வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளேயே அடைப்பட்டுத்தான் கிடந்தார்கள் என்று நினைத்தால், அது தவறு. பழைய நூல்களை நீங்கள் ஆராயவில்லை. இந்த மக்களினத்தின் வரலாற்றைச் சரியாக அறியவில்லை.

•

**நீங்கள் உங்கள் வாழ்வை வழங்கினால், நீங்கள் வாழ்வு பெறலாம்:**

ஒவ்வொரு தேசமும் உயிர்வாழ வேண்டுமாயின் கொடுக்க வேண்டும். நீங்கள் உங்களது உயிரைக் கொடுத்தால் உங்களுக்கு உயிர் கிடைக்கும். உங்களுக்கு ஏதாவது ஒன்று கிடைத்தால் மற்ற அனைவருக்கும் கொடுப்பதன் மூலம், நீங்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும். நாம் இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக உயிர் வாழ்கிறோம் என்ற உண்மை நம் எதிரில் நிற்கிறது. அதற்கு காரணம், அறிவீனர்கள் எப்படிச் சொன்னாலும், சரியான காரணம்—நாம் எப்பொழுதும் உலகுக்கு வாரிவழங்கிக் கொண்டிருப்பதுதான். ஆனால் பாரதம் அளித்த பரிசு, சமயம், தத்துவஞானம், தெய்வீக அறிவு, ஆத்மீக ஞானம் இவைதான். ஆகவே நாம் வெளியே செல்ல வேண்டும். நமது ஆத்மீகத்துவத்துக்குப் பண்டமாற்றாக அவர்கள் நமக்குத் தரக்கூடியவற்றைப் பெற்றுவர வேண்டும். ஆத்மீகத் துறையிலுள்ள அதிசயங்களை அவர்களுக்குக் கொடுத்து, பௌதிகத்துறையிலுள்ள அதிசயங்களைப் பெற்று வருவோம். எப்பொழுதுமே நாம் மாணவர்களாக இருப்போம். சமத்துவம் இல்லையேல் நட்பு இராது. ஒரு சாரார் எப்போதுமே ஆசிரியர்களாகவே இருந்து கொண்டு, மறுதரப்பினர் எப்பொழுதும் அவர்களது காலடியின் கீழ் உட்கார்ந்திருந்தால் சமத்துவம் ஏற்படமுடியாது. ஆங்கிலேயருக்கோ, அமெரிக்கருக்கோ சமமாக ஆக நீங்கள் விரும்பினால் நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கவும், அவர்களிடமிருந்து கற்கவும் வேண்டும். வரப்போகிற பல நூற்றாண்டுகளுக்கு அவர்களுக்குக் கற்பிப்பதற்கு உங்களிடம் ஏராளமான விஷயங்கள் உள்ளன.

**மேநாடுகளிலிருந்து பல விஷயங்கள் கற்கவேண்டும்:**

நாம் உயர வேண்டுமானால் மேநாடுகளிலிருந்தும் பல விஷயங்களைக் கற்கவேண்டுமென்ற நினைவு நமக்கு இருக்க வேண்டும். மேநாடுகளின் கலைகளையும், விஞ்ஞானங்களையும் கற்க வேண்டும்.

உலகுக்குக் கற்பிக்க வேண்டியது இந்த ஆத்மீகத் தத்துவம் தான். ஓரளவுக்கு நாம் உலகாயத, பௌதிக அறிவில் சிறிது மேம்பட வேண்டும். மக்களை ஒன்றுபடுத்தி இணைக்கும் திறமை, சக்திகளைக் கையாளும் திறமை, சக்திகளை ஒழுங்குற அமைத்துக் கோர்ப்பது, சிறு விஷயங்களைக் கொண்டு மகத்தான லாபங்களை அடைவது இவற்றை இன்னும் கொஞ்சம் கற்க வேண்டும்,

•

**பிறரைப் போல நடிப்பது நாகரிகமாகாது :**

மற்றவர்களைப் பின்பற்றி நடிப்பது நாகரிகப் பண்பு ஆகாது. நாம் நினைவிற் கொள்ள வேண்டிய மற்றொரு பெரிய பாடம் இது. நான் ஓர் அரசனைப்போல உடையுடுத்தி என்னை அலங்கரித்துக் கொள்ளலாம். அதனால் அரசனாகி விடுவேனா? சிங்கத்தின் தோல் போர்த்த கழுதை சிங்கமாகிவிடாது. கோழைத்தனமாகப் பிறர் போல் நடிப்பது அவர்களைப் பின்பற்றுவது, ஒருநாளும் முன்னேற்றத்தைத் தராது. ஒரு மனிதனின் பயங்கரத் தாழ்வுக்கு அது கண்கூடான அறிகுறியாகும். ஒரு மனிதன் தன்னையே வெறுக்கத் தொடங்கி விட்டான் என்றால் அவன் ஒழிந்து போனான் என்று கொள்க.

**ஹிந்து என்பதில் பெருமிதம் கொள்க :**

ஒருவன் தனது முன்னோர்களைப் பற்றி அவமானப்படுவானாயின் அவனுக்கு முடிவு காலம் வந்துவிட்டது. ஹிந்து இனத்தில் நான் மிகச் சாதாரண மனிதன்தான். ஆனாலும் நான் எனது இனத்தைப் பற்றி பெருமைப் படுகின்றேன். (என்னை ஹிந்து என அழைத்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்) உங்களுடைய தகுதியற்ற தாழ்ந்த ஊழியர்களில் ஒருவன் என்று நான் பெருமைப்படுகிறேன். முனிவர்களின் பரம்பரையினரான, உலகம்கண்ட மகரிஷிகளிடையே மிகக் கீர்த்தி வாய்ந்த ரிஷிகளின் சந்ததியினரான உங்களுடன் கூட இந்த நாட்டில் பிறந்திருக்கிறேன் என்று பெருமையடைகிறேன்.

**பிறரிடமிருந்து நாம் கற்கலாம்; ஆனால் நமது முறைக்குத் தகுந்தவாறு அதனை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் :**

ஆகவே உங்களுக்குத் தன்னம்பிக்கை இருக்கட்டும்; உங்களது முன்னோர்களைப் பற்றி அவமானமடைவதற்கு மாறாகப் பெருமை யடையுங்கள். பிறரைப் பின்பற்றி ஒரு போதும் நடிக்காதீர்கள். நீங்கள் பிறருடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் போதெல்லாம் உங்களது சுதந்திரத்தை இழந்து விடுகிறீர்கள். ஆத்மீக விஷயங் களில் கூட, மற்றவர்களின் உத்தரவை எதிர்பார்த்து அதற்கு உட் பட்டு நடப்பீர்களானால் மெல்ல மெல்ல எல்லாத் திறமைகளையும் சுய சிந்தனைச் சக்தியையும் கூட இழந்து விடுவீர்கள். உங்களுக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை உங்களது சொந்த முயற்சியால் வெளிக்கொணர முயலுங்கள். ஆனால் எவரையும் பார்த்து நடிக்காமல், அவர்களிடம் உள்ள நல்லதை மாத்திரம் அவசியம் ஏற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களிடமிருந்து கற்க வேண்டியவை நிறைய உள்ளன.

ஒரு விதையை நிலத்தில் விதைக்கிறோம். அதற்கு உணவாக ஏராளமான தண்ணீரும், மண்ணும், காற்றும் ஏற்பாடு செய்கிறோம். விதை செடியாகி, பெரிய மரமாக ஆகும்பொழுது அது மண்ணாக ஆகிறதா? இப்படி எந்த ஒன்றாகவும் அது ஆவதில்லை. தன்னுடைய இயல்பின்படி அது வளர்ந்து தனக்குத் தரப்பட்ட எல்லாவற்றி லிருந்தும் சத்துப் பொருளாக உள்ளதை ஏற்றுப் பிரம்மாண்டமான மரமாகத்தான் ஆகிறது. நீங்களும் அதுபோலவே ஆகுங்கள்.

**யாரிடமேனும் நல்ல விஷயங்களைக் கற்கலாம் :**

பிறரிடமிருந்து பல விஷயங்களை நாம் கற்கத்தான் வேண்டும் ஆம்: கற்க மறுப்பவன் செத்தவனாகி விட்டான் எனக் கொள்க.

"ஆததீத பராம் வித்யாம் ப்ரயத்னாதவராதபி
அந்த்யாதபி பரம் தர்மம் ஸ்திரீரத்னம் துஷ்குலாதபி"

(மனு,2-238)

"மாணிக்கத்தை நிகர்த்த பெண்மணி தாழ்ந்த ஜாதியில் தோன்றினாலும் அவளை உன் மனைவியாகக் கொள்வாயாக; தாழ்குடிப் பிறந்த ஞானியிடமிருந்தாவது, உயர்ந்த ஞானத்தை, அவரது திருவடிகளில் சேவை செய்து பெறுவாயாக; சண்டாளனிடமிருந் தேனும், முக்திக்கு மார்க்கத்தை அவருக்குத் தொண்டு செய்து பெறுவாயாக" என்று நமது மனு கூறியுள்ளார்.

பிறரிடமிருந்து நல்லன அனைத்தையும் கற்போம். ஆனால் உங்களது சொந்த இயல்புக்குத் தகுந்தபடி அவற்றை கிரகித்துச் சேர்த்துக் கொள்ளுங்கள், அவர்களைப்போல் மாறி விடாதீர்கள். இந்தப் பாரதீய வாழ்க்கையின் இயல்பு முறையிலிருந்து வெளியே இழுக்கப்படாமலிருங்கள். பாரதீயர்கள் அனைவரும் வேற்று இனத் தவரைப் போல உண்டு, உடுத்து, நடந்தால், அது பாரத நாட்டுக்கு நன்மை செய்யுமென்று ஒரு கணமும் நினைக்காதீர்கள்.

**வாழ்க்கை அருவியானது தங்கு தடையின்றி ஓடிப் பெருகட்டும் :**

சமீப வருடங்களில் ஏற்பட்ட பழக்கமாயினும் அதை விட்டு விடுவது எவ்வளவு கடினம் என்பது உங்களுக்குத் தெரியும். உங்க ளது உதிரத்தில் இந்தச் சிறப்பான, குறிப்பான, தேசீய வாழ்க்கை முறை எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கடவுள்தான் அறிவார். பல்லாயிரக்கணக்கான ஆண்டு களாக நம்முடைய தேசிய வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட ரீதியில் போய்க் கொண்டிருக்கிறது. இம்மாபெரும் நதி அநேகமாகக் கடலுடன் கலக்குமிடத்திற்கு அருகில் உள்ளது. இந்தப் பெரு நதி தனது

உற்பத்தி ஸ்தானமான இமயத்தின் பனி மூடிய சிகரங்களுக்கே திருப்பிப் போக வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அது நடவாது. அவ்வாறு நடக்க வேண்டும் என்று முயன்றால் அது குலைந்துதான் போகும்.

ஆதலால் நமது தேசத்தின் ஜீவசக்தியை அதன் போக்கில் போகும்படி விடுங்கள். அந்தப் பெருநதியின் பெருக்கைத் தடுக்கும் தடைகளை அகற்றி விடுங்கள். அதன் படுகைகளையும், வழிமடைகளையும் அடைத்துக் கொண்டிருக்கும் அசுத்தங்களை நீக்கித் தூய்மைப்படுத்துங்கள். அதற்கு மேல் அந்த ஆறு தனக்கே உரித்தான இயற்கை வீறுடன் குதித்துப் பாய்ந்து ஓடும். நாடு செழித்தோங்கித் தழைக்கும்.

பாரதீயர்களாகிய நம்மீது ஏராளமான அந்நியக் கருத்துக்கள் படையெடுத்துப் புகுத்துள்ளன. அவை நமது தேசீய சமயத்தின் ஜீவநாடியையே அரித்துத் தின்று வருகின்றன. இன்று நாம் ஏன் இவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறோம்? நம்மில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் வெளிநாட்டுக் கருத்துக்களாலும், சக்திகளாலும் உருவாக்கப்பட்டிருப்பது ஏன்? உலக நாடுகளின் மதிப்பில் நாம் உயர வேண்டும் என்றால் இந்த இழி நிலையைத் தூர விரட்டி ஓட்ட வேண்டும்.

**நாம் எவர் மீதும் பழிசாற்ற வேண்டாம்; நமது வினைக் கர்மாவே காரணம்:**

நண்பர்களே! வருத்தம் தரக்கூடிய சிலஉண்மைகளை உங்களுக்கு நான் சொல்லித் தீர வேண்டியிருக்கிறது. இந்நாட்டவன் ஒருவனை ஓர் ஆங்கிலேயன் கொலை செய்தாலோ, கொடுமைப்படுத்தினாலோ, நாடு முழுவதும் பெருத்த எதிர்ப்பு ஆரவாரம் ஏற்படுவதை நான் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். அதைப் படித்துக் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். ஆனால் மறுகணமே என் மனத்தின்கண் ஓர் கேள்வி எழுகிறது. இவை அனைத்துக்கும் பொறுப்பாளி யார்? ஒரு வேதாந்தி என்ற முறையில் நான் என்னையே இக்கேள்வி கேட்டுக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஹிந்து என்பவன் ஆத்ம சோதனை செய்து பார்ப்பவன். எல்லா விஷயங்களையும் தன்னிலே தன்மூலமாகப் பார்க்க விரும்புபவன். ஆத்மதிருஷ்டி மூலம் பார்ப்பவன். ஆகவே என்னையே நான் யார் இதற்குக் காரணம் என்று கேட்டுக் கொள்ளும்பொழுது, "ஆங்கிலேயர்களல்ல இதற்குப் பொறுப்பு, இந்த அவலநிலைக்கு, தாழ்ந்த நிலைக்கு, நாம்தான், நாம் மட்டுத்தான் பொறுப்பு" என்ற பதில் ஒவ்வொரு தடவையும் எனக்குக் கிடைக்கிறது.

முதலில் நம்மை நாமே தாக்கிக் காயப்படுத்திக் கொண்டால் ஒழிய இந்த உலகில் நம்மைத் தாக்கிப் புண்படுத்தும் சக்தி வேறொன்றுமிராது என்ற விஷயத்தை வேதாந்திகளாகிய நாம் நிச்சயமாக அறிகிறோம். பாரதத்தின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு முஸ்லீம்களாகி விட்டார்கள் ........... ஏற்கனவே கிறிஸ்தவர்கள் ஜனத்தொகை பத்து லட்சத்துக்கும் அதிகமாகி விட்டது.

யாருடைய குற்றம் இது ? தமது சொந்த சமயத்தைக் கைவிட்டவர்களுக்காக நாம் என்ன செய்தோம் ? அவர்கள் ஏன் முகமதியர்களாகியிருக்க வேண்டும் ?

இவ்வாறு நம்மை விட்டு அகன்றவர்களுக்காக இப்பொழுது நாம் அழுகிறோம். ஆனால் அதற்கு முன்னால் நாம் அவர்களுக்கு என்ன செய்தோம்? நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேள்வி கேட்டுப் பார்த்துக்கொள்வோம். நாம் கற்ற படிப்பினை என்ன? சத்தியமாகிற தீபஜோதியை நாம் கைப்பிடித்துள்ளோமா ? அப்படியாயின் எவ்வளவு தூரம் அதனை முன்னுக்குக் கொண்டு சென்றுள்ளோம்? நாம் முதலில் அவர்களுக்கு உதவவில்லையே? இந்த கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நாம் அவர்களுக்கு உதவாதது நமது தப்பு; நமது சொந்தக் கர்ம வினையாகும். பிறரை நாம் குற்றஞ்சாட்ட வேண்டாம். நமது சொந்தக் கர்மாவையே நொந்து கொள்வோம்.

**உடல் பலவீனமாக இருக்கும்பொழுதுதான் நோய் அதனைப் பிடிக்கிறது:**

உலகாயத வாதம், முஸ்லீம் மதம், கிறிஸ்தவ மதம் அல்லது உலகிலுள்ள வேறெந்த மதமும், நாம் அனுமதித்திராவிட்டால், இங்கு வந்து வெற்றி பெற்றிருக்க முடியாது. உடலானது தீய பழக்கங்களால், கெட்ட உணவால், கஷ்டங்களால், தக்க பாதுகாப்பு இன்றி நலிவுறுகிறது. நலிவுறாமற் போனால் நோய்க்கிருமிகள் அதனைத் தாக்கவே முடியாது. விஷக்கிருமிகள் சூழ்ந்து மூடினாலும்கூட ஆரோக்கியமுள்ள மனிதன் மாசுமருவற்றுத் தப்பிவிட முடியும்.

...நோய் உண்டாவதற்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டுமென்று நாம் அறிவோம். ஒன்று வெளியிலிருந்து வரும் விஷக்கிருமி; இரண்டாவது நமது உடலின் பலவீன நிலை. கிருமிகளை உட்புகவிடக் கூடிய நிலையில் நமது உடல் இருந்தாலொழிய, கிருமிகள் நுழைந்து பலம் பெற்றுப் பெருகும் அளவுக்கு உடலின் ஜீவசக்தி குறைந்து இருந்தாலொழிய உடலிலுள்ள எந்த ஒரு கிருமிக்கும் வியாதியை உண்டாக்கக் கூடிய சக்தி கிடையாது. உண்மையாகப் பார்த்தால் ஒவ்வொருவருடைய உடலுக்குள்ளும் லட்சக்கணக்கான

கிருமிகள் இடைவிடாமல் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஆனால் உடலில் பலம் இருக்கும்வரை அவை நம்மைப் பாதிப்பதில்லை. உடலில் பலக்குறைவு ஏற்பட்டால் இந்தக் கிருமிகள் உடலைத் தாக்கிக் குடிபுகுந்து நோயை உண்டாக்குகின்றன. நமது தேசிய வாழ்க்கையும் இத்தன்மையானதுதான்.

நம் தேசிய வாழ்க்கையாகிற உடல் பலவீனப்படும் பொழுதுதான் பலவித நோய்க்கிருமிகளான கருத்துக்கள் நமது மக்களினத்தின் அரசியல் துறையில், சமூகத் துறையில், அறிவுத் துறையில் பெருங் கூட்டமாக நுழைந்து நோயை உண்டாக்குகின்றன. ஆதலால் இதனை நீக்குவதற்காக நாம் நோயின் மூலகாரணத்தை ஆராய்ந்து கண்டு பிடித்து நமது இரத்தத்திலிருக்கும் அசுத்தங்களை நீக்க வேண்டும். அதற்கு ஒரே பரிகாரம் மனிதனைப் பலப்படுத்தி, இரத்தத்தைத் தூய்மைப்படுத்தி, உடலை வலுவாக்கி வைக்க வேண்டும். அதற்கு மேல் அந்த உடலானது எல்லாவிதமான வெளி விஷயங் களையும் தடுப்பதுடன் நோய்வாய்ப்படாமலும் காத்துக் கொள்ளும்.

சகோதரர்களே! அந்நிய இனத்தவர்கள் ஹிந்து ராஷ்டிரத்தை உண்மையான பல இழிகுணங்களுக்காகத் தூற்றுகிறார்கள். அவற்றின் பெரும்பாலான இழிவுகளுக்கு நாமே காரணம் என்பதை வெட்கத்துடன் அறிந்துள்ளோம். பாரதத்திலிருக்கும் பிற இனத்தவர் மீது தகாத ரீதியில் குற்றஞ்சாட்டும் நிலை ஏற்பட நாமே காரணம்.

**நகைப்புக்கு இடந்தரும் நிலை:**

எவ்வளவு கேலிக்கூத்தான நிலைக்கு நாம் தாழ்ந்து விட்டோம்! தோட்டியொருவன், தோட்டியென்ற ரீதியில் ஒருவரிடம் வந்தால் 'பிளேக்' வியாதியைப் போலக் கருதி அவனை வெறுத்து ஒதுக்கு வார்கள். ஆனால் அவனது தலை மேல் பாதிரியொருவர் ஏதோ பிரார்த்தனைகளை உச்சரித்துக் கொண்டே ஒரு கோப்பைத் தண் ணீரை ஊற்றிவிட்டால், ஒரு சட்டையை—அது எவ்வளவும் கந்தை யானாலும் பரவாயில்லை—அவன் அணிந்து கொண்டு மிகுந்த ஆசார சீலரான ஹிந்துவின் அறைக்குள் நுழைகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்நிலையில் அவன் அமருவதற்கு நாற்காலி தருவார்கள். மனமாரக் கை குலுக்குவார்கள். இவ்வாறு செய்யாமல் மறுக்கக்கூடிய தைரியம் எவருக்கும் இல்லை. இதை விடக் கேவலமான வேடிக்கை இருக்க முடியாது.

கடந்த அறுநூறு, எழுநூறு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை எண்ணிப் பாருங்கள். வயது முதிர்ந்த ஆண்பிள்ளைகள், நூற்றுக்கணக்கில் தண்ணீரை வலது கையால் குடிப்பதா, இடது

கையால் குடிப்பதா என்பதுபற்றியும் கையை மூன்று தடவை கழுவுவதா, நான்கு தடவை கழுவுவதா என்பது பற்றியும் வருடக் கணக்காக விவாதித்து வருகிறுர்கள்......

**ஆண்மையின்மை :**

சிலருடைய மூளையில் இரவு பகலாகச் சில "பிரச்னைகள்" தொந்தரவு பண்ணிக் கொண்டிருக்கும். அதாவது பூஜை மணியை வலது பக்கம் அடிப்பதா, இடது பக்கம் அடிப்பதா ? சந்தனப் பொட்டு தலையில் வைக்க வேண்டியதா அல்லது வேறங்கேயாவதா? தீப ஆரத்தியை இரண்டு தடவை சுற்றுவதா, நான்கு தடவை சுற்றுவதா ? இது போன்ற கேள்விகள் யார் மனத்தில் வழக்கமாகத் தோன்றுகிறதோ அவர்களை வெறும் மட்டரக உதவாக்கரைகள் என்பேன் ; இது போன்ற அற்பமான விஷயங்களைத் தவிர வேறெதுவும் நுழையாத அந்த மண்டைகளையே ஆண்மையற்றவர்கள் என்பார்கள். இத்தகைய தன்மைகளால் தான் சுபிட்சம் நம்மை ஒதுக்கி வைத்து விட்டது ; உலகம் நம்மை வெறுத்து உதைக்கிறது; ஆனல் இதே நேரத்தில் மேநாட்டு மக்கள் உலகத்துக்கெல்லாம் அதிபதிகளாக விளங்குகின்றுர்கள் !

**சுயமான மதியூகம், வீரியம், சுறுசுறுப்பு—இவற்றை இழந்தோம்:**

மேற்கூறியபடி "அதிமுக்கியமான" விஷயங்களைப்பற்றிக் தர்க்கம் பண்ணுவதிலேயே வாழ்க்கையைக் கழிக்கிறவர்கள், அவைபற்றி ஞானம் கொழிக்கும் தத்துவ நூல்களை எழுதுகிறவர்கள்–இவர்களிடமிருந்து எதைத்தான் எதிர்பார்க்க முடியும் ?

"உருளைக்கிழங்கு ஒன்று ஒரு கத்தரிக்காயைத் தீண்ட நேர்ந்தால் உலகம் பிரளயத்தில் மூழ்கி அழிவதற்கு இன்னமும் எவ்வளவு காலம் இருக்கிறது ? கைகளைக் கழுவுவதற்காக ஒருவன் ஒரு டஜன் தடவை மண்ணைப் போட்டுத் தேய்க்கா விட்டால் அவனது முன்னேர்களில் எத்தனை தலைமுறைகள் நரகத்துக்குப் போவார்கள் ? பதினுன்கு தலைமுறைகளா ? இருபத்து நான்கா ?" இது போன்ற நுணுக்கமான பிரச்சினைகளுக்குக் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, விஞ்ஞான ரீதியான விளக்கம் தேடிக்கண்டுப்பிடித்து வருகிறுர்கள். அதே நேரத்தில் மக்கள் தொகையில் கால்பாகம் பட்டினி கிடக்கிறது.

எட்டு வயதுச் சிறுமி முப்பது வயதுக்காரனுக்கு மணம் முடிக்கப் படுகிறுள். பெற்றேர்கள் கொண்டாட்டமாக இருக்கிறுர்கள். அதை பற்றி யாராவது குறை கூறினல், "எங்கள் சமயத்தைத் தலைகீழாக மாற்றுகிறுர்களே" என்று பேசுகிறுர்கள். பெண் பெரியவளாவதற்கு முன் குழந்தைக்குத் தாயாராக மாறி விட வேண்டும் என்று

விரும்புகிறவர்கள், அதற்காக விஞ்ஞான ரீதியாக விளக்கந் தருகிற வர்கள் இவர்கள் கடைபிடிக்தம் சமயம் தான் என்ன ? முகம்மதியர்கள் மீது இதற்கான பொறுப்பைப் பலர் சாட்டுகிறார்கள். உண்மையில் அவர்களைத்தான் குற்றஞ்சாட்ட வேண்டும் ! இல்லையா !

நமது சமயம் சமயலறை மதமாகி விடக்கூடிய அபாயமிருக்கிறது. இப்பொழுது நம்மில் பெரும்பாலோர் வேதாந்திகளல்லர், புராணவழி நடப்பவர்களல்லர், தந்திர சாஸ்திர முறையைப் பின்பற்றுகிறவர் களுமல்லர், நாமெல்லாம் வெறுமனே 'என்னைத் தீண்டாதே' என்று முணுமுணுக்கிறவர்கள்தான். நமது சமயம் சமயலறையில் இருக்கிறது. சோற்றுப் பானைதான் நமது கடவுள். "என்னைத் தொடாதே, நான் புனிதமானவன்" என்பது தான் இப்போது நமது சமயம். இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நிலைமை இப்படியே நீடிக்கு மானால் நாம் ஒவ்வொருவரும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தான் இருப்போம்.

வாழ்க்கையிலுள்ள பெரும் பிரச்னைகளை மனது கிரகிக்கவில்லை யென்றால் மூளை பலவீனமுற்றிருக்கிறது; சுயமான ஆராய்ச்சித் திறமை அற்றுப் போய் விட்டது; அறிவு பலத்தை சுறுசுறுப்பை, சிந்திக்கும் வலிமையை இழந்து விட்டது. கண்ணுக்குத் தெரிகிற சிறு வட்டத்திற்குள் அது உழன்று வருகிறது—என்பனவற்றைத் தான் அது தெளிவாகக் குறிக்கிறது.

**மூடநம்பிக்கை, பொய் ஆசாரம், உலகாயத வாதம்-இவற்றிலிருந்து தப்ப வேண்டும் :**

ஒரு பக்கம் பழைய மூடநம்பிக்கையிலாழ்ந்த பொய் ஆசாரம். மறுபுறம் உலகாயதவாதம் அல்லது ஐரோப்பியவாதம். இருபக்கத்தி லுமுள்ள இந்த இரண்டு பயங்கர ராட்சதர்களிடமிருந்து தப்பி நாம் நமது பாதையைக் கண்டுப்பிடிக்க வேண்டும்,

ஒரு பக்கத்தில் மேல்நாட்டு அறிவு என்னும் மதுவை அருந்தி விட்டுத் தனக்கு எல்லாமே தெரியும் என்று எண்ணுகிற மனிதன் பண்டைக்கால ரிஷிகளைக் கண்டு சிரிக்கிறான். ஹிந்து சிந்தனை யெல்லாம் அவனுக்கு மட்டரகமான குப்பைக் கூளமாகவும், தத்துவ ஞானமெல்லாம் குழந்தைப் பிதற்றல்களாகவும், சமயமானது முட்டாள் களின் மூடநம்பிக்கையாகவும் அவனுக்குப் படுகிறது.

மற்றொரு பக்கத்தில் படித்த மனிதன். ஆனால் அவன் ஒரு விதமான ஒரே மூர்க்கமான சிந்தனையுடைய வெறியன். அவன் தனது சிந்தனை யில் மறுகோடிக்குப் போய் விடுகிறான். அவன் ஒவ்வொரு விஷயத் துக்கும் சகுனம் பார்த்து விளக்குகிறான். தனது குறிப்பிட்ட

இனத்தாரிடமிருக்கும் மூட நம்பிக்கைகள் அல்லது தனது குறிப்பிட்ட தெய்வங்கள் அல்லது குறிப்பான கிராமம் இவை ஒவ்வொன்றைப் பற்றியும் அவனிடம் தத்துவ சாஸ்திர ரீதியான, அத்தியாத்மிக ரீதியான விளக்கங்கள் இருக்கின்றன. இன்னும் எத்தனை விதமான அற்பத்தனமான விளக்கமெல்லாம் அவனிடம் இருக்கிறதோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்—அவனது கிராமத்தின் ஒவ்வோர் அற்பமான மூட நம்பிக்கையும்கூட அவனுக்கு வேதவாக்கு ஆகும். அவனைப் பொறுத்தவரையில்—அந்த மூட நம்பிக்கைகள் நிறைவேறுவதைப் பொறுத்துத்தான் தேசீய வாழ்க்கை உள்ளது. இது குறித்தும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெருந்தன்மையும் உயர்வும் வாய்ந்த கருத்துக்களைக் கிரகிக்கத் திறனில்லாத மூளை, சுயமான ஆற்றலையும், வீரியத்தையும் இழந்து நிற்கும் அந்த மூளை, மதம் என்பதன் பேரால் பற்பல அற்பமான மூட நம்பிக்கைகளைக் கொண்டு தன்னைத்தானே விஷமாக்கிக் கொண்டு வருகிறது. நாம் இதை உணர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**மூடுமந்திரமும், மூட நம்பிக்கைகளும் பலவீனத்தின் அறிகுறிகள் :**

மர்மமான மூடுமந்திர முறைகளை நாடுவதும், மூட நம்பிக்கையும் எப்பொழுதுமே பலவீனத்தின் அறிகுறியாகும். எப்பொழுதுமே இவை தாழ்வுக்கும் சாவுக்கும் அறிகுறியாகும். ஆகையால் அவை குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள். பலசாலிகளாக உங்கள் சொந்த பலத்தையே நம்பி வாழுங்கள். மிகப் பெரிய விஷயங்கள் அதியற்புதமான விஷயங்கள் என இருக்கின்றன. அவற்றை அசாதாரண விஷயங்கள் என்று நாம் அழைக்கக்கூடும். ஆனால் இவற்றில் ரகசிய வித்தை என்று எதுவுமே இல்லை.

சமய உண்மைகள் ரகசியமானவை என்றோ, அவையெல்லாம் இமயமலையின் பனிமூடிய சிகரத்தில் உட்கார்ந்திருக்கிற ரகசிய சங்கங்களின் ஏகபோக உடமை என்றோ, இந்நாட்டில் ஒரு காலத்தும் பிரசாரம் செய்யப்படவில்லை.

**தூய சமயத்திலிருந்து மூட நம்பிக்கைகளைக் களையெடுத்துவிடுங்கள்:**

இத்தகைய ரகசிய சங்கங்கள் எங்குமே கிடையாது. இந்த மூட நம்பிக்கைகளின் பின்னால் ஓடாதீர்கள். நீங்கள் அப்பட்டமான நாஸ்திகனாகப் போனாலும் பரவாயில்லை; அதனால் உங்களுக்கு பலமாவது வரும்; ஆனால் இந்த மூடநம்பிக்கைகள் மூலம் தாழ்வும், நாசமும் நேரும். பலசாலிகளாக இருப்பவர்கள் இந்த மூட நம்பிக்கையில் தமது நேரத்தைச் செலவிடுவது மனித குலத்துக்கே வெட்க்

கேடான காரியமாகும். உலகிலுள்ள மூட நம்பிக்கைகளில் அழுகி, நாற்றமடித்துக் கிடக்கும் மூட நம்பிக்கைகளை விளக்குவதற்காக உருவகக் கதைகளைக் கண்டுபிடிப்பதில் தமது முழு நேரத்தையும் செலவிடுகிறார்களே! வெட்கம்! தைரியமாயிருங்கள். அந்த முறை மூலம் எல்லாவற்றையும் விளக்க முயற்சி செய்யாதீர்கள்!

நமது உடலில் ஏராளமான மூட நம்பிக்கைகளாகிற மாசுமருக்கள், ஏராளமான குழிப்புண்கள் உள்ளன. இது உண்மை. அவற்றை வெட்டிச்சீவி, அழித்துவிட வேண்டும். ஆனால் இவையெல்லாம் நமது சமயம், நமது தேசிய வாழ்க்கை, நம் ஆத்மிக முறை இவற்றை அழிப்பதில்லை. சமயத்தினுடைய ஒவ்வொரு கொள்கையும் பாதுகாப்பாகவே இருக்கிறது. இந்தக் குறைபாடுகளை எவ்வளவு விரைவில் ஒழிக்கிறோமோ அவ்வளவுக்கு நமது கொள்கைகள் அதிகமான பிரகாசத்துடன் ஜொலிக்கும். உறுதியுடன் அவற்றைக் கடைப்பிடியுங்கள்.

**உடல் பலவீனம்:**

நமது உபநிடதங்கள் மிக உயர்ந்தவையாக இருந்தாலும், நாம் மகரிஷிகளின் வம்சத்தில் பிறந்தவர்களென்று மார் தட்டிக் கொண்டாலும் மற்ற இன மக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் பலவீனர்களாக, மிகப் பலவீனர்களாக இருக்கிறோம் என்பதை நான் சொல்லியாக வேண்டும். முதலாவதாக, நமது உடல் பலவீனமாக இருக்கிறது. நமது துன்பங்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்காவது நமது பலவீனத்தின் காரணமாக ஏற்பட்டவைதான். நாம் சோம்பலில் ஆழ்ந்து இருக்கிறோம். நம்மால் உழைக்க முடிவதில்லை.

முதன் முதலில் நமது இளைஞர்கள் பலமுடையவர்களாக வேண்டும். சமய உணர்ச்சி அதற்குப் பிறகு வரும். எனது வாலிப நண்பர்களே! பலமுள்ளவர்களாகுங்கள். நான் அளிக்கக்கூடிய புத்திமதி இதுதான்: நீங்கள் கீதையைப் படிப்பதைவிடக் கால்பந்து ஆடுவதன் மூலம் சுவர்க்கத்துக்கு அருகில் செல்வீர்கள். நான் தைரியமாகவே கூறுகிறேன். உங்களுக்கு இவற்றைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. ஏனெனில் உங்களை நான் நேசிக்கிறேன்

**உங்களது கைத்தசைகளில் மேலும் சிறிது பலம் அதிகமானால் கீதை நன்றாகப் புரியும்:**

செருப்பு எங்கே கடிக்கிறது என்று எனக்குத் தெரியும். எனக்கு கொஞ்சம் அநுபவம் இருக்கிறது. உங்களது கைகால் தசைகளில் இன்னமும் கொஞ்சம் பலம் வந்தால் கீதை உங்களுக்கு இன்னும் நன்ருகப் புரியும். உங்கள் உதிரத்தில் சக்தி இருந்தால்

ஸ்ரீகிருஷ்ணனுடைய பலம் மிக்க மேதா விலாசத்தையும், பராக்ரமத்தையும் உங்களால் நன்ருகப் புரிந்துகொள்ள முடியும். உங்கள் உடல் உங்களது கால்களின் மீது உறுதியாக நிமிர்ந்து நிற்க, நீங்கள் ஆண்பிள்ளைகள் என்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும் பொழுது, உபநிடதங்களின் தத்துவங்களையும், ஆத்மாவின் மகத்துவத்தையும் நன்ருக அறிந்துணர முடியும்.

கிளிப்பிள்ளைகளைப் போலப் பல விஷயங்களை நாம் பேசுகிருேம். ஆனல் ஒரு போதும் அதன்படி நடப்பதில்லை. பேசுவதும் செய்யாமலிருப்பதும் நமது பழக்கமாகி விட்டது. அதன் காரணம் என்ன? உடல் பலவீனம்தான். இத்தகைய பலமில்லாத மூளையால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. அதனை நாம் வலிவுபடுத்த வேண்டும்.

நாம் வேண்டுவது உதிரத்தில் சக்தி, நரம்புகளில் வலிமை, இரும்பாலான தசைகள், எஃகினுல் ஆன நரம்பு—மனிதனைப் பஞ்சு போல் மிருதுவாக்குகிற அசட்டுத்தனமான கருத்துக்கள் அல்ல.

**சகோதரர்களுடன் சண்டையிட்டுக் கொண்டு அந்நியர்முன் மண்டியிடுதல்;**

நம்மிடம் மற்ருெரு குறையுமிருக்கிறது...பல நூற்ருண்டுகளாக நாம் அடிமைப்பட்டிருந்ததனுல் நாம் பெண்களின் நாடுபோல ஆகி விட்டோம். உங்களால் இந்த நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ மூன்று பெண்களை ஐந்து நிமிட நேரம் ஒன்ருகக் கூட்டிவைக்க முடியாது. அதற்குள்ளாக அவர்கள் சண்டைபோட்டுக் கொள்வார்கள். ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் பெரிய சங்கங்கள் அமைத்துப் பெண்களின் ஆற்றலைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுவார்கள். ஆனல் உடனே தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொள்வார்கள். அதனுல் யாரோ ஓர் ஆண்பிள்ளை போய் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவான். உலகம் முழுவதும் இப்பொழுதும் பெண்கள் மீது ஆண்கள்தான் ஆதிக்கம் செலுத்த வேண்டியிருக்கிறது.

நாமும் அவர்களைப்போல உள்ளோம். நாம் பெண்களாகி விட்டோம். பெண்களுக்குத் தலைவியாக ஒரு பெண் வரத் தலைப்பட்டால் அவளைத் தூஷித்துப் பலவாருகத் திட்டி உட்கார வைத்து விடுவார்கள். ஆனல் ஒரு ஆண் பிள்ளை வந்து அவர்களைக் கடுமையாக நடத்தி, அவ்வப்பொழுது திட்டினுல் அது சரிதானென்று ஒப்புக் கொள்ளுவார்கள். இந்த விதமான மனேவசிய சக்திக்கு அவர்கள் பழக்கப் பட்டிருக்கிருர்கள்.

அது போலவே நம் நாட்டுச் சகோதரர்களில் யாராவது ஒருவன் எழுந்து நின்று பெரியவனுக முயன்ருல் நாம் அனைவரும் அவனைக் கீழே பிடித்து இழுத்து, உயரவிடாமல் ஒடுக்குகிருேம். ஆனல் யாரா

வது ஒரு அந்நியன் வந்து நம்மைக் காலால் உதைத்தானானல் அது பரவாயில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கைக்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம், இல்லையா?

**பரஸ்பரப் பொருமை - நமது பெரும் பாபம் :**

நம்மால் ஒன்ருக இணைந்து வேலை செய்ய முடியாது. நமக்குப் பரஸ்பரம் அன்பில்லை. நாம் தீவிரமான சுயநலமிகள். மூன்று பேர் ஒன்ருக வாழ்ந்தால் ஒருவரை ஒருவர் வெறுக்காமல், ஒருவரிடம் ஒருவர் பொருமை கொள்ளாமல் இருக்கவே முடிவதில்லை.

ஆம். பல நூற்ருண்டுகளாக நாம் பயங்கரமான பொருமையால் நிறைந்து வாழ்கிருேம். ஒருவருக்கொருவர் எப்பொழுதும் பொருமைதான். இவனுக்கு ஏன் முன்னணி இடம்? எனக்கு ஏன் இல்லை? கடவுளை வழிபடும் தெய்வ சந்நிதியில் கூட முதல் ஸ்தானம் கேட்கிருேம். அந்தஅளவு அடிமைத்தனமான நிலைக்கு நாம் இழிந்து விட்டோம்.

வெறுக்கத்தக்க இந்தக் கடும் பகையுணர்ச்சியைக் கைவிடுக. நாயைப்போல் பூசலிட்டுப் பரஸ்பரம் குரைத்துக் கொள்வதை நிறுத்துங்கள். நல்லநோக்கம், நல்லபாதை, நேர்மையான தைரியம்—இந்த அடிப்படையில் நிமிர்ந்து நின்று ஆண்மையுடனிருங்கள்.

அடிமையான ஒருவனது நெற்றியில் இயற்கை எப்பொழுதும் ஒரு பொட்டு வைக்கிறது. அது தான் பொருமையென்னும் களங்கம். அதனை அழித்து விடுவோம். எவரையும் கண்டு பொருமைப்பட வேண்டாம். நல்ல காரியம் செய்கிற ஒவ்வோர் ஊழியனுக்கும் உதவ ஆயத்தமாக இருப்போம். மூவுலகிலும் வாழும் ஒவ்வொரு ஜீவனுக்கும் நல்லாசி அனுப்புவோம்.

**ஒற்றுமைப் பட்டு இணைந்து வேலை செய்வதற்கான இயக்கத்தை நிர்மாணிப்பதில் பொருமைதான் மிகப்பெரிய முட்டுக்கட்டை :**

ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு தேசத்தையும் மேன்மையடையச் செய்வதற்கு மூன்று விஷயங்கள் தேவைப் படுகின்றன :—

(1) நல்ல குணங்களுக்கு வலிமை உண்டு என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை.

(2) பொருமையும் சந்தேகப்படுவதும் இல்லாமை.

(3) நல்லவனுக வாழவும், நல்லன செய்யவும் முயலுகிறவர்களுக்கு உதவி செய்தல்.

ஹிந்துதேசத்துக்கு அதியற்புதமான புத்தி கூர்மையும், மற்றும் பல திறமைகளும் இருந்தும் கூட ஏன் அது சிதறுண்டு போக வேண்டும்? நான் விடை சொல்லுவேன். பொருமையே காரணம்.

அந்த உதவாக்கரையான ஹிந்து இனத்தைப் போல, ஒருவருக்கொருவர் மட்டரகமாகப் பொறுமை கொள்கிற, ஒருவருக்கு ஏற்படுகிற பெயர், புகழ் பற்றிப் பொறுமைப் படுகிற மக்கள் உலகில் எப்பொழுதுமே தோன்றியதில்லை.

ஐந்து நிமிட நேரத்துக்கு மூன்று பேர்கள் ஒன்றாக இணைந்து இந்த பாரத நாட்டில் செயலாற்ற முடியாது. ஒவ்வொருவரும் மற்றவரை மிஞ்சப் போராடுகிறார்கள். போகப் போக அவ்வியக்கம் முழுவதுமே நாசமாகி விடுகிறது.

**ஒற்றுமையிலும், இயக்க ரீதியாக மக்களை இணைத்து அமைப்பதிலும் தான் வலிமையின் ரகசியம் உள்ளது:**

அதர்வ வேத சம்ஹிதையிலிருந்து அற்புதமான ஒரு சுலோகம் என் நினைவுக்கு வருகிறது.

ஸங்கச்சத்வம் ஸம்வதத்வம் ஸம்வோ மனும்ஸி ஜானதாம்
தேவா பாகம் யதா பூர்வே ஸஞ்ஜானானாமுபாஸதே

(அதர்வ - காண்டம் 1)

“நீங்கள் அனைவரும் ஒரே மனத்துடன் இருங்கள்; நீங்கள் அனைவரும் ஒரே சிந்தனையுடன் இருங்கள். ஏனெனில் பழங்காலத்தில் தெய்வங்கள் ஒரே மனத்துடனிருந்ததால் ஆகுதிகளைப் பெற முடிந்தது. கடவுளர் ஒரே மனத்துடன் இருப்பதால் தான் மனிதர்களால் அவர்களை வழிபட முடிகிறது” என்று கூறுகிறது. ஒருமனப்பட்டு விளங்குவதே ஒரு இயக்கத்தின் வலிமையின் ரகசியம்.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். நான்கு கோடி ஆங்கிலேயர்கள் நம் நாட்டிலுள்ள முப்பது கோடி மக்களை எப்படி ஆள்கிறார்கள்? மனோதத்துவ சாஸ்திரத்தின் படி இதற்கு விளக்கம் என்ன? இந்த நான்கு கோடியினரும் ஒரே மன உறுதியுடன், ஒரே கருத்துடன் நினைக்கிறார்கள். அதன் காரணமாக அளவற்ற சக்தி அவர்களுக்கு ஏற்படுகிறது. முப்பது கோடி மக்களாகிய நீங்கள் தனித்தனியான மனக்கருத்துடன் பிரிந்து நிற்கிறீர்கள். ஆகையால், உயர்ந்த வருங்கால பாரதத்தை நிர்மாணிப்பதற்கு-மக்களை சங்கமாக இணைப்பது, வலிமை திரட்டுவது, மக்களின் மனோ சக்தியை ஒருமுகப் படுத்துவது—இவை தான் ரகசியங்களாகும்.

“திராவிடர்கள்” “ஆரியர்கள்” “பிராம்மணர்—பிராம்மணரல்லாதார்” என்றெல்லாம் அற்ப காரணங்களுக்காகப் பூசலிட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்வரை வருங்கால பாரதத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான பலத்தைத் திரட்டுவது, ஆற்றலை ஒன்று படுத்துவது—இவற்றுக்கும் உங்களுக்கும் வெகு தூரம்.

கவனியுங்கள்! பாரதத்தின் வருங்காலம் இவ்வொற்றுமை உணர்ச்சியையே முற்றிலும் சார்ந்ததாக இருக்கிறது; மக்களுடைய மனோ சக்திகளைத் திரட்டுவது, இணங்கி இணைந்து நடக்கவைப்பது · எல்லோரையும் ஒரு முகப்படுத்துவது, ஒருமுனைப் படுத்துவது·இதுவே வெற்றிக்கு ரகசியம்.

**சமயமாகிற பொது அடிப்படையின் மீது நிர்மாணிக்க வேண்டும்:**

மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் பாரதத்திலுள்ள பிரச்னைகள் அதிகச் சிக்கலாகவும், மிகப் பெரிய வடிவுடனும் உள்ளன. இனம் சமயம், மொழி, அரசாங்கம் இவையெல்லாம் சேர்ந்து ஒரு தேசம் உருவாகிறது.

நம் அனைவருக்கும் பொதுவாக இருப்பது நமது புனிதமான பரம்பரை; நமது புனிதமான சமயம். அது ஒன்று தான் நமக்குப் பொதுவான அடிப்படை. அதன் மீது தான் நாம் நிர்மாணித்தாக வேண்டும். ஐரோப்பாவில் அரசியல் கருத்துக்கள் தேசிய ஒற்றுமையை உண்டாக்குகின்றன.

ஆதலால், நமது நாட்டின் எதிர்கால வாழ்க்கைக்கு முதற் காரணமாக, முதற்படியாக, சமய ஒற்றுமை அமைவது இன்றியமையாத தேவையாகும். இந்த நாடு முழுவதிலும் ஒரு சமயத்தை ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்க வேண்டும். ஒரு சமயம் என்றால் எனது கருத்து என்ன? கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும், பௌத்தர்களும் சொல்லுகிற கருத்தின்படி நான் கூறவில்லை.

**ஜீவாதாரமான பொதுக் கொள்கைகளை வெளிக்கொணர்க :**

நமது சமயத்திலுள்ள உட்பிரிவுகளின் வழியும், முறை முடிவுகளும் எவ்வளவு வித்தியாசப்பட்டிருந்தாலும், தம்முடையதே உயர்ந்தது எனப் பலவிதமான உரிமை கோரினாலும், அதற்குச் சில பொதுவான அடிப்படைக் கருத்துக்கள் உள்ளன என்பது நமக்குத் தெரியும். இப்பொதுக் கொள்கைகளின் எல்லைக் கோட்டுக்குள்ளே ஒவ்வோர் உட்பிரிவும், எல்லையில்லாத அளவுக்குச் சுதந்திரமாகச் சிந்திக்கவும், தத்தமக்கு ஏற்ற வாழ்க்கை முறையைப் பின்பற்றியும் ஆச்சரியகரமான வித்தியாசங்களுடன் வாழவும், இந்தச் சமயம் இடம் தருகிறது.

இந்த ஜீவாதாரமான பொதுக் கொள்கைகளைத் தேர்ந்து பொறுக்கி எடுக்க வேண்டும். இந்த நாடு நெடுகிலும் உள்ள ஒவ்வொரு ஆண், பெண் குழந்தையும், இதை அறிந்து புரிந்து வாழ்கையில் நடத்திக்காட்ட வேண்டும். இதைத்தான் நாம் விரும்புகிறோம். இது முதற்படியாகும். ஆகவே இதனைச் செய்து முடிக்க வேண்டும்.

**சமயத்தின் ஒன்றுபடுத்தும் சக்தி:**

ஆசியாவில், குறிப்பாக, பாரத நாட்டில் மக்களிடையே இன வேறுபாட்டுச் சங்கடமிருக்கலாம்; மொழிக் கஷ்டமிருக்கலாம்; சமூகத் தொல்லைகள் இருக்கலாம்; தேசியத் தொந்தரவுகள் இருக்கலாம்; ஆனால் அவை அனைத்தும் சமயத்தின் ஒன்றுபடுத்தும் சக்திக்கு முன்னால் மறைந்து விடுகின்றன. சமய லட்சியங்களை விடப் பாரத மக்களுக்கு உயர்வானது வேறு எதுவுமில்லை. பாரதீய வாழ்க்கையின் ஆதார சுருதியாக சமயம் அமைந்துள்ளது. மக்களின் இயல்பை ஒட்டி, மிகக் குறைவான எதிர்ப்பு உள்ள வழிமுறை மூலம்தான் நாம் வேலை செய்ய முடியும்.

சமயமாகிற லட்சியந்தான், மிக உயர்ந்த லட்சியம் என்பது மட்டுமல்ல; பாரதத்தைப் பொறுத்தவரை வேலை செய்வதற்குச் சாத்தியமான ஒரே பாதை அதுதான். முதலில் இதனைப் பலப்படுத்தாமல் வேறு எந்த வழிமுறை மூலமாகவாவது வேலை செய்தால் அதன் முடிவு அபாயகரமானதாக இருக்கும். ஆகையால் வருங்கால பாரதத்தை நிர்மாணிப்பதற்கு முதற்படியாக பழங்காலமாகிற பாறையிலிருந்து வருங்காலத்தை நிர்மாணிக்க முதலில் குடைந்து எடுக்க வேண்டிய பாறை, சமய ஒற்றுமைதான்.

**சிதறிக் கிடக்கும் ஆத்மீக சக்தியை ஒன்று திரட்டல்:**

ஹிந்துக்களாகிய நாம்—துவைதிகள், விசிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள், சைவர்கள், வைஷ்ணவர்கள், பாசுபதர்கள், என்று எத்தகைய உட்பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், நமக்குப் பின்னணியாகச் சில பொதுவான கருத்துக்கள் உள்ளன. இந்தக் கருத்துக்களை ஹிந்துக்கள் அனைவருக்கும் கற்பிக்க வேண்டும். நமது நன்மைக்காகவும் நாம் நமது அற்பத்தனமான சண்டைகளையும் வேறுபாடுகளையும் கைவிட வேண்டிய காலம் வந்துள்ளது.

இச்சண்டை பூசல்கள் அனைத்தும் தவறானவை. நமது சாஸ்திரங்கள் இவற்றைக் கண்டிக்கின்றன. நம் முன்னோர்கள் இவற்றை வெறுத்துத் தடுத்திருக்கிறார்கள். பெயரும் புகழும் வாய்ந்த நம் மூதாதையர்களின் சந்ததியென நாம் உரிமை கொண்டாடுகிறோம். அவர்களது இரத்தம் நமது நரம்புகளில் ஓடுகிறது. தம் குழந்தைகள் இவ்வாறாக அற்ப வித்தியாசங்களுக்காகச் சண்டையிடுவதைக் கண்டு அந்த மகா புருஷர்கள் அருவருப்புக் கொள்வார்கள் என்பதை உணருங்கள்.

பாரதத்தில் தேசிய ஐக்கியம் என்றால் சிதறிக்கிடக்கும் அதன் ஆத்மீக இசைக்கு ஏற்ற லயத்துடன் எவருடைய இதயங்கள் தாளமிடுகின்றனவோ அத்தகைய இதயங்களை இணைப்பதே பாரத தேசத்தை இணைப்பது ஆகும்.

3 | ...

## மறுமலர்ச்சிப் பெரும்பணி – 2

## செயலுக்கான திட்டம்

“தானமே இந்தக் கலியுகத்தில் ஒரே நல்ல பணி; ஆத்மீக வாழ்வு அளிப்பது தானங்களிலெல்லாம் தலை சிறந்த தானமாகும்; அடுத்த தரத்திலுள்ள தானம் உலகியல் ஞானத்தை அளிப்பதாகும்; அதற்கு அடுத்த படியில் உள்ளது ஒரு மனிதனின் உயிரைக் காப்பது என்ற தானம்; கடைசியாக உள்ளது பசித்தவர்களுக்கு உணவு தரும் தானமாகும்” என்று வியாசர் கூறுகிறார்.

நாம் போதுமான அளவு உணவு அளித்து வந்துள்ளோம். நம்மைவிட அதிகமாக ஈகைக்குணம் வாய்ந்த தேசம் எதுவும் இல்லை. பிச்சைக்காரன் கூடத் தனது வீட்டில் சிறு துண்டு ரொட்டி இருக்கிற வரையில் அதில் பாதியை தானம் செய்து விடுவான். இத்தகைய அதிசயத்தை பாரத நாட்டில் மட்டுமே காண முடியும். உணவு தானம் செய்தது போதும். மற்றுமுள்ள இரண்டு தானங்களாகிய ஆத்மீக ஞானத்தையும், உலகியல் ஞானத்தையும் அளிக்க முற்படுவோம்.

நம்மிடம் வீரமிருந்து நமது உள்ள உறுதி குலையாததாக இருக்குமாயின், பரிபூரண உண்மை உள்ளத்துடன் நாம் இந்த வேலையாகிற சக்கரத்தில் நமது தோள்களைப் பதியவைத்துத் தள்ளுவோமாயின், இருபத்தைந்து ஆண்டுகளில் பிரச்னை தீர்ந்து விடும். போராடுவதற்கு எதுவும் எஞ்சியிராது. பாரத தேசம் முழுவதும் மீண்டும் ஒரு முறை ஆரிய பூமியாகிவிடும்.

**நான்கு கொடைகள்**

வியாசரை நான் போற்றி வணங்குகிறேன். மகாபாரதத்தை இயற்றியவரான வேத வியாசர் கூறுகிறார்: "இந்தக் கலியுகத்தில் அரிய சாதனை ஒன்று இருக்கிறது. மற்ற யுகங்களில் அநுஷ்டிக்கப் பட்டு வந்த தபோ முறைகளும் கடினமான யோக அநுஷ்டானங் களும் இக்காலத்தில் அநுஷ்டிக்கக் கூடியனவாக இல்லை. இக் காலத் தில் நாம் செய்யக்கூடிய உயர்ந்த சாதனை தானதர்மம்தான். தானங் களிலெல்லாம் தலையாயது ஆத்மீக ஞானம் புகட்டுதல்; அதற்கடுத்து உலகியல் அறிவு கற்பித்தல்; இதற்கு அடுத்து ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றுதல்; கடைசியாக உணவும் நீரும் அளித்தல்.

ஆத்மீக ஞானம் அளிப்பவன் ஓர் ஆத்மாவைப் பல பிறவிகளி லும் பிறந்து உழலாமல் காப்பாற்றுகிறான். உலகியல் அறிவு புகட்டு கிறவன் ஆத்மீக ஞானத்தை அடைவதற்காக மனிதர்களின் கண் களைத் திறந்து விடுகிறான். மற்ற தானங்களெல்லாம் -உயிரைக் காப் பாற்றுதல் கூட- இந்த இரு தானங்களை விட மிகத் தாழ்ந்த படிகளில் தான் உள்ளன. ஆதலால் ஆத்மீக அறிவு புகட்டுதலே அனைத்திலும் சிறந்த பணி; நாம் செய்யக்கூடிய மற்றவிதமான தொண்டுகளெல் லாம் தாழ்ந்தவை என்பதை நீங்கள் அறிந்துணர வேண்டுவது அவசியம்.

மனிதனுக்கு ஆத்மீக ஞானம் அளிக்கிறவன்தான் மனித குலத் துக்குப் பேருபகாரம் செய்தவனாவான். ஆத்மீக முறையே நமது வாழ்க்கையின் எல்லா நடவடிக்கைகளுக்கும் உண்மையான அஸ்தி வாரமாகும். ஆகவே தான் மனிதனுடைய ஆத்மீகத் தேவைகளில் உதவி செய்தவர்கள் மிகுந்த சக்தியும் செல்வாக்கும் பெற்று விளங் கினார்கள். ஆத்மீகத் துறையில் பலத்துடனும் அசைக்க முடியாமலும் விளங்குகின்ற மனிதன், தான் விரும்பினால், மற்றெல்லாத் துறைகளி லும்கூட வலிமையுடன் விளங்க முடியும். மனிதனுக்கு ஆத்மீக பலம் ஏற்படுகிறவரை அவனால் தனது வாழ்க்கையின் உலகியல் தேவை களைக்கூட நன்கு பூர்த்தி செய்து கொள்ள முடியாது.

# சமயத்தைப் பரப்புதல்
# அல்லது
# ஆத்ம ஞானத்தைப் பரப்புதல்

**முதலாவது தான தர்மம்**

இது தான தர்ம பூமி. இந்நாட்டில் ஆத்மீக ஞானத்தைப் பரப்புகிற முதல் தானப்பணியை ஊக்கமுடன் ஏற்றெடுப்போம். ஆத்ம ஞானத்தைப் பரப்பும் பணியை இந்நாட்டு எல்லேக்குள் மாத்திரம் கட்டுப்படுத்தி வைக்கக் கூடாது. அது உலகமெங்கும் பரவ வேண்டும். அதுதான் நமது மரபு, பழக்கம்.

பாரதத்தின் உயர்ந்த சிந்தனேகள் ஒரு காலத்திலும் பாரதத்தை விட்டு வெளிச் செல்லவில்லே என்றும், அந்நிய நாடுகளுக்கு உபதேசம் செய்வதற்காக முதன் முதலில் வெளியேறிச் சென்ற சந்நியாசி நான்தான் என்றும் யாராவது உங்களிடம் சொன்னல் அவர்கள் தமது இனத்தின் வரலாற்றை அறியாதவர்களேயாவர்; இந்த அற்புத நிகழ்ச்சி பல தடவை நிகழ்ந்துள்ளது. எவ்வெப்பொழுதெல்லாம் உலகம் இத்தகைய உதவியைக் கோரிற்ருே அவ்வப்பொழுதெல்லாம் இந்நாட்டினின்றும் என்றும் அழியாத வெள்ளமான ஆத்மீக சக்தி பொங்கி வழிந்து உலகமுழுவதையும் வெள்ளக் காடாக்கியிருக்கிறது.

**சமயம் வீடுதோறும் தடையின்றி வழங்கப்பட வேண்டும் :**

நெடுங்காலமாக நம் நாட்டில் சமயம் முன்னேற்றமில்லாத ஒரு தேக்க நிலேயில் இருந்து வந்துள்ளது. நாம் அதனே மிகுந்த சக்தித் துடிப்புள்ளதாக ஆக்க விரும்புகின்ருேம். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சமய உணர்ச்சி புகுந்து வேலே செய்யவேண்டுமென நான் விரும்புகிறேன். முற்காலத்தில் இருந்ததுபோல இக்காலத்திலும் அது மன்னர்களின் அரண்மனேயிலும், பாமர ஏழைகளான குடியானவர்களின் குடிசையிலும் நுழைந்து வேலே செய்ய வேண்டும்.

சமயமானது நமது மக்களினத்தின் பொதுச்சொத்து ஆகும். அவர்களது பொதுவான பிறப்புரிமையாகும். அதனே ஒவ்வொரு வீடுதோறும் எவ்விதத் தடையுமின்றிக் கொண்டு செல்லல் வேண்டும். கடவுள் அளித்துள்ள காற்றைப் போலச் சமயத்தையும் எல்லோருக்கும் எளிதில், தடையின்றிக் கிடைக்கச் செய்ய வேண்டும். பாரதத்தில் நாம் இத்தகைய பணியையே நடத்திவர வேண்டும்; நமது சமயத்துக்குள் சிறு உட்பிரிவுகளே உண்டாக்குவதன் மூலமோ,

வேறுபாடுகளைப் பற்றிச் சண்டையிடுவதன் மூலமோ அதனைச் செய்ய முடியாது. நம் அனைவருக்கும் பொதுவாக உள்ள கொள்கைகளையே நாம் பிரசாரம் செய்ய வேண்டும்.

**உண்மையைப் புகட்டினால் பொய்மை மறைந்தே தீரும்!**

பல நூற்றாண்டுகளாக இருள் அடைந்த ஒரு அறைக்குள் சென்று, "இருட்டாக இருக்கிறதே" என்று எவ்வளவுதான் கூக்குரலிட்டாலும் அவ்விருள் நீங்கிவிடுமா? ஒரு விளக்கைக் கொண்டு வாருங்கள் உடனே இருள் நீங்கும். மனிதர்களைச் சீர்திருத்தும் ரகசியம் இதுதான்.

முதலில் மனிதனிடம் நம்பிக்கை வையுங்கள். அவனிடம் குற்றங்குறைகள் இருக்குமானால், அவன் தவறுகள் செய்தால் அவன் காட்டுமிராண்டித் தனமான அல்லது மிக்க குரூரமான கொள்கைகளைத் தழுவி வாழ்ந்தால், அவனது உண்மையான சுபாவத்திலிருந்து அவை தோன்றவில்லை என்றும் உயர்ந்த லட்சியங்கள் அவனுக்கு உணர்த்தப் படாமையால்தான் இந்த இழிநிலை வந்தது என்றும் நம்புங்கள்.

அவனுக்குச் சத்தியத்தைப் புகட்டுங்கள்; அத்துடன் உங்கள் வேலை முடிந்தது. தன்னிடம் முன்னரே உள்ள கருத்துக்களுடன் அவன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க விட்டுவிடுங்கள். நான் சொல்வதைக் கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையாகவே அவனுக்குச் சத்தியத்தைப் புகட்டியிருப்பீர்களாயின் பொய் மறைந்தே தீரும்; சத்தியம் நல்லனவற்றை நிச்சயமாக வெளிக் கொணர்ந்து விடும்.

நாட்டை ஆத்மிகத் துறையில் சீர்திருத்த நீங்கள் விரும்பினால் இதுவே வழி. சண்டையிடுவதோ, நீங்கள் செய்வது தவறு என்று மக்களிடம் சொல்வதோ, பரிகாரமாகாது. நல்லனவற்றை அவர்கள் முன்பு வையுங்கள். எவ்வளவு ஆவலுடன் அவர்கள் அவற்றை ஏற்கிறார்கள் என்று பாருங்கள். மனித உள்ளத்தில் எப்பொழுதும் அழியாமல் வாழ்ந்து வரும் தெய்வீகச் சக்தி விழித்து எழுந்து தனது கைகளை நீட்டி, நல்லன அனைத்தையும், உயர்ந்தன அனைத்தையும் பெற்றுக் கொள்ள முன் வருவதைக் காண்பீர்கள்.

**புத்தகங்களில் மறைந்துள்ள ஆத்மிக மணிமொழிகள் அவற்றை வெளிப்படுத்த வேண்டும்:**

என்னுடைய முதல் எண்ணம் இதுதான். ஆத்மிக வாழ்க்கைக்குத் தேவையான ஞானத்தைக் கற்பிக்கும் மணிமொழிகள் பல நமது சமய நூல்களில் நிறைந்திருக்கின்றன. இப்பொழுது அவை

சாதாரண மக்களுக்கு எட்டாத இடங்களில் ஸ்ரீமடாலயங்களிலும் காடுகளிலும்—ஒரு சிலரது கைவசமே உள்ளன. இந்த ஞான மணிகள் வெளிக் கொணரப்பட வேண்டும். அவற்றிலுள்ள ஞானம் வெளிவர வேண்டும். மறைந்திருக்கிற இடத்திலிருந்து மட்டுமல்ல; நமக்கெட்டாத பெட்டியான ஒரு மொழியில் அந்த ஞானம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அந்த ஞானமணி பல நூற்றாண்டுகளாகச் சம்ஸ்கிருதச் சொற்களால் அலங்காரம் பண்ணப்பட்டு மூடி வைக்கப்பட்டிருக்கிறது. ஒரே சொல்லில் குறிப்பிட்டால் அந்த ஞான மணியை எல்லோருக்கும் கிடைக்கும்படி நாம் செய்ய வேண்டும்.

இதிலுள்ள பெரும் கஷ்டம் சம்ஸ்கிருத மொழிதான்—அது புகழ் பெற்ற நமது மொழி; முடியுமானால்—இந்தத் தேச மக்கள் அனைவரும் நல்ல சம்ஸ்கிருத வல்லுநர் ஆகிற வரை, இந்தக் கஷ்டம் தீராது.

**சம்ஸ்கிருதத்தைப் பொதுமக்களிடம் பரப்ப வேண்டும்:**

நான் எனது ஆயுளெல்லாம் இம்மொழியைப் பயின்றிருக்கிறேன். இருப்பினுங்கூட எனக்கே ஒவ்வொரு புதிய புத்தகமும் புதிதாக உள்ளது என்றால் அதிலுள்ள கஷ்டம் உங்களுக்குத் தெரியவரும். இந்நிலையில் சம்ஸ்கிருத மொழியை ஆழ்ந்து கற்க நேரமில்லாத மக்களுக்கு இன்னும் எவ்வளவு அதிகமான கஷ்டமிருக்கும்! ஆகையால் மக்களது தாய்மொழியில் இந்தக் கருத்துக்களைக் கற்பிக்க வேண்டும். அதே நேரத்தில் சம்ஸ்கிருதமும் அதனுடன் கற்பிக்கப் பட வேண்டும். ஏனெனில் சம்ஸ்கிருதச் சொற்களின் தொனியினாலேயே இந்த மக்கள் இனத்திற்கு ஒரு கௌரவ உணர்ச்சியும், ஆற்றலும், சக்தியும் கிடைக்கின்றன.

ஸ்ரீராமாநுஜர், சைதன்யர், கபிலர் ஆகியோர் நம் நாட்டின் கீழ் நிலையிலிருந்த மக்களை உயர்த்துவதற்காகச் செய்த முயற்சிக்கு, அந்த மகா புருஷர்களுடைய வாழ்நாளுக்குள்ளேயே வியக்கத் தக்க பலன் கிடைத்தது. எனினும் அந்த மகான்கள் மறைந்த பிறகு ஒரு நூற்றாண்டுக்குள்ளேயே அவர்களது உபதேசத்தின் சக்தி தீர்ந்து போனது ஏன்? தோல்வியின் காரணத்தைக் காட்டி நாம் விளக்கத் தான் வேண்டும்.

**சம்ஸ்கிருதம் முன்னேற்றத் தரத்தை ஸ்திரப்படுத்தும்:**

ரகசியம் இதுதான். தாழ்நிலை மக்களை அவர்கள் உயர்த்தினார்கள். மக்கள் முன்னுக்கு வரவேண்டும் என்றெல்லாம் ஆசைப்பட்டார்கள். ஆனால் பாமர மக்களிடையே சம்ஸ்கிருத மொழியைப் பரப்ப அவர்கள் தமது சக்தியைப் பயன்படுத்த வில்லை. பாமர மக்கள் சம்ஸ்கிருத மொழி பயிலாமல் மகாத்மாவான புத்தர் தடுத்தபோது அவருங்கூட ஒரு தவறு செய்து விட்டார்.

மக்களது மொழியில் அவர் பேசினர். மக்கள் அவரைப் புரிந்துக் கொண்டார்கள். அது பெரிய காரியந்தான். அவ்வாறு செய்ததால் அவரது கருத்துக்கள் எங்கு பார்த்தாலும் துரிதமாகப் பரவின. ஆனால் அத்துடன் கூட சம்ஸ்கிருதமும் பரவியிருக்க வேண்டும். புத்தர்பிரானின் உபதேங்களால் அறிவு பரவியிருந்தது. ஆனால், கண்ணியமும், பண்பும் உண்டாகவில்லை. ஏற்படக்கூடிய தாக்குதல்களையும், அதிர்ச்சிகளையும் தாங்கும் சக்தி பண்புக்குத்தான் உள்ளது. வெறும் அறிவுக்கு அந்த வலிமையில்லை.

பாமர மக்களுக்குத் தாய்மொழியில் கற்பியுங்கள். அவர்கள் பல கருத்துக்களைக் கற்றுக் கொள்வார்கள். பலவற்றைத் தெரிந்து கொள்வார்கள். ஆனால் அதைவிட உயர்ந்த ஒரு பொருள் அவர் களுக்குத் தேவை. அவர்களுக்குப் பண்பைப் புகட்டுங்கள். அதைச் செய்கிறவரையில் அவர்களை உயர்த்தி வைத்திருக்கும் அந்த நிலையில் ஸ்திரத் தன்மை இராது.

**அழிவற்ற நமது ஞானநிதி—நமது நம்பிக்கையின் குறிக்கோள்:**

உபநிடதங்களே நமது ஞான நூல்கள்.

ஒருவனுடைய தத்துவமோ, சமயப் பிரிவோ எதுவாக இருந்தாலும் பாரதத்திலுள்ள ஒவ்வொருவரும் தான் சொல்லுகிற கருத்துக்கு உப நிடதங்களில் பிரமாணத்தைத் தேடிக் காட்ட வேண்டும். அவன் அவ்வாறு காட்டாமற் போனால் அந்தச் சமயப்பிரிவு ஒப்புக் கொள்ளப் படாமற் போய் விடும். ஆதலால் தற்காலத்தில் நாடு முழுவதிலு முள்ள ஹிந்துவைக் குறிப்பதற்காக 'வேதாந்தி' அல்லது 'வைதிகன்' என்ற சொல் பொருத்தமென நினைக்கிறேன். இந்தக் கருத்துடன் தான் நான் வேதாந்த தத்துவம், 'வேதாந்தம்' என்ற சொல்லை எப்பொழுதும் உபயோகித்து வருகிறேன்.

பௌத்தர்கள், ஜைனர்கள் ஆகியோரின் தத்துவ சிந்தனையை விளக்கும் நூல்களில் கூட சுருதிகளின் (உபநிடதங்களின்) ஆதா ரத்தை அவர்கள் புறக்கணிக்கவில்லை. பௌத்தர்களிடையே சில சம்பிரதாயத்தை, உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களும், அத்துடன் பெரும்பாலான ஜைன நூல்களும் சுருதிகளின் பிரமாணத்தை முற்றி லும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. சில சுருதிகள் "ஹிம்ஸக சுருதிகள்" என்றும் அவற்றைப் பிராம்மணர்கள் இடைச் செருகலாக நுழைத் தார்கள் என்றும் கூறி அவற்றை மட்டும் அவர்கள் ஏற்பதில்லை.

**உபநிடதங்கள் சக்தியின் சுரங்கம் :**

சக்தி—சக்தியைத்தான்—உபநிடதங்களின் ஒவ்வொரு பக்கமும் எனக்குக் கூறுகிறது. நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு பெரிய விஷ

யம் இது. எனது வாழ்க்கையில் நான் கற்ற ஒரு பெரிய பாடம் இது. ''மனிதனே! சக்தியுடனிருப்பாயாக; பலவீனனாக இராதே!'' என்ற பாடத்தையே நான் கற்றிருக்கிறேன்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளாக எவை எவை நமது இனத்தைப் பலவீனப்படுத்துமோ அவற்றுக்கெல்லாம் நாம் இடங்கொடுத்து விட்டோம். அந்தக்கால கட்டத்தில், நமது தேசிய வாழ்க்கைக்கு ஒரே ஒரு நோக்கம்தான் இருந்தது போலும். அதாவது நம்மைப் பலவீனப் படுத்தித் தாழ்த்தித் தாழ்த்தி நாம் மண்புழுவாகவே ஆகும் வரை, தாழ்த்துவதுதான் நோக்கம் போலும்! யார்வேண்டுமானாலும் கேவலமாக நம்மை நினைத்து, ஊர்ந்து வரும் நம்மைக் காலால் மிதிக்கும் அளவுக்குப் பலவீனர்களாகி விட்டோம்.

ஆதலால் சகோதரர்களே! உங்களில் ஒருவன் என்ற நிலையில், உங்களுடன் சேர்ந்து வாழ்ந்து மடிகிற நான் கூறுகிறேன்; கேளுங்கள்! நாம் வேண்டுவது சக்தி, சக்தி, ஒவ்வொரு முறையும் சக்தியே வேண்டும். உபநிட தங்கள் சக்திக்குப் பெரும் சுரங்கமாகும். உலக முழுவதற்கும் வீரம் அளிக்கப் போதுமான அளவு சக்தி இதற்கு உண்டு. இதைக் கொண்டு உலகமனைத்தையும் புத்துயிர் பெறச் செய்ய, பலம் பெறச்செய்ய, சக்தித் துடிப்புப் பெறச் செய்ய முடியும்.

எல்லா இனத்தவரிடையேயும், எல்லா மதத்தினரிடையேயும், எல்லாச் சமயப் பிரிவினரிடையேயும் உள்ள பலவீனர்களான, துன்பத்தால் நலிந்த, ஒடுக்கப்பட்ட மக்களை இது போர் முரசு கொட்டி அழைத்து, உங்களையே நம்பி எழுந்து நின்று விடுதலை பெறுங்கள்'' என்று முழங்கும்—விடுதலை—உடலுக்கு விடுதலை, மனதுக்கு விடுதலை—ஆத்மாவுக்கு விடுதலை, இவையே உபநிடதங்களின் மூல மந்திரமாகும்.

**சந்நியாச வாழ்வையே உபநிடதங்கள் பேசின என்ற தப்புக் கருத்து:**

"ஓ! உபநிடதங்கள் சந்நியாசிகளுக்குத்தான்! அவை பரம ரகசியம்!'' என்கிறார்கள். உபநிடதங்கள் சந்நியாசியின் கையை அடைந்தன; அவரோ காட்டுக்குள் போய்விட்டார்! சங்கரர் கொஞ்சம் கருணை வைத்து, கிருகஸ்தர்களும் கூட அதனைப் படிக்கலாம், அதனால் அவர்களுக்கு நன்மைதான் ஏற்படும், கெடுதல் உண்டாகாது என்றார். அப்படிச் சொன்ன பிறகும் கூட உபநிடதங்கள் சந்நியாசியின் காட்டு வாழ்க்கையைப் பற்றிய விஷயங்களையே கூறுகின்றன என்ற கருத்து உள்ளது.

வேதத்தை உணர்த்திய ஸ்ரீ கிருஷ்ணனே வேதங்களுக்கு பாஷ்யத்தை, ஒரே ஆதார பூர்வமான பாஷ்யத்தை, கடைசி முடிவாகக் கீதையின் மூலம் இயற்றினர். அது எல்லா மக்களுக்கும், எல்லா வித

மான தொழில் செய்கிறவர்களுக்கும் பொருந்தும். வேதாந்தத்தின் உயரிய இந்தக் கருத்துக்கள் வெளியில் வர வேண்டும். அவை காடுகளிலும், குகைகளிலும் வசிக்கும் சாதுக்களிடம் மாத்திரமல்லாமல், எங்கும் பரவி, வழக்கறிஞரிடமும், நீதிபதியிடமும், பிரசங்க மேடையிலும், ஏழையின் குடிசையிலும், மீன் பிடிக்கும் மீனவரிடமும், படிக்கிற மாணவங்களிடமும் குடி கொண்டு அவர்களை இயக்க வேண்டும்.

செம்படவர்கள் போன்றவர்களெல்லாம் எப்படி உபநிடதங்கள் காட்டும் லட்சியங்களைத் தமது வாழ்வில் பின்பற்ற முடியுமென்று கேட்கலாம். இதற்கு வழிகாட்டப்பட்டிருக்கிறது. செம்படவன் தன்னை ஆத்மாவென நினைத்தால் அவன் மேலும் திறமையுள்ள மீனவன் ஆவான்; மாணவன் தன்னை ஆத்மாவென நினைத்தால் இன்னும் நல்ல மாணவன் ஆவான். வழக்கறிஞர் தம்மை ஆத்மாவென நினைத்தால் மேலும் சிறந்த வழக்கறிஞராவார்.

**ஆத்மா பரிபூரணமானது என்ற அற்புதமான தத்துவம்:**

நாம் சர்வசக்தி வாய்ந்த பரம்பொருளின் குழந்தைகள். நாம் ஆதியந்தமற்ற, தெய்விகஜோதியின் பொறிகள். நாம் எவ்வாறு சக்தியற்றவர்களாக இருக்க முடியும்? நாம் சர்வ சக்தி வாய்ந்தவர்கள். எதை வேண்டுமானாலும் செய்யச் சித்தமாக இருக்கிறோம். எல்லாவற்றையும் செய்ய முடியும். மனிதனால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.

ஆதலால் இந்த உயிரைக் காக்கிற, மகத்தான, கம்பீரமான, பிரமாதமான தத்துவத்தை உங்கள் குழந்தைகளுக்குப் பிறவி முதலே, கற்பியுங்கள். அத்வைத சித்தாந்தத்தைத் தான் அவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. துவைதத்தையோ அல்லது நீங்கள் விரும்பும் வேறு எந்தச் சித்தாந்தத்தை வேண்டுமானாலும் அவர்களுக்கு கற்பியுங்கள். ஆனால் நாடு முழுவதுக்கும் பொதுவான ஒரு தத்துவம் உள்ளது எனக் கண்டோம். அது தான் எல்லாப் பிரிவினராலும் பொதுவாக நம்பப்படுகிற ஆத்மாவைப் பற்றிய தத்துவம். அதுதான் – "ஆத்மா சுயமாகவே பரிபூரணமாக உள்ளது" என்பது.

நம் முன்னோர்களது உள்ளத்தில் இத்தகைய நம்பிக்கை இருந்தது. தன்னம்பிக்கை தான் உயர்ந்த நாகரிகத்தை எய்துகிற யாத்திரையிலே அவர்களை முன்னேறிச் செல்ல உந்தித் தள்ளும் சக்தியாக இருக்கிறது. நான் கூறுவதைக் கவனியுங்கள். இப்பொழுது நமது மக்களிடையே வீழ்ச்சி காணப்படுகிறது. குறை காணப்படுகிறது என்றால் அதற்குக் காரணம் இத் தன்னம்பிக்கையை இழந்ததே. நாம் இந்தத் தன்னம்பிக்கையை இழந்த நாள் முதலே நமது வீழ்ச்சியும் துவங்கியது உங்களுக்குத் தெரிய வரும். ஒருவன் தன்னம்பிக்கையை இழப்பது தெய்வ நம்பிக்கையை இழப்பதற்குச் சமானமாகும்.

**மனிதனுடைய நம்பிக்கையின் அபாரசக்தி :**

நான் மேல் நாடுகளில் கற்றது என்ன? கிறிஸ்தவப் பாதிரிகள் மனிதன் மீள முடியாத மகா பாவி என்றும், வீழ்ந்தவன் என்றும் திரும்பத் திரும்ப உபயோகமற்ற வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட மக்கள் மனத்தில் நான் கண்டதென்ன என்று உங்களுக்குத் தெரியுமா? ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள மக்களின் மனத்திலே, நாட்டின் உள்ளத்திலே, அளவற்ற தன்னம்பிக்கை குடி கொண்டிருப்பதுதான்.

"நான் ஓர் ஆங்கிலேயன். எதையும் என்னால் செய்து முடிக்க முடியும்" என்று ஓர் ஆங்கிலச் சிறுவன் கூறுவான். அமெரிக்கச் சிறுவனும் ஐரோப்பியனும் கூட அவ்வாறே கூறுவார்கள். இங்கே நமது சிறுவர்கள் அப்படிச் சொல்லுவார்களா? முடியாது. அவர்களுடைய தந்தையர் கூட அப்படிச் சொல்லமாட்டார்களே! நாம் அந்த அளவுக்குத் தன்னம்பிக்கையை இழந்து விட்டோம்.

தன்னம்பிக்கையாகிற லட்சியம் நமக்கு மிக அதிகமாகத் துணை புரியக் கூடிய லட்சியமாகும். இந்தத் தன்னம்பிக்கை முற்காலத்தில் இன்னும் பரவலாகக் கற்பிக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வந்திருக்குமாயின், நம்மைச் சூழ்ந்துள்ள தீமைகளிலும் துன்பங்களிலும் பெரும் பகுதி மறைந்து போயிருக்கும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். உலக மக்களின் வரலாற்றில் ஏதாவதொரு சக்தி, எல்லாப் பெரியோர்களான ஆண், பெண்களின் வாழ்க்கையிலும் உந்தித் தள்ளும் சக்தியாக அமைந்திருந்தது என்றால் அது அவர்களது தன்னம்பிக்கை தான். நாம் உயர்ந்தோராக ஆவதற்காகப் பிறந்திருக்கிறோம் என்ற விழிப்புணர்ச்சி காரணமாக அவர்கள் உயர்ந்தோராயினர்.

**சாதாரண குமாஸ்தா ஒரு பேரரசின் ஸ்தாபகனாகின்றான் :**

ஒரு மனிதன் எவ்வளவு மட்டமான இழிநிலைக்கு வேண்டுமானாலும் தாழட்டும். அவனது வாழ்விலும் ஒரு காலம் வந்தே தீரும். அப்பொழுது அவன் வெறும் அலுப்புச் சலிப்பின் காரணமாக மனம் வெறுத்து, மேல் நோக்கி எழுவான். தன்னம்பிக்கை கொள்ளக் கற்றுக்கொள்வான். ஆனால் ஆரம்ப நிலையிலே அதனை அறிந்துணர்வது மிக நல்லதாகும். நமக்குத் தன்னம்பிக்கை ஏற்படுவதற்காக எல்லா விதமான கசப்பான அநுபவங்களையும் எதற்காக நாம் அநுபவிக்க வேண்டும்? மனிதர்களிடையே இருக்கும் வித்தியாசமெல்லாம் இந்தத் தன்னம்பிக்கை இருப்பதையும், இல்லாமையையும் பொறுத்துத்தான் இருக்கிறது.

பாரதத்துக்கு ஓர் ஆங்கிலேயன் வந்தான். அவன் ஒரு வெறும் குமாஸ்தாவாகத்தான் இருந்தான். வறுமையின் காரணமாகவோ

அல்லது வேறெது காரணமாகவோ அவன் இரண்டு தடவை மூளையில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயன்றான். அதில் அவன் குறி தவறிப்போனதும், ஏதோ அரிய செயல்களைச் செய்வதற்காகவே தான் பிறந்திருப்பதாக நம்பித் தன்னம்பிக்கை கொண்டான். அந்த மனிதன் தான் பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்தை இங்கே நிறுவிய லார்டு கிளைவ்.

**நடைமுறை வாழ்வில் அத்வைதம் :**

ஆகையால் தன்னம்பிக்கை கொள்ளுங்கள். உலகியல் செல்வம் வேண்டுமென்றால் அத்வைதத்தின் மூலம் வேலை செய்யுங்கள். அது உங்களை வந்து அடையும். நீங்கள் அறிவிற் சிறந்த மேதாவியாக ஆக விரும்பினால் அத்வைதத்தை அறிவுத் துறையில் உபயோகி யுங்கள். அறிவிற் சிறந்த மேதையாவீர்கள். முக்தியடைய விரும்பி னால், ஆத்மீகத்துறையில் அதனைப் பிரயோகம் செய்யுங்கள். நீங்கள் விடுதலைப் பெற்று முடிவற்ற பேரின்ப நிலையாகிற நிர்வாண நிலையை எய்துவீர்கள்.

இதுவரை அத்வைதம் ஆத்மிகத்துறையில் மட்டும் பின் பற்றப் பட்டு வந்தது. வேறெங்குமில்லை. இது ஒரு குறையாகும். இப் பொழுது அன்றாட உலகியல் வாழ்க்கையிலும் நடைமுறையில் பின் பற்றத் தக்கதாக நீங்கள் அதனை ஆக்க வேண்டும். அதற்கான காலம் இப்பொழுது வந்துள்ளது. இதுவரை இருந்ததுபோல் குகைகளிலும் காடுகளிலும் இமயத்திலும் வாழும் சந்நியாசிகளிடமும் அது இரகசியமாக இராது. நடைமுறை வாழ்க்கை நிலைக்கு இறங்கி வந்து அதில் புகுந்து வேலை செய்யும். அரசர்களின் அரண்மனை யிலும், துறவியின் குகையிலும், ஏழையின் குடிசையிலும், தெருவி லுள்ள பிச்சைக்காரர்களிடமும், எல்லா விடங்களிலும், எந்த இடத் தில் வேண்டுமானாலும் அந்தக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

## கல்வியைப் பரப்புவது
## அல்லது
## உலகியல் ஞானத்தைப் பரப்புவது

**மேல் நாடுகளிடையே உள்ள முன்னேற்றத்துக்கும் ஒற்றுமைக்கும் ரகசியம் பரவலான கல்விதான்.**

மேற்றிசை நாடுகளுக்கும் கீழ்த்திசை நாடுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் முழுவதும் இதில்தான் உள்ளது. அவர்கள் ஒன்றுபட்ட மக்களினமாக உள்ளார்கள். நாம் அப்படி இல்லை. மேல் நாடுகளில் நாகரிகமும், கல்வியும் பொதுவாகப் பரவி, பாமர மக்களிடையேயும் குடி புகுந்துள்ளன. பாரதத்திலும் அமெரிக்கா

விலும் உள்ள உயர்தர வகுப்பினர் ஒரே மாதிரித்தான் உள்ளனர். ஆனல் இரு நாடுகளிலுமுள்ள தாழ்ந்த வகுப்பு மக்களிடையே உள்ள இடைவெளித் தூரத்தைக் கணக்கிட முடியாது. ஆங்கிலேயர்கள் பாரதத்தை எளிதாக வென்றதன் காரணம் என்ன? அவர்கள் ஒன்றுபட்ட மக்களினம்; நாம் அப்படியில்லை.

நம்மிடையேயிருந்த ஒரு மகா புருஷர் காலமானல் மற்ருெருவர் கிடைப்பதற்காக நாம் பல நூற்றண்டுகள் வரை காத்திருக்க வேண்டும். மேல் நாடுகளில் சாகிற அதே வேகத்தில் உற்பத்தியும் செய்கிருர்கள். இங்கே உயர்ந்த மனிதர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஏன் அப்படி? பெரிய மனிதர்களைத் தேடிப் பொறுக்கிச் சேர்த்துக் கொள்ளுவதற்கு வசதியாக அவர்களிடையே ஏராளமான பேர்கள் உள்ளனர். நம்மிடம் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர். முப்பதுகோடி மக்களைக் கொண்ட ஒரு தேசம் தேர்ந்தெடுப்பதற்குக் குறுகிய அளவு வசதியுடனிருக்கிறது. மூன்று கோடி, நான்கு கோடி, நூறு கோடிப் பேர்களைக் கொண்ட சமுதாயங்களை விட நம் நாட்டில் வசதிக் குறைவு. ஏனெனில் பிற நாடுகளில் கல்வி கற்ற ஆண், பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. என்னைத் தவருகப் புரிந்து கொள்ளாதீர்கள்; நமது நாட்டிலுள்ள பெருங்குறை இது. இதனை நீக்கியாக வேண்டும். பாமர மக்களுக்குக் கல்வி புகட்டி உயர்த்துங்கள்; இதன் மூலமாகத் தான் ஒன்றுபட்ட மக்களினத்தை உண்டாக்க முடியும்.

“மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ”—தாயே (உனக்குக்) கடவுளாக இருக்கட்டும் தந்தையே (உனக்குக்) கடவுளாக இருக்கட்டும்” என்று படித்திருக்கிறீர்கள். ஆனல் “தரித்ர தேவோ பவ; மூர்க்க தேவோ பவ”; ஏழைகள், படியாதவர்கள், அறியாமையிலுள்ளவர்கள், துயருற்றவர்கள், இவர்கள் உங்களது தெய்வமாக இருக்கட்டும்” என்று நான் கூறுகிறேன். இவர்களுக்குத் தொண்டு செய்வதே அனைத்திலும் உயர்ந்த சமயமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**உயிரற்ற இன்றைய கல்வி முறை :**

நீங்கள் இப்பொழுது பெற்று வரும் கல்வி முறையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனல் அதில் கெடுதல்களே மிகுதியாக உள்ளன. அந்தக் கெடுதல்கள் நல்ல அம்சங்கள் யாவற்றையும் மறைக்கும்படி அவ்வளவு அதிகமாக உள்ளன. முதலாவது அது நம் மக்களுக்கு ஆண்மையளிக்கக் கூடியதாக இல்லை. அது முற்றிலும் எதிர்மறைத் தன்மையானதாக உள்ளது. எதிர் மறை உணர்ச்சியை உண்டு பண்ணும் கல்வி அல்லது பற்ச மரணத்தைவிடக் கொடியதாகும். ஒரு குழந்தை பள்ளிக்குச் சென்றதும் அதன் தகப்

பனுர் ஒரு முட்டாள் என்று முதற் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இரண்டாவது அதன் பாட்டனுர் பைத்தியக்காரர் என்றும், மூன்ருவதாக அதன் ஆசிரியர்கள் வெளிவேஷக்காரர்கள் என்றும், நான்காவதாக நம் சாஸ்திரங்கள் அனைத்தும் பொய் என்றும் கற்பிக்கப்படுகிறது. அந்தக் குழந்தை பதினுறு வயதை அடையும்பொழுது எதிர்மறை உணர்ச்சியின் வடிவமாக, உயிரற்ற, எலும்பற்ற வஸ்துவாக ஆகிவிடுகிறது.

நம் நாட்டில் மிக உயர்ந்த மனிதர்கள் தோன்றியிருக்கிருர்கள் என்ற விவரம் நமக்கு உணர்த்தப்படுவதே இல்லை. ஆக்கக் கருத்து எதுவும் நமக்குக் கற்பிக்கப் படுவதில்லை. நமது கைகளையும் கால்களையும் எப்படிப் பயன்படுத்துவது என்பது கூட நமக்குத் தெரியாது. ஆங்கிலேயர்களின் மூதாதையர்களைப் பற்றிய எல்லாப் புள்ளி விவரங்களையும் நாம் தெளிவாக அறிகிருேம். ஆனுல் நமது சொந்த மூதாதையர்களைப் பற்றி அக்கறைப்படாத பரிதாப நிலை உள்ளது. நாம் பலவீனத்தைத்தான் கற்றுக் கொண்டிருக்கிருேம். நாம் தோற்கடிக்கப்பட்ட மக்களினமாதலால் "நாம் பலவீனர்கள். நமக்கு எதிலும் சுதந்திரமில்லை" என்று நாமே நம்பும் நிலைக்கு இழிந்து விட்டோம். இந்நிலையில் "சிரத்தை"யை இழக்காமல் எப்படி இருக்க முடியும்?

கல்வி யென்பது ஒருவனுடைய மூளையில் விஷயங்களைத் திணிப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் விஷயங்கள் ஜீரணமாகாமல் வாழ்நாள் முழுவதும் குழப்பமுண்டாக்கிக் கொண்டிருக்கும். வாழ்க்கையை உருவாக்குகிற, ஆண்மையுண்டாக்குகிற, ஒழுக்கமூட்டுகிற கல்வி வேண்டும். கருத்துக்கள் ஜீரணமாக வேண்டும். நீங்கள் ஐந்தே கருத்துக்களை நன்ருக ஜீரணித்துக் கிரகித்து அவற்றை உங்களது வாழ்க்கையிலும் ஒழுக்கத்திலும் நிறைந்ததாகச் செய்வீர்களாயின், ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவனை விடப் பெரிய கல்விமான் ஆவீர்கள்.

ஆகையால் நமது லட்சியம் நம் தேசத்துக் கல்வி, ஞானமனைத்தையும் பெறுவதாக இருக்க வேண்டும். நமது தார்மிக, லௌகிக, ஞானம் அனைத்தும் அடங்கிய அந்தக் கல்வி ஞானத்தை சாத்தியமான வரையில் நமது தேசீய வழிகளில், தேசீய அடிப்படைகளில் நாம் கைக்கொள்ள வேண்டும்.

**ஏழைகளுக்கு கல்வி புகட்டுகிற கடினமான வேலை:**

ஏழைகளுக்குக் கல்வி புகட்டுவதில் உள்ள பெரிய கஷ்டம் இதுதான்.

ஒவ்வொரு கிராமத்திலும் இலவசப் பள்ளிகளைத் திறக்கிருேம் என்றே வைத்துக் கொண்டாலும் கூட, அப்பொழுதும் ஏழைப்

பிள்ளைகள் தமது வாழ்க்கைச் செலவுக்காகச் சம்பாதிப்பதற்கு நிலத்தில் உழுவதற்குப் போவார்களே தவிர, உங்கள் பள்ளிக்கு வரமாட்டார்கள். நம்மிடம் பணமில்லை; கல்வி கற்க அவர்களை வரச் செய்யவும் நம்மால் முடியாது. இந்தப் பிரச்னை ஏமாற்றமளிக்கக் கூடியதாகக் காணப்படுகிறது. எனினும் நான் ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன். இதுதான் அந்த வழி.

## பிரச்னைக்கு ஒரே வழி

**சந்நியாசிகள் ஒவ்வொரு வீட்டுக்கும் கல்வியைக் கொண்டு செல்ல வேண்டும் :**

"மலை முகமதுவிடம் வராவிட்டால், முகமது மலையிடம் போக வேண்டும்" என்று ஒரு பழமொழி உண்டு. ஏழை மக்கள் கல்விச் சாலைக்கு வர முடியாவிட்டால் கல்வி ஏழைகளிடம் செல்லவேண்டும். அவர்கள் உழுகிற இடம், தொழிற்சாலை முதலிய எல்லா இடங்களுக்கும் கல்வியைக் கொண்டு செல்ல வேண்டும்.

நமது நாட்டில் ஒரே சிந்தையும் தன்னலத் தியாகமும் கொண்ட சந்நியாசிகள் ஆயிரக்கணக்கில், கிராமம் கிராமமாகச் சென்று சமய ஞானத்தைப் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலரை உலகாயத விஷயங்களைக் கூடக் கற்பிப்பதற்கு ஆசிரியராக ஏற்பாடு செய்தால் அவர்கள் ஒவ்வொரு ஊராக, ஒவ்வொரு வீடாகச் சென்று சமய போதனையை மட்டுமின்றிக் கல்வியறிவையும் அளித்துக் கொண்டே செல்வார்கள்.

அவர்கள் கிராமந்தோறும் சென்று ஒவ்வொரு வீட்டுக்கும் சமயத்தை மட்டுமின்றிக் கல்வியையும் கொண்டு செல்லட்டும்.

உதாரணமாக கிராம மக்கள் நாள் முழுவதும் வேலை செய்த பிறகு ஊருக்குத் திரும்புகிறார்கள். ஏதாவதொரு மரத்தடியிலோ அல்லது வேறோர் இடத்திலோ உட்கார்ந்து கொண்டு, புகைபிடித்துக் கொண்டு, அரட்டையடித்துக் கொண்டு காலம்கழித்துக் கொண்டிருப் பார்கள். அந்தச் சமயத்தில் பழுத்த சந்நியாசிகள் இருவர் அங்கேயே போய் அவர்களை மடக்கிப் போட்டுக் கொண்டு காமிரா மூலம் வானசாஸ்திர சம்பந்தமான படங்களையோ அல்லது வேறு படங்களையோ, பல்வேறு நாடுகளின் காட்சிகளையோ, வரலாறு களையோ காட்டுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இவ்வாறாக பூமிகோளங்கள், பூகோளப் படங்கள் முதலியவற்றின் துணை கொண்டு வாய்மொழியாகவே விஷயங்களைக் கற்பிக்க முடியும்.

அறிவு நுழைவதற்குக் கண்கள் மட்டுந்தான் வாயில் என்பதல்ல. காதுகள் (கேள்வி) மூலமாகவும் எல்லாம் செய்ய முடியும்.

அதன் மூலம் மக்களுக்குக் கருத்துக்களும், நீதிநெறி யுணர்வும் கிடைக்கும். மேலும் நல்ல விஷயங்களைக் கற்க விழைவார்கள். அத்துடன் நமது வேலை முடிவடைகிறது.

மக்களுக்குக் கருத்துக்களை வழங்க வேண்டும். அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தில் என்ன நடக்கிறது என்றுபார்க்குமாறு அவர்களது கண்களைத் திறக்க வேண்டும். பின்னர் அவர்களுக்குரிய நல்வழியை அவர்களே வகுத்துக் கொள்வார்கள்.

ரசாயனப் பொருள்களை ஒன்றுகக் கலந்து வைப்பது நம் கடமை. அவை படிகக் கட்டிகளாக மாறுவது இறைவனின் சட்டப்படி நடக்கும். அவர்களது உள்ளங்களில் நல்ல கருத்துக்களை விதைப்போம். மற்றவற்றைத் தாமே செய்து கொள்வார்கள். பாமரனுக்குக் கல்வியளிப்பது என்பது இது தான்.

**மகத்தான சமய ரீதியான உற்சாகத்தின் மூலம் வேலை செய்வார்கள்:**

இந்தப் பெரும் பணியை ஏற்றெடுத்து, இந்தத் தியாகத்தைச் செய்யச் சந்நியாசிகளை எது தூண்டும்? சமய உணர்ச்சியினுல் எழும் உற்சாகம்தான். ஒவ்வொரு புதிய சமய உணர்ச்சி அலைக்கும் ஒரு புதிய கேந்திரம் தேவைப்படுகிறது. அந்தக் கேந்திரத்தின் மூலந்தான் பழைய சமயத்தில் புத்துணர்ச்சி ஊட்ட முடியும். உங்களுடைய கோட்பாடுகளையும், தத்துவங்களையும் தூக்கியெறியுங்கள். அவற்றுல் பயன் உண்டாகாது. ஒழுக்கநெறி, ஒருவரது உதாரண வாழ்க்கை, ஒரு கேந்திரம் இவை இருக்க வேண்டும். தெய்வீக புருஷன் ஒருவன் வழிகாட்டிச் செல்ல வேண்டும். அந்த மையப் புள்ளியைச் சுற்றி மற்றெல்லாச் சக்திகளும் சூழ்ந்து நின்று சமுதாயத்தின் மீது அலை போலப் புரண்டு வந்து எல்லா அழுக்குகளையும் அடித்துக் கொண்டு போய்விடும்.

ஒரு மரத்துண்டை சுலபமாக அறுக்க வேண்டுமானுல் அதில் இழையோடுகிற போக்கில்தான் அறுக்கவேண்டும். அதுபோல பழைய ஹிந்து சமயத்தின் மூலமாகத்தான் நாட்டைச் சீர்திருத்த முடியுமேயன்றி இந்த நவ நாகரிகச் சீர்திருத்த இயக்கங்கள் மூலம் முடியாது.

அதே நேரத்தில் இந்தச் சீர்திருத்தவாதிகள் மேற்கத்தியக் கலாசாரம், கிழக்கத்தியக் கலாசாரம் ஆகிய இரண்டையும் தம்மோடு இணைக்கும் ஆற்றல் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

நாட்டின் ஆத்மீகக் கல்வியும், லௌகிகக் கல்வியும் நமது பிடிப்புக்குள் இருக்க வேண்டும். அதைப்பற்றியே கனவுகண்டு, அதைப் பற்றியே பேசி வந்து, அதைப் பற்றியே சிந்தித்து, அதை நிறைவேற்ற வேண்டும். அது வரையில் நமது மக்கள் சமுதாயத்துக்கு விடிவு காலமில்லை. இதனைச் செய்து முடிக்க ஓர் இயக்கம் தேவைப்படுகிறது.

எல்லா இடங்களிலும் நடவடிக்கைகளுக்கான கேந்திரங்களைத் துவங்க வேண்டும்:

இது மிகப்பெரியதிட்டம். எப்பொழுதாவது இதுநிறைவேறுமோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் நாம் வேலையைத் துவக்க வேண்டும். எப்படி? உதாரணமாகச் சென்னைமாகாணத்தை எடுத்துக் கொள்வோம். முதலில் ஒரு கோவில் அமைக்க வேண்டும். ஏனெனில் ஹிந்துக்களிடம் சமயத்திலிருந்து தான் எல்லாமே ஆரம்பமாக வேண்டும். அது காரணமாக நம் மதப்பிரிவுகளுக்குள் சண்டை உண்டாகலாமென நீங்கள் சொல்லலாம். ஆனால் ''ஓம்'' என்ற சின்னத்தை மாத்திரம் வைத்தால் அது தனிச் சார்பு அற்ற கோவிலாகிவிடும். ஏனெனில் "ஓம்" என்பது எந்த ஒரு பிரிவுக்கும் உட்படாத மிக உயர்ந்த சின்னமாகும்.

"ஓம்'' என்பது சின்னமாக இருக்கக்கூடாது என்று இங்கே உள்ள எந்தப் பிரிவினராவது நம்புவார்களாயின் அவர்கள் தம்மை ஹிந்து என அழைத்துக் கொள்ளும் தகுதியிழந்து விடுவார்கள். ஹிந்து மதத்தை ஒவ்வொருவருமே தத்தம் உட்பிரிவின் கருத்துக்களுக்குத் தக விளக்குகின்ற உரிமை பெற்றுள்ளார்கள். ஆனால் நமக்குப்பொதுவான ஓர் ஆலயம் நிச்சயமாகத் தேவை. மறற இடங்களில் நீங்கள் விரும்புகிற, உங்களுக்குச் சொந்தமான விக்கிரங்களும், சின்னங்களும் இருக்கட்டும். ஆனால் இங்கே உங்களுடன் கருத்து வேறுபாடு கொண்டவர்களுடன் பூசலிட வேண்டாம்.

இங்கே எல்லாப் பிரிவினருக்கும் பொதுவாக உள்ள கருத்துக்கள் கற்பிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் பல்வேறு பிரிவினரும் இங்கு வரவும், தத்தம் தத்துவங்களைப் போதிப்பதற்கு முழு உரிமையும் இருக்க வேண்டும். அதில் ஒரே ஒரு நிபந்தனைதான். பிற பிரிவினருடன் சண்டை மட்டும் போட்டுக் கொள்ளக்கூடாது. நீங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்லுங்கள்; உலகம் கேட்க விரும்புகிறது. ஆனால் மற்றவர்களைப் பற்றி நீங்கள் நினைப்பதைக் கேட்பதற்கு உலகத்துக்கு நேரம் கிடையாது. அதை நீங்கள் உங்களிடமே வைத்துக் கொள்ளலாம்.

பிரசாரகர்களையும், ஆசிரியர்களையும் பயிற்றுவித்தல்:

இரண்டாவதாக, இக்கோவிலுடன் தொடர்புடையதாக ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டும். ஆங்காங்கே சென்று நமது மக்களுக்குச் சமயப் பிரசாரம் புரிவதுடன் லௌகிகக் கல்வியையும் அளிக்க கூடிய ஆசிரியர்களை அங்கே பயிற்றுவிக்க வேண்டும். நாம் ஏற்கனவே சமயத்தை வீட்டுக்கு வீடு கொண்டு சென்று வருகிறோம். அதனுடன் கூட உலகியல் கல்வியையும் சேர்த்துக் கொண்டு செல்ல வேண்டும்.

அதனை எளிதில் செய்ய முடியும். பின்னர் பிரசாரகர் ஆசிரியர் குழுவின் மூலமாக இவ்வேலை விஸ்தரிக்கும். படிப்படியாக மற்ற இடங்களிலும் அதே போன்ற கோவில்களை நிர்மாணித்து, பாரதம் முழுவதையும் அரவணைக்கும் வரை விஸ்தரிப்போம். இதுவே என் திட்டம்.

இது பிரம்மாண்டமானதாகத் தோன்றலாம். ஆனல் இது மிகவும் அத்தியாவசியமானதாகும். இதற்கு வேண்டிய பணம் எங்கிருந்து வருமெனக் கேட்கலாம். பணம் தேவையில்லை. பணத்தில் ஒன்றுமேயில்லை. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என்று தெரியாமல் இருந்து வந்திருக்கிறேன். ஆனல் எனக்கு வேண்டிய பணமும் மற்ற பொருள்களும் வந்தே தீரவேண்டும். ஏனெனில் அவை எனது அடிமைகள்; நான் அவற்றுக்கு அடிமையல்ல. ஆகவே பணமும் மற்றவையும் வந்தே ஆகவேண்டும். 'வந்தேயாக வேண்டும்' என்பதே — சரியான சொல் ஆகும்.

**மனிதர்கள் — மனப்பூர்வமான மனிதர்கள் — தேவை :**

இப்பணியை ஆற்றக் கூடிய மனிதர்கள் எங்கே? அது தான் கேள்வி.

மனிதர்கள்; மனிதர்கள் தான் வேண்டும். மற்ற எல்லாம் தயாராகிவிடும். வலிமை மிக்க, ஆண்மையுள்ள, நம்பிக்கை வாய்ந்த, குருத்தெலும்பு வரை மனப்பூர்வமாகப் பணி புரியத்தக்க இளைஞர்கள் வேண்டும்.

இளம் சந்ததியாரிடம் எனக்கு நம்பிக்கை உள்ளது. இத்தப் புதிய சந்ததியிலிருந்து எனது ஊழியர்கள் தோன்றுவார்கள். சிங்கங்களைப் போல அவர்கள் இந்தப் பிரச்னை முழுவதையும் தீர்த்து வைப்பார்கள். நான் எனது கருத்துக்களுக்கு ஒரு வடிவம் கொடுத்தேன் அதற்காக எனது வாழ்க்கையைக் கொடுத்தேன். நான் வெற்றி பெறவில்லையென்ருல் என்னை விடச் சிறந்தவர் ஒருவர் எனக்குப் பிறகு வந்து அதனைச் செய்து முடிப்பார். அதற்காகப் போராடுவதிலேயே நான் திருப்தியடைவேன்.

உங்கள் ஆத்மாவில் அளவற்ற சக்தி இருக்கிறதென்றும் இந்நாடு முழுவதையும் தட்டி யெழுப்ப உங்களால் முடியும் என்றும் உங்களில் ஒவ்வொருவரும் திடமான நம்பிக்கை கொள்ளுங்கள்; தன்னம்பிக்கை கொள்ளுங்கள். உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் செல்வோம். நமது கருத்துக்கள் அந்தந்த நாடுகளை உருவாக்கும் பல சக்திகளுடன் சேர்ந்து அவற்றில் ஓர் அம்சமாகக் கலந்து விடும். பாரதத்திலும்

வெளி நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு மக்களினத்தின் வாழ்க்கையி னுள்ளும் நாம் நுழைய வேண்டும். இந்நிலை ஏற்பட நாம் உழைத் தாக வேண்டும். அதற்காகவே இளைஞர்கள் தேவை என்கிறேன். "இளைஞன் பலமுள்ளவன். நல்ல ஆரோக்கிய முள்ளவன், கூரிய அறிவுள்ளவன்— இத்தகையவனே இறைவனை அடைவான்'' என்று வேதங்கள் கூறுகின்றன.

உங்களுக்கு இளமையின் சக்தித்துடிப்பு இருக்கும் பொழுதுதான் உங்களது வருங்காலத்தைப் பற்றி நிர்ணயிக்க வேண்டும். நீங்கள் தளர்ந்து வாடித் தேய்ந்துபோன பிறகு அல்ல; இளமையின் சுறுசுறுப்பும், புதுமைத் தளதளப்பும் இருக்கும் பொழுதுதான் தீர்மானிக்க வேண்டும். பணி புரியுங்கள்; இதுவே தக்க தருணம். ஏனெனில் அன்றலர்ந்த, கைபடாத, முகராத, மலர்களை மட்டுமே இறைவன் திருவடியில் அர்ச்சிக்க வேண்டும்; சமர்ப்பிக்க வேண்டும். அவற்றையே இறைவன் ஏற்கிறார்.

ஆகவே நாம் ஓர் உயர்ந்த லட்சியத்தை மேற்கொள்வோம்; நமது முழு வாழ்வையும் அதற்கென அர்ப்பணம் செய்வோம். இதுவே நமது முடிவான தீர்மானமாக இருக்கட்டும். "என்னுடைய மக்களை உய்விப்பதற்காக மீண்டும் தோன்றுவேன்'' என்று கூறி யுள்ள ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நம்மை ஆசீர்வதிப்பாராக! நமது லட்சியங்கள் ஈடேறுவதற்காக அவர் நம்மை வழி நடத்திச் செல்வாராக!

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வாரன்னிபோதத

(கட உபநிடதம் 1, 3, 4.)

(எழுமின்! விழிமின்! குறிசாரும் வரை நில்லாது செல்லுமின்!)

## இரண்டாம் பாகம்

# பிரசங்கங்கள்,
# உரைகள்,
# கட்டுரைகள்

ஆகியவற்றிலிருந்து
தேர்ந்தெடுத்த
சில பகுதிகள்

# ஹிந்து சமயத்தின் வரம்புகள் *

பிரபுத்த பாரதத்தின் நிருபர் எழுதுகிறார்:

பிற மதத்தினரை ஹிந்து மதத்தில் சேர்க்கும் பிரச்னையைப் பற்றி ஸ்வாமி விவேகானந்தரைப் பேட்டி காண, பத்திரிகை ஆசிரியர் எனக்குக் கட்டளையிட்டார். ஒரு நாள் மாலை ஒரு படகு வீட்டின் மேல் தளத்தில் எனக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது.

இரவு சூழ்ந்து விட்டது. இராமகிருஷ்ண மடத்தின் கரை ஓரத்தில் படகை நிறுத்தினோம். என்னுடன் பேசுவதற்காக சுவாமிஜி கீழே இறங்கி வந்தார். இன்பமான நேரம்—மகிழ்வூட்டும் இடம்; தலைக்கு மேல் வானத்தில் நட்சத்திரங்கள்; எங்களைச் சூழ்ந்து புரண்டோடும் கங்கை. மங்கிய ஒளியில் கட்டிடம் ஒன்று காட்சி தருகிறது. அதன் பின்னணியில் பனைமரங்களும், ஓங்கி வளர்ந்த நிழலடர்ந்த மரங்களுமாக இருந்தன.

“நம்முடைய ஹிந்து மதத்திலிருந்து வெளியேறினவர்களை மீண்டும் நாம் சேர்த்துக் கொள்ளலாமா என்பது பற்றிப் பேசுவதற்காக உங்களைக் காண வந்திருக்கிறேன்” என்று நான் பேச்சை ஆரம்பித்தேன். “அவர்களை ஏற்க வேண்டும் என்பதுதான் உங்கள் கருத்தா?” என்று கேட்டேன்.

“ஆமாம்; அவர்களைச் சேர்த்தே தீர வேண்டும்; சேர்த்துக் கொள்ள முடியும்” என்று கூறி, சுவாமிஜி ஒருகணம் தீவிரமான சிந்தனையில் மூழ்கினார். பின்பு பேச்சைத் தொடர்ந்தார்: “இப்படிச் செய்யாமற் போனால் நாம் ஜனத்தொகையில் குறைந்து கொண்டே போய் விடுவோம். முகம்மதியர்கள் முதன் முதலாக நம் நாட்டுக்கு வந்தபோது நாம் அறுபது கோடி ஹிந்துக்கள் இருந்தோம் என்று கூறப்படுகிறது. முகம்மதிய சரித்திர ஆசிரியர்களுள் மிகப் பழையவரான ஃபெரிஷ்டா என்பவர் கூறும் ஆதாரத்தைக் கொண்டு இவ்வாறு சொல்கிறார்கள். இப்பொழுது நாம் இருபது கோடிப் பேர்கள்தான். இதுமட்டுமின்றி ஹிந்து சமயத்தை விட்டு ஒருவன் வெளிச் செல்வானானால் நமது எண்ணிக்கையில் ஒன்று குறைந்து விட்டது என்பது மட்டுமல்ல; எதிரியில் ஒருவன் அதிகமாகிவிட்டான் என்று ஆகுமே. முகம்மதிய சமயத்தையோ கிறிஸ்தவ சமயத்தையோ தழுவும் ஹிந்துக்களில் பெரும்பாலோர், வாளுக்குப்

---

* ‘பிரபுத்த பாரதம்’ 1899 ஏப்ரல் இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

பயந்தே மாறியிருக்கவேண்டும். அல்லது அப்படிப்பட்டவர்கள் பரம்பரையில் பிறந்திருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை எந்த விதமான இன்னலுக்கும் ஆளாக்குவது நேர்மையல்ல என்பது கண்கூடு. பிறவியிலேயே அந்நியர்களாக உள்ளவர்களை என்ன செய்யலாம் என்று நீங்கள் கேட்கலாம். கூட்டம் கூட்டமாகப் பண்டைக் காலத்தில் திரும்ப மாற்றப்பட்டிருக்கிறார்களே! அந்த வேலை இன்னமும் நடந்தே வருகிறது.

“எனது சொந்தக் கருத்துப்படி, வனவாசிகளான பரம்பரையினரின் கூட்டங்களையும், சுற்றியுள்ள நாட்டு மக்களையும், முகம்மதியர் வெற்றி பெறுவதற்கு முன்னர் நம்மை வெல்ல வந்த மக்களில் அநேகமாக எல்லோரையும் மதம் மாற்றியிருக்கிறோம். அது மட்டுமின்றி விசேஷமாகப் புராணங்களில் காணப்படுகிற எல்லா ஜாதிகளும் மதம் மாற்றப்பட்டவர்கள்தாம் என்பது எனது சொந்தக் கருத்து. அவர்கள் அந்நியர்களாக இருந்தவர்கள். பின்பு ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் என்றே கருதுகிறேன்.

தாமாக மனம் ஒப்பிப் பிறமதம் மாறிவிட்டு இப்பொழுது தாயகமான தமது தாய்க் கோவிலுக்குத் திரும்பி வர விரும்புகிறவர்களுக்குப் பிராயசித்தச் சடங்குகள் பொருத்தந்தான். ஆனால் காஷ்மீர் நேபாளம் போன்ற இடங்களில் எதிரிகளின் படையெடுப்பால் அந்நியராக்கப் பட்டவர்களுக்கும் அல்லது நம்முடைய மதத்தைத் தழுவ விழைகிற வெளியாருக்கும் யாதொரு பிராயச்சித்தமும் விதிக்கக் கூடாது.”

“சுவாமிஜி! இவர்கள் எந்த ஜாதியினரைச் சார்ந்தவர்களாவார்கள்?” என்று நான் துணிந்து கேட்டேன். “ஏதாவதொரு ஜாதி இருக்க வேண்டும். இல்லாமற் போனால் பரந்த இந்த ஹிந்து மத உடலோடு அவர்கள் ஒரு போதும் ஒன்றி இணைய முடியாதல்லவா? அவர்களுக்குரிய தக்க இடத்தை நாம் எங்கே தேடலாம்?”

சுவாமிஜி அமைதியாகக் கூறினார்: “நம் மதத்தில் மீண்டும் சேருகிறவர்கள் தங்கள் சொந்த ஜாதியையே பெறுவார்கள். புதியவர்கள் தங்களுக்குரிய ஜாதிகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். வைஷ்ணவத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். வேறு வேறு ஜாதிகளிலிருந்து வந்தவர்களும் மதம்மாற்றப்பட்ட அன்னியர்களும், அதன் கொடிக் கீழ் இணைந்து ஒரு தனி ஜாதியாக, கௌரவம் வாய்ந்த ஒரு ஜாதியாக, வைணவம் உள்ளது. ராமாநுஜர் முதல், வங்கத்தில் சைதன்யர் வரையில் திகழ்ந்த பெரிய வைஷ்ணவ ஆசாரியர்கள் இம்முறையையே கடைப் பிடித்திருக்கிறார்கள்.”

“புதிதாக வந்த இவர்கள் எங்கே திருமணம் செய்து கொள்வார்கள்?”

“இப்பொழுது செய்து கொள்வது போலத் தமக்குள்ளேயே செய்து கொள்வார்கள்” என்று அமைதியாகப் பதிலளித்தார் சுவாமிஜி

“அவர்கள் எந்தப் பெயரை வைத்துக் கொள்வார்கள்? அந்நியர்களும், பிற மதத்தைத் தழுவிப் பிறகு திரும்பி வருகிறவர்களும் புதிதாகப் பெயர் வைத்துக் கொள்ள வேண்டுமே. அவர்களுக்கு ஜாதிப் பெயர்களைத் தருவீர்களா அல்லது வேறு ஏதாவது செய்வீர்களா?”

“உண்மைதான். பெயரில் பெரும் பொருள் இருக்கத்தான் இருக்கிறது” என்ற சிந்தனையில் ஆழ்ந்த, சுவாமிஜி இந்தக் கேள்விக்குப் பதிலாக ஒன்றும் கூறவில்லை.

ஆனால் நான் கேட்ட அடுத்த கேள்வி அவரை வேகப் படுத்தியது. “சுவாமிஜி! பல வடிவங்கள் வாய்ந்த ஹிந்து மதக் கொள்கைகளிலிருந்து தமக்கு வேண்டிய ஓர் அமைப்பைத் தேர்ந்தெடுக்கும்படிப் புதிதாக வந்த இவர்களை விட்டு விடுவீர்களா அல்லது அவர்களுக்காக ஒரு சமய வடிவத்தை அமைத்துத் தருவீர்களா?”

“என்ன கேள்வி கேட்டீர்கள்! அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களே தேர்ந்தெடுத்துப் பின்பற்ற விட்டால் ஹிந்து மதத்தின் உட்சக்தியே குலைந்து போய் விடும். நம் சமயத்தின் சாரமே இஷ்டதெய்வத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிற இந்தச் சுதந்திரத்தில் தான் அடங்கியுள்ளது.”

அவர் கூறியதில் இது மிகுந்த கருத்தாழம் வாய்ந்தது என்று நான் நினைத்தேன். என் முன் நின்ற அந்த மகான் உயிரோடிருக்கிற மற்றவர்களைக் காட்டிலும், பல ஆண்டுகள் ஆன்மிகத் துறையில் பாடுபட்டிருப்பவர். ஹிந்து சமயத்தின் பொதுவான அடிப்படைத் தத்துவங்களைப் பார்த்தால், அவரவர் இஷ்டத்துக்குச் சுதந்திரமளிக்கிற இந்தத் தத்துவம் உலகம் முழுவதையும் தழுவி நிற்கக் கூடிய அளவுக்குப் பெரிதாகத் திகழும் என்று எனக்குத் தோன்றுகிறது.

பேச்சு பல பொருள்களைப் பற்றி அமைந்திருந்தது. அதற்குப் பிறகு இன் முகத்துடன் எனக்கு நல்வாழ்த்துக் கூறி விடை பெற்றுக் கொண்டு பெரும் சமயக் குரவரான சுவாமிஜி விளக்கைக் கையிலேந்திய வண்ணம் மடாலயத்துக்குள் திரும்பிச் சென்றார். பாதையல்லாத பாதைகளையுடைய கங்கையாற்றிலே பல வடிவங்களையுடைய சிறிய பெரிய படகுகளுக்கிடையே வழி செய்து கொண்டு எனது கல்கத்தா வீட்டுக்குத் திரும்பினேன்.

* * * *

## உன் மதத்தைக் காக்க எழுந்து நில்

“ஆருயிர் நண்பனே! சின்ஹா! யாராவது உன்னுடைய தாயை அவமதித்தால் நீ என்ன செய்வாய்!”

“அவன் மீது தாவிப் பாய்ந்து நல்ல படிப்பினைப் புகட்டுவேன், சுவாமி!”

“நன்றாகப் பதில் சொன்னாய். அது போலவே நமது நாட்டின் உண்மையான தாயாகிய உனது சொந்தமதத்தைப் பற்றி அவ்வளவு மதிப்பு உனக்கு இருக்குமாயின், எந்த ஒரு ஹிந்து சகோதரனும் கிறிஸ்தவனாக மதம் மாற்றப்படுவதை நீ ஒருக்காலும் சகிக்க மாட்டாய். இருப்பினும் கூட தினந்தோறும் இது நடப்பதை நீ பார்க்கிறாய். பார்த்ததும் பாராமுகமாக இருக்கிறாய். எங்கே உனது நம்பிக்கை? எங்கே உனது தேசபக்தி? கிறிஸ்தவப்பாதிரிகள் உங்கள் கண்ணெதிரிலேயே ஹிந்து மதத்தைத் தூற்றுகிறார்கள். அப்படியிருப்பினும் உங்களில் எத்தனை பேர்களுக்கு அந்த அநீதி சகியாமல் இரத்தம் கொதிக்கிறது? எத்தனை பேர் அதனைப் பாதுகாப்பதற்காக வரிந்து கட்டி நிற்கப் போகிறீர்கள்?”

*  *  *  *

## பாரதப் பெண்டிர் பண்டைய, நிகழ்கால, எதிர்கால வாழ்க்கை *

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், இமயமலையின் எழில் மிக்க ஒரு பள்ளத்தாக்கில்தான், எனது பத்திரிகை ஆசிரியரின் உத்தரவைக் கடைசியாக என்னால் நிறைவேற்ற முடிந்தது நமது நாட்டுப் பெண்களின் நிலையைப் பற்றியும், எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் சுவாமிஜி கொண்டிருந்த கருத்துக்களை அறிவதற்காக அவரை அணுகினேன்.

நான் எனது நோக்கத்தைக் குறிப்பிட்டதும் “நாம் சிறிது நேரம் உலாவி வரலாம்” என்றார் சுவாமிஜி. உடனே நாங்கள் உலகத்தில் கண்ணைக் கவரக்கூடிய காட்சிகள் நிறைந்த ஒரு பகுதியினூடே புறப்பட்டோம்.

ஒளி நிறைந்து, ஆனால் நிழல்மூடி உள்ள பகுதிகள் வழியே சென்றோம். அமைதியான கிராமங்கள், துள்ளி விளையாடும் குழந்தைகள், பொன்னிறங் கொண்ட வயல்கள் இவற்றைக் கடந்து சென்றோம். ஓர் இடத்தில் நெட்டையான மரங்கள் நீலவானைத் துளைக்கப் பார்த்தன. வேறொரு இடத்தில் குடியானவப் பெண்களின் ஒரு கோஷ்டி அரிவாள்களை ஏந்திக் குனிந்து அறுவடை

* பிரபுத்த பாரதம்—டிசம்பர் 1898.

செய்து கொண்டிருந்தார்கள். மயில்தோகை போன்ற சோளத் தட்டைகளை அறுத்துப் பனிக் காலத்துக்காகச் சேமித்து வைக்க எடுத்துப் போனார்கள். அதையும் தாண்டினோம். எங்கள் சாலை ஆப்பிள் தோட்டத்தின் வழியே சென்றது, அங்கே மரங்களடியில் செக்கச்செவேலென்று சிவந்த ஆப்பிள் பழக் குவியல்கள், ரகவாரி யாகப் பிரிக்கப்படுவதற்காகக் குவிக்கப்பட்டிருந்தன. அதைக் கடந்து மீண்டும் திறந்த வெளியில் வந்தோம். வான வெளியில் வெண்மேகப் படலத்தின் மீது மிக்க அழகுடன் ஓங்கி நின்ற பனிப் படலங்களை நோக்கினோம்.

கடைசியில் என்னுடன் வந்தவர் மௌனத்தைக் கலைத்தார். ''பெண்மை பற்றிய லட்சியத்தில், ஆரியர் சைமேந்திரியர் (ஹீப்ரு, ஆர்மினியர், அரேபியர் முதலிய இனத்தவர்கள்) ஆகிய இரு சாராரிடையே எப்பொழுதும் நேர் எதிரிடையான கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. பெண்கள் இருப்பது பக்தி நெறிக்குப் பகையானது என்று சைமேந்திரிய இனத்தார் கருதுகிறார்கள். சமயத் தொடர்புள்ள எந்த ஒரு சடங்குச் செயலையும் பெண் செய்யக் கூடாது. உணவுக்காக ஒரு பறவையைக் கூடப் பெண் கொல்லக் கூடாது. ஆனால் ஆரியர் கருத்துப்படி மனைவியில்லாமல் ஒருவன் ஒரு மதச் சடங்கையும் செய்ய முடியாது.

சற்றும் எதிர்பாரத விதத்தில் சுவாமிஜி கூறிய சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டு, ''ஆயின் சுவாமிஜி, ஹிந்து மதம் ஆரியர்களின் தத்துவமல்லவா?'' என்று கேட்டேன்

சுவாமிஜி அமைதியாகப் பதிலளித்தார். ''நவீன கால ஹிந்து சமயம் பெரும்பாலும் பௌராணிக சமயமே; அதாவது புத்த சமயத் துக்குப் பின் தோன்றியதே. ஔபாசனம், வேத காரியம் இவற்றைச் செய்யும்பொழுது ஒருவனது மனைவி அவனது பக்கத்தில் கட்டாய மாக இருக்கவேண்டும். ஆனால் அவள் சாளக்கிராமங்களையோ, குலதெய்வ விக்ரகங்களையோ தொடலாகாது ஏனெனில் சாளக்கிராம வழிபாடு நடைமுறையில் வந்தது பௌராணிக காலத்தின் பிற்பகுதி யிலேதான் என்று தயானந்த சரஸ்வதி சுட்டிக் காட்டியுள்ளார்.''

''ஆனால் நம் நாட்டு ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமமின்மை காணப்படுவதற்கு முக்கியக் காரணம் புத்த சமயமே என்று நீங்கள் கருதுகிறீர்களா?'' என்று நான் ஒரு கேள்வி கேட்டேன்.

''உயர்வு தாழ்வு நிலவும் இடத்தில் உண்மையில் அதுவே காரணமாகும். ஆனால் திடீரென்று ஐரோப்பியர்கள் நம்மைக் குறை கூறுவது அதிகமாகி விட்டது. அதன் விளைவாக நம்மை அவர் களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள ஆரம்பித்து விட்டோம்.

இதனுலெல்லாம் நம் பெண்மணிகள் தாழ்ந்தவர்கள் என்ற ஆதார மற்ற கருத்தை நாம் எளிதில் ஒப்புக் கொள்ளக் கூடாது. பல நூற்ருண்டுகளாகச் சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாகப் பெண்ணினத்தைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டு விட்டது. நமது பழக்க வழக்கங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மையான பாடம் இதுதானே தவிர, பெண்கள் தாழ்ந்தவர்கள் என்று கருதக்கூடாது.''

''அப்படியானல் நம்மிடையே பெண்கள் இன்றுள்ள நிலை பற்றி நீங்கள் முற்றிலும் திருப்தியடைந்திருக்கிறீர்களா?''

''ஒரு போதும் திருப்தியடையவில்லை. அவர்களுக்கு நாம் கல்வி கற்பிக்கலாம். அந்த அளவுக்குத்தான் அவர்களது வாழ்வில் தலையிட நமக்கு உரிமை உண்டு. பெண்கள் தமது பிரச்னையைத் தாமே தமக்கே உரிய முறையில் தீர்த்துக் கொள்ளத்தக்க நிலையில் வைக்கப்படவேண்டும். இப்பணியை அவர்களுக்காக வேறு எவரும் செய்யமுடியாது; அல்லது செய்யக் கூடாது. உலகிலுள்ள எந்த நாட்டுப் பெண்டிருக்கும் ஈடு இணையாக நமது பாரதப் பெண்டிர் அதனைச் செய்து கொள்ள முடியும்!''

''புத்த மதத்தால் தீமை விளைந்தது என்கிறீர்களே, அதன் காரணம் என்ன?''

''புத்த மதம் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது முதல்தான் தீமை விளைந்தது'' என்ருர் சுவாமிஜி. ''ஒவ்வோர் இயக்கமும் தனக்கே உரிய ஒரு சிறப்புத் தன்மையினுல் வெற்றியடைகிறது. அது வீழ்ச்சி அடையும் போதோ பெருமைக்குரிய அதே சிறப்புத் தன்மை அதனுடைய பலவீனத்துக்கும் முக்கியமான காரணமாக ஆகிவிடுகிறது. புத்த பகவான்-மாந்தருள் மாணிக்கம். அசாதாரணமான ஒற்றுமை நிர்மாணச் சக்தி வாய்ந்தவர். இதன் மூலம் அவர் உலகமே தம்மைப் பின்பற்றும்படி செய்தார். ஆனல் அவரது சமயம் மடாலயத் துறவு வாழ்க்கை நிலையை அடிப்படையாகக் கொண்ட சமயமாகும். ஆகையால் இந்தச் சமயத்தில் பிக்ஷுவின் ஆடையைக் கூட மதித்துப் போற்றும் ஒரு தீய விளைவு ஏற்பட்டு விட்டது. மடலாயங்களில் துறவியர் கூட்டங் கூட்டமாகக் கலந்து வாழும் முறையை முதன் முதலில் புத்தரே ஏற்படுத்தினர். ஆனல் அந்த மடங்களில் ஆண்களை விடப் பெண்களுக்குத் தாழ்ந்த நிலை தராமலிருக்க அவரால் முடியவில்லை. மடத்துத் தலைவிகள் எவ்வளவு உயர்ந்தவரானுலும் சில ஆண் தலைவர்களது அநுமதியின்றி எந்த ஒரு முக்கியமான காரியத்தையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்த ஏற்பாடு தாற்காலிகமாக புத்த சமயத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்தியது என்ருலும் அதன் நீண்ட கால விளைவுகள் குறை கூறிக் கண்டிக்கத்தக்கதாகி விட்டன!''

"ஆனால் வேதங்களின் சந்நியாசம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக் கிறதே!"

"ஒப்புக் கொள்ளப்பட்டுத்தான் இருக்கிறது. ஆனால் ஆண் களுக்கும் பெண்களுக்கும் இடையே வேற்றுமை கற்பிக்கப்பட வில்லை. ஜனக மகாராஜாவின் சபையில் யாக்ஞ வல்கியர் எவ்வாறு கேள்வி கேட்கப்பட்டார் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவரைக் கேள்வி கேட்டவரில் முதன்மையானவள் வாசக்னவி என்பவள். வாதாடுவதில் வல்லவள். பிரம்மவாதினி என்பது அக்காலத்தில் பிரபலமாக இருந்த பெயர்—'நிபுணனான வில்லாளியின் கையிலிருக் கிற பளபளப்பான இரு அம்புகளைப் போல எனது கேள்விகள் உள் ளன என்று அவள் கூறுகிறாள். அவளது பெண் பிறவியைப் பற்றிய பேச்சே எழவில்லை. பழைய காலத்தில் காட்டிலிருந்த குருகுலங்களில் சிறுவர் சிறுமியரிடையே நிலவிய சமத்துவத்தைப் போலப் பூரண மானது வேறு ஏதாவது உண்டா? சம்ஸ்கிருத நாடகங்களைப் படியுங் கள். அதன் பிறகு டென்னிஸன் எழுதிய 'இளவரசி' என்ற நூல் நமக்கு என்ன கற்பிக்க முடியும் எனப் பாருங்கள்" என்றார் சுவாமிஜி.

சுவாமிஜி! நமது பண்டைப் பெருமைகளைப் புலப்படுத்த நீங்கள் பின்பற்றும் வழி ஆச்சரியகரமானது" என்றேன்.

"ஒருக்கால் உலகின் இரண்டு பகுதிகளையும் நான் கண்டதனால் அப்படி இருக்கலாம்" என்று மெதுவாகக் கூறினார் சுவாமிஜி. "சீதையைத் தோற்றுவித்த இனம்—சீதையைக் கனவில் மட்டும் கண்ட தாக வைத்துக்கொள்வோம்-உலகிலேயே ஈடிணையில்லாத முறையில் பெண்ணினத்தினிடம் பக்தி செலுத்துகின்றது. மேலைநாட்டுப் பெண்களுக்குச் சட்டரீதியான பலவிதமான கட்டுத் திட்டச் சுமைகள் உள்ளன. அப்படிப்பட்ட சட்டங்கள் நமக்கு முற்றிலும் தெரியாதவை யாகும். உண்மையில் நம்மிடம் குற்றங்களும் குணங்களும் இருப்பது போல அவர்களிடமும் இருக்கின்றன. உலகிலுள்ள மக்களெல்லோரும் அன்பு, மென்மை, நேர்மை ஆகிய குணங்களை வெளிப்படுத்துவதற் காகப் பொதுவாக முயலுகிறார்கள் என்பதை ஒரு போதும் நாம் மறக்கக்கூடாது. இப்படி வெளிப் படுத்துவதற்குச் சுலபமான கருவி யாக தேசியப் பழக்க வழக்கங்கள் அமைகின்றன. குடும்ப வாழ்க்கை யில் நற்பண்புகளை நிலை நாட்டுகிற விஷயத்தில் பிறருடையமுறை களைவிடப் பாரதீய முறைகள் பலவிதங்களில் மேம்பட்டவையாகும்."

"சுவாமிஜி! அப்படியானால் நமது பெண்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லையா?"

"ஏன், எத்தனையோ உள்ளனவே! தீவிரமான பிரச்னைகள் உள்ளன. ஆனால் கல்வி என்ற மந்திரச் சொல்லால் தீர்க்க முடியாத பிரச்னையே இல்லை. உண்மையான கல்வியின் வடிவத்தை நமது மக்கள் இன்னும் கற்பனைசெய்து அமைக்கவில்லை."

"அதற்கு நீங்கள் கூறும் இலக்கணம் என்ன?"

"நான் எதற்கும் இலக்கணம் வகுப்பதில்லை." என்றார் சுவாமிஜி புன்முறுவலுடன். "இருப்பினும் அதனை ஒருவாறு வர்ணிக்கலாம். கல்வியென்பது ஆற்றலை வளர்ப்பதாகும்; வெறும் சொற்களைக் குவித்து வைத்துக் கொள்வதல்ல. கல்வியென்றால் மனிதர்களைச் சரியான விதத்திலும், திறமையாகவும், சிந்திக்க முடிவு கட்டப் பழக்குவதாகும். எனவே பாரதத்தின் நலனுக்காக நாம் அச்சமற்ற உயர்ந்த வீராங்கனைகளை தோற்றுவிப்போம். சங்கமித்திரை, லீலா, அகல்யா, மீராபாய் முதலியோர் விட்டுச் சென்ற உயர் பரம்பரையைப் பின்பற்றி வரக்கூடிய பெண்மணிகளை உண்டாக்குவோம். தூய்மை யுள்ளவர்களாக, தன்னலம் கருதாத் தியாகிகளாக, இறைவன் திருவடியை வணங்குவதால் வரும் சக்தியைப் பெற்றவர்களாக விளங்கும் வீரர்களைப் பெற்றெடுக்கும் தாய்மார்களாக அவர்களை நாம் உருவாக்குவோம்."

"சுவாமி! அப்படியாயின் கல்வியில் சமயத்தின் அம்சமும் கலந்திருக்க வேண்டும் என்பது உங்கள் கருத்தா?"

சுவாமிஜி கம்பீரமாய் பதிலளித்தார். "சமயந்தான் கல்வியினுடைய ஜீவசத்து என்று நான் கருதுகிறேன் சமயத்தைப் பற்றி நான் கொண்டிருக்கும் கருத்துக்களையோ அல்லது வேறொருவர் கருத்துக்களையோ கற்பிக்கச் சொல்லவில்லை. சமயத்தை ஆரம்பப் பாடமாக அமைத்துக் கொண்டு, மாணவியின் சொந்த இயல்பை ஒட்டிய ரீதியிலே, இயல்புக்கு விரோத மின்றி, அவளை ஆசிரியர் வளர்த்துச் செல்ல வேண்டும்.

"சமய அடிப்படையில் பிரம்மசரியம் மிக உயர்ந்ததாகும். தாயாகவோ, மனைவியாகவோ ஆகாமல் தட்டிக் கழிக்கிற பிரம்மசாரிணிகளுக்கு உயர்ந்த இடம் தருவதால் பெண்ணினத்துக்கு அது நேரடியான தீங்கு விளைவிக்காதா?

"பெண்களுக்குப் பிரம்மசரியம் உயர்ந்தது என்று சமயம் கூறுகிற அதே வேளையில் ஆண்களுக்கும் அதையே விதிக்கிறது. இதை நினைவிற்கொள்ள வேண்டும். மேலும் உங்கள் கேள்வியே உங்கள் மனத்திலுள்ள குழப்பத்தைக் காட்டுகிறது. ஹிந்து சமயம் மனித ஆத்மாவுக்கு ஒரு கடமையை, ஒன்றே ஒன்றை விதிக்கிறது. அது நிலையா உலகத்தில் நிலையானதைத் தேடி அடைவதே ஆகும். இதனை அடைவதற்குக் குறிப்பாக ஒரே ஒரு வழியைக் காட்டுவதற்கு எவரும் துணிவதில்லை. திருமணம் அல்லது திருமணமின்மை, நல்லது அல்லது தீயது, படிப்பு அல்லது அறியாமை—இவற்றில் எவ்வழிச் சென்றாலும் சரி—அது லட்சிய நிலைக்கு மனிதனை அழைத்துப் போகவேண்டும். இதுவே நியாயமானது. இந்தக் கொள்கையில்

தான் ஹிந்து சமயத்துக்கும் புத்த சமயத்துக்குமிடையே பெருத்த வேறுபாடு உள்ளது. வெளித் தோற்றங்களில் உள்ள நிலைமையைக் காட்டுவதே புத்த சமயத்தின் சிறப்பான கொள்கையாகும். பொதுப் படையாகச் சொன்னால் புத்த மதத்தின் கருத்துப்படி ஒரே ஒரு வழி மூலமாகத்தான் அதனை அடைய முடியும். மகாபாரதத்தில் வருகிற இளம் யோகியின் கதை உங்களுடைய நினைவுக்கு வருகிறதா? அவனுக்குத் தனது மனோசக்தியைப் பற்றிக் கர்வமிருந்தது. அவன் கோபங்கொண்டு தனது தீவிரமான மனோவலிமையால் ஒரு காகத்தையும் நாரையையும் எரித்துப் போட்டான். அந்த இளம் துறவி ஊருக்குள் சென்றபோது, நோய்வாய்ப்பட்ட தன் கணவனுக்குப் பணிவிடை செய்யும் ஒரு பத்தினியையும், பின்னர் தருமவியாதன் என்ற கசாப்புக் கடைக்காரனையும் கண்டு, அந்த இரண்டு பேரும் சாமானிய வழிகளான கற்புடைமை மூலமும் கடமையைச் செய்வதன் மூலமும் ஆத்ம ஞானம் பெற்றார்கள் என்பதை உணர்ந்தான். இது உங்கள் நினைவுக்கு வருகிறதா?''

" அப்படியாயின் சுவாமிஜி! நீங்கள் இந்நாட்டுப் பெண்களுக்கு வழங்கும் அறிவுரை யாது?''

" இந்த நாட்டுப் பெண்களுக்கு மட்டும் என்று ஏன் கூறுகிறீர்கள்? நான் ஆண்களுக்கு எதைக் கூறுவேனோ அதையே பெண்களுக்கும் கூறுவேன். பாரத நாட்டின் மீது நம்பிக்கை வையுங்கள். பாரதநாட்டின் கோட்பாடுகளின் மீது நம்பிக்கை வையுங்கள். வலிமை பெற்றிருங்கள், நம்பிக்கை கொள்ளுங்கள்; வெட்கப்படாதிருங்கள்; பிறரிடமிருந்து வாங்கிக் கொள்வதற்கு ஒரு சிறிது உண்டென்றாலும், பிறருக்குக் கொடுப்பதற்கு ஹிந்து மக்களிடம் உலகில் எந்த மக்களினத்தைக் காட்டிலும் அளவிட முடியாத விஷயங்கள் உள்ளன என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.''

* * *

## பாரதப் பெண்ணினமும் ஐரோப்பியப் பெண்ணினமும் *

"உங்களது அறிவுக்கூர்மை எங்கள் நாட்டுப் பெண்டிருக்கும் ஏற்பட வேண்டுமென்று நான் மிகவும் விரும்புகிறேன். ஆனால் தூய்மையை விலையாகக் கொடுத்து அதனைப் பெறுவதாயின் வேண்டாம்'' என்று சுவாமி விவேகானந்தர் நியூயார்க்கில் ஒரு சொற்பொழிவிற் குறிப்பிட்டார். 'உங்களுக்குத் தெரிகிற பல விஷயங்களைக் கண்டு அதற்காக உங்களைப் போற்றுகிறேன். ஆனால் தீயனவற்றை ரோஜா மலரால் மூடி மறைத்து அதை நல்லது என்று

* நியூயார்க்கில் ஆற்றிய ஒரு சொற்பொழிவின் பகுதி.

அழைக்கின்ற முறையை நான் வெறுக்கிறேன். ஒருவருக்குள்ள அறிவுத் திறமைதான் மிக உயர்ந்த நல்ல குணம் என்பது தவறு; ஒழுக்க நேர்மையும், ஆத்மிக சக்தியும்தான் நாங்கள் அடைய விரும்பு கிற குணங்கள். எங்கள் நாட்டுப் பெண்கள் அவ்வளவு பெரிய அறிவாளிகளல்ல, ஆனால் அதிகமான தூய்மை அவர்களுக்கு உண்டு. எல்லாப் பெண்களும் தமது கணவரைத் தவிர, மற்றெல்லாரையும் புதல்வர்களைப்போல் கருதுவார்கள்.

"எல்லா ஆண்களும், தமது மனைவியைத் தவிர, மற்றப் பெண் களைத் தாயைப்போலக் கருதுதல் வேண்டும். என்னைச் சுற்றி நடக்கிற சம்பவங்களைக் கவனித்து ஆண்மைத்தனத்தின் பேரால் ஆண்கள் பெண்களை உபசரிக்கிற டம்பத்தைப் பார்த்தால் எனது ஆத்மா வெறுப்பால் நிறைந்து விடுகிறது. பெண் என்கிற பால் பாகுபாட்டை ஒதுக்கிவிட்டு, பொதுவான மனிதத்துவ உணர்ச்சியின் அடிப்படை யில் நீங்கள் பழகக் கற்றுக்கொள்கிற வரையில் உங்கள் பெண்ணினம் வளர்ச்சியடையாது. அதுவரை அவர்கள் வெறும் விளையாட்டுச் சாமான்களாயிருப்பார்களே ஒழிய அதைவிட உயரமாட்டார்கள். திருமண முறிவுக்கும் (விவாக ரத்து) காரணம் இவையெல்லாம் தான். உங்களுடைய ஆண்மக்கள் உங்களைக் குனிந்து வணங்குகிறார்கள்; உட்கார நாற்காலி தருகிறார்கள். அடுத்த மூச்சில் உங்களுக்குப் பாராட்டுத் தருகிறார்கள். "பெண்ணே உனது கண்கள் எவ்வளவு அழகாக உள்ளன!" என்று கூறுகிறார்கள். இவ்வாறு செய்ய அவர் களுக்கு உரிமை ஏது? அவ்வளவு தூரம் போவதற்கு மனிதன் எப் படித் துணிகிறான்? பெண்களாகிய நீங்கள் எப்படி அநுமதிக்கிறீர் கள்? மனிதத் தன்மையிலுள்ள கண்யக் குறைவான விஷயங்களை இத்தகைய செயல்கள் வளர்க்கின்றன. கண்யமான உயர்ந்த லட்சி யங்களை நோக்கி அவை மனிதனை உயர்த்துவதில்லை.

"நாம் ஆண்கள், பெண்கள் என்று நினைக்கக் கூடாது. நாம் மனிதர்கள்; ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருக்கவும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளவும் பிறந்துள்ளோம் என்று நினைக்க வேண் டும். ஓர் இளைஞனும் யுவதியும் தனித்து விடப்பட்டால் உடனே அவன் அவளுக்குப் புகழ்மாலை சூட்டுகிறான். ஒரு மனைவியை அவன் தேர்ந்தெடுப்பதற்கு முன்னால் ஒருகால் அவன் இருநூறு பெண் களைக் காதலித்திருப்பான். அப்பாடா! நான்மாத்திரம் கலியாணம் பண்ணிக்கொள்கிற கோஷ்டியில் சேர்ந்திருந்தால் இந்த ஆர்ப்பாட்ட மெல்லாம் இல்லாமலேயே அன்புக்கு ஒரு பெண்ணைக் கண்டு பிடித்துக் கொள்வேன்.

"நான் பாரதத்தில் இருந்தபோது, இந்த விஷயங்களையெல் லாம் வெளியிலிருந்து பார்த்தபோது, இதெல்லாம் சரிதான் என்றும் இவை வெறும் கேலிச் செயல்கள்தான் என்றும் சொன்ன விளக்

கத்தை நம்பினேன். அதன்பின் நான் பிரயாணத்துக்குக் கிளம்பி னேன். உங்களது, இப்பழக்கம் சரியல்ல என்பது எனக்குத் தெரியும். அது தவறுதான். ஆனால் மேநாட்டினராகிய நீங்கள் உங்கள் கண்களை மூடிக் கொண்டுவிட்டு, அது நல்லதுதான் என்றழைக்கிறீர்கள். மேநாட்டிலுள்ள தேசங்களுடைய கஷ்டம் என்னவென்றால் அவை முதிர்ச்சியடையாத வாலிப நாடுகள். வாலிபம், முட்டாள் தனம், சஞ்சலமான சித்தம், ஏராளமான செல்வம் இவை அவர்களிடம் ஒன்று சேர்ந்துள்ளன. இதுதான் கஷ்டம். இந்தக் கெட்ட குணங்களில் ஏதாவது ஒன்று இருந்தாலே எவ்வளவோ விஷமங்கள் நடந்துவிடும். அப்படியிருக்க இவை நான்கும் ஒன்று சேர்ந்து விட்டாலோ, கேட்க வேண்டுமா? ஜாக்கிரதையாக இருங்கள்!''

* * * *

## சாயனாசாரியரே மாக்ஸ் முல்லராகப் புனர்ஜன்மம் எடுத்தார்! இது அர்த்தமற்ற வெற்றுக் கற்பனையா?*

''உனக்குத் தெரியுமா? சாயனர் தாமே தமது வேத பாஷ்யத்துக்குப் புத்துயிர் தந்து பரப்பும் பொருட்டு மாக்ஸ் முல்லராய்ப் பிறந்தார் என்னும் எண்ணம் எனக்கு உண்டு. நீண்ட நாட்களாக இவ்வெண்ணம் இருந்தது; மாக்ஸ் முல்லரைப் பார்த்த பிறகு அது எனது மனத்தில் உறுதிப்பட்டு விட்டது. வேதவேதாந்தங்களில் ஆழ்ந்த புலமையும், இடைவிடாத முயற்சியும் உடைய ஒரு பேறிஞரை இந்த நாட்டில்கூடக் காண்பதரிது. இதற்கு மேலாக அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்து எவ்வளவு ஆழ்ந்த, அளவிட முடியாத மதிப்புக் கொண்டிருக்கிறார்! ஸ்ரீ ராமகிருஷ்ணர் தெய்வ அவதாரம் என அவர் நம்புகிறார். நான் அவரது விருந்தாளியாக இருந்த போது என்னிடம் எவ்வளவு அபார அன்பு காட்டினார், தெரியுமா? அந்தக் கிழவரையும் அவரது மனைவியாரையும் கண்ட போது, அவர்கள் மற்றொரு வசிஷ்டரையும் அருந்ததியையும் போல இல்லற வாழ்க்கை நடத்தி வருவதாக எனக்குத் தோன்றிற்று. நான் பிரியும் சமயத்தில் கிழவரின் கண்களில் கண்ணீர் வந்தது.''

சிஷ்யர் :— ஆனால், சுவாமி, சாயனரே மாக்ஸ் முல்லராகப் பிறந்திருந்தால் புனித நாடாகிய பாரதத்தில் பிறவாமல் மிலேச்சராக ஏன் பிறந்தார்?

சுவாமிஜி :— 'நான் ஆரியன், மற்றையோர் மிலேச்சர்' என்று எண்ணுகிற எண்ணம், பெருமையுணர்வு, அஞ்ஞானத்தால் தோன்றியதாகும். ஞானத்துக்கெல்லாம் ஒளிவீசும் உடலாக விளங்கும்

* 'The Complete Works'—Vol. VI

வேதத்துக்குப் பாஷ்யகாரராக விளங்குகிறவரிடத்தில் வர்ணாசிரமப் பிரிவுகளும், ஜாதிப் பிரிவுகளும் இருக்க முடியுமா? இவையெல்லாம் முற்றிலும் அர்த்தமற்றவையாகும். மனித குலத்துக்கு நன்மை செய்வதற்காக அவர் விரும்புகிற இடத்தில் பிறவி எடுக்கலாம். குறிப்பாக, கல்வியிலும், செல்வத்திலும் நிறைந்து விளங்குகிற ஒரு நாட்டில் அவர் பிறந்திரா விட்டால், பிரம்மாண்டமான இந்த நூல்களை வெளியிடுவதற்குத் தேவையான ஏராளமான பணத்தை எங்கிருந்துதான் பெறுவார்? ரிக் வேதத்தை வெளியிடும் பொருட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஒன்பது லட்சம் ரூபாய் கொடுத்தார்கள் என்பதை நீர் கேள்விப் படவில்லையா? இந்தப் பணமும் போதவில்லை. இந்த நாட்டிலே வேதம் படித்த நூற்றுக்கணக்கான பண்டிதர்களை மாதச் சம்பளம் கொடுத்து அமர்த்த வேண்டியிருந்தது. இக்காலத்தில், இந்த நாட்டில் இவ்வளவு ஆழ்ந்த அறிவுப்பசி கொண்டவர்களாய், ஞான ஒளிக்காகவும், கல்விக்காகவும் இவ்வளவு அசாதாரணமான பண தொகையைச் செலவிடக் கூடியவர்களை யாராவது கண்டதுண்டா? இந்தப் புத்தகங்களில் முகவுரையிலே கையெழுத்துப் பிரதிகளை ஆயத்தப் படுத்துவதற்கே இருபத்தைந்து ஆண்டுகள் பிடித்தன என்று மாக்ஸ் முல்லரே கூறுகிறார். அச்சிடுவதற்கு மேலும் இருபது ஆண்டுகள் கழிந்தன. ஒரு நூலை வெளியிடுவதற்குத் தன் வாழ் நாளில் நாற்பத்தைந்து ஆண்டுகள் இடைவிடாது முயலுவதென்பது சாதாரண மனிதன் செய்யக் கூடிய காரியமா? சற்றே எண்ணிப்பார்! அவர் சாயனரே என நான் கூறுவது வெற்றுக் கற்பனையா?

* * * *

## ஆரிய ஐரோப்பிய நாகரிகங்களின் அமைப்பு முறை*

ஐரோப்பிய நாகரிகத்தை ஒரு துணித்துண்டுக்கு ஒப்பிடலாம். இவைதான் அதிலுள்ள பொருள்கள்; கடற்கரையிலுள்ள பரந்த, மித சீதோஷ்ண நிலையிலுள்ள மலைநாடு தான் அதற்கான தறி; பலமுள்ள போர்க்குணங்கள் வாய்ந்த, பல இனங்களின் சேர்க்கையால் உருவான கலப்பு இனம் தான் அதற்கான பஞ்சு; தனது சொந்தப் பாதுகாப்புக்காகவும், தனது சமயப் பாதுகாப்புக்காகவும் நடக்கிற போர்முறை தான் அதன் ஊடு நூல். வாள் வீசுகிறவன் பெரியவன். வாள் வீசமுடியாதவன் தனது சுதந்திரத்தைக் கைவிட்டு யாராவது ஒரு போர் வீரனுடைய பாதுகாப்பின் கீழ் வாழ்கிறான். அதனுடைய பாவு நூல்தான் வாணிபம். இந்த நாகரிகத்தின் பாதை, வாள் ஆகும். அதற்குத் துணைபுரியும் படை தைரியமும் சக்தியும். அதன் குறிக்கோள் இவ்வுலகிலும் மறு உலகிலும் சுகபோகங்களை அனுபவிப்பது ஆகும்.

---

* Extract from 'The East and the West'. (The complete Works, Vol. V).

நம் நிலே எப்படி? ஆரியர்கள் அமைதியில் ஆர்வமுள்ளவர்கள். நிலத்தைப் பண்படுத்தும் உழவர்கள்; தமது குடும்பங்களுக்கு எவ் விதத் தொந்தரவும் இன்றி அதனை நிர்வகித்து வரமுடிந்தால் அவர் கள் திருப்தியடைந்து விடுவார்கள். அப்படிப்பட்ட வாழ்க்கையில் அவர்களுக்கு ஏராளமான ஓய்வு நேரம் இருந்ததால், ஆழ்ந்து சிந்திக் கவும் நாகரிகத்துடன் விளங்கவும் அதிகமான சந்தர்ப்பம் கிடைத் தது. நம்முடைய ஜனக மகாராஜா தம் கையாலேயே நிலத்தை உழு தார். அந்தக் காலத்தில் சத்தியத்தை உணர்ந்தவர்களில் அவர் மிகவும் பெரியவராக இருந்தார். நமது நாட்டில் ரிஷிகள், முனிவர் கள், யோகிகள் இவர்கள் ஆரம்ப முதலே தோன்றியுள்ளார்கள். ஆரம்ப முதலே உலகம் ஒரு மாயக் கற்பனையாகும் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். நீங்கள் கொள்ளையடிக்கலாம். கொலை செய்ய லாம். ஆனால் நீங்கள் தேடுகிற இன்பம் சமாதானத்தில்தான் உறைந் துள்ளது. புலன்வழி இன்பங்களைத் துறப்பதில் தான் சாந்தி உள் ளது. உடலின் வளர்ச்சி முன்னேற்றத்தில் இன்ப சுகம் இல்லை. மனத்தையும் அறிவையும் பயன்படுத்துவதில் தான் உள்ளது. காடுகளை விளைச்சல் நிலமாகத் திருத்தி மாற்றியவர்கள் ஞானி களேதான்.

பின்னர், தாம் திருத்திய நிலப்பகுதியில் வேத காலத்து யாக மேடையை அமைத்தார்கள். பாரத நாட்டின் தூய வானில் யாக யக்ஞங்களின் புனிதப் புகை எழுந்தது. அமைதி நிலவும் அந்தக் காற்றில் வேத மந்திரங்களின் ஒலியும் எதிரொலியும் எழுந்தன. மாடு கன்றுகளும் மற்ற மிருகங்களும் எத்தகைய அபாயமும் அச்சமு மின்றி மேய்ந்து வந்தன. கல்வியறிவு, தர்மம் இவற்றின் காலின் கீழ் வாளுக்காக இடம் அமைக்கப்பட்டது. வாளின் வேலை தர்மத்தையும், மக்கள், கால் நடைகள் இவற்றின் உயிர்களையும் பாதுகாப்பதுதான். பலமற்றவர்களை அபாய காலத்தில் காப்பாற்றுகிறவன் வீரன்-க்ஷத் திரியன். உழுகிற ஏர் மீதும், வாளின் மீதும், தர்மம்—அனைவரையும் பாதுகாக்கும் சக்தி—ஆதிக்கம் செலுத்தியது. தர்மமானது மன்னர் களுக்கெல்லாம் மன்னன். உலகமெல்லாம் உறங்கும் பொழுது கூட தர்மம், எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்கும். தர்மத்தின் பாது காப்பின் கீழ் ஒவ்வொருவரும் சுதந்திரமாக இருந்தார்கள்.

ஆரியர்கள் வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வந்தார்கள் என்றும் பூர்விகக் குடிகளிடமிருந்து அவர்களுடைய நிலங்களைப் பிடுங்கிக் கொண்டார்கள் என்றும், அவர்களை நிர்மூலமாக்கி விட்டுப் பாரதத்தில் குடியேறினார்கள் என்றும் கூறுகிறார்கள். இதெல்லாம் கலப்பற்ற பொய்; முட்டாள் தனமான பேச்சு ஆகும். இப்படியெல் லாம் உங்கள் ஐரோப்பியப் பண்டிதர்கள் பேசுகிறார்கள். நமது பாரத அறிஞர்கள் கூட இத்தகைய கருத்துக்களுக்கெல்லாம் 'ஆமாம்' போடு

வது விந்தையாக இருக்கிறது. அன்றியும் இந்த ராட்சதப் புளுகு களெல்லாம் நமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இது உண்மையில் மிக மிக மோசமான செயலாகும்.

நானே ஓர் அறிவிலி. ஏதோ புலமை இருப்பதாக நான் பாசாங்கு பண்ணவில்லை. ஆனல் எனக்குப் புரிகின்ற சிறு விஷயங்களை வைத்துக் கொண்டு பாரிஸ் மகாநாட்டில் நான் இந்தக் கருத்துக்களை வன்மையாகக் கண்டித்தேன். இந்த விஷயத்தைக் குறித்து நான் பாரதீய அறிஞர்களிடமும், மேநாட்டு வித்வான்களிடமும் பேசிக் கொண்டிருந்தேன். வாய்ப்பான நேரம் கிடைக்கும்போது அவர்களது இந்த ஊகக் கற்பனையை விரிவாக, அணு அணுவாக எதிர்த்துப் பல ஆட்சேபங்களை எழுப்ப வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக் கிறேன். உங்களுக்கு—நமது நாட்டுப் பண்டிதர்களுக்குச்—சொல்லு கிறேன்: நீங்கள் எல்லாம் கற்றறிந்த மனிதர்கள், தயவு செய்து உங்களது பழைய நூல்களையும் சாஸ்திரங்களையும் துருவி ஆராய்ந்து சொந்தமரன முடிவுக்கு வாருங்கள்'' என்று சொல்லுகிறேன்.

ஐரோப்பியர் தமக்கு எங்காவது வாய்ப்பான சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் ஆங்காங்குள்ள பூர்விகமான குடி மக்களைப் பூண்டறுத்துவிட்டு, அவர்களுக்குச்சொந்தமான நிலத்தில் சௌகரிய மாகவும் வசதியாகவும் குடியேறி விடுவார்கள்; ஆகவே ஆரியர்களும் அவ்வாறே செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். மேநாட்டவர்கள் தமது சொந்த நாட்டிலேயே தங்கிக்கொண்டு, தமது உள்நாட்டு விளைபொருள் வசதிகளையே முற்றிலும் நம்பி வாழ்ந்திருப்பார்களேயானல் அவர்கள் மிக மோசமான நாடோடி மக்களாகக் கருதப்பட்டிருப்பார்கள். ஆகவே அவர்கள் வெறி கொண்டு உலகெங்கும் ஓடிச்சென்றார்கள். பிறருடைய நிலங்களின் செழுமை வளத்தால் தம் ஊனை வளர்க்க வகை தேடினர்கள். ஆகவே ஆரியர்களும் அது போலவே செய்திருக்க வேண்டுமென்று அவர் கள் முடிவு கட்டுகிறார்கள். இப்படிக் கூறுவதற்கெல்லாம் சாட்சிகள் எங்கே? கற்பனைக் கதையளக்கிறீர்களா? அப்படியாயின் உங்களுடைய விசித்திரக் கதைப்புக்களை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள்''

''எந்த வேதத்தில், எந்த ஸூக்தத்தில் வெளிநாட்டிலிருந்து பாரதத்தினுள் ஆரியர் வந்ததாக உங்களுக்குத் தெரிகிறது? காடு களில் வாழ்ந்த பூர்விகக் குடிகளை அவர்கள் வெட்டி வீழ்த்தியதாக உங்களுக்கு எங்கிருந்து தெரிய வந்தது? இது போன்ற மடமைப் பேச்சுக்கள் பேசுவதால் உங்களுக்கு என்ன லாபம்? நீங்கள் ராமாயணம் படித்தது வீணுகி விட்டதே. அதிலிருந்து பெரிய அருமையான கட்டுக் கதையொன்றை எதற்காக உற்பத்தி செய்கிறீர்கள்?

"அது சரி. ராமாயணம் என்பது என்ன? தென் பாரதத்திலிருந்த காட்டுமிராண்டிப் பூர்விகக் குடிகளை ஆரியர்கள் தோற்கடித்ததா? ராமச்சந்திரர் நாகரிகமுள்ள ஆரிய மன்னர். யாருடன் அவர் போரிடுகிறார்? இலங்கை மன்னனான ராவணனுடன். ராமாயணத்தைச் சற்றே படித்துப் பாருங்கள். ராவணன் ராமனை விட உயர்ந்த நாகரிகம் வாய்ந்திருந்தானே யொழிய தாழ்ந்தவனாக இருக்கவில்லை. இலங்கையின் நாகரிகம் அயோத்தியைவிட ஒரு விதத்தில் உயர்ந்து இருந்ததே தவிர, நிச்சயமாகத் தாழ்ந்திருக்கவில்லை இதற்குப் பிறகு, இந்த வானரங்களும் மற்றத் தென் பாரத மக்களும் எப்பொழுது தோற்கடிக்கப் பட்டார்கள்? அதற்கு மாறாக அவர்களெல்லாம் ராமச்சந்திரரின் நண்பர்களாகவும், உடன் உழைப்பவர்களாகவும் இருந்தார்கள். வாலி, குகன் ஆகியோருடைய ராஜ்யங்கள் எதையாவது ராமச்சந்திரர் தம் அரசுடன் இணைத்துக் கொண்டாரா? சொல்லுங்கள்...

ஆரியர்களுக்கும் முதற் குடிகளுக்குகிடையே சிற்சில சமயங்களில் சில விடங்களில் சண்டைகள் நடந்திருக்கக் கூடும். அது சாத்தியம் தான். மற்றொரு சாத்தியக் கூறும் உள்ளது. தந்திரசாலிகளான சில முனிவர்கள் ராட்சதர்களின் காடுகளில் தமது வேள்வித் தீயின் முன்னால் உட்கார்ந்து கொண்டு தியானம் பண்ணுவது போல் பாசாங்கு பண்ணிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் ராட்சதர்கள் கல்லையும் எலும்புத் துண்டுகளையும் தம் மீது எப்பொதுதான் வீசுவார்களோ என்று எதிர் பார்த்துக்கொண்டு காத்திருக்கலாம். அவர்கள் வீசியவுடன் மன்னர்களிடம் விரைந்தோடுவார்கள். கவசமணிந்த மன்னர்கள், வாட்களுடனும், எஃகு ஆயுதங்களுடனும் தீப்போலப் பாயும் குதிரைகளிலேறி வருவார்கள். தமது தடிகளையும் கற்களையும் வைத்துக்கொண்டு அந்த முதற்குடிகள் எவ்வளவு நேரம்தான் சண்டையிட முடியும்? ஆகவே அவர்கள் ஒன்று கொல்லப்பட்டார்கள்; அல்லது விரட்டியடிக்கப் பட்டார்கள். பிறகு மன்னர்கள் தமது தலைநகருக்குத் திரும்புவார்கள். அவையெல்லாம் நிகழ்ந்திருக்கலாம். ஆனால் ஆரியர்கள் நிலங்களைப் பிடுங்கிக் கொண்டதற்கு இது எப்படி ஆதாரமாக முடியும்? ராமாயணத்தில் அதற்கு ஆதாரம் எங்கே இருக்கிறது?

ஆரிய நாகரிகமாகிற தறியிலுள்ள துணி பரந்த, உஷ்ணமான சமதள பூமியாகும். அதனிடையியே அகலமான, போக்குவரத்துக்கு உகந்த நதிகள் ஓடுகின்றன. இந்தத் துணிக்கான பஞ்சு, மிக உயர்ந்த நாகரிக நிலை, அரை நாகரிக நிலை காட்டுமிராண்டி நிலை- ஆகியவற்றைக் கொண்டது. இந்த நிலைகளிலுள்ள பெருவாரியான ஆரிய மக்களின் வர்ணாசிரம ஆசாரம் அதன் ஊடுநூல். இயற்கையில் காணப்படும் பூசலையும் போட்டா போட்டியையும் வெல்வது அதன் பாவுநூல்.

ஐரோப்பியர்களே! உங்களை நான் ஒன்று கேட்கலாமா? எந்த ஒரு நாட்டையாவது நீங்கள் மேல் நிலைக்கு உயர்த்தியிருக்கிறீர்களா? எங்காவது பலவீனமான இனத்தினரைக் கண்டால் அவர்களைப் பூண்டோடு வேரறுத்திருக்கிறீர்கள், அவர்களது நிலங்களில் நீங்கள் குடியேறியிருக்கிறீர்கள். நிரந்தரமாக அவர்கள் தீர்ந்து போனார்கள். உங்களுடைய அமெரிக்கா, ஆஸ்திரேலியா. நியூஜிலாந்து, பசிபிக் தீவுகள், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் வரலாறு என்ன? அங்கிருந்த ஆதிக் குடிமக்கள் இப்பொழுது எங்கே? அவர்கள் வேரறுக்கப்பட்டு விட்டார்கள். காட்டு மிருகங்களைப் போல அவர்களைக் கருதி நீங்கள் அடியோடு கொலை செய்து விட்டீர்கள். எங்கே அவ்வாறு செய்ய உங்களுக்கு ஆற்றல் இல்லையோ, அந்த நாடுகள் மட்டுமேதான், அந்தத் தேசந்தான் இன்றும் உயிருடன் இருக்கிறது.

ஆனால் பாரதம் ஒரு போதும் அவ்வாறு செய்யவில்லை. ஆரியர்கள் அன்பும், தாராள மனப்பான்மையும் வாய்திருந்தார்கள். அவர்களது உள்ளங்கள் கடலைப் போலப் பரந்தும் எல்லையில்லாமலும் இருந்தன. அவர்களது மூளைகள் மனித வரம்புக்கு மீறி, மேதாவிலாசம் வாய்ந்திருந்தன. உலகத்தில் தோன்றி மறைகிற, வெளிப் பார்வைக்கு இன்பம் போலத் தோன்றுகிற, ஆனால் உண்மையில் பார்த்தால் மிருகத்தனமான செயல்கள், அவர்களது உள்ளத்திலும் மூளையிலும் இடம் பெறவே இல்லை. எனது சொந்த நாட்டினரான முட்டாள்களே! உங்களை ஒன்று கேட்கிறேன். முதற் குடிகளின் நிலத்தில் குடியேறுவதற்காக ஆரியர்கள் அவர்களை அழித்திருந்தால் வர்ணாசிரம ஸ்தாபனம் ஏற்படுத்த முடியுமா? யோசித்துப் பாருங்கள்.

"தாமே வாழ்வதற்காக மற்ற அனைவரையும் அழிப்பது ஐரோப்பிய மக்களின் குறிக்கோள் ஆகும். தம்முடைய தரத்துக்கு, இல்லை, தம்மையும்விட, உயர்ந்த நிலைக்கு எல்லோரையும் உயர்த்துவது ஆரியர்களின் நோக்கம். ஐரோப்பிய நாகரிகத்தின் பாதை, வாள் ஆகும். ஆரியர்களின் பாதை, மக்கள் சமூகத்தை வர்ணங்களாகப் பாகுபடுத்துவதாகும். வெவ்வேறு வர்ணங்களாகப் பிரிக்கும் இந்த முறை நாகரிக நிலைக்கு ஏறிச் செல்லும் படியாகும். ஒருவனது கல்விக்கும் பண்பாட்டுக்கும் தக்க அளவில் அவனை மேலும் மேலும் உயர்ந்து எழுந்து முன்னேற செய்கிறது இந்த பாகுபாட்டு அமைப்பு. ஐரோப்பாவில் எங்கு பார்த்தாலும் பலமுள்ளவனுக்கு வெற்றி, பலவீனனுக்குச் சாவு என்பது நிலை. பாரத பூமியில் சமூகச் சட்டம் ஒவ்வொன்றும் பலவீனனின் பாதுகாப்புக்காக ஏற்பட்டதாகும்.

## மூன்றாம் பாகம்

# சில
# கண்ணோட்டங்களும்
# கண்டனங்களும்

## சரித்திர உண்மையை மையமாகக் கொண்டிருந்தாலும் கொண்டிராவிடினும் ஒவ்வொரு புராணமும் ஒரு பேருண்மையைக் கற்பிக்கிறது*

ஒவ்வொரு புராணத்துக்கும் கருவாக ஒவ்வொரு சரித்திர உண்மை அமைந்துள்ளது. மேன்மையான உண்மையைப் பலவித வடிவங்களில் மனித குலத்துக்குக் கற்பிப்பதே புராணங்களின் நோக்கமாகும். அவற்றில் சரித்திர உண்மை எதுவும் பொதிந்திராமற்போனாலும், அவை நமது மனத்தில் பதிப்பிக்கிற மிக உயர்ந்த உண்மைக்கு, மகத்தான பிரமாண நூலாக அமைகின்றன. உதாரணமாக ராமாயணத்தை எடுத்துக் கொள்ளுவோம். அது ஒழுக்கத்தை வளர்ப்பதில் மேம்பட்ட நூலாகத் திகழ்கிறது. அந்த ரீதியில் அந்நூலை நோக்குவதற்கு ராமர் என்ற ஒருவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற தேவையே இல்லை. ராமாயணமும் மகாபாரதமும் மிக உயர்ந்த சட்டங்களைக் காட்டி யுணர்த்துகின்றன. ராமர் அல்லது கிருஷ்ணர் என்ற ஒரு மனிதர் வாழ்ந்திருந்தாரா இல்லையா என்பதன் உண்மையைப் பொறுத்து உயர்ந்த அந்தச் சட்டங்கள் நிலை கொள்ளவில்லை. அப்படிப்பட்ட மனிதர்கள் வாழவில்லை என்றே கொண்டாலும் சரி; மனித குலத்தின் முன்னிலையில் அவை உயர்ந்த கருத்துக்களை வைத்துள்ளன. அவ் வுயர்ந்தக் கருத்துக்களுக்கு அவை பிரமாண நூல்கள் என்று கொள்ள முடியும்.

நமது தத்துவ சாஸ்திரங்கள் விளக்குகிற பேருண்மைகள் எந்த ஒரு மகா புருஷரையும் சார்ந்ததாக இல்லை. இவ்வாறாக ஸ்ரீ கிருஷ்ணர் உலகத்துக்குப் புதிதாகவோ சுய கற்பனையாகவோ உள்ள எதனையும் கற்பிக்கவில்லை; அல்லது சாஸ்திரங்களில் இல்லாத எந்த ஒரு விஷயத்தையும் ராமாயணம் வெளியிடவில்லை. ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். கிறிஸ்தவ சமயம் கிறிஸ்து இன்றி நிலை பெறமுடியாது. முகம்மது நபியின்றி முகமதிய சமயமும், புத்தரின்றி புத்த சமயமும் நிற்க முடியாது. ஆனால் ஹிந்து சமயம் எந்த ஒரு மனிதனையும் சாராமல் சுதந்திரமாக நிற்கிறது. அன்றியும் எந்த ஒரு புராணத்திலும் பொதிந்துள்ள தத்துவரீதியான உண்மையை மதிப்

---

* 1897 பிப்ரவரி மாதம் சென்னை "ஹிந்து" பத்திரிகையில் வெளியான நிருபர் பேட்டியிலிருந்தது.

பிட்டு அறிவதற்காக, அந்தப் புராணத்தில் பேசப்படுகிற மனிதர்கள் உண்மையில் வாழ்ந்தனரா அல்லது அவர்கள் கற்பனைப் பாத்திரங்களா என்று நாம் ஆலோசிக்கத் தேவையில்லை. புராணங்களின் நோக்கம் மனித குலத்துக்கு ஞானம் புகட்டுவது தான். அவற்றை இயற்றிய ரிஷிகள் ஏதாவது ஒரு சரித்திர புருஷனைத் தேடிக் கண்டு பிடித்தார்கள். அந்த மனிதன் மீது தேவைக்குத் தக்கபடி மிக உயர்ந்த குணங்களையோ, மிக மோசமான குணங்களையோ சுமத்தி ஒட்ட வைத்தார்கள். அத்துடன் மனித குலம் நடக்க வேண்டிய முறை பற்றிய தர்மநெறி ஒழுக்கங்களை வகுத்து வைத்தார்கள். ராமாயணத்தில் குறிப்பிட்டபடி பத்துத் தலை ராட்சதன் ஒருவன் உண்மையாகவே வாழ்ந்திருக்க வேண்டியது அத்தியாவசியமா? தசமுகன் உண்மையாக வாழ்ந்தானு அல்லது கற்பனைக் கதாபாத்திரமா என்பது ஒரு புறம் இருக்க, ஆராயத் தக்க ஓர் உண்மையை அது விளக்குகிறது என்பதே முக்கியமான விஷயம். கிருஷ்ணனை இப்பொழுது நீங்கள் மிகமிக அழகாக வர்ணித்துக் கொள்ளுங்கள். உங்களது லட்சியத்தின் உயர்வுக்குத் தக்க உங்கள் வர்ணனையும் இருக்கும். ஆனுல் புராணங்களில் பொதிந்துள்ள மகத்தான தத்துவ ஞானம் எப்பொழுதும் நிலைத்து நிற்கிறது.

* * *

## எதிர்ப்பு இயக்கங்கள், எப்பொழுதும் தாம் எதிர்க்கிற, வெறுக்கிற கொள்கைகளுடன் மடிந்து விடுகின்றன*

பாரதத்தின் தென்பகுதியில் ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமாநுஜர் ஆகியோரின் ஆன்மிக எழுச்சிக்குப் பின் அதைத் தொடர்ந்து வழக்கம் போல மக்கள் இனங்களின் ஒற்றுமையும், சக்தி மிக்க சாம்ராஜ்யங்களும் தோன்றின. வடபாரதம் முழுவதும்-இரு கடல்களுக்கிடையே திகழும் பகுதி முழுவதும் - மத்திய ஆசியப் படையெடுப்பாளரின் காலடியின் கீழ் கட்டுண்டு கிடந்தபோது தென் பாரதம் பாரத சமயத்துக்கும் நாகரிகத்துக்கும் புகலிடமாக விளங்கியது. முகம்மதியர்கள் பல நூற்றுண்டுகளாகத் தென்பகுதியை அடிமைப்படுத்தி அடக்கி வைக்க முயன்றுர்கள். ஆனுல் அவர்களுக்கு வலிமைக் கோட்டையாக வாய்ந்த ஓரிடமும் கிடைக்கவில்லை என்று கூறத்தான் வேண்டும். மிகுந்த வலிமையையும் ஒற்றுமையும் வாய்ந்த முகலாய சாம்ராஜ்யம் தென் பாரதத்தை வென்று வாகை சூடும் நிலையை அநேகமாய் எய்தி

* Extract from, 'Historical Evolution of India' ('The Complete Works', Vol. VI).

விட்ட சந்தர்ப்பத்தில், குதிரைப் படை வீரர்களான உழவர்கள் தெற்கேயுள்ள குன்றுகளிலிருந்தும் பீடபூமியிலிருந்தும் வெள்ளம் போலப் பாய்ந்தோடி வந்தார்கள். ராமதாசர் பிரசாரம் செய்து, துகாராம் புகழ் பாடிய தமது சமயத்துக்காக உயிரையும் அளிக்க உறுதியுடன் விரைந்து வந்தார்கள். மிக்க குறுகிய காலத்திற்குள்ளாக முகலாயர்களின் பிரம்மாண்டமான சாம்ராஜ்யம் வெறும் பெயரளவுக்கு ஆகி விட்டது.

முகம்மதிய ஆட்சியின் போது, வடபாரதத்தில் தோன்றிய இயக்கங்களெல்லாம், படையெடுத்து வென்ற ஆக்கிரமிப்பாளரின் சமயத்தைப் பொதுமக்கள் கைகொள்ளாதபடி அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொதுவான ஒரே லட்சியத்துடன் எழுந்தவையே ஆகும். அம்முயற்சியின் விளைவாக சமூக சமத்துவமும் ஆன்மீக சமத்துவமும் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

இராமானந்தர், கபீர், தாது, சைதன்யர், குருநானக் ஆகியோரால் நிறுவப்பட்ட சந்நியாச ஆசிரமங்களைச் சார்ந்தவர்கள் அவரவர் தத்துவப்போதனையில் எவ்வளவு தான் வேறுபட்டிருந்தாலும் மனிதரிடையே சமத்துவத்தை போதிக்கும் விஷயத்தில் ஒன்றுபட்டே இருந்தார்கள். பொதுமக்களிடையே இஸ்லாம் வெகு வேகமாகப் பரவி வந்ததைத் தடுக்கவே அவர்களது சக்தியின் பெரும்பகுதி செலவாயிற்று. ஆகவே புதிதாகச் சிந்தித்துப் புதிய கருத்துக்களையும், ஆர்வங்களையும் எடுத்துக் காட்ட முடியாமற் போயிற்று. பழைய சமயத்தின் அரவணைப்பிலேயே பாமர மக்களைப் பாதுகாப்பதில் அவர்கள் உண்மையிலேயே வெற்றி பெற்றனர்கள். முகம்மதியர்களின் மத வெறியைத் தணித்தார்கள்; இருப்பினுங்கூடத் தற்காப்பு நோக்குடன், உயிர் வாழ அநுமதி கோரி, உயிருக்கு மன்றாடி வாழ்கிறவர்களாகவே அவர்கள் இருந்தார்கள்.

இருப்பினும் ஒரு பெரிய தீர்க்கதரிசி, வடக்கில் தோன்றினர். சீக்கியர்களின் கடைசி குருவான அந்த குரு கோவிந்த சிங் நிர்மாண மேதாவிலாசத்துடன் விளங்கினர். அவரது ஆத்மிகப் பணியின் விளைவாக, அதனைத் தொடர்ந்து சீக்கியர்களின் புகழ் பெற்ற அரசியல் இயக்கம் தோன்றியது. பாரதத்தின் வரலாறு முழுவதிலும், ஒரு விஷயத்தைக் காண்கிறோம். அதாவது ஆன்மீகக் கிளர்ச்சி ஏற்படும் பொழுதெல்லாம் அதைத் தொடர்ந்து அனேகமாக நாடு முழுவதும் பரவிய அரசியல் ஒற்றுமை இயக்கம் தோன்றும். அந்த இயக்கம் தனது உற்பத்திக்குக் காரணமான ஆத்மிக அபிலாஷைகளைப் பலப்படுத்தும். ஆனல் மராட்டியர் அல்லது சீக்கியர் இவர்களின் சாம்ராஜ்யத்துக்கு முன்னேடியாக எழுந்த ஆத்மீக அபிலாஷையானது எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

முகலாயர்களின் அரச சபையில் இருந்த அறிவுச் சுடரில் ஒரு கதிரைக் கூட பூனு அரசவையிலோ, லாகூர் அரசவையிலோ காண முடியவில்லை; அப்படியிருக்க மாளவ சாம்ராஜ்யத்திலோ வித்யா நகரப் பேரரசிலோ காணப்பட்ட அறிவு ஜோதியைக் காணலாம் என எதிர்பார்ப்பது வீண் அல்லவா? பாரத நாட்டு வரலாற்றிலே அறிவுத் துறையில் அந்தக் காலம்தான் காரிருள் மண்டிய கால மெனலாம். வால் நட்சத்திரம் போலத் திடீரெனத் தோன்றி உச்ச நிலையை அடைந்து மறைந்த அந்தச் சாம்ராஜ்யங்கள் பாமர மக்களின் வெறியுணர்ச்சியின் பிரதிநிதியாக விளங்கின. உயர்ந்த பண்பாட்டை அம்மக்கள் முழு மனத்துடனும் வெறுத்தனர். தாம் வெறுத்த முகம்மதியர்களின் ஆட்சியை அழிப்பதில் வெற்றிகண்ட உடனேயே இம்மக்களுக்கு ஊக்கம் தந்த லட்சிய சக்தி அடியோடு மாய்ந்தே போயிற்று.

* * * *

## தனி மனிதனை உயர்த்துங்கள்; தேசமும் அதிலுள்ள ஸ்தாபனங்களும் தாமே உயரும் *

ஒரு சமூகத்தில் ஏற்படுகிற சமூகமான எல்லாச் சமூக மாறு பாடுகளும் அந்தச் சமூகத்துக்குள்ளே வேலை செய்துவரும் ஆத்மீக சக்திகளின் வெளித் தோற்றம்தான். அச்சக்திகள் பலமுள்ள வையாகவும், நன்கு பொறுத்தமானவையாகவும் இருக்குமாயின் சமூகமானது அதற்குத் தகத் தன்னைத் தானே மாற்றியமைத்துக் கொள்ளும். ஒவ்வொரு மனிதனும் முன்னேற்றத்திற்கான வழியைத் தானே தேடி உழைத்துப் பெற வேண்டும். வேறு வழியில்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் அப்படித்தான். ஒவ்வொரு நாட்டின் வாழ்க்கை நிலைமையைப் பொறுத்துத்தான் அங்குள்ள பெரிய இயக் கங்கள் அமையும். மற்றோர் இனத்தின் உருவ அமைப்புப்படி அந்த ஓர் இனத்தினை மாற்றியமைக்க முடியாது. பழைய ஸ்தாபனங்களை விட உயர்ந்த புதிய ஸ்தாபனங்களை வளர்த்து உருவாக்காமல், பழை யனவற்றை உடைத்தெறியச் செய்யும் முயற்சி அபாயகரமானதாக ஆகலாம். வளர்ச்சி எப்பொழுதும் படிப்படியாகவே இருக்கும்.

ஒரு ஸ்தாபனத்தில் உள்ள குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டு வது மிக எளிது. ஏனெனில் எல்லாமே ஓரளவுக்குக் குறைபாடு உள்ளது தான். ஆனால் ஒரு மனிதன் எந்த ஒரு ஸ்தாபனத்தின் கீழ் வளர்ந்தாலும் சரி, அவனுடைய தனிப்பட்ட குற்றங்களை விட்டு நீங்கி அவன் மேலெழுவதற்காக உதவி புரிகிறவன் தான் உண்மை

* Extract from 'Sayings and Utterances' (The Complete Works', Vol. V).

யான உபகாரி ஆவான். தனி மனிதன் உயர்த்தப்படும் பொழுது தேசமும் அதிலுள்ள ஸ்தாபனங்களும் கட்டாயமாக உயர்வடைந்தே தீருகின்றன.

தீய பழக்கங்களும் சட்ட திட்டங்களும் புறக்கணிக்கப்பட்டு அவற்றின் இடத்தில் நன்மையான ஆற்றல் மிக்க எழுதாச் சட்டங்களான அன்பு, அநுதாபம், நேர்மை, ஒழுக்கம் ஆகியவை இடம் பெறும். ஓர் உயர்ந்த நாட்டுக்குச் சட்ட நூல்கள் மிகக் குறைவாக வேண்டும்; அந்த தேசத்தை நல்வழிப் படுத்த ஏதாவது ஒரு ஸ்தாபனம் தேவையில்லாமற் போக வேண்டும்; ஸ்தாபனங்களைப் பற்றி அது அக்கறை படவே தேவை ஏற்படக் கூடாது. அந்த நாடு தான் மகிழ்ச்சி நிலையிலுள்ள நாடாகும். நல்லவர்கள் எல்லாச் சட்டங்களையும் மீறி மேலே எழுகிறார்கள். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் எந்த நிலையில் வாழ்ந்தாலும் அவர்களும் மேலெழ உதவுகிறார்கள்.

பாரதத்தின் முன்னேற்றம் தனி மனிதன் தனது சக்தியையும், தனக்குள்ளிருக்கும் தெய்வாம்சத்தையும் அநுபவித்துத் தெளிவதைச் சார்ந்துள்ளது.

* * *

## இறைவனுடன் தொடர்பு கொள்வது, தனிப்பட்ட ரீதியில் அல்லாமல் கூட்டு ரீதியில் முடியாது*

பொதுவான கூட்டு ரீதியில் அமைந்த சமயம் நிலைபெற முடியாது. சமயத்தினுடைய உண்மையான வேலை ஒவ்வொருவருடைய சொந்தப் பொறுப்பு ஆகும். எனக்கென்று சொந்தமான ஓர் எண்ணம் இருக்கிறது. நான் அதைப் புனிதமாக, ரகசியமானதாக காப்பாற்றி வைக்க வேண்டும். ஏனெனில் அதுவே உங்கள் கருத்தாகவும் இருக்கவேண்டும் என்பதில்லையே. ஒவ்வொருவரிடமும் போய் எனது எண்ணம் என்னவென்று சொல்லிக் கொண்டு எதற்காக நான் சலசலப்பை உண்டாக்க வேண்டும்? மற்றவர்கள் வந்து என்னுடன் சண்டையிடுவார்களே! அவர்களிடம் நான் சொல்லா விட்டால் அவ்வாறு செய்ய மாட்டார்களே. என் கருத்து இன்னது என்று நான் சொல்லிக் கொண்டே திரிந்தால் எல்லோரும் என்னை எதிர்ப்பார்கள். ஆகவே இதைப் பற்றிப் பேசி என்ன பயன்? இந்த 'இஷ்ட' தத்துவம் ரகசியமாக வைக்கப் படவேண்டும். கடவுளுக்கும் உனக்கும் இடையே உள்ள விஷயம் அது. சமயத்தில் தத்துவ சம்பந்தமான விஷயங்களைப் பொதுப்படையாகப் பிரசாரம் செய்

* Extract from 'Addresses on Bhakti Yoga' ('The Complete Works,' Vol. IV).

யலாம். கூட்டு ரீதியில் வெளிப்படுத்தலாம். ஆனல் உயர்தரமான சமயம் பொது விஷயமாக ஆக்கப்பட முடியாததாகும். ஒரு கண நேர அழைப்பில் எனது சமய உணர்ச்சிகளை நான் தயாரித்துக் கொண்டு விட முடியாது. இப்படியெல்லாம் கேலிக்கூத்து நடத்துவதன் விளைவு என்ன? இந்து மதத்தைப் புரளி பண்ணுவதாகும். மட்டரகமான மத நிந்தையாகும். இன்றைய நாட்களில் சர்ச்சுகளில் காண்கிற காட்சி அதன் விளைவாக ஏற்பட்டதுதான். இந்தச் சமய ரீதியான கவாத்துப் பழகுவதை மனிதன் எப்படிச் சகிக்க முடியும்? ராணுவ முகாமில் படை வீரர்கள் இருப்பதைப்போல வழிபாடு நடத்துகிருர்களே! "கைகளைத் தோள் மேல் தூக்கு, முட்டி போடு, புத்தகத்தை எடு" என்றெல்லாம் திட்டவட்டமாக கட்டளையிட்டு நடத்துகிருர்கள். ஐந்து நிமிடம் உணர்ச்சி; ஐந்துநிமிடம் பகுத்தறிவு, ஐந்து நிமிடம் பிரார்த்தனை; எல்லாம் முன் கூட்டியே திட்டமிடப்பட்ட ஏற்பாட்டின்படி நடக்கும். இந்தக் கேலிக் கூத்து, சமயத்தை விரட்டி ஓட்டி விட்டது. சர்ச்சுகள் கொள்கைகளையும், தத்துவங்களையும், கோட்பாடுகளையும் மனது திருப்தியாகிறவரை பிரசாரம் செய்யட்டும். ஆனல் வழிபடவேண்டிய வேளை வரும்பொழுது, சமயத்தின் உண்மையான நடைமுறை அம்சத்துக்கு வரும்பொழுது, ஏசு சொன்னபடி செய்ய வேண்டும். "பிரார்த்தனை செய்யும் பொழுது உனது அறைக்குள் நுழைந்து கொள். அறைக் கதவை மூடியதும் ரகசியமாக இறைவனுகிய உன் தந்தையைப் பிரார்த்தித்துக் கொள்."

* * * *

## விக்கிரகங்களை உடைக்கிறவர்களிடையே விக்கிரக ஆராதனை *

உலகமெங்கும் ஏதாவது ஒரு வடிவத்தில் உருவங்கள் இருப்பதைக் காண்பீர்கள். சிலருக்கு அது மனித வடிவத்திலிருக்கும்; அதுவே தலைசிறந்த வடிவம். எனக்கு ஏதாவது ஓர் உருவத்தையோ, கட்டிட உருவத்தையோ வைத்து வணங்காமல் மனித உருவத்தையே வைத்துக்கொள்வேன். ஒரு குறிப்பிட்ட வடிவத்திலுள்ள உருவம்தான் தகுந்தது, நல்லது என்று ஒரு மதப் பிரினர் கருதுகிருர்கள். வேருெருவர் அது தவறென நினைக்கிருர்கள். கடவுள் புருவின் வடிவத்தில் வந்தபோது அது சரியென்று கிறிஸ்தவர்கள் கருதுகிருர்கள். ஆனல் ஹிந்துக்கள் கூறுவதுபோல, அவர் மீனின் வடிவத்தில் தோன்றினல் அது பெருந் தவறு: மூட

* Extraet from 'Addresses on Bhakti Yoga' (The Complete Works', Vol. IV).

நம்பிக்கையாகி விடுகிறது! யூதர்கள் இருதயத்தின் வடிவத்தில் ஒரு சிலை உண்டாக்கி, இரண்டு தேவதூதர்கள் அதன் மேல் உட்கார்ந்து கொண்டிருக்க அதன் மேல் ஒரு புத்தகத்தை வைத்தால் அதுவே சரியெனக் கருதுகிறார்கள்; ஆனால் அது ஆண் அல்லது பெண் வடிவத்தில் இருக்குமாயின், அது பயங்கரமானதென நினைக்கிறார்கள். முகமதியர்கள் பிரார்த்தனையின் போது 'காபா' கோயிலின் சித்திரம் தமது மனத்தில் தோன்ற, அதில் கறுப்பு நிறக் கல் இருக்க, மேற்குத் திசையை நோக்கி வணங்கினால் அது நியாயந்தான். ஆனால் 'சர்ச்சு' வடிவத்தில் ஒரு சிலையை அமைத்தால் அது சட வழிபாடு ஆகிவிடுமாம். உருவ வழிபாட்டிலுள்ள குறைபாடு இதுதான். இருப்பினும் இவையெல்லாம் தேவையான படிகளாகத் தோன்றுகின்றன.

* * *

## தற்செயலாக சமாதி நிலையை எய்துவது அபாயகரமானது*

தர்க்க அறிவுக்கு அப்பால், உணர்வு கடந்த நிலையொன்று மனத்துக்கு உரிய உயர்ந்த நிலையாக அமைந்திருக்கிறது என்று யோகி கற்பிக்கிறார். மனமானது இந்த உயர்ந்த நிலையை அடையும் பொழுது தர்க்க அறிவுக்கு அப்பாலாகிய இந்த அறிவு மனிதனுக்குப் பிறக்கிறது. புலன்களுக்கு மேற்பட்டுள்ள மிக உயர்ந்த இந்த அறிவு அந்நிலையில் மனிதனிடம் தோன்றுகிறது. தர்க்க அறிவுக்கு அப்பால் சென்று, பொதுவாக மனித இயற்கையைக் கடந்து நிற்கும் இந்த நிலை, இதனுடைய விஞ்ஞான ரீதியான தத்துவத்தை அறியாத மனிதனுக்கும், இதற்காக எதிர்பார்த்து விழையாத முறையில் வந்தெய்தலாம். அவன் அதன் மீது தடுக்கி விழுந்து அதனை எய்தலாம்.

அதற்கென முயற்சி செய்யாமல், காத்திருந்து, நாடிச் செல்லாமல் தற்செயலாக அதன் மீது இடறி விழுந்து அதனை எய்துவதில் பெரிய அபாயம் இருக்கிறது என்று யோகி சொல்லுகிறார். அதனால் மூளை நிலை குலைந்து போகக் கூடும். சிலர் எவ்வளவோ பெரியவர்களாக இருந்தாலும் இந்தச் சமாதி நிலையை உள்ளபடி உணராமல், இதனை அடைந்து விட்டதால் அவர்கள் இருளிலே தட்டுத்தடுமாறி அலைந்து, தம் ஞானத்தோடு சில புதிய மூடக் கொள்கைகளையும் வெளிப்படுத்துவதை நீங்கள் காணலாம். அவர்களே பகற்கனவுகளுக்கு இரையாகி விடுகிறார்கள். முகம்மது நபி அவர்கள் தேவ

* Extract from 'Raja-Yoga' ('The Complete Works' Vol. I)

தூதனை காபிரியேல் தம்மிடம் ஒரு மலைக்குகைக்கு வந்ததாகவும் ஹராக்கு என்ற தேவலோகத்துக் குதிரை மீது தம்மை ஏற்றிச் சென்று சுவர்க்கத்தைக் காண்பித்ததாகவும் அறிவுறுத்தினர். இவற்றுடன் முகம்மது நபி அற்புதமான சில உண்மைகளையும் சொன்னர்.

"குர் ஆன்" என்னும் நூலைப் பார்ப்பீர்களாயின், அற்புதமான பேருண்மைகளும், மூட நம்பிக்கைகளும் அதில் கலந்திருப்பது தெரியவரும். இதற்குக் காரணம் என்ன? அந்த மனிதருக்கு தெய்வீக அநுபவ உணர்ச்சி ஏற்பட்டு விட்டது உண்மையே. ஆனல் அந்த உணர்ச்சியை அவர் தற்செயலாகப் பெற்று அறிந்தார் அவர் பயிற்சியடைந்த யோகியல்ல. தாம் செய்வதன் காரணம் அவருக்கே தெரியாது. முகம்மது உலகத்திற்குச் செய்த நன்மை எவ்வளவு என்பதை எண்ணிப் பாருங்கள். அவரது மத வெறியால் விளைந்த பெருந் தீமையையும் பற்றிச் சிந்தியுங்கள். அவரது போதனையினுலே கொல்லப்பட்ட லட்சக்கணக்கான மக்களை எண்ணிப் பாருங்கள். புதல்வரை இழந்த தாய்மார்கள், அநாதைகளாக்கிவிட்ட குழந்தைகள், நாசமாக்கப்பட்ட நாடுகள், கொல்லப்பட்ட லட்சோப லட்சம் மக்கள்—இதையும் எண்ணிப் பாருங்கள்.

முகம்மது போன்ற பெரிய ஆசாரியர்களுடைய வாழ்க்கையை ஆராய்வதால் நாம் இந்தக் கேட்டினைத் தெரிந்து கொள்கிறேம். அப்படியிருந்தாலும்கூட அவர்கள் தெய்வீக உணர்ச்சியைப் பெற்றிருந்தார்கள் எனக் காண்கிறேம். ஒரு தீர்க்கதரிசி உணர்ச்சியோடு இசைந்த மனேபாவ நிலையைப் பெருக்கிக் கொண்டு, சமாதி நிலையை அடையும்பொழுது அவர் சில உண்மைகளை மட்டுமின்றி சில மூட நம்பிக்கைகளையும், மூர்க்கமான வெறியுணர்வையும் கொண்டு வருகிறர். அவரது போதனையின் பெருமை உலகுக்கு உதவுவதுபோல அவரது மூடக் கொள்கை கேட்டினை விளைவிக்கிறது. மனித வாழ்க்கையென்று நாம் சொல்கிற, பொருத்தமில்லாத கொள்கைகள் நிரம்பிய குப்பையிலிருந்து நாம் அறிவைப் பெறவேண்டுமானல் நாம் அறிவையும் கடந்து செல்ல வேண்டும். ஆனல், அதனை ஒழுங்கான பயிற்சியின் மூலம் சாஸ்திர ரீதியான பயிற்சியின் மூலம், மெல்ல மெல்லப் பெற வேண்டும். அத்துடன் எல்லா மூட நம்பிக்கைகளையும் அகற்றிவிட வேண்டும்.

# கண்டனங்கள்

**ஆங்கில மோஸ்தரில் ஆழ்ந்த என் நாட்டுச் சகோதரர்களே !**

......முழுக்க முழுக்க ஐரோப்பிய மயமாகி, வெளிப்பழக்க வழக்கங்களிலும், சிந்தனை முறையிலும், கருத்திலும் ஐரோப்பியரைப் பின்பற்றி நடிக்கிற உங்களைத்தான் சொல்கிறேன் ! இதை முற்றிலும் நன்கு புரிந்து கொள்ளுங்கள். எப்பொழுது பார்த்தாலும் அழுது கண் சிவந்து, உம்மைக் காப்பாற்றும்படி ஐரோப்பியர்களிடம் முறையிடுகிறீர்கள் ! "நாங்கள் தாழ்ந்து விட்டோம்; நாங்கள் காட்டுமிராண்டி நிலைக்கு இழிந்து விட்டோம். ஐயா, ஐரோப்பிய மக்களே ! நீங்கள் தாம் எமது ரட்சகர்கள் ! எங்கள் மீது கருணை காட்டுங்கள். இந்த இழிநிலையிலிருந்து கரையேற்றி விடுங்கள்" என்று பிரார்த்திக்கிறீர்கள். 'கர்த்தருக்குத் துதி' என்று பாடுகிறவர்களே! நீங்களும் புரிந்து கொள்ளுங்கள். 'ஏசு கிறிஸ்து பாரதத்துக்கு வருகிறார்" என்று கீச்சுக் குரல் எழுப்பிப் பாடுகிறீர்கள் ! "நாளடைவில் காலம் நிறைவெய்தும் பொழுது தெய்வீகச் சட்டம், நியாயத் தீர்ப்பு, பூர்த்தியாவதைக் காண்பீர்கள்" என்று கூக்குரலிடுகிறீர்கள். அன்பரே ! ஐயோ, வேண்டாம். ஏசுவோ ஜெஹோவாவோ வரவில்லை. வரவும் மாட்டார்கள். அவர்கள் இன்று தமது சொந்த வீடு வாசல்களைக் காப்பாற்றிக் கொள்வதில் முனைந்திருக்கிறார்கள். நமது நாட்டுக்கு வர அவர்களுக்கு நேரமில்லை.

இந்நாட்டில் அதே பழைய சிவபெருமான் பழையபடி உட்கார்ந்திருக்கிறார். இரத்தம் தோய்ந்த அன்னை காளியை அதே பழைய ஆசார உபசாரங்களுடன் வழிபடுகிறார்கள். கிராமத்து இடைச்சிறுவனான அந்தக் கிருஷ்ணன், அன்பின் திருவுருவம், பழையபடியே குழல் வாசித்து வருகிறான். ஒரு காலத்தில் இந்தப் பழைய சிவபெருமான் தனது காளை வாகனத்தின் மீது ஏறிக்கொண்டு தனது உடுக்கையை அடித்து ஒலி எழுப்பிக் கொண்டே பாரதத்திலிருந்து புறப்பட்டு ஒரு பக்கம் சுமத்ரா, போர்னியா, செலிபஸ், ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் வழியே அமெரிக்கக் கடற்கரை வரை சென்றார். இந்தப் பழைய சிவனார் மறுபக்கம் தமது காளையைத் தட்டி விட்டு, திபேத், சைனா, ஜப்பான் வழியே மேலே சைபீரியா வரை சென்றார். இன்றும் அவ்வாறே செய்து வருகிறார். சீனாவிலும்

---

* Extract from 'The East and the West' ('The Complete Works', Vol. V)

ஜப்பானிலும் அன்னை காளி மக்களுடைய வழிபாட்டைப் பெற்று வருகிறாள். அவளையேதான் கிறிஸ்தவர்கள் உருமாற்றிக் கன்னி மேரியாக்கி கிறிஸ்துவாகிய ஏசுவின் தாயாக வழிபட்டு வருகிறார்கள்.

இமய மலையைப் பாருங்கள்! அங்கே வடக்கில் பழைய சிவனின் இல்லமாகிய கைலாசம் உள்ளது. அங்கே அவரது சிம்மாதனத்தைப் பத்துத் தலையும் இருபது கைகளும் கொண்ட ராவணனாலேயே அசைக்க முடியவில்லை. இப்பொழுது கிறிஸ்தவப் பாதிரிகள் அதை முயற்சிக்கப் போகிறார்களா? வாழ்க! இந்தப் பாரதத்தில் எப் பொழுதும் அதே பழைய சிவபிரான் உடுக்கையை ஒலித்துக் கொண் டிருப்பார்; அன்னை காளி மிருக பலியுடன் வழிபடப்படுவாள்; அன்புக் கினிய கிருஷ்ணன் புல்லாங்குழலை வாசித்தே வருவான். அவர்கள் இமயம் போல உறுதியாக நிற்கிறார்கள். கிறிஸ்தவப் பாதிரியோ, வேறு பாதிரியோ என்னதான் முயன்றாலும் அவர்களை அகற்ற முடியாது.

அவர்களை உங்களால் சகிக்க முடியவில்லை என்றால், தொலைந்து போங்கள்! ஒரு கைப்பிடியளவுள்ள உங்களுக்காக இந்தத் தேசம் முழுவதும் தனது பொறுமையையெல்லாம் இழந்து, சாகும்வரை அலுத்துச் சலித்து வாழ வேண்டுமா? பரந்த உலகம் உங்கள் முன்னே திறந்து கிடக்கிறது. சுதந்திரமாக மேய்வதற்காக வேறு இடங்களில் நிலபுலன்கள் கிடைக்கும். நீங்கள் அங்கெங்காவது ஏன் போய்விடக் கூடாது? ஆனால் இல்லை! அப்படி அவர்கள் செய்யவே மாட்டார்கள். அதைச் செய்வதற்கு வேண்டிய பலம் எங்கிருக்கிறது? பழைய சிவனின் உப்பைத் தின்று அவருக்குத் துரோகம் பண்ணு வார்கள்; மானபங்கப் படுத்துவார்கள். வெளி நாட்டு ரட்சகன் ஒருவனுடைய புகழ் கீதத்தை இசைப்பார்கள்.

அட கடவுளே......நமது நாட்டு மக்களில் சிலர் அன்னியரிடம் போய் நின்றுகொண்டு விம்மியழுகிறார்கள். "நாங்கள் மிகத் தாழ்ந்த வர்கள்; நாங்கள் கீழ்ப்பட்டவர்கள்; எங்களிடம் இருப்பதெல்லாம் பேய்த்தனமான விஷயங்கள்தாம்" என்று கதறுகிறார்கள். ஆம். அது உண்மையாகவே இருக்கலாம். முழுவதுமே உண்மைதான். ஏனெனில் நீங்கள் உண்மையானவர்களென உரிமை கொண்டாடு கிறீர்களே! உங்களை நம்பாமலிருக்க எவ்விதக் காரணமுமில்லை. "நாங்கள்" என்று பேசும்போது தேசம் முழுவதையும் உள்ளடக்கி, நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? மன்றாடிக் கேட்கிறோம், ஐயனே இது என்ன யோக்கியப் பொறுப்பை சேர்ந்தது?

* * *

**வருக, மனிதராய் விளங்குக !***

.. பிறகு நீங்கள்? நீங்கள் யார்?...வாழ்நாள் முழுவதும் வெட்டிப் பேச்சும், வீண் டம்பப் பேச்சும் பேசுகிற நீங்கள் யார்? வந்து, இந்த மக்களைப் பாருங்கள். பிறகு போய் அவமானத்தால் உங்கள் முகத்தை முக்காடிட்டு மறைத்துக் கொள்ளுங்கள். மனவலிமை இல்லாத இனத்தவர்களாகிய நீங்கள் வெளியில் வந்தாலே உங்கள் ஜாதி கெட்டுப் போகுமே. கடந்த பல நூற்றுண்டுகளாகச் சும்மா உட்கார்ந்து கிடக்கிறீர்கள். உங்கள் தலைமீது மூடநம்பிக்கைச் சுமை அதிகரித்துக் கட்டிதட்டி வருகின்றது. ஏனெனில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இந்த உணவை அல்லது அந்த உணவைத் தீண்டலாமா, தீண்டக் கூடாதா என்பதில் சக்தி முழுவதையும் செலவிட்டிருக்கிறீர்கள். தொடர்ந்து சமூகக் கொடுங்கோன்மையின் காரணமாக மனிதத் தன்மையெல்லாம் உங்களிடமிருந்து பிழிந்தெடுக்கப்பட்டு விட்டன. நீங்கள் யார்? எப்படியிருக்கிறீர்கள்? இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

கைகளில் புத்தகங்களுடன் கடற்கரைகளில் உல்லாச நடை போடுகிறீர்கள். ஐரோப்பியர்களின் மூளையில் உதித்த கருத்துக்களில் சில உதிரிக் கருத்துக்களை நீங்கள் ஜீரணிக்காமல் உருப்போடுகிறீர்கள். உங்கள் ஆத்மா முழுவதும் முப்பது ரூபாய்ச் சம்பளமுள்ள குமாஸ்தா வேலை கிடைப்பதற்காகத் துடிதுடிக்கிறது; அல்லது உயர்ந்து போனுல் ஒரு வழக்கறிஞர் ஆக—பாரத நாட்டின் வாலிபர்களுடைய ஆசைக்கெல்லாம் அதுதான் சிகரம்—விழைகிறீர்கள். ஒவ்வொரு மாணவனின் கால்களைச் சுற்றிலும் பசியால் அழுகிற குழந்தைகளின் ஒரு பட்டாளமே சூழ்ந்துள்ளது! உங்களையும், உங்களது புத்தகங்கள், கௌன்கள், பல்கலைக் கழகப் பட்டங்கள் இவையனைத்தையும் சேர்த்து மூழ்கடிக்கப் போதுமான தண்ணீர் கடலில் இல்லாமலா போய் விட்டது?

* * *

**உங்களைத்தான், பாரதநாட்டின் மேல் வகுப்பினரே ! †**

ஆரிய முந்தையர்களின் வம்சத்தில் தோன்றியதாக நீங்கள் எவ்வளவுதான் பெருமையடித்துக் கொண்டாலும், இரவும் பகலும் புராதன பாரதத்தின் புகழ் கீதத்தை எவ்வளவுதான் இசைத்தாலும், உங்கள் குலப்பெருமை யுணர்ச்சியினுல் கர்வமடைந்து சொகுசு நடை போட்டாலும், உங்களைத்தான், பாரதத்தின் மேல் வகுப்பு மக்களே !

---

* Extract from 'Letters of Swami Vivekanand'

† Extract from 'Memoirs of European Travel' ('The Complete Works', Vol. VII)

உங்களுக்கு உயிர் இருக்கிறதா? நீங்கள் சிந்திக்கிறீர்களா? பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்திய மம்மி சவம்போல இருக்கிறீர்கள். 'நடமாடும் அழுகல் சவங்கள்' என்று உங்கள் மூதாதையர்கள் வெறுத்து ஒதுக்கினர்களே, அப்படிப்பட்ட மக்களிடையேதான் பாரதத்தில் எஞ்சியுள்ள வீரிய சக்தியில் சிறிதளவு காணப்படுகிறது. உண்மையில் நீங்கள் தாம் நடைப் பிணங்கள்.

உங்களது வீடுகள், மேஜை நாற்காலிகள் இவை கண்காட்சிச் சாலையில் வைக்கப்படும் பொருள்களைப் போல் தோற்றமளிக்கின்றன. அவற்றில் உயிர் இல்லை. பழங்காலச் சரக்குகள் ஆகிவிட்டன. உங்களுடைய பழக்க வழக்கங்கள், நடத்தை, செய்கைகள், வாழ்க்கை முறைகள் இவற்றை நேரிடையாகக் காண்கிறவன் ஏதாவது பாட்டிக் கதையைக் கேட்கிறதுபோல நினைத்துவிடக் கூடும். ஒருவர் உங்களை நேரிடையாகச் சந்தித்துப் பேசி வந்த பிறகு, வீடு திரும்பினால், கலைக் கூடத்திலுள்ள வர்ண ஓவியங்களைப் பார்த்து விட்டு வந்தது போலவே அவருக்குத் தோற்றமளிக்கும்.

மாயைகள் நிறைந்த இந்த உலகில், நீங்கள்தான் உண்மையான மாயை; புரியாத புதிர்; பாலைவனத்தில் காணப்படும் கானல்நீர்; பாரதத்தின் உயர் வகுப்பினரே, உங்களைத்தான் சொல்கிறேன்! நீங்கள் இறந்த காலத்தின் பிரதிநிதி. அதில் எல்லாவிதமான வடிவங்களும் ஒரே குளறுபடியாக கலந்து கிடக்கின்றன. நீங்கள் இன்றைய நிகழ்காலத்தில் வாழ்வதாக ஒருவர் தம் கண்ணால் கண்டால், அது அவருடைய அஜீர்ணத்தினால் ஏற்பட்ட கெட்ட கனவுதான். நீங்கள் தான் சூனியம்; வருங்காலத்தில் உருப்படியில்லாமல் போகப் போகிற திண்மையில்லாத வஸ்துக்கள். கனவு உலக வாசிகளே, நீங்கள் இன்னும்கூட ஏன் திரிந்து வருகிறீர்கள்? கடந்துபோன பாரதத்தின் சதையற்ற, இரத்தமற்ற, வெற்று எலும்புக் கூடுகளாகிய நீங்கள் ஏன் மண்ணிலே கரைந்து, காற்றிலே கலந்து மறைந்து விடக்கூடாது? ஆகா! எலும்பு மயமான உங்கள் விரல்களில் விலை மதிக்க முடியாத வைர மோதிரங்கள் உள்ளனவே. உங்கள் முன்னோர் அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்தார்கள். நாற்றமடிக்கும் உங்கள் பிணம் புராதனமான நிதி நிறைந்த பெட்டிகளைக் காத்துத் தழுவிக் கொண்டிருக்கிறது. இதுவரை அவற்றை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், கல்வியும் ஞான ஒளியும் சுதந்திரமாகக் கிடைக்கும் இந்த நேரத்தில், உங்கள் வருங்காலச் சந்ததியிடம் அவற்றை ஒப்படைத்து விடுங்கள். ஆம்! உங்களால் முடிந்த அளவு விரைவில் அதைச் செய்யுங்கள். நீங்கள் சூனியத்தில் மூழ்கி மறைந்து விடுங்கள். உங்களுடைய ஸ்தானத்தில் நவபாரதம் எழட்டும்.

நவ பாரதமானது உழவனின் குடிசையிலிருந்து ஏர் பிடித்து வெளிவரும்; மீனவர், சக்கிலியர், தோட்டி இவர்களின் குடிசைகளி

லிருந்து நவ பாரதம் வெளித் தோன்றும். பலசரக்குக் கடைகளி லிருந்து, தோசை விற்கிறவனின் அடுப்படியிலிருந்து நவ பாரதம் தோன்றட்டும். தொழிற்சாலைகளிலிருந்தும், கடையிலிருந்தும், சந்தையிலிருந்தும் நவ பாரதம் காட்சி தரட்டும். தோட்டங்களி லிருந்தும் காடுகளிலிருந்தும், குன்றுகளிலிருந்தும், மலைகளி லிருந்தும், அந்த நவ பாரதம் வெளிவரட்டும்.

இந்தப் பாமர மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கி நசுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். முணுமுணுக்காமல் கஷ்டங்களைச் சகித்திருக்கிறார்கள். அதன் விளைவாக ஆச்சரியகரமான பொறுமை யும் தைரியமும் பெற்றுள்ளார்கள். முடிவில்லாத துன்பத்தை அவர் கள் அநுபவித்ததன் பயனாக, வளையாத ஆண்மைச் சக்தி அவர் களுக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு கைப்பிடி அளவு தானியத்தை வைத் துக் கொண்டு, உயிர் வாழ்ந்து அவர்கள் இந்த உலகத்தையே உலுக்கி ஆட்டி விடுவார்கள். அவர்களுக்கு அரை வயிற்று உணவு கொடுங்கள். பிறகு தோன்றுகிற அவர்களது சக்தியைப் பாருங்கள். இந்த உலகமே கொள்ளாது. ரக்த பீஜனுக்கிருந்த குன்றாத சக்தி இவர்களுக்கும் அருளப்பட்டிருக்கிறது. (ரக்த பீஜன் துர்க்கா சப்த சதியில் வருகிற ஓர் அரக்கன். அவனுடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும் கீழே சிந்தினால் அவனைப் போன்றே மற்றொரு ராட்சதன் தோன்றுவான்) அத்துடன் கூடத் தூய்மையும் நல்லொழுக்கமும் வாய்ந்த வாழ்க்கையிலிருந்து தோன்றுகிற அற்புதமான வலிமை அவர்களுக்கு உண்டு. உலகத்தில் இதனை வேறு எங்குமே காண முடியாது. இதுபோன்ற அமைதி, இதுபோன்ற திருப்தி, இத் தகைய அன்பு, இதுபோன்று மௌனமாகவும் இடைவிடாமல் வேலை செய்து செயல்படுவது, நேரம் வரும்பொழுது இதுபோன்று சிங்கத் தின் பலத்துடன் வேலை செய்வது—இத்தகைய காட்சியை உன்னால் வேறு எங்குதான் காண முடியும்?

இறந்துபோன காலத்தின் எலும்புக் கூடுகளே! அதோ, உங்கள் முன்னால், உங்களது வாரிசுகள்! வருங்கால பாரதம் எதிரே உள்ளது. உங்களிடமிருக்கும் பெருநிதிப் பேழைகளையும் வைரக் கணையாழிகளையும் அவர்களின் முன்னே விரைவில் வீசியெறியுங்கள். நீங்கள் காற்றில் கலந்து மறைந்து போங்கள். இனி ஒருக்காலும் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடுங்கள். உங்கள் காதுகளை மட்டும் திறந்து வைத்தால் போதும். நீங்கள் மறைந்து போகிற அந்தக் கணமே புத்தெழுச்சி பெற்ற பாரதத்தின் முதல் முழக்கத் தைக் கேட்பீர்கள். கோடிக் கணக்கான இடியொலிகள் கலந்தாற் போல உலகெங்கும் எதிரொலி செய்ய "வாஹ் குரு கீ பதேஹ்" 'குருதேவருக்கு ஜே'' என்ற முழக்கம் வானோங்கி எழும்.

* * *

**சைதன்யரின் ‘தெய்வீக அன்பு’ எப்படி உருக்குலைந்து விட்டது!***

ஸ்ரீ சைதன்யர் முற்றும் துறந்த பற்றற்ற பெரும் துறவி. பெண்கள், சிற்றின்பப் பசி இவற்றைச் சிறிதும் அறியாதவர். ஆனால், பிற்காலத்தில் அவரது சீடர்கள் தமது சமயத்தில் பெண்களையும் சேர அநுமதித்தார்கள். அவரது பெயரை வைத்துக்கொண்டு பாகுபாடு இல்லாமல் அவர்களுடன் கலந்து பழகினார்கள். அதன் விளைவாக எல்லாமே பயங்கரக் குளறுபடியாகி விட்டது. பகவான் தமது வாழ்விலே விளக்கிக் காட்டிய அன்பு மார்க்கம் முற்றிலும் சுயநலமற்றது; காமக்கலப்புச் சிறிதும் அற்றது. அத்தகைய காமஉணர்ச்சியற்ற அன்பு பாமரமக்களின் உடமையாக ஒருநாளும் ஆகமுடியாது.

பிற்காலத்தில் வந்த வைஷ்ணவ ஆசாரியர்கள், பகவானுடைய வாழ்விலிருந்த துறவுநிலையை வற்புறுத்திப் போதிப்பதை விடுத்து, அவருடைய மதுரபாவக் கொள்கையைச் சாதாரண மக்களிடையே போதிப்பதில் தங்களது ஆர்வம் முழுவதையும் செலுத்தினார்கள். அந்த உயர்ந்த கொள்கையை, அந்தத் தெய்வீக அன்பின் மகத்துவத்தை, சாதாரண மக்கள் புரிந்து கொண்டு, ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. ஆதலால் ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையேயுள்ள சாமானிய சிற்றின்ப உறவாக அதனை நினைத்து இழிவடைந்தார்கள்.

அத்தகைய முயற்சியினால் என்ன விளையும் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமாயின் நம்முடைய தேசத்தின் இன்றைய நிலையைப் பாருங்கள். மதுரபாவ அன்பு மார்க்கத்தைப் பரவலாகப் போதித்ததால் நமது மக்கள் ஆண்மையை இழந்து பெண்தன்மை படைத்த இனத்தவராகி விட்டார்கள். ஒரிஸ்ஸா மாகாணம் முழுவதும் வீரியமற்ற கோழைகள் வாழும் நாடாக ஆகிவிட்டது. ராதாபிரேமையைக் கடந்த நானூறு ஆண்டுகளாகப் பரப்பி வந்ததால், அதன் பின்னால் ஓடிச்சென்று வங்காளம் தனது ஆண்மைத் தன்மையை அநேகமாக முற்றிலும் இழக்கும் நிலைக்கு வந்துவிட்டது. அழுவதிலும் ஓலமிடுவதிலும் தான் மக்கள் திறமை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதுவே அவர்களது தேசிய சுபாவமாகிவிட்டது. நாட்டு மக்களின் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் நிச்சயமான அறிகுறியான அவர்களது இலக்கியத்தைப் பாருங்கள். சென்ற நானூறு ஆண்டுகளில் வங்கமொழிக் கவிதைகளில் அழுகையும் ஓலமுமே மையக்கருத்தாக அமைந்துள்ளன. உண்மையான வீர உணர்ச்சியைத் தூண்டுகின்ற பாடல்களை அவை வழங்கத் தவறி விட்டன.

---

* Extract from ‘Conversations and Dialogues’ (The Complete Works, Vol. V)

மனதிலே எள்ளளவாவது காம விருப்பம் இருக்கிற வரையில் உண்மையான பிரேமைக்கு அங்கே இடமில்லே. மகத்தான துறவுணர்வு பூண்டவர்களாகவும், மனிதர்களுக்குள்ளே மகா வீரர் களாகவும் உள்ள ஆண் மக்களே அந்தத் தெய்வீக அன்பு மார்க்கத் துக்கு உரியவர்களாவார்கள். மிக உன்னதமான கொள்கையாகிற மதுர பாவனேயைச் சாதாரண மக்கள் கடைப்பிடிக்க நினைப்பார்க ளாயின், அது அவர்களுடைய இதயத்திலே, தனது உலக நிழலாகிய காம விருப்பத்தையே எழுப்பும். தன்னை ஆண்டவனுடைய நாயகி யாக பாவனை பண்ணுகிறவன், தூய உள்ளமற்றவனுயின் அங்ஙனம் தியானிக்கும் பொழுது தன் மனைவியையே நினைத்துக் கொண்டிருப் பான். இதனுல் ஏற்படும் பயன் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது வெளிப்படை.

* * *

**கிறிஸ்தவப் பாதிரிகளே! கிறிஸ்துவின் பெயரால் ஹிந்து சமயத்தைத் தூற்றுவதை நிறுத்துங்கள்***

ஏதோ சில மதங்களுக்கு நான் விரோதி என்பது உண்மையல்ல. பாரதத்திலுள்ள கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு நான் எதிரி என்பதும் பொய்தான். ஆனல் அமெரிக்காவில் அவர்கள் பணம் திரட்டுவதற் காகக் கையாளும் முறைகளை நான் எதிர்த்து ஆட்சேபிக்கிறேன். ஹிந்துத் தாயானவள் தனது குழந்தைகளை கங்கையில் எறிவதாக ஒரு படம் சித்தரிக்கப்பட்டுக் குழந்தைகளின் பள்ளிப் பாடப்புத்தகங் களில் வெளியாகியுள்ளது. இதன் அர்த்தம் என்ன? அதிகமான இரக்கவுணர்ச்சியை எழுப்பி அதிகமான பணம்பெற வேண்டி, தாய் கருப்பு நிறமாகவும், குழந்தை வெள்ளை நிறமாகவும் காட்டப்பட்டிருக் கின்றனர். வேறு சில படங்களில் ஒரு மனிதன் தனது மனைவியைச் சிதையில் வைத்துக் கொளுத்துவதாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் கொளுத்தப்பட்ட அந்த மனைவி பிசாசாக மாறி அம்மனி தனின் எதிரியைத் துன்புறுத்துவதற்காக அப்படி செய்வதாகக் காட்டப்பட்டுள்ளதே, இதன் அர்த்தம் என்ன? பெரிய ரதங்கள் மனிதர்களை நசுக்கிக் கொல்வதாகப் படம் போட்டிருக்கிறுர்களே, அதன் பொருள் என்ன? சில நாட்களுக்கு முன் குழந்தைகளுக்காக ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருந்தது. அதில் இந்த கனவான்களில் (பாதிரிகளில்) ஒருவர் தமது கல்கத்தா விஜயத்தைப் பற்றிக் கதை யாகச் சொல்லுகிறுர். மதவெறி பிடித்த மக்கள் மீது ஏறிக் கல்கத்தா வீதிகளில் ஒரு ரதம் ஓடியதைத் தாம் கண்டதாக இவர் கூறுகிறுர். மெம்பிஸ் என்ற ஊரில் இந்தக் கனவான்களில் ஒருவரின் பிரசங்

* Extract from 'Reply to Madras Address' ('the Complete works' Vol. IV)

கத்தைக் கேட்டேன். பாரத நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் சிசுக்களின் எலும்புகளால் நிறைந்த குளங்கள் இருப்பதாக அவர் கூறினர்.

கிறிஸ்துவின் சிஷ்யர்களாகிய இவர்களுக்கு ஹிந்துக்கள் என்ன செய்து விட்டார்கள்? ஒவ்வொரு கிறிஸ்தவக் குழந்தைக்கும் ஹிந்துக்களைத் "தீயவர்கள், கொடியவர்கள், உலகிலுள்ள பயங்கர மான பிசாசுகள்" என்று அழைக்கக் கற்றுக் கொடுக்கிறார்களே, ஏன்? கிறிஸ்தவரல்லாத அனைவரையும், குறிப்பாக ஹிந்துக்களை, வெறுப் பதற்குக் கற்பிக்கிறார்கள். இந்நாட்டில் குழந்தைகளுடைய ஞாயிற்றுக் கிழமை பள்ளிகளின் பாடத் திட்டத்தில் இப்படிக் கற்பிப்பது ஓர் அம்சமாகும். ஏனெனில் குழந்தைகள் தமது சில்லரைக் காசுகளை அப்பொழுதுதானே தருவார்கள்? சத்தியத்திற்காக இல்லாமல் போனாலும், தமது சொந்தக் குழந்தைகளின் நீதி நெறி உணர்ச்சி பாழாகாமல் இருப்பதற்காகவாவது கிறிஸ்தவப் பாதிரிகள் இது போன்ற காரியங்களை நடக்க விடக்கூடாது. அப்படிக் கற்பிக்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்பொழுது ஈவிரக்கமற்ற, கொடிய மனம் படைத்த ஆண், பெண்களாக ஆவதில் என்ன ஆச் சரியம்? முடிவில்லாத நரகத்தில் நடக்கும் சித்திரவதைகள் அங்கே எரிகிற நெருப்பு, எரிகிற கந்தகம் இவை பற்றி எவரால் மிகப் பயங்கரமாக வர்ணனை பண்ண முடியுமோ அவருக்கு, ஆசாரமுள்ள கிறிஸ்தவர்களிடையே உயர்ந்த மதிப்பு! இந்த நாட்டில், "புத்துயிர் ஊட்டும் பிரசாரம்" என்று செய்கிறார்களே, அதைக் கேட்கப் போய் வந்த எனது நண்பருடைய வீட்டிலிருந்த வேலைக்காரப் பெண் அதன் விளைவாகப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டிய கதிக்கு வந்து விட்டாள். நரகத் தீயும் கந்தகமும் பற்றிய வர்ணனை அவளால் தாளமுடியாத அளவுக்குப் போய்விட்டது. ஹிந்து சமயத்துக்கு விரோதமாகச் சென்னையிலிருந்து வெளியாகும் புத்தகங்களையும்தான் பாருங்களேன். கிறிஸ்தவ சமயத்துக்கு விரோதமாக ஒரு ஹிந்து இதுபோல ஒரு வரியேனும் எழுதினால் பாதிரிகள் அபாயக் கூக்குரல் எழுப்பிப் பழிவாங்கத் துடிப்பார்கள்.

எனது நாட்டுச் சகோதரர்களே! ஓர் ஆண்டுக்கு அதிகமாக நான் இந்த நாட்டில் இருந்திருக்கிறேன். அநேகமாக இந்தச் சமூகத்தின் எல்லா மூலை முடுக்குகளையும் நான் பார்த்து விட்டேன். நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் பாதிரிகள் உலகோரிடம் கூறுவது போல நாம் பிசாசுகளுமல்ல; அதுபோலவே இந்தப் பாதிரிகள் உரிமை கொண்டாடுவது போல, அவர்கள் தேவ தூதர்களுமல்ல. ஒழுக்கமின்மை, குழந்தைக் கொலை, ஹிந்துத் திருமண முறையிலுள்ள தீமைகள் இவைபற்றி இத்தப் பாதிரிகள் எவ்வளவு குறைவாகப் பேசுகிறார்களோ அவ்வளவுக்கும் அவர்களுக்கு நன்மை. சில நா-

களில் உண்மையாக நடக்கிற சம்பவங்களைப் பார்த்தால், ஹிந்து சமுதாயத்தைப் பற்றிப் பாதிரிகள் தீட்டுகிற கற்பனைச் சித்திரம் ஒன்றுமே இல்லையெனத் தோன்றும்; பிறரை தூஷிப்பதற்காகக் கூலி வாங்குகிற மனிதனாக ஆவது என் வாழ்க்கை நோக்கமல்ல. ஹிந்து சமுதாயம் குறைகளற்றது என்று நான் உரிமை கொண்டாட மாட்டேன். பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட துரதிருஷ்டங்களின் விளைவாக ஏற்பட்டுள்ள குறைகள், முளைத்துள்ள தீமைகள் இவை பற்றி என்னைவிட அதிகமாகத் தெரிந்தவர்கள் யாருமிரார். அந்நிய நாட்டு நண்பர்களே! நீங்கள் உண்மையான அநுதாபத்துடன், அழிப்பதற்காக வராமல், உதவுவதற்காக வருவீர்களானால் இறைவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும். ஆனால் தாழ்ந்து வீழ்ந்து கிடக்கும் மக்களினத்தைக் காரணமில்லாமலும் காரணத்துடனும் இடைவிடாமல் நீங்கள் தூஷிக்கிறீர்கள், தூற்றுகிறீர்கள். இதனாலெல்லாம் உங்கள் சொந்த நாடுதான் ஒழுக்கத் தரத்தில் உயர்ந்தது என்பதை வெற்றிகரமாக ஊர்ஜிதப்படுத்துவதாக நீங்கள் நினைத்தால் பச்சையாக நான் உங்களுக்குச் சொல்கிறேன்—ஓரளவுக்காவது நியாயத்துடன் இரண்டையும் ஒப்பிட்டுச் சீர் தூக்கிப் பார்ப்பீர்களாயின், ஹிந்து இனம், உலகிலுள்ள மற்றெல்லா இனங்களையும்விட ஒழுக்கத் தரத்தில் தலை தூக்கி உயர் நிலையில் உள்ளது உங்களுக்குத் தெரியவரும்.

*　　　*　　　*

**மனிதனுக்கும், பணத் தெய்வத்திற்கும் நீங்கள் ஒருங்கே தொண்டாற்ற முடியாது***

உங்களுக்கு ஒரு விஷயம் சொல்வேன். அன்புணர்வற்ற குற்றச்சாட்டாக நான் அதைக் கூறுவதில்லை. நீங்கள் சில மனிதர்களுக்குப் பயிற்சி கொடுத்து, கல்வி கற்பித்து, உடையளித்துச் சம்பளங் கொடுத்து வருகிறீர்கள். எதற்காக? என்னுடைய நாட்டுக்கு வந்து, என்னுடைய முன்னோர்களையும், என்னுடைய சமயத்தையும், மற்ற அனைத்தையும் சபிப்பதற்கும், தூஷிப்பதற்காகவும் தானா? எங்கள் கோவிலுக்கருகே சென்று, "நீங்கள் கல்லைக் கும்பிடுகிறீர்களே, நீங்கள் நரகத்துக்குத்தான் போவீர்கள்" என்று அவர்கள் கூறுவார்கள். ஆனால் முகம்மதியர்களிடம் போய் அப்படிச் சொல்ல அவர்களுக்குத் துணிவில்லை; ஏனெனில் வாள் வந்துவிடும். ஆனால் ஹிந்துவோ மிகமிகச் சாது. அவன் சிரித்துக் கொண்டே சென்று விடுவான். "முட்டாள்கள் பேசிவிட்டுப் போகட்டுமே" என்று கூறுவான். அதுதான் அவனுடைய போக்கு.

---

* Extract from 'A leature delivered at Detroit' ('The Complete works', Vol. VIII).

மக்களைத் தூஷிப்பதற்கும், குற்றஞ்சாட்டுவதற்கும் பயிற்சி தந்து வருகிற நீங்கள், நான் அன்பான நோக்கத்துடன் மிகச் சிறிய ஒரு கண்டனம் தெரிவித்தாலும் உடனே உடல் கூசிக் குறுகிச் சொல்கிறீர்கள்: "எங்களைத் தீண்டாதே. நாங்கள் அமெரிக்கர்கள். நாங்கள் உலகத்திலுள்ள மக்கள் அனைவரையும் குற்றஞ்சாட்டிக் கண்டித்து, சபித்து, தூஷித்து, எதை வேண்டுமானாலும் சொல்வோம்; ஆனால் எங்களை மட்டும் தொடக்கூடாது. நாங்கள் தொட்டாற்சிணுங்கிகள்" என்று கூறுகிறீர்கள்.

நீங்கள் உங்களிஷ்டம் போல் செய்யலாம். அதே நேரத்தில் நானும் ஒன்று சொல்வேன். நாங்கள் இப்பொழுது இருக்கிறபடியே வாழுவதில் எங்களுக்குத் திருப்திதான். அத்துடன் ஒரு விஷயத்தில் நாங்கள் உங்களைவிட மேலானவர்கள். பயங்கரமான பொய்க் கற்பனைகளை அப்படியே நம்பும்படி நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு ஒரு போதும் கற்பிப்பதில்லை. உங்களுக்கு எங்காவது, ஏதாவது, லாபம் கிடைப்பதால் மகிழ்ச்சியடைகிறீர்கள். ஆனால் அங்குள்ள மனிதன் மட்டும் உங்களுக்குக் கொடியவன். உங்களுடைய மதகுருமார்கள் எங்களைக் குறை கூறித் திட்டும்பொழுது ஒரு விஷயம் அவர்களுக்கு நினைவிருக்கட்டும்: பாரத தேசம் முழுவதும் எழுந்து நின்று ஹிந்து மகா சமுத்திரத்துக்கு அடியிலுள்ள எல்லா மண்ணையும் வாரியெடுத்து மேற்கத்திய நாடுகளின் மீது வீசினாலும்கூட நீங்கள் இன்று எங்கள் மீது சேறு வீசுகிற அளவில் தினையளவுகூடப் பதிலுக்குப் பதில் செய்ததாக ஆகாது. எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்? உலகில் யாரையாவது மதம் மாற்றுவதற்காக ஒரு பாதிரியையாவது நாங்கள் வெளியே அனுப்பி வைத்தோமா? "உங்களுடைய மதத்தை வரவேற்கிறோம். ஆனால் எங்களுடைய சமயத்தைப் பின்பற்ற எங்களை விட்டுவிடுங்கள்" என்று உங்களிடம் கூறுகிறோம். எங்களுடைய சமயம், "ஆக்கிரமிப்புச் சமயம்" என்று சொல்லாதீர்கள். நீங்கள் ஆக்கிரமிப்பாளர்களாக இருந்தும் கூட எவ்வளவு பேர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? உலக ஜனத்தொகையில் ஆறு பேர்களில் ஒருவன் சீனப்பிரஜை, பௌத்த மதத்தவன் ஆவான். பிறகு ஜப்பான், திபெத், ரஷியா, சைபீரியா, பர்மா, சயாம் (தாய்லாந்து) முதலிய நாடுகளெல்லாம் உள்ளன. இந்த கிறிஸ்தவ ஒழுக்க நெறியுணர்வு, கத்தோலிக்கச் சர்ச்சு இவை எல்லாமே அந்த நாடுகளிடமிருந்து நீங்கள் இரவல் பெற்றதுதான் என்று நான் கூறினால் அது உங்களுக்குக் கசப்பான உண்மையாகத் தோன்றும்; பிடிக்காது. அது இருக்கட்டும். உங்களுடைய மதமாற்றமெல்லாம் எப்படி நடந்தது? ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமலா? நீங்கள் தற்பெருமை பேசி ஜம்பமடிக்கிறீர்களே, உங்கள் கிறிஸ்தவ சமயம் வாளை உபயோகிக்காமல் எங்காவது வெற்றி கண்டிருக்கிறதா? நீங்கள் அப்படிச் செய்யாமலிருந்த

ஏதாவது ஒரு நாட்டையாவது உலகத்தில் காட்டுங்கள். ஒன்றே ஒன்று காட்டுங்கள். கிறிஸ்தவ சமய வரலாறு முழுவதிலும் ஓர் உதாரணமாவது காட்டுங்கள். இரண்டு கேட்கவில்லை நான்–ஒன்றே ஒன்று! உங்களுடைய மூதாதையர்கள் எவ்வாறு மதம் மாற்றப்பட்டனர் என்று எனக்குத் தெரியும். அவர்கள் ஒன்று, கொல்லப்பட்டார்கள்; அல்லது மதம் மாறினர்கள். அவ்வளவுதான். நீங்கள் எவ்வளவுதான் தற்பெருமை பேசினாலும் முகம்மதிய மதத்தைவிட நீங்கள் நல்லதாக எதையாவது செய்து விட்டீர்களா? "நாங்கள் ஒருவரே தான் உயர்ந்தவர்கள்" என்கிறீர்களே, ஏன்? ஏனெனில் "எங்களால் பிறரைக் கொல்ல முடியும்" என்கிறீர்கள். அரேபியர்களும் அப்படித் தான் சொன்னர்கள். வீண் ஜம்பமடித்துக் கொண்டார்கள். இப்பொழுது அந்த அரேபியன் எங்கே? பாலைவனத்தில் நாடோடியாகத் திரிகிறான். ரோம் நாட்டினரும் தற்பெருமை பேசிக்கொண்டு அப்படித்தான் கூறினர்கள். இப்பொழுது எங்கே அவர்கள்? "சமாதானம் பண்ணி வைக்கிறவர்கள் ஆசிபெற்றவர்களாவர்; உலக சுகங்களை அவர்கள் அநுபவிப்பார்கள்." ஆக்ரமிப்பு விஷயங்களெல்லாம், தரைமட்டமாகி விடுகின்றன. அவை மணல்மீது கட்டப்பட்ட கட்டிடம். அவை நீண்ட நாட்கள் நிலைத்திருக்க முடியாது.

சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டு, போட்டா போட்டியுணர்ச்சியை வலது கையாகவும், சுகபோகங்களை அநுபவிப்பதை லட்சியமாகவும் கொண்ட ஒரு கொள்கை, இன்றோ நாளையோ மடிந்தே தீரும். அத்தகைய காரியங்கள் சாகத்தான் வேண்டும், சகோதரர்களே! நீங்கள் உயிர்வாழ விரும்பினல், உங்களது தேசம் வாழவேண்டுமென்று உண்மையிலேயே நீங்கள் விரும்பினல், கிறிஸ்துவிடம் திரும்பிப் போங்கள் என்று கூறுகிறேன். நீங்கள் கிறிஸ்தவர்களே அல்ல. நீங்கள் நாடு என்ற ரீதியில் கிறிஸ்தவ தேசம் அல்ல. கிறிஸ்துவிடம் திரும்பிச் செல்லுங்கள். தலை சாய்த்துப் படுக்கச் சொந்தமான ஓர் இடம் வைத்துக் கொள்ளாத (சுயநலமற்ற) அவரிடம் செல்லுங்கள்; "பறவைகளுக்குக் கூடு உண்டு. மிருகங்களுக்குத் தங்குமிடமுண்டு. மனிதகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை" என்றார் கிறிஸ்து. ஆனல் சுகபோகங்களின் பேரால் நீங்கள் சமயப்பிரசாரம் செய்கிறீர்கள். விதியின் விளையாட்டுத்தான் என்னே!

நீங்கள் உயிர் வாழ விரும்பினல் இந்த நிலையைத் தலைகீழாகத் திருப்பி மாற்றுங்கள். இந்த நாட்டில் நான் கேட்ட விஷயங்களெல்லாம் வெறும் வெளிவேஷக் கருத்துக்கள்தான். இந்தத் தேசம் உயிர் வாழப் போகிறது என்றல் எல்லாம் அவரிடம் திரும்பிச் செல்லட்டும். கடவுளுக்கும் காசுத் தெய்வத்துக்கும் நீங்கள் ஒரே சமயத்தில் வழிபாடு நடத்தமுடியாது. இந்தச் சுகபோக வஸ்துக்களெல்லாம் கிறிஸ்துவிடமிருந்தா வந்தன? இதுபோன்ற ஆக்கிரமிப்பான, பொய்

ஆசாரங்களை யெல்லாம் கிறிஸ்து ஒப்புக்கொண்டிருக்க மாட்டார். காசுக் கடவுளை வழிபடுவதால் வருகிற செல்வ வளமெல்லாம் நீர்க் குமிழி போல, ஒரு கண நேரத்துக்குத்தான் இருக்கும். உண்மை யான நிரந்தரத்தன்மை இறைவனிடமே உள்ளது. கிறிஸ்துவின் லட்சியத்துடன், இன்றுள்ள ஆச்சரியகரமான வளக் கொழிப்பை இணைக்க முடிந்தால் நல்லதுதான். உங்களால் முடியாது என்றால் இந்தப் போகங்களைக் கைவிட்டு அவரிடம் திரும்புவதே நல்லது. கிறிஸ்து இல்லாமல் மாட மாளிகைகளில் வாழ்வதைக் காட்டிலும், கந்தையணிந்தாலும் அவருடன் வாழ ஆயத்தமாவது மிக உயர்ந்தது.

* * *

**முகம்மது நபி ஒருவர் மட்டுமே உண்மையான தேவதூதர் என்பது இஸ்லாம் சமயத்துக்கே முரணான பேச்சாகும்: ***

ஒவ்வொரு மனிதனும் எழுந்து நின்று, "என்னுடைய தேவ தூதர் ஒருவர் மட்டுந்தான் உண்மையானவர்" என்று கூறினால் அது சரியல்ல. அவனுக்குச் சமயத்தைப்பற்றி ஓர் அட்சரம் கூடத் தெரி யாது. சமயம் என்பது பேச்சோ, தத்துவமோ, அறிவு பூர்வமாக ஏற் பதோ அல்ல. நாம் மனப்பூர்வமாக அநுபவித்து உணருவதுதான் சமயம்; சமயம் என்றால் கடவுளைத் தொட்டு உணருவது. 'உலகெங் கும் வியாபித்துள்ள பரமாத்மாவுடனும், அதனுடை மகத்தான வெளித்தோற்றங்களுடனும் தொடர்பு கொண்ட ஆத்மா நான்" என் பதை உணர்ந்து அநுபவித்துத் தெளிதல் வேண்டும். தந்தையின் வீட்டுக்குள்ளே நீ நுழைந்திருந்தால், அவருடைய குழந்தைகளைப் பார்த்த பிறகும் உன்னால் ஏன் அவர்களைத் தெரிந்து கொள்ள முடிய வில்லை? அவர்களை உன்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை யென் றால் நீ தந்தையாரின் வீட்டுக்குள் நுழையவில்லை என்பதுதான் பொருள். தாயானவள் தன் குழந்தை எப்படி உடை உடுத்தியிருந் தாலும், எப்படி வேஷம் போட்டிருந்தாலும் கண்டுபிடித்து விடுகிறாள். எல்லா யுகங்களிலும் எல்லா நாடுகளிலும் உள்ள உயர்ந்தவர்களான, ஆத்ம ஞானிகளான ஆண்களையும் பெண் களையும் மதித்துப் போற்ற வேண்டும். அவர்களிடையே உண்மை யில் வேறுபாடு இல்லையென்பதைப் பார்க்கவேண்டும். எங்கெல் லாம் சரியான, உண்மையான சமயம் இருக்கிறதோ, தெய்வீக சக்தி எங்கு உள்ளதோ, மனிதனை ஆன்மா நேரிடையாகப் புலன் கள் மூலமாகவே தெய்வீக சக்தியுடன் எங்கே தொடர்பு கொள்ளு கிறதோ, அங்கே எப்பொழுதுமே மனம் விரிவடைந்து எல்லா விடங்களிலும் தெய்வ ஒளியைக் காணத் துணை புரிகிறது.

---

* Extract from 'A Lecture delivered at Pasadena, California' ('The Complete Works', Vol. IV).

முகம்மதியர்கள் இந்த விஷயத்தில் முற்றிலும் பண்படாதவர்கள்; மதச் சார்புள்ளவர்கள். அவர்களது குறிச்சொல் "கடவுள் ஒருவரே; முகம்மதுவே அவரது தேவதூதன்" என்பதாகும். அதைத் தவிர மற்றவையெல்லாம் கெட்டவை என்பது மட்டுமல்ல, உடனடியாக அழித்தே தீரவேண்டியவையாகும். ஒரே கணம் எச்சரிப்பார்கள். அதை உள்ளபடியே நம்பாத ஒவ்வோர் ஆணும் பெண்ணும் கொல்லப்பட்டே தீர வேண்டும். இந்த வழிபாட்டு முறையைச் சாராத எல்லாம் உடனடியாக உடைத்தெறியப்பட வேண்டும். இதைத் தவிர வேறு எதையாவது கற்பிக்கிற புத்தகம் ஒவ்வொன்றும் தீக்கிரையாக்கப்பட வேண்டும். பசிபிக் சமுத்திரம் முதல் அட்லாண்டிக் சமுத்திரம் வரை ஐந்நூறு ஆண்டுகளுக்கு, உலகமெங்கும் இரத்தம் பெருக்கெடுத்தோடியது அதுதான் முகம்மதிய மதம்.

**தன்னைத் தானே கட்டிப்போட்டுக் கொண்டிருக்கும் இனம்: ***

ஒரு மனிதன் எவ்வளவு தூரம் சுயநலமுள்ளவனாக இருக்கிறானோ அவ்வளவுக்கு அவன் நேர்மையொழுக்கம் இல்லாதிருப்பான். ஒரு மக்கள் இனமும் அப்படித்தான் இருக்கும். தனக்குத் தானே அடிமையாக இருக்கும் ஓர் இனம் உலகத்திலேயே மிக மோசமான கொடூரம் வாய்ந்ததாகவும், கொடிய இயல்புள்ளதாகவும் இருக்கும். அரேபியா நாட்டுத் தேவதூதர் நிறுவிய மதத்தைப்போல, இந்தக் கொள்கைகளைத் தீவிரமாக இறுகக் கடைப்பிடித்து வருகிற மதம் உலகில் வேறெதுவும் இல்லை. இவ்வளவு ஏராளமாக இரத்தத்தைச் சிந்தி பிறரைக் கொடூரமாக நடத்திய மதம் வேறெதுவும் இல்லை. குர்-ஆனின் உபதேசங்களின்படி நடக்காதவனைக் கொன்றுவிட வேண்டும் என்று அந்த நூலில் ஒரு தத்துவம் உள்ளது. அவனைக் கொல்வது அவனிடம் தயவுகாட்டுவதாகும். சொர்க்கத்துக்குப் போவதற்கு நிச்சயமான பாதையாம் அது! அங்கே சொர்க்கத்தில் தேவ கன்னிகைகளையும், புலன்வழி சுக போகங்களையும் அநுபவிக்கலாம். ஆகவே முகம்மதிய மதத்தை நம்பாதவர்களைக் கொலை செய்தால் அதெல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கைகளின் விளைவாகவெல்லாம் இரத்த ஆறு ஓடியிருப்பதை நினைத்துப் பாருங்கள்.

---

* Fxtract from 'A Lecture delivered in London' ('The Complete works' Vol. II).

நான்காம் பாகம்

# ஆண்மை ஊட்டுதல்

# அல்லது

# ஊழியர்களை உருவாக்குதல்

# ஆண்மை ஊட்டுதல்

## அல்லது

## ஊழியர்களை உருவாக்குதல்

"தீப்பிழம்பு போன்ற இளைஞர்கள் நமக்குத் தேவை. புத்திசாலித்தனமும் தைரியமும் வாய்ந்து மரணதேவனின் வாய்க்குள்ளே துணிச்சலாக நுழைந்து செல்லுகிறவர்கள், கடலைக்கூட நீந்திக் கடக்க ஆயத்தமானவர்கள் தேவை...... ......அதுபோன்று நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண் களும் தேவை. அவர்களைப் பெறுவதற்காக மட்டுமே முழு மூச்சுடன் முயலுக; வலது பக்கத்திலிருந்தும் இடது பக்கத் திலிருந்தும் புதிதாக ஆட்களைச் சேர்த்து மாற்றி, நமது தூய்மைப் பயிற்சி இயந்திரத்தில் அவர்களைப் பொருத்திப் பண்படுத்திப் பழக்குங்கள்.

இறைவனிடத்திலே தளராத நம்பிக்கையும் புனிதமான பணி செய்கிறோம் என்ற ஊக்கமும், ஏழைகளிடத்தும் வீழ்ச்சியுற்றோரிடத்தும் ஒடுக்கப்பட்டுள்ளவர்களிடத்தும் எல்லையற்ற பரிவும், அந்தப் பரிவு காரணமாக எதிர்த்து நிற்பதில் சிங்கத்தின் துணிவும் கொண்ட ஆயிரமாயிரம் ஆண்களும் பெண்களும் இந்தப் பூமியின் மூலை முடுக்கு களுக்கெல்லாம் செல்ல வேண்டும். நம்முடைய விமோ சனத்துக்கான சமய அறிவுரைகளை, பரோபகாரம் என்ற நமது வேத தத்துவங்களை, சமூக முன்னேற்றத்துக்கான வழிகாட்டும் நற்செய்திகளை, சமத்துவம் என்கிற வேத நெறிகளை அங்கெல்லாம் கொண்டு சென்று மக்களிடையே பரவச் செய்யவேண்டும்.

* * * *

## ஒற்றுமை இயக்கம் *

"என் வாழ்க்கையிலேயே எனது உள்ளத்தை மிகத் தீவிரமாகக் கவர்ந்திழுத்த ஒன்று அமெரிக்காவில் உள்ளது" என்று ஒரு தடவை சுவாமிஜி என் பாட்டியிடம் கூறினர். அவருக்குச் சிறிது கோபமூட்ட விரும்பிய என் பாட்டி, "யார் அந்தப் பெண், சுவாமிஜி ?" என்று வினவினள். சுவாமிஜி சிரிப்புப் பொங்கி வெடிக்க, "ஓ! எந்தப் பெண்ணுமல்ல; அதுதான் ஒற்றுமை இயக்க அமைப்பு" எனக் கூறினர். பிறகு எவ்வாறு ஸ்ரீ ராமகிருஷ்ணரது சீடர்கள் எல்லோரும் வெளியே தன்னந் தனியாகப் போவார்கள் என்றும் ஒரு கிராமத்தை அடைந்ததும் அமைதியாக ஒரு மரத்தடியில் உட்காருவார்கள் என்றும், துயரப் படுகிற மக்கள் தம்மிடம் வந்து ஆலோசனை கேட்பார்கள் என்பதற்காகக் காத்திருப்பார்கள் என்றும் விளக்கினர். அமெரிக்காவில் எல்லாப் பணிகளையும் ஒழுங்குற இணைக்கிற ஒற்றுமை இயக்க முறையால் பெருத்த பலன் ஏற்படுவதைக் கண்டார். ஆனல் பாரதத்தின் குணப்பண்புக்கு எந்த விதமான இயக்கம் ஒத்துவரும் என்பது பற்றி அவருக்குச் சந்தேகம் இருந்தது. ஆகவே மேநாட்டிலிருப்பதில் நல்லதாகக் காணப்படுகிறவற்றைத் தமது சொந்த மக்களின் சிறந்த நன்மைக்காக எப்படி மாற்றியமைத்துப் பயன்படுத்துவது என்ற விஷயத்தில் ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்தினர்.

—மிஸ் கார்னர்

★

**ஜனநாயக அமைப்புக்கு முன்னேடியான தேவைகள்:**

ஒற்றுமை இயக்கம் (சங்கம்) இல்லாமல் உயர்ந்த எதனையும், நிரந்தரமான எதனையும் செய்ய முடியாது என்ற முடிவுக்கு உலக நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்த பிறகு நான் வந்திருக்கிறேன். ஆனல் பாரதம் போன்ற ஒரு நாட்டில் இன்று நாம் அடைந்திருக்கிற வளர்ச்சி நிலையில்– ஜனநாயக அடிப்படையில் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் சமமான உரிமை வழங்கப்பட்டுப் பொதுவாக எல்லோரும் கூடிப் பெரும்பான்மையாக ஓட்டுப்போட்டு முடிவுக்கு வருகிற ஜனநாயக அடிப்படையில் ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பது

---

* 'அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர்' என்ற புத்தகத்திலிருந்து.

நல்ல யோசனையாக இருக்குமென எனக்குத் தோன்றவில்லை. மேலைநாடுகளின் நிலைமை அலாதியானது. நம்மிடையே கூடக் கல்வி பரவப் பரவ, நாம் தியாகம் செய்யக் கற்றுக்கொள்ளும்போது, தனிப் பட்ட மனிதனின் லாப நஷ்டங்களுக்கும் நாட்டங்களுக்கும் அப்பாற் பட்டு எழவேண்டும் என்று கற்றுக் கொள்ளும்போது, மக்கள் சமுதாயத்துக்காகவும், பரந்த நாட்டு நன்மைக்காகவும் வாழத் தெரிந்து கொள்ளும்போது ஜனநாயக அடிப்படையில் வேலை செய்வது சாத்தியமாகலாம். இதனை மனத்திற்கொண்டு தற்சமயம் நமது இயக்கத்துக்கு ஒரு சர்வாதிகாரியை அமைக்க வேண்டும். அவரது சொல்லுக்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டும்; பிறகு தக்க காலம் வரும்பொழுது இயக்கமானது மற்ற அங்கத்தினர்களின் கருத்துக்களின் படியும் சம்மதத்தின் பேரிலும் வழி நடத்தப்படும்.*

* * *

ஹிந்துக்களின் சங்கம்

ஹிந்துக்களுக்குப் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளும் குணத் தையும், பரஸ்பரம் நல்ல குணங்களைப் பாராட்டுகிற குணத்தையும் கற்பிக்கக்கூடிய ஓர் இயக்கம் அத்யாவசியத் தேவையாகும். நான் இந்த நாட்டில் செய்த வேலையைக் குறித்துத் தமது பாராட்டுதலைத் தெரிவிப்பதற்காகக் கல்கத்தா பொதுக்கூட்டத்தில் ஐந்தாயிரம் பேர் களும் மற்ற இடங்களில் நூற்றுக்கணக்கானவர்களும் குழுமியிருந் தார்கள். மிக நல்லதுதான். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரையும் ஓர் அணா கொடுக்கச் சொல்லிக் கேட்டால் கொடுத்திருப்பார்களா? குழந்தைத்தனமாகப் பிறரை எதிர்பார்த்து வாழுவது நமது முழு தேசிய குணப்பண்பாக ஆகிவிட்டது. உணவை அவர்களது வாய்க்கருகே கொண்டு வந்தால் மகிழ்வுடன் சாப்பிட எல்லோரும் ஆயத்தந்தான்; அதிலும் சிலர் சோற்றை வாய்க்குள்ளே ஊட்ட வேண்டும் என்று விரும்புவார்கள்... உனக்கு நீயே உதவிக் கொள் ளாது போனால் உனக்கு உயிர் வாழத் தகுதி கிடையாது.....

பாரதத்தில் மூன்று பேர்கள், ஒற்றுமையாக, ஒரு மனத்துடன் ஐந்து நிமிடம் வேலை செய்ய முடியாது. ஒவ்வொருவரும் அதிகாரப் பதவிக்காகப் போராடுகிறார்கள்; நாளடைவில் இயக்கம் முழுவதுமே இழிநிலைக்குத் தாழ்கிறது. கடவுளே! கடவுளே! பொறாமைப் படாமலிருக்க நாம் எப்பொழுதுதான் கற்றுக் கொள்ளுவோமோ?

* ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபிக்கப்பட்ட அந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடர்களை நோக்கி ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.

இந்நிலையிலிருக்கிற தேசத்தில் வேறுபாடுகள் இருந்தாலும் ஒரு போதும் சாவாத அன்புடன் ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைக்கப் பட்டு, வேலை செய்கிற ஒரு குழுவை உண்டாக்குவது என்பது ஆச்சரியகரமான செயல் இல்லையா? இந்தக் குழு வளர்ந்தே செல்லும். வியக்கத்தக்க தாராள மனப்பான்மையுடன், இறவாத சக்தித் துடிப்பும், முன்னேற்ற விழைவும் கொண்ட இந்தக் குழு வளர்ச்சி யடைந்து நாடு முழுவதும் பரவ வேண்டும். நாடு முழுவதும் மின் அலை அதிர்ச்சியை அது உண்டாக்க வேண்டும். பயங்கரமான அஞ்ஞானம், பரஸ்பரப் பகையுணர்ச்சி, ஜாதியுணர்ச்சி, பழைய காலத்து மடத்தனம், பொறாமை இவையெல்லாம் அடிமைத் தனத்தில் ஆழ்ந்துள்ள இந்நாட்டின் பரம்பரைச்சொத்தாக உள்ளன. இவையெல்லாம் இருந்தாலும் கூட இந்தக் குழுவினர் சமூகத்தின் மயிர்க்கால்கள்தோறும் நுழைந்துவிட வேண்டும்.

* * *

**வேலை முறையில் மூன்று நிலைகள்;**

ஒவ்வொரு பணியும் மூன்று நிலைகளைக் கடந்தே செல்ல வேண்டும். முதலில் அதனை இகழ்ச்சியாக நினைப்பார்கள்; இரண்டா வதாக எதிர்ப்பு வரும்; மூன்றாவதாக அதனை ஒப்புக் கொள்வார்கள். தான் வாழ்கிற காலத்துக்குப் பின்னால் வரப்போவதைச் சிந்தித்துப் பார்க்கிற மனிதனைச் சமுதாயம் நிச்சயமாகத் தப்பாகவே புரிந்து கொள்ளும். ஆகவே எதிர்ப்பும் கொடுமைகளும் வரட்டும், வரவேற் கிறேன். நான் மட்டும் தூய்மையுடனும் உறுதி குலையாமலும் இருக்க வேண்டும்; இறைவனிடத்தில் அபாரமான நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். இந்தக் கஷ்டங்களெல்லாம் நிச்சயமாக மறைந்து போகும்......

**பாராட்டு வேட்டையும் உண்மைப் பணியும் இணைந்து போவது அரிது:**

'மகத்தான பணி ஒன்றைச் சமுதாயத்தில் செய்யவும் வேண்டும்; சமுதாயத்தின் மனம் கோணவும் கூடாது' என்பது நடவாது. அவ்வாறு முயன்றதில் எவரும் எக்காலத்திலும் வெற்றி காணவில்லை. மனச்சாட்சியின் உத்தரவுப்படி ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும். அதன் பிறகு அந்த வேலை சரியானதாகவும் நல்ல தாகவும் இருக்குமாயின் சமூகமானது அவனது சொல்லைக் கேட்டு அவனது பாதைக்குத் திரும்பி விடும். சில சமயம் அந்த மனிதன் செத்து வெகுகாலமான பிறகே அந்நிலை ஏற்படும். நமது உள்ளம் ஆத்மா, உடல் இவை அனைத்துடனும் நாம் பணியில் குதித்து மூழ்கி விடவேண்டும்; ஒரே கருத்துக்காக. ஒரே ஒரு கருத்துக்காக மட்டுந்

தான். மற்ற அனைத்தையும் தியாகஞ் செய்ய ஆயத்தமாகிற வரையில் நாம் வெற்றியின் ஒளியை ஒருக்காலும் காணமாட்டோம்; நிச்சயம் காணவே மாட்டோம்.

மனித குலத்துக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் தமது சொந்த சுக துக்கம், பெயர், புகழ், பலவித ஆசை நாட்டங்கள்— இவற்றை ஒரு மூட்டையாகக் கட்டிக் கடலில் விசியெறிந்துவிட வேண்டும். அதற்குப் பிறகு பகவானிடம் வரவேண்டும். எல்லா மகா புருஷர்களும் அப்படித்தான் சொன்னார்கள்; செய்ததும் அவ்வாறே.

* * *

**மறுபேச்சின்றிக் கீழ்ப்படிதல் :**

யாருக்குக் கீழ்ப்படிதல் தெரியுமோ, அவனுக்குத் தலைமை தாங்கவும் தெரியும். முதலில் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள். இந்த மேலை நாட்டினரிடையே சுதந்திர உணர்ச்சி தீவிரமானதாக இருந்தாலும், கீழ்ப்படிகிற உணர்ச்சியும் அதே அளவுக்குத் தீவிரமாக உள்ளது. நாமெல்லாம் மமதையுள்ளவர்கள். இந்த அகங்காரம் எந்த வேலையையும் நடக்கவிடாது. மகத்தான துணிச்சல், வரம்பில்லாத தைரியம், அபாரமான சக்தித் துடிதுடிப்பு-இவை எல்லாவற்றையும்விட முக்கியமாகப் பரிபூரணக் கீழ்ப்படிதல்-இந்தக் குணங்கள் தனி மனிதனையும் தேசத்தையும் மறுமலர்ச்சி நிலைக்கு இட்டுச் செல்லுகின்றன.

இங்கே எல்லோரும் தலைமை தாங்க விரும்புகிறார்கள்; கீழ்ப்படிய எவருமில்லை. பெரிய வேலைகளைச் செய்யும்போது, தலைவனின் கட்டளைகளை மறுபேச்சின்றிக் கீழ்படிந்து நிறைவேற்ற வேண்டும். மடத்தின் சாக்கடையைச் சுத்தம் செய்வதில், எஞ்சியுள்ள எனது வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும் என்று எனது ‘குரு பாயி’ சகோதரர்கள் கூறினால் அந்தக் கட்டளையை எவ்வித எதிர்ப்பு முணுமுணுப்புமின்றி கீழ்ப்படிந்து கட்டாயமாக நிறைவேற்றுவேன் என்று தெரிந்து கொள்ளுங்கள். பொது நன்மையைக் கருதி வருகிற கட்டளையை, எவ்விதமான சிறு முணுமுணுப்புமின்றி கீழ்ப்படிந்து நிறைவேற்ற யாருக்குத் தெரிகிறதோ அவன் மட்டுமே உயர்ந்த தளபதியாக ஆகமுடியும்.

கீழ்ப்படிதலாகிற நல்ல குணத்தைப் பழக்கிக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் உங்களது சொந்த நம்பிக்கையைக் கைவிட்டுவிடக் கூடாது. மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் எந்த

வேலையையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவர, ஒரு மையப் புள்ளியில் திரட்டி ஒற்றுமைப்படுத்த முடியாது. தனிப்பட்ட சக்திகளை இப்படித் திரட்டி ஒரு மையத்தில் இணைக்காமல், எந்தப் பெரிய காரியத்தையும் நிறைவேற்ற முடியாது.

* * *

**சகாக்களைப் பாராட்டி, குறைகளை இதமாக எடுத்துச் சொல்லுங்கள்:**

எந்த ஒருவருடைய வழித்துறைகளையும் குலைக்காதீர்கள். குறை கூறுவதை அடியோடு விட்டுவிடுங்கள். வேலை செய்கிறவர்கள் சரியாக வேலை செய்து வருவதாக உங்களுக்குத் தெரிகிறவரையில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்கள் தவறிழைப்பதாகத் தோன்றும்போது, சாவதானமாக அவர்களது பிழைகளை அவர்களுக்கு உணர்த்திக் காட்டுங்கள். எல்லாக் குழப்பங்களுக்கும் விஷமங்களுக்கும் மூலகாரணம் ஒருவரையொருவர் குற்றங் குறை கூறுவதுதான். பல இயக்கங்கள் நிலைகுலைந்து வீழ்ச்சியுறுவதில் இதுவேதான் முக்கிய காரணமாக இருக்கிறது.

* * *

**பரஸ்பர அன்பு:**

நீங்கள் ஏற்றெடுத்திருக்கிற காரியத்தில் வெற்றி பெறுவது உங்களது பரஸ்பர அன்பைத்தான் முற்றிலும் சார்ந்துள்ளது. கடும் பகையுணர்ச்சியும், பொறாமையும், மமதையும் இருக்கிறவரையில் நல்ல காலமே வராது..

உங்களது சகோதரர்களது அபிப்பிராயத்துக்கு விட்டுக் கொடுக்க எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும், எப்பொழுதும் சமாதானமாக, சமரசமாகப் போக முயலுங்கள். இதுதான் முழு ரகசியம்.

**வியாபார ரீதியான நேர்மையும் கண்டிப்பும் இருக்க வேண்டும்:**

பாரதத்தில் நடக்கிற எல்லாக் கூட்டு முயற்சிகளும் ஒரு பாபத்தின் பளுவினால் மூழ்கி மாய்ந்து போகின்றன. நாம் பொதுப் பணிகளில் இன்னும் கடுமையான, வியாபார ரீதியான கொள்கைகளை வகுத்து வளர்க்கவில்லை. காரியம் என்றால் காரியம்தான். அதில் கண்டிப்பும் நாணயமும் வேண்டும். அதில் நட்பு எதுவும் குறுக்கிடக் கூடாது. தனது பொறுப்பிலுள்ள எல்லாவற்றையும் பற்றி மிக மிகத் தெளிவான கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை ஒரு போதும், என்ன

வானாலும், வேறெந்த வேலைக்காவும் பயன்படுத்தக் கூடாது. அடுத்த கணம் பட்டினி கிடக்க வேண்டியிருந்தாலும் சரி, பரவா யில்லை. இதுதான் வியாபார நேர்மை, நாணயம்.

**சாசுவதமான இயக்கத்தின் ரகசியம் :**

யார் வாழ்ந்தாலும், யார் இறந்தாலும் கவலையில்லை. தானாகவே வேலை செய்துகொண்டு போகக்கூடிய ஓர் இயந்திரத்தை உண் டாக்கி வைக்கவேண்டும். பாரதீயர்களாகிய நம்மிடம் ஒரு பெரும் குறை உள்ளது. சாசுவதமான ஒரு இயக்கத்தை நம்மால் உண்டாக்க முடியாது. அதற்குக் காரணம் என்னவெனில் அதிகாரப் பொறுப்பை பிறருடன் பகிர்ந்து கொள்ள நாம் ஒருபோதும் விரும் புவதில்லை. நாம் மறைந்துபோன பிறகு என்ன ஏற்படும் என்பது பற்றி நாம் எப்பொழுதுமே சிந்திப்பதில்லை.

* * *

## தலைமை தாங்கும் திறமை

**ஒழுக்கத்தின் தூய்மை:**

ஒரு தலைவனிடம் ஒழுக்கமில்லாவிட்டால் அவனிடம் மக்களுக்கு பக்தி ஏற்பட முடியாது. அவனிடம் மாசுமறுவற்ற தூய்மை இருக்கு மாயின் மக்களுக்கு அவனிடம் நிரந்தரமான பக்தியும் நம்பிக்கையும் நிச்சயமாக இருக்கும்.

**மக்களை இணைத்து வழி நடத்துகிற பிறவிக் குணம் :**

ஒரு வாழ்வில் ஒருவன் தலைவனாக ஆக்கப்படுவதில்லை. அதற் காகவே அவன் பிறவியெடுக்க வேண்டும். ஏனென்றால் ஒரு தலை வனுக்குத் தோன்றக்கூடிய பிரச்னை இயக்கத்தை அமைப்பதோ, திட்டங்கள் போடுவதோ அல்ல. பலவாறாகப் பிரிந்து வேறுபட்ட தன்மைகளுள்ள மக்களை, அவர்களனைவருக்கும் பொதுவான அநு தாப உணர்ச்சிகளை ஒட்டிய பாதையில் ஒன்றாக இணைத்து இட்டுச் செல்வதுதான் ஒரு தலைவனுக்கு வரக்கூடிய பரீட்சை; உண்மை யான சோதனையாகும். இந்தக் காரியத்தை அவன் தன்னையறி யாமலேயே, சகஜமாகவே செய்ய வேண்டும். முயற்சி செய்து ஒருக் காலும் செய்ய முடியாது.

**தொண்டும், அன்பும் தலைமை தாங்குவதற்கு முதற் தேவைகள் :**

தலைமை தாங்குகிற பாத்திரத்தை, பொறுப்பை, ஏற்றுக் கொள் வது மிக மிகக் கஷ்டமான காரியமாகும். தலைமை தாங்குகிறவன்

அடியார்க்கடியானக (தாஸஸ்ய தாஸ:) இருக்க வேண்டும். ஆயிரக் கணக்கான உள்ளங்களுக்குத் தன் உள்ளத்தில் அவன் இடந்தர வேண்டும். தினையளவேனும் பொறாமையோ, சுயநலமோ அவனுக்கு இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் அவனல் தலைவனக ஆகமுடியும். முதலாவதாகப் பிறவியின் மூலமும் பின் சுயநலமற்றிருப்பதன் மூலமாகவும் தலைவன் தோன்றுகிருன்.

**படைத் தலைவனின் தீரம் என்ருல் அது ஆணவ அகம்பாவமல்ல, ஆத்மத் தியாகமாகும்:**

...ஒருவன் எவ்வாறு தொண்டாற்ற வேண்டும்? எப்படிப் புலன்களை அடக்க வேண்டும்? இவற்றை ஒரு மனிதன் ஆரம்ப நிலையிலே தெரிந்து கொள்ளவேண்டும். அவனை அப்படித் தெரிந்து கொள்வதற்குத் தூண்டுவது படைவீரனின் அஞ்சா நெஞ்சம்தான். அது எங்கே இருக்கிறது? இந்த அஞ்சா நெஞ்சமென்பது ஆணவ அகம்பாவ உணர்ச்சியல்ல. அது ஆத்மத் தியாக உணர்ச்சியாகும். ஒரு மனிதன் மற்றவர்களது உள்ளங்களையும் வாழ்க்கையையும் கட்டியாண்டு, அவர்களுக்குக் கட்டளையிட்டு வழி காட்டுவதற்கு முன்னல், அவன் தனக்கு வரக்கூடிய கட்டளைச் சொல்லைக் கேட்ட விநாடியே முன்னேறிச் செல்லவும், தன் உயிரை அர்ப்பணிக்கவும் ஆயத்தமாக இருந்து தீர வேண்டும். முதன் முதலில் ஒருவன் தன்னைத் தானே அர்ப்பணித்துத் தியாகம் செய்ய வேண்டும்.

**எதிர்ப்பின் கூடுமைத் தாக்குதலைத் தலைவன்தான் தாங்க வேண்டும்:**

பாரதப் படைவீரன் போர்க்களத்தில் கோழைத்தனத்தை வெளிக்காட்டுகிற ரீதியிலா நடந்து கொள்கிருன்? கிடையாது. ஆனல் அவர்களுக்குத் தக்க தலைவர்கள் கண்டிப்பாகக் கிடைக்க வேண்டும். ஜெனரல் ஸ்ட்ராங் என்ற என் ஆங்கில நண்பர் சிப்பாய்க் கலகம் என்ற சுதந்திரப் போரின்போது பாரதத்திலிருந்தார். அந்நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல கதைகளை எனக்குக் கூறுவார். ஒருநாள் பேச்சு வாக்கில் அவரிடம் "சிப்பாய்களிடம் போதுமான அளவில் துப்பாக்கிகளும் ரவைகளும் உணவுப் பொருள்களும் கைவசமிருந்தும், யுத்த அநுபவத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக அவர்கள் இருந்தும் கூட ஏன் தோற்றுப் போனர்கள்?" என்று வினவினேன். அவர் அதற்குப் பதிலளிக்கையில், "சிப்பாய்களின் தலைவர்கள் முதலில் தாங்கள் முன்னேறிச் சென்று போரிடுவதற்குப் பதிலாகப் பின்னணியில் பத்திரமான இடத்தில் இருந்து கொண்டு, "வீரச் சிறுவர்களே! போரிடுங்கள், போரிடுங்கள்" என்று கூச்சல் மட்டும் போட்டு வந்தார்கள்" என்றுகூறினர். ஆனல் படைத்தலைவன் முதலில் முன் சென்று மரணத்தை எதிர் கொண்டழைத்தாலன்றி கீழதிகாரிகளும் படைவீரர்களும் முழுமனதுடன் போரிடமாட்டார்கள்.

எல்லாத் துறைகளிலும் நிலைமை இவ்வாறுதான் உள்ளது. "தலைவனாக இருப்பவன் தனது தலையை அர்ப்பணம் செய்ய வேண்டும்." ஒரு லட்சியத்துக்காக உனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய உன்னால் முடிந்தால் அப்பொழுதுதான் நீ தலைவனாக ஆகமுடியும். தேவைப்படுகிற தியாகத்தைச் செய்யாமலே நாமெல்லோரும் தலைவராக ஆக விரும்புகிறோம். அதனால் நாம் செய்கிற காரியங்களெல்லாம் பலனளிக்காமல் சுழியாகின்றன. நம்முடைய சொல்லுக்கு எவருமே செவி சாய்ப்பதில்லை.

**தலைவன் பாரபட்சமற்றவனாகவும் தனிச் சார்பு அற்றவனாகவும் இருக்க வேண்டும்.**

தீமைகளுக்கு முக்கியமான காரணம் ஓர வஞ்சனை காட்டுவதேயாகும். எல்லோரிடமும் காட்டுகிற அன்பைவிட ஓரிருவரிடம் அதிகமாக அன்பு காட்டினால், வருங்காலத்தில் தொல்லைகளுக்கான விதைகளை விதைத்து விட்டீர்கள் என்பதை நிச்சயமாக நம்புங்கள்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பிரித்து வைத்து அதற்கு ஏற்றபடி அன்பு காட்டுகிறவன் ஒருநாளும் தலைவனாக ஆக முடியாது. எவருடைய அன்புக்கு முடிவில்லையோ, உயர்வு தாழ்வுகளைப் பற்றிச் சிந்திக்க எவர் ஒரு போதும் முனைவதில்லையோ, அவரது கால்களின் கீழ் உலகம் முழுவதும் வந்து வீழ்ந்து கிடக்கும்.

பல பேர் அநேகமாகத் தமது அன்பு முழுவதையும் என்மீது சொரிவதை நான் காண்கிறேன். ஆனால் அதற்கு பதிலாக நான் எனது முழு அன்பையும் ஒரு தனி மனிதனுக்கும் அளித்துவிடல் கூடாது. ஏனெனில் அப்படிச் செய்யும் அதே நாளில் எனது பணி முழுவதும் படுநாசமாகி விடும். தனி மனிதச் சார்பில்லாத எனது நோக்கை, எனது பார்வையைப் புரிந்து கொள்ளாத சிலர், அவர்கள் தமது முழு அன்பையும் அளித்ததற்குப் பதிலாக நானும் அளிப்பேன் என்று எதிர்பார்க்கலாம். முடிகிற அளவுக்கு அதிகமான பேர்களுடைய உற்சாகம் நிறைந்த அன்பு எனக்குக் கிடைக்க வேண்டும். இந்த வேலையைச் செய்வதற்கு அது அத்தியாவசியமாகும். அதே நேரத்தில் நான் முற்றிலும் தனிச்சார்பு அற்று வாழ வேண்டும். இல்லையேல் பொறாமையும், பூசலும், வேலைஎல்லாவற்றையும் குலைத்து அழித்துவிடும். ஒரு தலைவன் எப்பொழுதும் தனிச் சார்பு அற்றவனாகவே இருந்து தீர வேண்டும்.

**அநுதாபத்தாலும் சகிப்புத் தன்மையாலும் தலைவன் மக்களைக் கூட்டி இணைத்து மாற்றி உருவாக்க வேண்டும்:**

தனது மற்றச் சகோதரர்களைப் பற்றி அவதூறு பேச யாராவது உன்னிடம் வந்தால் அந்தப் பேச்சைக் கேட்க அடியோடு மறுத்து

விடு. அதைக் கேட்பதுகூட பாபம். வருங்காலத் தொல்லைகளுக்கான கிருமி அதில் அடங்கியுள்ளது.

அத்துடன் எல்லோருடைய குற்றங் குறைகளையும் சகித்துக் கொள். லட்சக்கணக்கில் ஒருவன் குற்றம் புரிந்தாலும் அவற்றை மன்னித்துவிடு. சுயநலமின்றி நீ எல்லோரையும் நேசிப்பாயானால், மெல்ல மெல்ல அவர்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் நேசித்துக் கொள்ள ஆரம்பிப்பார்கள்: பிறருடைய நலனை ஒட்டிச் சார்ந்துதான் தம்முடைய நலனும் உள்ளது என்று அவர்களுக்குப் பூரணமாகப் புரியும் பொழுது அவர்களில் ஒவ்வொருவரும் பொறாமையைக் கை விட்டு விடுவார்கள். ஏதாவதொரு காரியத்தை ஒருமிக்க, ஏகமனதாகச் செய்வது என்பது நமது தேசியப் பண்பிலேயே இன்று கிடையாது. ஆகவே அந்த உணர்ச்சியை மிகுந்த ஜாக்கிரதையுடன் நீங்கள் துவங்கி வைத்துவிட்டுப் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும்.

'குழந்தையைப் போல்' வழி நடத்துபவனே தலைசிறந்த தலைவனாவான் :

பிறருடைய தலைமையின் கீழ் வேலை செய்யும்போது சிலர் மிகச் சிறப்பாக வேலை செய்கிறார்கள். ஒவ்வொருவருமே தலைமை தாங்குவதற்காகப் பிறக்கவில்லை. இருப்பினும் குழந்தையைப்போலத் தலைமை தாங்கிச் செல்லுகிறவன்தான் உயர்ந்த தலைவனாவான். குழந்தை வெளிப்பார்வைக்கு ஒவ்வொருவரையும் சார்ந்து, நம்பி வாழ்ந்தாலும் அது குடும்பத்தில் ராஜாவாக விளங்குகிறது. குறைந்த பட்சம், என்னுடைய சிந்தனைப்படி அதுவே தான் தலைமையின் ரகசியம்.

தான் தலைமை தாங்குவதாக ஒருவன் சற்றேனும் விளம்பரப் படுத்திக் கொண்டால் அது பிறர் மனதில் பொறாமையை மூட்டி எல்லாவற்றையும் நாசமாக்கி விடுகிறது.

* * *

## உண்மையான ஆசிரியரின் பண்பு

ஆசிரியர் ஒளி பரப்புகிறவர் :

ஊழியர்கள் என்று அழைக்கப் படுகிறவர்களை விட பகவானிடம் தம்மை ஒப்படைத்து விட்ட மனிதர்கள் அதிகமான காரியங்களைச்செய்கிறார்கள். பிறருக்கு உபதேசம் பண்ணுகிறவர்களின் ஒருபெரும் படையைவிடத் தன்னைத் தானே பரிபூரணமாகத் தூய்மைப் படுத்திக் கொண்ட ஒரு மனிதன் அதிகமான சாதனைகளைச் சாதிக்கிறான். தூய்மை, மௌனம் இவற்றிலிருந்தே ஆற்றல் பிறக்கிறது.

**ஆசிரியரின் தனிச் சிறப்பு:**

ஒரு நண்பர் இங்கிலாந்தில் ஒரு தடவை என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "நாம் ஆசிரியருடைய தனிப்பட்ட வாழ்வின் தகுதியை எதற்காக நோக்கவேண்டும்? அவர் கூறுவதைச் சீர்தூக்கிப்பார்த்து, அதை ஏற்க வேண்டியது தானே நம் வேலை?'' என்று வினவினர். அது அப்படியல்ல. ஒருவர் எனக்குச் சிறிது கதி சாஸ்திரத்தையோ (டைனமிக்ஸ்) ரசாயன சாஸ்திரத்தையோ அல்லது பௌதிக விஞ்ஞானத்தில் ஏதாவதொரு பகுதியையோ கற்பிக்க விரும்பினல் அவருடைய ஒழுக்கப் பண்பு எப்படியாவது இருக்கலாம். எப்படி இருந்தாலும் அந்நிலையில் கூட கதி சாஸ்திரத்தை அல்லது வேறொரு விஞ்ஞானக் கலையை எனக்குக் கற்பிக்க அவரால் முடியும். ஏனெனில் பௌதிக விஞ்ஞான சாஸ்திரங்களுக்குத் தேவையான அறிவு வெறும் புத்தியையே சார்ந்ததாகும். அது மனிதனுடைய புத்தி சக்தியைப் பொறுத்ததாகும். அந்தக் கலையில் ஒரு மனிதனுக்கு அபாரமான அறிவு ஆற்றல் இருந்தும், அவனது ஆத்மா சிறிதளவுகூட வளர்ச்சியடையாமல் இருக்க முடியும். ஆனல் ஆத்மிக சாஸ்திரங்களைப் பொறுத்தவரை எந்தக் கட்டத்திலாயினும் சரி, ஆரம்ப நிலை முதல் முடிவு நிலைவரை, தூய்மையற்ற ஓர் ஆத்மாவிடம் எந்தவிதமான ஆத்மிக ஒளியும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஆத்மாவினல் என்ன கற்பிக்க முடியும்? அதற்கு ஒன்றுமே தெரியாது. ஆத்மிக சக்தி என்பது தூய்மைதான்.

சமயத்தைப் போதிக்கிற ஆசிரியர் எப்படிப்பட்டவர் என்பதை முதன் முதலாக நாம் கவனிக்க வேண்டும். பிறகு தான் அவருடைய சொல்லுக்கு மதிப்பு ஏற்படுகிறது. ஏனெனில் அவர் சக்தியைப் பரப்புகிறவர் ஆவார். அவரிடம் ஆத்மிக சக்தி இராவிட்டால் அவர் எதைத் தான் பரப்பமுடியும்? ஓர் உதாரணம்: வெப்பம் தருகிற வெப்பத் தகடு (ஹீட்டர்) சூடுள்ளதாக இருந்தால், உஷ்ண அலைகளை அதனல் பரப்ப முடியும். அப்படிச் சூடாக இல்லாவிட்டால், அதனல் சூடு பரப்ப முடியவே முடியாது. சமய போதகர் நிலையும் அப்படியேதான். சமய போதகர் தனது மன அலைகளை மாணவனின் மனதுக்கு அனுப்புகிருர். வெறுமனே மூளைச் சக்திகளைத் தூண்டிவிடுவதல்ல அவர் வேலை. தம்மிடமிருக்கும் சக்தியைப் பாய்ச்சி மாற்றிக் கொடுப்பதுதான் ஆசிரியர் வேலை. உண்மையான புலனுக்குத் தெரிகிற ஒரு சக்தி ஆசிரியரிடமிருந்து வெளிப்பட்டு மாணவனை அடைந்து அங்கே அவனது மனத்தில் வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறது. ஆகவே ஆசிரியர் உண்மையானவராக இருக்க வேண்டும் என்பது அவசியமான நிபந்தனையாகும்.

சில சமயங்களில் மிக அழகான சொற்பொழிவுகளை நாம் கேட்கிருேம். மிக அற்புதமான தர்க்க வாதங்களுடன் உபந்நியாசம் செய்வ

தைக் கேட்கிறோம். வீட்டுக்குப் போகிறோம். எல்லாம் மறந்து போகிறது. வேறு சில சமயங்களில் நாம் ஒரு சில வார்த்தைகளையே, மிகச் சாதாரணமான சொல்லமைப்புடன் கேட்கிறோம். அவை நமது வாழ்வினுள் புகுந்துவிடுகின்றன. நமது உடலின் பிரிக்க முடியாத அங்கமாக ஆகிவிடுகின்றன. நிரந்தரமான விளைவுகளை உண்டாக்குகின்றன. தான் கூறும் சொற்களில் தனது ஆத்ம சக்தியைப் புகுத்த முடிகிற மனிதனின் வார்த்தைகளுக்குப் பலன் ஏற்படுகிறது. ஆனால் அம்மனிதனுக்கு அபாரமான தனித்துவச் சக்தி இருக்க வேண்டும். எல்லாப் போதனைகளிலும் கொடுக்கல், வாங்கல் பொதிந்து உள்ளது. ஆசிரியர் கொடுக்கிறார்; மாணவன் வாங்குகிறான். ஆனால் ஒருவரிடம் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கவேண்டும்; வாங்கிக்கொள்கிறவனும் பெறுவதற்கு ஆயத்தமாகத் திறந்த மனத்துடன் இருக்கவேண்டும்.

ஆசிரியருடைய வேலைப் பொறுப்பு:

(1) மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி எனப்படும்.

(2) மனிதனுக்குள் புதைந்திருக்கும் தெய்விகத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயம் எனப்படும்.

ஆகவே இந்த இரண்டு விஷயங்களிலும் ஆசிரியர் செய்ய வேண்டிய ஒரே கடமை, மாணவனின் பாதையிலுள்ள எல்லாத் தடைக் குறுக்கீடுகளையும் அகற்றுவதேயாகும். நான் எப்பொழுதும் கூறுவது போல, தடைகளை அகற்றிய பின்னர் மனிதனின் மீது கை வைக்க வேண்டாம். எல்லாம் சரியாகப் போய் விடும். பாதையைத் தங்குத் தடையில்லாததாக்குவதே நமது கடமை. இறைவன் மீதியிருப்பதைச் செய்து கொள்வான்.

எதிர்மறை எண்ணங்கள் மனிதனைப் பலவீனப்படுத்துகின்றன:

எதிர்மறை எண்ணங்கள் மனிதனைப் பலவீனப்படுத்துகின்றன. சில பெற்றோர்கள் எப்பொழுது பார்த்தாலும் தமது பிள்ளைகளைப் படிக்கும்படியும், எழுதும்படியும் வற்புறுத்துவார்கள்; "உனக்கு படிப்பே வராது, நீ முட்டாள்" என்று பலவாறாகத் திட்டுவார்கள். அதேபோல் எத்தனையோ பையன்கள் முட்டாள்களாகவே மாறிவிடுகிறதை நீங்கள் கண்டதில்லையா? பையன்களிடம் அன்பாகப் பேசி அவர்களை உற்சாகப்படுத்தினால் நாளடைவில் அவர்கள் முன்னேறுவது திண்ணம். சிறுவர்களுக்கு எது நல்லதாகப் பொருந்துகிறதோ அதுவே உயர்ந்த தத்துவச் சிந்தனைத் துறையில் சிறுவர்களாக இருப்பவர்களுக்கும் பொருத்தமாகும். அவர்களுக்கு ஆக்கக் கருத்துக்களை அளித்து வந்தால் ஆண்மையுள்ளவர்களாக அவர்கள் வளர்ந்து தம்மையே நம்பி வாழக் கற்றுக் கொள்வார்கள். மொழியிலும்

இலக்கியத்திலும், கவிதையிலும் கலையிலும் ஆகிய எல்லாவற்றிலுமே ஈடுபட்டுள்ள மனிதர்களின் சிந்தனையிலும் செயலிலும் உள்ள தவற்றை நாம் சுட்டிக்காட்டக் கூடாது. அந்தந்தக் காரியங்களை எவ்வழியில் செய்தால் இப்பொழுதுள்ளதைவிட நல்ல முறையில் செய்து முடிக்க முடியும் என்பதையே சுட்டிக் காட்ட வேண்டும். குறைகளைச் சுட்டிக் காட்டுவது ஒரு மனிதனுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்துகிறது. நாங்கள் உபயோகமற்ற உதவாக்கரையென்று கருதியவர்களைக் கூட ஸ்ரீ ராமகிருஷ்ணர், உற்சாகப்படுத்தி அதன் மூலம் அவர்களது வாழ்வின் பாதையையே திருப்பிவிட்ட முறையைக் கண்டிருக்கிறோம். அவர் போதனை செய்கிற முறையே அலாதியானது, அற்புதமானது.

* * *

## உண்மையிலேயே வெற்றிகரமான வாழ்வின் ரகசியம் அல்லது 'வேலை' செய்வதில் உள்ள விஞ்ஞான முறையும் கலையும்

உள்ளத்தையும் மூளையையும் உயர் லட்சியங்களால் நிரப்பி வையுங்கள்:

தசைகளின் மூலமாகச் சிறிதளவு சக்தியை வெளிப்படுத்துவதற்கு "வேலை" என்று பெயர். ஆனால் சிந்தனை எங்கே இல்லையோ, அங்கே வேலையும் இராது. ஆகையால் உங்களது மூளையை உயர்ந்த சிந்தனைகளால், மகோன்னதமான லட்சியங்களால் நிரப்பி வையுங்கள். இரவும் பகலும் அவற்றை உங்கள் கண்முன் வையுங்கள்; அதிலிருந்து மகத்தான வேலை உருவாகி வெளிவரும்.

வானத்தை எல்லோரும் பார்க்க முடியும். நிலத்தில் ஊர்ந்து செல்கிற புழுவும் கூட நீலவானத்தைப் பார்க்கத்தான் செய்கிறது. ஆனால் வானத்திலிருந்து அது எவ்வளவு தூரத்திலிருக்கிறது பாருங்கள்! நமது லட்சியமும் அப்படித்தான் இருக்கிறது. அது நெடுந்தொலைவில் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே நேரத்தில் நாம் அதனை அடைந்தேதான் தீர வேண்டும். ஈடு இணையற்ற மகோன்னதமான ஒரு லட்சியத்தை நாம் கண்டிப்பாக வைத்துக் கொள்ளதான் வேண்டும். துரதிர்ஷ்டவசமாகப் பெரும்பான்மையான மக்கள் தமது இருண்ட வாழ்க்கையில் எந்த ஒரு லட்சியமும் இன்றித் தட்டுத் தடுமாறி அலைகிறார்கள். லட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள மனிதன் ஆயிரம் தவறுகள் இழைக்

கிறான் என்றால் லட்சியமற்றவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்கிறான் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆகவே லட்சியம் ஒன்றை வைத்துக் கொள்வது மிக நல்லது. இந்த லட்சியத்தைப் பற்றி முடிந்த அளவு அதிகமாக நாம் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அது நமது உள்ளங்களில் நுழைந்து, மூளைகளில் நுழைந்து, நமது இரத்தக் குழாய்களில் கூட நுழைந்து, ஒவ்வொரு துளி இரத்தத்திலும் துடி துடிக்கிறவரையில், நமது உடலிலுள்ள ஒவ்வொரு மயிர்க்காலிலும் வியாபித்து நிற்கிற வரையில் லட்சியத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதைக் குறித்துத் தியானம் செய்ய வேண்டும். உள்ளம் நிரம்பிப் பெருகும்போது வாய் பேசுகிறது. உள்ளம் நிரம்பிப் பெருகும் பொழுது கைகளும் வேலை செய்கின்றன.

### முத்துச் சிப்பியைப் போல் இருங்கள்:

நீங்கள் முத்துச் சிப்பியைப் போல இருக்க வேண்டும். பாரத நாட்டில் அழகான ஒரு கற்பனைக் கதையுள்ளது. அதாவது சுவாதி நட்சத்திரம் உச்சமாக இருக்கும் பொழுது மழை பெய்து, அதிலிருந்து ஒரு மழைத்துளி சிப்பிக்குள் விழுந்தால், அந்த மழைத்துளி முத்தாக மாறிவிடுமாம். முத்துச் சிப்பிகளுக்கு இது தெரியும். சுவாதி நட்சத்திரம் பிரகாசிக்கும் பொழுது அவை மேலே வருகின்றன. அரியதான அந்த மழைத்துளியைப் பிடித்து வைத்துக்கொள்ள அன்று காத்திருக்கின்றன. அவற்றுக்குள்ளே ஒரு நீர்த்துளி விழுந்ததும், முத்துச் சிப்பிகள் தமது ஓடுகளை அக்கணமே மூடிக்கொண்டு கடலின் அடிமட்டத்துக்குப் பாய்ந்து சென்று விடுகின்றன. அங்கே அந்த நீர்த்துளியைப் பொறுமையுடன் முத்தாக வளர்க்கக் காத்திருக்கின்றன.

நாமும் அதுபோலவே இருக்க வேண்டும். முதலில் செவிகளால் கேட்க வேண்டும்; பிறகு புரிந்துகொள்ள வேண்டும்; அதன் பின்னர் மனதை அலைக்கழிக்கிற எல்லாக் காரியங்களையும் கைவிட்டு விட்டு, வெளிக் கவர்ச்சிகளால் பாதிக்கப்படாதபடி மனக்கதவை மூடித் தாழிட்டு அந்தப் பேருண்மையை நமக்குள்ளே வளர்த்துக் கொள்வதில் முழு மனத்துடன் ஈடுபட வேண்டும். ஒரு கருத்து புதுமையாக இருக்கிறது என்பதற்காக மட்டும் அதனை ஒப்புக் கொண்டு ஏற்று வேலை செய்துவிட்டு, அதைவிடப் புதிதாக வேறு ஒன்று கிடைத்ததும் பழையதைக் கைவிடுவதால் உனது சக்தியை வீணடித்து விடுவாய். இது அபாயகரமானது. ஒரே வேலையை ஏற்றெடுத்துக்கொள். அதனை செய். அந்த வேலையை இறுதி வரையில் செய். முடிவைக் காண்பதற்கு முன்னால் அதனைக் கைவிடாதே. ஒரே ஒரு கருத்துக்குத் தனது மனதைப் பறிகொடுத்துவிட்டுப் பைத்தியமாக ஆகக்கூடிய மனிதன் மட்டுந்தான் இறுதிஒளியைக் காண்பான்,

இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக வாய் வைத்து மேய்கிறவன் ஒரு நாளும் எதையும் எய்தமாட்டான். அவ்வாறு செய்வதால் அவனுக்குச் சிறிதளவு உற்சாகக் கிளுகிளுப்பு ஏற்படலாம், ஆனல் அத்துடன் அது மாய்ந்து போகும்......

.. ஒரு கருத்தை ஏற்றுக்கொள். அந்த ஒரு கருத்தை உனது வாழ்வாக மாற்றிக்கொண்டு விடு. பிறகு அதைப் பற்றியே சிந்தனை செய்ய வேண்டும். அதைப் பற்றியே கனக்காண வேண்டும்; அந்தக் கருத்தைக் கொண்டே உயிர் வாழ வேண்டும். உனது மூளை, தசைகள், நரம்புகள், உனது உடலின் உறுப்புக்கள் இவையெல்லாம் அந்தக் கருத்தால் நிரம்பி விடட்டும்; மற்றெல்லாக் கருத்துக்களையும் அப்படியே கைவிட்டு விடு; வெற்றிக்கு இதுவே வழி. ஆத்மிகச் சிங்கங்கள் இந்த வழிமுறை மூலம்தான் உண்டாக்கப்படுகிறர்கள். மற்ற மக்கள் எல்லோரும் பேசுகிற வெறும் இயந்திரங்கள்தான்.....

......வெற்றி பெற வேண்டுமானல் உங்களுக்கு அபாரமான விடாமுயற்சியும், அபாரமான மன வலிமையும் இருக்க வேண்டும். இடைவிடாது முயற்சி செய்கின்ற ஓர் ஆத்மா, "நான் கடல்நீர் முழுவதையும் குடித்துவிடுவேன்; எனது மனே வலிமையால் மலைகளைப் பொடிப் பொடியாக்கி விடுவேன்'' என்று கூறுகிறது. அத்தகைய சக்தித் துடிப்பும், அத்தகைய மனேசக்தியும் பூணுங்கள். கஷ்டப்பட்டு வேலை செய்யுங்கள். நீங்கள் குறிக்கோளைக் கண்டிப்பாக எய்தி விடுவீர்கள்.

* * *

மகாவீரர் உங்கள் லட்சியமாகட்டும்:

மகாவீர ஹனுமானின் ஒழுக்கப்பண்பினை உங்களது லட்சியமாக நீங்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். ராமச்சந்திரரின் ஆணையால் அவர் எவ்வாறு கடலைக் கடந்தார் என்பதைப் பாருங்கள். வாழ்வையோ சாவையோ பற்றி அவர் ஒரு சிறிதும் அக்கறைப்படவில்லை. புலன்களனைத்தும் அவர் வசப்பட்டிருந்தன. ஆச்சரியகரமான விவேகி அவர். தனி ஒரு மனிதனுக்கு எப்படித் தொண்டாற்ற வேண்டும் என்பதற்குப் பெரும் உதாரணமாக விளங்கிய அவரது வாழ்க்கையை ஒட்டி நீங்கள் உங்களது வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஒன்றிலிருந்து மற்ற எல்லா லட்சியங்களும் படிப்படியாக உங்கள் வாழ்வில் வெளித்தோன்றும். மறு பேச்சின்றி குருவுக்குக் கீழ்ப்படிவது, பிரம்மசரியத்தைக் கடுமையாகக் கடைப்பிடிப்பது, இதுதான் வெற்றியடைவதன் ரகசியம். தொண்டாற்றுகிற லட்சியத்தை ஹனுமான் தமது வாழ்வின் ஒரு பக்கத்தில் பிரதிபலிப்பதைப் பார்க்கிறேம் என்றுல் மறுபுறம் சிங்கத்தை ஒத்த அவரது

தைரிய உணர்ச்சி உலகத்தை பிரமிப்படைய வைக்கிறது. ராமருடைய நன்மைக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதில் அவருக்கு எள்ளளவும் தயக்கமில்லை. ராம சேவையைத் தவிர மற்ற அனைத் திடமும் அவருக்குத் தினையளவும் அக்கறை கிடையாது. பிரம்மபதவி, சிவபதவி, அல்லது உலக தேவதைகளின் பதவி கிடைப்பது பற்றிக் கூட அவருக்கு அக்கறையே இல்லை. ஸ்ரீராமனின் கட்டளையை நிறைவேற்றுகிற ஒரு காரியம் மாத்திரமே அவரது வாழ்க்கையின் விரதமாகும். அத்தகைய முழுமனமுள்ள பூரண பக்தியே நமக்குத் தேவை.

**தேடுங்கள்: உங்களுக்குக் கிடைக்கும்.**

சோம்பேறியான வழிப்போக்கன் ஒருவன் ஒருநாள் ஒரு வீதி வழியே மெல்லப் போய்க்கொண்டிருந்தான். ஒரு கிழவர் தம் வீட்டு வாசலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே அங்கு நின்று அவரிடம் ஒரு குறிப்பிட்ட கிராமம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்று தயங்கியவாறே கேட்டான். "பெரியவரே! இன்ன கிராமம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது?" என்று வினவினான். கிழவர் பதில் அளிக்கவில்லை. பல தடவை அதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டான். பிறகும் பதிலில்லை. அலுத்துப்போய் அவன் தன் வழியே நடக்கத் தொடங்கினான்; உடனே கிழவர் எழுந்து, நின்று "நீகேட்கிற கிராமம் இங்கியிருந்து ஒரு மைல் தூரத்தில்தான் உள்ளது" என்றார். உடனே வழிபோக்கன் "ஏன்? இதற்கு முன்னர் உங்களிடம் கேட்ட போது நீர் ஏன் பேசவில்லை?" என்று வினவினான். அதற்கு மறுமொழியாகக் கிழவர், "ஏனெனில் அப்பொழுது தயங்கித் தடு மாறிக் கொண்டு, அந்த ஊருக்குப் போவது பற்றி அக்கறையின்றி நீ காணப்பட்டாய். ஆனால் இப்பொழுது நல்ல உறுதியுடன் புறப்பட்டு விட்டாய். பதில் பெறுவதற்கு உனக்கு உரிமையுண்டு" என்றார்.

என் மகனே! இக்கதையை நீ நினைவிற் கொள்வாயா? வேலை செய்யப் போ. மற்றவை எல்லாம் வரும்.

அனன்யாஸ் சிந்தயந்தோமாம் யே ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்

(கீதை 9—22)

"என்னைத் தவிர வேறு எதனையும் நம்பாமல் என்னிலே உறைந்து என்னையே சார்ந்து வாழ்கிறவனுக்குத் தேவைப்படுகிற அனைத்தை யும் நான் அளித்துவிடுகிறேன்."

(கீதை 9—22)

......கிறிஸ்துவின் சொற்களை நினைவிற் கொள்ளுங்கள்: "கேளுங்கள், அது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அது உங்களுக்குக் கிடைக்கும்; தட்டுங்கள் அது உங்களுக்குத் திறக்கப்படும்" இதில் ஒவ்வோர் எழுத்தும் உண்மைதான். அது வெறும் சொல் அலங்காரமோ, கற்பனையோ அல்ல .....

......நீ உண்மையாகவே விரும்பிய ஏதேனும் உனக்குக் கிடைக்காமல் இருந்ததா? அப்படி ஏற்பட்டிருக்க முடியாது. ஏனெனில் தேவைதான் மனித உடலை உண்டாக்குகிறது. முதலில் ஒளி இருந்தது. அதுதான் உனது தலையில், "கண்கள்" என்று அழைக்கப்படுகிற தொளைகளைப் போட்டது. ஒளி இருந்திருக்கவில்லையென்றால் உங்களுக்குக் கண்களே இருந்திருக்காது. ஒலிதான் காதுகளை உண்டாக்கியது. உறுப்புத் தோன்றுவதற்கு முன் உணர வேண்டிய பொருள் முதலிலே தோன்றியிருந்தது......

**கேளுங்கள், அது கொடுக்கப்படும் :**

......ஒரு விருப்பத்துக்கும் வேறொரு விருப்பத்துக்குமிடையே வேறுபாடு உண்டென்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்......

ஒரு சிஷ்யன் தன் குருவிடம் சென்றான். "ஐயனே! எனக்குச் சமயம் வேண்டும்" என்று கூறினான். குருநாதன் அந்த இளைஞனைப் பார்த்தார். ஒன்றும் பேசாமல் சற்றே சிரித்தார். அந்த இளைஞன் தினமும் வருவான். சமயம் வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்வான். ஆனால் அந்த இளைஞனைவிடப் பெரியவருக்கு விஷயங்களெல்லாம் நன்கு தெரியும். ஒரு நாள் உஷ்ணம் அதிகமாக இருந்தது. ஆற்றுக்குப் போய் குளித்துவிட்டு வரலாமென்று அந்த இளைஞனைப் பெரியவர் அழைத்துப் போனார். ஆற்றுக்குப் போனதும் இளைஞன் நீரில் மூழ்கினான். பெரியவர் அவனைப் பின் தொடர்ந்தே சென்று அவன் தண்ணீருக்குள் இருக்கும்பொழுது அவனை அமுத்தி வைத்துப் பிடித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் அந்த இளைஞன் திக்குமுக்காடித் துடித்த பிறகு அவனை விட்டு விட்டார். "தண்ணீருக்குள் இருந்தபோது நீ மிக முக்கியமாக எதை விரும்பினாய்?" என்று கேட்டார். "ஒரு தடவை மூச்சு இழுத்து விடுவதற்காகக் காற்றை விரும்பினேன்" என்று பதிலளித்தான் சிஷ்யன். "அந்த அளவு தீவிரத்துடன் நீ கடவுளைக் காணவேண்டுமென விரும்புகிறாயா? அப்படி விரும்பினால் ஒரு கணத்திலேயே அவனை அடைவாய்" என்று குரு கூறினார். "அத்தகைய தாகம், அத்தகைய தீவிர விருப்பம், இல்லையேல் சமயம் உனக்குக் கிடைக்காது. உனது மூளை, அறிவு, உனது புத்தகங்கள், உனது அமைப்பு முறைகள் இவை எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு நீ எவ்வளவுதான் போராடினாலும் உனக்குச் சமயம் கிடைக்காது" என்றார் குரு.

**புத்தரைப் போன்று உணர்ச்சி கொள்ளுங்கள்; அவரைப் போலவே ஆகிவிடுவீர்கள் :**

......மனப்பூர்வமாக மற்றவர்களைப் பற்றிய உணர்ச்சி உனக்கு உள்ளதா? உணருகிறாய் என்றால் நீ ஒருமையை நோக்கி வளர்ந்து செல்கிறாய். பிறர்பொருட்டு நீ மனவெழுச்சி கொள்ளாவிட்டால், உலகில் பிறந்த அறிவாளிகளில் நீ மிகமிகப் பெரியவனாக இருந் தாலும்கூட, நீ ஒன்றுமில்லாத பூஜ்யம்தான். நீ வெறும் வரட்டு அறிவாளி; நீ அப்படியே நான் வாழ்வாய் ...

தீர்க்கதரிசிகளுடைய சக்தி எங்கே உறைந்துள்ளதென்று நீ உலக வரலாற்றிலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறாயா? எங்கு இருந்தது? அறிவுத் திறமையிலா? அவர்களில் எவராவது ஒரு புத்தகத்தையோ, தத்துவ சாஸ்திரத்தையோ, மிக நுணுக்கமான அநுமானங்களுடன் கூடிய தர்க்க சாஸ்திரத்தையோ இயற்றியிருக் கிறார்களா? ஒருவர் கூட அவ்வாறு எழுதவில்லை. அவர்கள் ஒரு சில வார்த்தைகளை மட்டுமே பேசினார்கள். கிறிஸ்துவைப் போன்ற மனப் பூர்வமான உணர்ச்சி கொண்டால் நீ கிறிஸ்து ஆவாய். புத்தரைப் போன்ற ஆழ்ந்த உணர்ச்சி கொண்டால் நீ புத்தராக ஆவாய்; இதய பூர்வமான உணர்ச்சிதான் வாழ்க்கை ஆகும்; அதுவே சக்தி. அதுவே வீரியம். அது இல்லாமல் அறிவுத் திறமையைக் கொண்டு எவ்வளவுதான் பாடுபட்டாலும் கடவுளை எய்த முடியாது. அறிவு என்பது நடமாடும் சக்தியில்லாத உடல் உறுப்புக்களைப் போன்றதாகும். அவற்றினுள்ளே உணர்ச்சியானது புகுந்து அவற்றை நடமாட வைக்கும்பொழுதுதான் அவை அசைந்து கொடுத்து வேலை செய்கின்றன. உலகம் முழுவதும் இதுவே நிலை; இதனை நீங்கள் எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டும்.....

**வால்மீகியின் முதற் பாட்டு—தீவிரமான இரக்க உணர்ச்சியிலிருந்து தோன்றிற்று :**

...மகரிஷியான வால்மீகி புனித கங்கா நதியில் நீராடுவதற்காக ஒரு நாள் சென்றபோது ஒரு புறா ஜோடியானது வானத்தில் வட்ட மிட்டுப் பறந்துகொண்டே ஒன்றையொன்று முத்தமிட்டு விளையாடிக் கொண்டிருந்தது. மகரிஷி மேலே பார்த்தார். அக்காட்சியால் மனங்களித்தார். ஆனால் மறுகணமே அவரைத் தாண்டிப் பாய்ந்து சென்ற ஓர் அம்பு ஆண் புறாவின் மீது தைத்து அதனை உடனே கொன்றது. புறா செத்து தரைமீது விழுந்ததும் பெண்புறா, ஆண் புறாவின் சடலத்தைச் சுற்றிச் சுற்றித் துக்கத்துடன் வட்டமிட்டுப் பறந்தது. ஒரு கணத்துக்குள் மகிரிஷிக்குச் சகிக்க முடியாத துக்கம் மூண்டு விட்டது. திரும்பி அந்த வேடனை நோக்கினார்.

மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகம்: சாச்வதீ: ஸமா:
யத் க்ரௌஞ்ச மிதுனதேக மவதீ: காம மோஹிதம்.

(வால்மீகி ராமாயணம்—பாலகாண்டம்)

"நீ ஈவிரக்கம் சிறிதுமற்ற ஒரு கொலைபாதகன். அன்பைக் கண்டும் கூட உனது கொலைக்கரம் நிற்கவில்லையே?" என்று கதறினர்.

'இது என்ன? நான் என்ன பேசுகிறேன்?' என்று கவி தமக்குள்ளேயே சிந்தித்தார். 'இதுபோல இதற்குமுன்னர் நான் பேசியதே கிடையாதே?' என்று எண்ணமிடலானர். உடனே அசரீரி வாக்கு ஒலித்தது. "அஞ்சாதே; உன் வாக்கிலிருந்து வெளிவருவது கவியாகும். உலக நன்மைக்காக ராம சரித்திரத்தைக் கவிதையாக எழுது" என்று கட்டளை பிறந்தது. முதற் கவிதை இப்படித்தான் துவங்கியது. ஆதி கவியான வால்மீகியின் வாயிலிருந்து புறப்பட்ட முதற் கவிதை தீவிரமான இரக்க உணர்ச்சியின் காரணமாக எழுந்தது. அதற்குப் பிறகுதான் ராமனின் சரித்திரமாகிய அழகொழுகும் ராமாயணத்தை அவர் இயற்றினர்.

* * *

சரியான நோக்கு:

...நீ செய்கிற நற்பணியெல்லாம் உனக்காக, உனது சொந்த நலனுக்காகத் தான். நீயும் நானும் போய்த் தூக்கி விடுவோம் என்று எதிர்பார்த்துக் கடவுள் சாக்கடையில் ஒன்றும் விழுந்து கிடக்கவில்லை. ஆஸ்பத்திரியையோ அல்லது வேறு ஒன்றையோ கட்டிவிட்டு அவருக்கு நாம் உபகாரம் செய்துவிட்டதாக எதுவும் எண்ணவேண்டாம். வேலை செய்ய அவர் உன்னை அநுமதிக்கிருர். உலமாகிற இந்தப் பெரிய உடற்பயிற்சிக்கூடத்தில் உன் தசைகளுக்குப் பயிற்சி கொடுத்துக் கொள்ள அவர் அநுமதியளித்திருக்கிருர். தனக்கு உபகாரமாக இருப்பதற்கு அல்ல. நீயே உனக்கு உதவி பண்ணிக்கொள்ளலாம் என்பதற்காகக் கடவுள் ஏற்பாடு செய்திருக்கிருர். நீ உதவி பண்ணு விட்டால் அதற்காக ஓர் எறும்பாவது செத்துப் போகும் என்று நீ நினைக்கிருயா? நினைத்தால் அது மகா மோசமான தெய்வ நிந்தனையாகும்...

...இறைவனுக்காக வேலை செய்கிற வாய்ப்பான பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நாம் அவருக்கு உதவியெதுவும் செய்யவில்லை. உங்களுடைய மனத்திலிருந்து உதவி என்ற சொல்லை அகற்றிவிடுங்கள். உங்களால் உதவி பண்ணவே முடியாது. உதவி பண்ணுவது என்பது தெய்வ நிந்தனையாகும்.

.. அவரை வழிபட நமக்கு அநுமதி கிடைத்திருக்கிறது. உலகத்துக்கு முன்னே அத்தகைய பக்தி வணக்கத்துடன் நில். அப்பொழுது பூரணமான பற்றின்மைக் குணம் உனக்குக் கிடைக்கும். இதுவே உனது கடமை. வேலே செய்யும் போது கொள்ள வேண்டிய சரியான நோக்கு இது. கர்ம யோகம் கற்பிக்கிற ரகசியம் இதுதான்.

*　　　*　　　*

### சுயநலமின்றி வேலே செய்பவனே மிக உயர்ந்த மகிழ்வடைவான்

பிச்சைக்காரனுக்கு ஒரு போதும் மகிழ்வே இல்லே. பிச்சைக்காரனுக்குக் கிடைக்கிற பிச்சையில் பரிதாப உணர்ச்சியும், ஏளனமும் கலந்திருக்கும். அல்லது குறைந்த பட்சமாக 'இந்தப் பிச்சைக்காரன் மட்டமானவன்' என்ற எண்ணமாவது அதில் தொக்கி நிற்கும். தனக்குக் கிடைப்பதை அவன் ஒருகாலும் உண்மையான மகிழ்வுடன் அநுபவிக்க முடியாது.

நாமெல்லாம் பிச்சைக்காரர்கள். நாம் எதைச் செய்தாலும் பிரதி பலனே எதிர்ப்பார்க்கிருேம். நாமெல்லாம்வியாபாரிகள். வாழ்க்கையை, நல்ல குணங்களே, சமயத்தை நாம் விலே பேசுகிருேம். அந்தோ! அன்பைக்கூட நாம் வியாபாரம் பண்ணுகிருேமே!

வியாபாரத்துக்காக நீ வந்தால், கொடுக்கல் வாங்கல் பேரம் பண்ணுவதானுல், வாங்கி விற்கிற காரியம் செய்வதானுல், வாங்குதல் விற்பனே இவற்றுக்கான சட்டங்களுக்கு உட்பட வேண்டும். வியாபாரத்தில் நல்ல காலமும் பொல்லாத காலமும் உண்டு; விலேயில் ஏற்றமும் சரிவும் உண்டு. லாபமே கிடைக்குமென்று எப்பொழுதும் எதிர்ப்பார்க்கிருய்! இது கண்ணுடியில் உன் முகத்தைப் பார்த்துக் கொள்வது போன்றது. அதில் உன் முகம் பிரதிபலிக்கிறது. நீ அழகுக்கோர் அணி செய்; கண்ணுடியிலும் அதுவே தெரியும். நீ சிரித்தால் கண்ணுடியும் சிரிக்கும். இதுதான் வாங்குவதும் விற்பதும், கொடுக்கலும் வாங்கலும்.

நாம் சிக்கி பிடிபடுகிருேம். எப்படி? நாம் கொடுப்பதனுல் பிடிபடுவதில்லே. திரும்பப் பலனே எதிர்பார்ப்பதனுல்தான் பிடிபடுகிருேம். நாம் அன்பு காட்டிவிட்டு அதற்குப் பதிலாகத் துன்பத்தை அடைகிருேம். அது நாம் அன்பு காட்டுகிற காரணத்தால் அல்ல. நாம் திரும்ப அன்பைப் பெற எதிர்பார்ப்பதால்தான். எங்கே தேவை, விருப்பம் இல்லேயோ அங்கே துன்பமில்லே. விருப்பம், தேவை-இது தான் எல்லாத் துன்பங்களுக்கும் தந்தையாகும். விருப்பங்களெல்லாம் வெற்றி தோல்விச் சட்டங்களால் கட்டுண்டு கிடப்பவையாகும். விருப்பம் துன்பத்தை உடன் கொண்டு வந்தே தீரும்.

...துறவியரில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்கள் காமத்தையும் செல்வத்தையும் துறந்துவிட்ட பிறகும்கூட, பெயர் புகழ் ஆசையால் விலங்கிடப் படுகிறார்கள். "மாபெரும் உள்ளங்களும் கடைசியாக உள்ள பலவீனம் புகழில் ஆசையாகும்!" என்று நீ படித்ததில்லையா ?...

"...நான் பணிக்காகப் பணி புரிகிறேன்" என்று கூறுவதைவிட எளிய காரியம் ஒன்றுமில்லை. ஆனால் அந்த நிலையை அடைவதை விடக் கடினமானது வேறொன்றுமில்லை. வேலைக்காகவே வேலை செய்கிற ஒரு மனிதனின் திருமுகத்தைக் காண நான் கைகால்களை மண்டி போட்டுத் தவழ்ந்து இருபது மைல் தூரம் போக ஆயத்தமாக இருக்கிறேன். எங்கேயோ ஒரு உந்து சக்தி அவருக்கிருக்கிறது. அவருக்குப் பண ஆசையில்லையென்றால் அதிகார ஆசையிருக்கும். அதிகார ஆசையென்றால் லாப நோக்கமிருக்கும். எப்படியோ, எங்கேயோ உந்து சக்தி மறைந்திருக்கிறது.

...இவ்வாறாக ஓர் உள்காரணத்தை மனத்திற் கொண்டு செய்கிற வேலை துன்பத்தைக் கொண்டு வருகிறது. எந்த வேலையை நமது மனதுக்கு நாமே அதிபதியாக நாம் செய்கிறோமோ அந்த வேலை மட்டுமே பற்றின்மையையும், ஆனந்தத்தையும் கொடுக்கும்.

* * *

**சுயநலமின்றி வேலை செய்கிறவனே மிகச் சிறப்பாக வேலை செய்கிறான்.**

...ஏதாவது ஓர் உள் நோக்கம் இன்றி வேலை செய்ய முடியாது என்று பல பேர்கள் கூறியுள்ளார்கள். மூர்க்கமான வெறிக்குணத்தினால் ஆட்கொள்ளப்பட்டு மனிதர்கள் வேலை செய்வதை அவர்கள் கண்டிக்கிறார்கள். அதைத் தவிர சுயநல எண்ணமின்றி வேலை செய்வதை அவர்கள் பார்த்ததே இல்லை. ஆகவேதான் இவ்வாறு பேசுகிறார்கள்.

...பண ஆசையோ, புகழ் ஆசையோ வேறெந்த ஆசையோ இன்றி, எவ்வித உள்நோக்கமும் இல்லாமல், வேலை செய்கிறவன் தான் மிகச் சிறப்பாக வேலை செய்ய முடியும். அவ்வாறு ஒரு மனிதனால் செய்ய முடியும்பொழுது அவன் ஒரு புத்தனாக ஆகி விடுவான். அத்தகைய மனிதனிடமிருந்து உலகத்தையே மாற்றியமைக்கக் கூடிய வல்லமை தோன்றும். இந்த மனிதன் கர்மயோகத்தினுடைய மகோன்னதமான லட்சியத்தைப் பிரதிபலிக்கிறான்.

..."கடவுளைப் பற்றி நீ கொண்டிருக்கிற பல்வேறு விதமான கருத்துக்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆத்மாவைப் பற்றி

நுணுக்கமான கோட்பாடுகளை யெல்லாம் விவாதிப்பதால் என்ன பயன்? நல்லது செய்; நல்லவனாக இரு. இது உன்னை விடுதலை பெற்ற நிலைக்கும், உலகில் எது சத்தியமோ அதனிடமும் கொண்டு சேர்க்கும்,'' என்று கூறிய தேவ புருஷர் புத்தர் ஒருவர்தான். அவர் தமது வாழ்க்கையில் தினையளவும் சுயலாப நோக்கமின்றி வாழ்ந்தார். அவரைவிட யார்தான் அதிகமாக வேலை செய்தார்கள்? எல்லோரையும்விட மிக உயர்ந்த நிலைக்கு புத்தரைப் போல மேலே சென்றுள்ள ஒரு மனிதனையேனும் சரித்திரத்தில் காட்டுங்கள் பார்க்கலாம்...

...அவர்தான் லட்சிய நிலையை எய்தின உதாரண புருஷரான கர்மயோகி. சிறிதும் உள்நோக்கமின்றி வேலை செய்தவர் அவர். உலகில் பிறந்த மாந்தருள் தலையாயவர் அவர் என்பதை மனிதகுல வரலாறு காண்பிக்கிறது. உணர்ச்சி மயமான உள்ளமும் கூர்மையான புத்தியும் அவரிடம் இணைந்து கலந்து திகழ்ந்தன. அதற்கு ஒப்புவமையே கிடையாது. உலகில் வெளிப்பட்ட ஆத்ம சக்தி அவருடையதாக இருந்தது.

...கடலிலிருந்து சூரியன் நீரை உறிஞ்சி எடுக்கிறான்—திருப்பித் தருவதற்காக. பெறுவதற்கும் தருவதற்குமாக அமைந்த இயந்திரம் நீ. கொடுப்பதற்காக நீ வாங்குகிறாய். ஆகவே பிரதிபலனாக எதனையும் கேட்காதே. ஆனால் நீ எவ்வளவுக்கு அதிகமாகக் கொடுக்கிறாயோ அவ்வளவு அதிகம் உனக்கு கிடைக்கும். இந்த அறைக்குள்ளிருக்கும் காற்றை நீ எவ்வளவு விரைவாகக் காலி பண்ணுகிறாயோ, அதே வேகத்துடன் வெளிக்காற்றால் இந்த அறை நிரம்பிப் போகும். ஆனால் நீ எல்லாக் கதவுகளையும் மூடி, சந்துகளை யெல்லாம் அடைத்து வைப்பாயானால் உள்ளே இருப்பது அப்படியே இருக்கும். ஆயின் வெளியிலிருப்பது ஒரு போதும் உள்ளே வராது. அத்துடன் உள்ளேயிருப்பது தேங்கிப் போய், இழிந்து விஷமயமாக ஆகிவிடும். நதியானது தொடர்ந்தாற் போலக் கடலுக்குள் சென்று தன்னை அர்ப்பணித்துக் கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து அது நிறைவு பெற்றுக் கொண்டேயிருக்கிறது. கடலுக்குள்ளே நுழைவதைத் தடுக்காதே; தடுத்தால் அக்கணமே மடிந்து போவாய்.

* * *

**சுயநலமின்றி வேலை செய்கிறவனே மிக உயர்ந்த வெற்றியைப் பெறுகிறான்:**

பற்றுணர்ச்சிதான் மனிதனுக்குத் தளையாக ஆகிறது. மனித குலத்துக்கும், இயற்கைக்கும் பற்றற்ற நிலையில் சமர்ப்பணம் செய்யப்படுகிற வேலைதான், எந்தவிதமான தளையையும் உடன் கொண்டு வருவதில்லை.

சுதந்திரமாகவும், அஃபின் பொருட்டும் செயல்படும் மனிதன் பிரதிபலனைப் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்வதில்லை. அடிமைக்குச் சாட்டையடி தேவைப்படுகிறது. வேலைக்காரனுக்குச் சம்பளம் தேவை. அது போலத்தான் வாழ்க்கையெல்லாம். பொது வாழ்க்கையை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். மேடைப் பேச்சாளனுக்குக் கொஞ்சம் கைதட்டலும் ஆரவாரக் கூச்சலும் எதிர்ப்பும் தேவைப்படுகிறது. அதெல்லாம் இன்றி அவனை ஒரு மூலையில் இருத்தினால் அவனைக் கொன்று விடுவீர்கள். ஏனெனில் அது அவனுக்குத் தேவையாகும். இதுதான் அடிமைத்தனத்தின் மூலம் வேலை செய்வதாகும். இத்தகைய சூழ்நிலையில் எதையாவது பிரதி பலனை எதிர்பார்ப்பது சுபாவமாக ஆகிவிடுகிறது.

வெற்றி முகமாக உள்ள ஒரு மனிதனுக்குப் பின்னணியில் எங்கேயோ ஓர் இடத்தில் அபாரமான நேர்மைக் குணமும், அபார மான நாணயமும், இருந்திருக்க வேண்டும். வாழ்க்கையில் அவன் சிறப்பாக வெற்றி பெறுவதற்கு அதுவே காரணம். பூரணமாக அவன் சுயநலமற்றவனாக இல்லாமற் போகலாம். இருப்பினும் அந் நிலையை நோக்கி அவன் சென்று கொண்டிருக்கிறான். பரிபூரண மாகவே அவன் சுயநலமற்றிருந்தால் புத்தரைப் போலவோ, கிறிஸ்துவைப் போலவோ அவனும் மகா புருஷனாக ஆகியிருக்க முடியும்; எங்கு நோக்கினாலும் சுயநலமின்மையின் தரத்தைப் பொறுத்துதான் வெற்றியின் தரமும் அமைகிறது.

உண்மையான வெற்றிக்கு, உண்மையான மகிழ்வுக்கு மகத் தான ரகசியம் இதுதான். பிரதிபலனை எதையும் கோராத மனிதன் தான், பூரணமாகச் சுயநலமற்ற மனிதன்தான் மா பெரும் வெற்றியை அடைகிறான். ஆனால் அத்துடன் அதுவும் பொருத்த மற்றதொரு புதிராகவும் தோன்றுகிறது. வாழ்க்கையில் சுயநல மில்லாத மனிதன் ஏமாற்றப்படுவதையும் நாம் பார்க்கிறோமே! மேல் போக்காகப் பார்த்தால் அது உண்மைதான். "கிறிஸ்து சுய நலமற்றவராக இருந்தார். இருப்பினும் அவர் சிலுவையில் அறை யப்பட்டார்" இது உண்மையேதான். ஆனால் அவரது சுயநல மின்மைதான் மகத்தானதொரு வெற்றிக்குக் காரணமாக, மூலமாக அமைந்தது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். தமது உண்மையான வெற்றியின் அருளாசியால் கோடிக்கணக்கான மக்களுக்கு அவர் உய்வளித்தார்.

* * *

குறுகிய நோக்கமான 'நான்' என்ற உணர்ச்சியைக் கைவிடுக :

ஒரு மனிதன் யோகத்தின் மூலமாக வேலை செய்யும்போது 'நான் இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன்' என்ற எண்ணம்

ஒருபோதும் தோன்ருது. மேல்நாட்டு மக்கள் இதை ஒருபோதும் புரிந்து கொள்வதில்லே. 'நான்' என்ற தன்மையுணர்ச்சி போய் விட்டால், அகங்காரம் - மமகாரம் போனுல், ஒரு மனிதன் எப்படித் தான் வேலேசெய்ய முடியும் என்று கேட்கிருர்கள். தன்னேப் பற்றிய நினைப்பையே இழந்து, ஒரு மனிதன் கவனமும் கருத்தும் குவிந்து, வேலே செய்வானுயின் அவன் செய்கிற வேலே எத்தனேயோ மடங்கு உயர்ந்ததாக இருக்கும். இந்த அநுபவத்தை ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் காணலாம்.

நமக்குத் தெரியாமலே நாம் பல காரியங்களேச் செய்கிரேம். உதாரணமாக உணவைத் தெரியாமலே ஜீரணிக்கிரேம். இன்னும் பலவற்றை நினேவோடு செய்கிரேம். மற்றவற்றை சமாதி நிலேயில் மூழ்கினுற்போல செய்கிரேம். அந்நிலேயில் நமது சிறிய அகங் காரத்துக்கு இடமில்லே.

ஓவியந் தீட்டுகிறவன், தான் என்ற அகங்காரத்தை இழந்து விட்டுத் தனது ஓவியத்தில் முற்றிலும் மூழ்கி விடுவானுயின், அவனுல் மிக உத்தமமான ஓவியங்களேத் தீட்ட முடியும்......யோகத்தின் மூலம் இறைவனுடன் ஒன்றிவிட்ட மனிதன், எல்லாச் செயல்களேயும் மனங்குவிந்து தியானத்தில் மூழ்கிச் செய்வான். தன்னலம் எதனே யும் கருதமாட்டான். அத்தகைய வேலே நடப்பதன் மூலம் உலகத் துக்கு நன்மையே தான் ஏற்படுமே தவிர, தீமை எதுவும் தோன் ருது..... எல்லாக் காரியங்களேயும் இப்படித்தான் செய்ய வேண்டு மென்று கீதை உபதேசிக்கிறது.

.. நம்மை உள்ளே போட்டு அடைத்து வைக்கிற உடையாத நெடுஞ்சுவர் 'அகங்காரம்' தான். "நான் இதைத் செய்கிறேன். அதைச் செய்கிறேன். எல்லாவற்றையும் செய்கிறேன்" என்று எல்லாவற்றுக்கும் நம்மையே சம்பந்தப் படுத்திக் கொள் கிரேம். சோனியாக இருக்கிற இந்த 'நான்' என்ற தன்மையை ஒழித்து விடுக. நம்முள் இருக்கிற இந்த பேயைச் சாகடித்துவிட வேண்டும். "நான் அல்ல. நீங்கள் தான்." இதனே எப்பொழுதும் கூறுக, உணருக, வாழ்ந்து காட்டுக. "நான்" என்னும் அகங்காரம் உள்ள உலகத்தை நாம் துறந்து கைவிட்டாலன்றி சுவர்க்க சாம் ராஜ்யத்தினுள் ஒரு போதும் நுழைய முடியாது.

...மௌனமாக வாழுகிறவர்களிடமே சக்தி குடிகொண்டுள்ளது. அவர்கள் வாழ்ந்து, அன்பு செலுத்திப் பிறகு தங்கள் தனி வாழ்வைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு விடுவார்கள். "நான்" "எனது" என்று அவர்கள் ஒருபோதும் சொல்லுவதில்லே. கருவியாக இருப் பதே பெரும் பாக்யம் என்று வாழுவார்கள். புத்தர்களேயும், கிறிஸ் துக்களேயும் நிர்மாணிக்கிறவர்கள் இத்தகையவர்களே...,

......அவர்கள் எல்லாம் முழுவதும் கொள்கையின் வடிவங்கள் தாம்; மனிதர்களல்ல.

...கடவுள் தம்மை முற்றிலும் மறைத்துக் கொண்டுள்ளார்; அவரது வேலையும் இணையற்று உள்ளது. ஆகவே யாரால் தன்னை முற்றிலும் மறைத்துக்கொள்ள முடியுமோ அவரது சாதனை அபார மானதாக ஆகிறது. உனது அகங்காரத்தை ஜயித்து விடு. பிறகு உலகமெல்லாம் உன்னுடையதாகிவிடும்.

அதிருஷ்டத்தின் ரகசியம் :

......எதைப் பற்றியும் அக்கறை கொள்ளாதவனுக்கு எல்லாம் வந்து சேருகிறது. அதிருஷ்டம் ஒரு மாய சரசக்காரியைப் போல. அவளை யார் விரும்புகிறார்களோ, அவர்களை அவள் லட்சியம் பண்ணமாட்டாள்...யாருக்குப் பணத்தைப் பற்றிக் கவலையே இல்லையோ, அவன் மீது பணம் மழை போலப் பொழிகிறது. அது போலத்தான் புகழும். ஒரு தொல்லையாக, பளுவாக ஆகிவிடும் அளவுக்கு வந்து சேருகிறது. அவற்றை வென்றவனிடம்தான் அவை வருகின்றன. அடிமைக்கு ஒருபோதும் எதுவுமே கிடைக் காது. உலகத்திலிருக்கிற அற்பத்தனமான, முட்டாள்தனமான வஸ்துக்களை நம்பி எதிர்பார்த்து எவர் வாழவில்லையோ, அவை இன்றியே எவரால் வாழ முடியுமோ, அவர்தான் எஜமானராக இருப்பார். ஒரு லட்சியத்துக்காக, அந்த ஒரே லட்சியத்துக்காக வாழ வேண்டும். அந்த லட்சியம் மிகப்பெரியதாக, மிக்க பலம் வாய்ந்ததாக இருக்கவேண்டும்; மனத்தில் அதைத் தவிர வேறு எதற்கும் இடமிராத அளவுக்கு அது வியாபித்து இருக்க வேண்டும். வேறு எதற்கும் நேரமிருக்கக் கூடாது, வேறெதற்கும் இடமிருக்கக் கூடாது.

கருவிக்கும் அதே அளவு முக்யத்துவம் கொடுக்க வேண்டும் :

ஒரு வேலையின் குறிக்கோளைப் பற்றி எவ்வளவு கவனம் செலுத்துவோமோ, அதே அளவு கவனம் அதை அடையும் வழி முறை பற்றியும் செலுத்த வேண்டும். எனது வாழ்க்கையில் நான் கற்ற மிகப் பெரிய படிப்பினைகளில் இது ஒன்று ஆகும்...முடிவைப் பற்றிக் கவலைப்படுவது போல, வழி முறையைப் பற்றியும் கவலைப் படவேண்டும். வெற்றி பெறுவதற்கான ரகசியம் இதுதான்.

நமது வாழ்க்கையிலுள்ள ஒரு பெரும் கேடு என்னவெனில் நாம் லட்சியத்தினால் மிகத் தீவிரமாகக் கவரப்படுகிறோம்; குறிக்கோள் நமக்கு மயக்க வெறியூட்டுகிறது. நமக்குப் போதையளிக்கிறது; நமது மனம் முழுவதையும் சூழ்ந்து கொண்டு விடுகிறது; அதன்

காரணமாக அந்த லட்சியத்தை எய்துவதற்கான நுண்ணிய விவரங்கள் நமது பார்வையில் அடியோடு தென்படுவதேயில்லை.

ஆனால் தோல்வி ஏற்படும்போதெல்லாம் அதற்கான காரணத்தை நாம் நுட்பமாக அலசி ஆராய்ந்தால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சந்தர்ப்பங்களில், நாம் அவ்வேலையைச் செய்ய வேண்டிய வழிமுறை பற்றிக் கவனம் செலுத்தாமற் போனதே காரணம் என்பது தெரியவரும். கடைப்பிடிக்க வேண்டிய பாதையை, பயன்படுத்த வேண்டிய கருவியை, நன்கு செவ்வனே தயாரிப்பதிலும் அதனைப் பலப்படுத்துவதிலும் தக்க கவனத்தை நாம் செலுத்துவதுதான் தேவையாகும். வழி சரியாக இருந்தால் முடிவு தானே தேடிவரும். காரணம்தான் காரியத்தை உண்டாக்குகிறது என்பதை நாம் மறந்து விடுகிறோம். பலன் தானே ஏற்படாது. காரணங்கள் திட்டவட்டமானதாக, பொருத்தமானதாக, ஆற்றல் வாய்ந்ததாக இருந்தால் ஒழியப் பலன் ஏற்படாது. ஒரு தடவை லட்சியத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டு, வழி முறைகளைத் தீர்மானித்து விட்டால், லட்சியத்தை அநேகமாக நாம் மறந்தே விடலாம்; ஏனெனில் வழி முறையானது அப்பழுக்கற்றிருக்குமாயின் லட்சியத்தைக் கடைசியில் நிச்சயமாக அடைந்தே தீருவோம். காரணம் சரியாக இருக்குமாயின் காரியத்தைப் பற்றி எவ்விதக் கஷ்டமுமில்லை. பலன் வந்தே தீரும். காரணத்தை நாம் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டால் காரியம் தானே சரிப்பட்டுவிடும். லட்சியத்தை அடைவது என்பது காரியம். அதற்காகக் கருவிகள், வழி முறைகள் காரணம். ஆகையால், கருவியைப்பற்றி, வழி முறையைப் பற்றிக் கவனம் செலுத்துவதுதான் வாழ்க்கையிலுள்ள மாபெரும் ரகசியம்.....

* * *

**பூஜை அறையே எல்லாமாக ஆகிவிடக் கூடாது:**

ஆனால் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. பெரிய மகரிஷிகள் உலகத்துக்கு விசேஷச் செய்தியுடன் வருகிறார்களே தவிர, பெயர் புகழுக்காக அல்ல. ஆனால், அவர்களைப் பின்பற்றுகிறவர்கள், அவர்களுடைய செய்திகளைத் தூக்கி எறிந்து விட்டு, அந்த மகான்களின் பெயரால் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். உண்மையில் உலகத்தின் சரித்திரம் இப்படித்தான் உள்ளது. மக்கள் அவருடைய (ஸ்ரீராமகிருஷ்ணருடைய) பெயரை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பது பற்றி நான் கவனம் செலுத்தவில்லை. ஆயின் அவரது உபதேச மொழிகள், அவரது வாழ்க்கை, அவரது செய்தி, உலகமெங்கும் பரவுவதற்காக உதவி பண்ணுவதில் எனது ஆயுள் முழுவதையும் அர்ப்பணிக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். நான் மிக அதிகமாக அஞ்சுவது இந்த பூஜை

அறையைக் கண்டுதான். பூஜை அறை இருப்பதில் தவறில்லை. ஆனால் அதையே முழு முதலாக, எல்லாமாக, ஆக்கிவிட்டுப் பழைய காலத்துக் கட்டுப்பெட்டித்தனத்தை மீண்டும் நிறுவக் கூடிய போக்குச் சிலரிடம் காணப்படுகிறது. இத்தகைய பழைய காலத்திய, சிதைந்து குலைந்துபோன சடங்குகளில் ஏன் இவர்கள் ஆழ்ந்து விடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களது உணர்ச்சித் துடிப்பு வேலை வேண்டுமென்று தவிக்கிறது. ஆனால் அதற்கான வழிதுறை இல்லாமற்போகவே இவர்கள் மணி அடிப்பதிலும் மற்றச் சடங்குகளிலும் சக்தியை வீணடிக்கிறார்கள்.

* * *

மூடபக்தனாக ஆகாதே:

பாரத தேசத்திலிருந்த ஒரு சந்நியாசி கூறினார். "என்னால் பாலைவனத்து மண்ணைப் பிழிந்து எண்ணெய் உண்டாக்க முடியுமென்று கூறுவாயானால் உன்னை நான் நம்புவேன். முதலையின் வாயிலிருந்து, அது என்னைக் கடிக்காத முறையில், பல்லைப் பிடுங்கி விடுவேன் என்றாலும் நம்பிவிடுவேன். ஆனால் குருட்டுத்தனமான வெறிபிடித்தவனை மாற்ற முடியுமென்று கூறுவாயானால் அதைமட்டும் நம்ப முடியாது" என்றார்.

மூடபக்தனின் கதை:

......துவைதிகளான, பாரத வைஷ்ணவர்கள், சகிப்புத் தன்மையற்ற ஒரு வகுப்பினராவர். சைவர்களில், துவைதக் கிளையில் ஒரு வகுப்பைச் சேர்ந்த கண்டாகர்ணன் (மணிக்காதன்) என்ற பக்தனைப் பற்றிய கதையொன்று வழங்கி வருகிறது. அவன் சிவபெருமானிடத்தில் மிகுந்த ஈடுபாடுள்ள பக்தனாதலால் வேறொரு தெய்வத்தின் பெயரைக் காதால் கேட்கவும் விரும்ப மாட்டான். அதனால் மற்றத் தெய்வங்களின் பெயர்களைக் கூறும் எந்தக் குரலையும் அமிழ்த்திவிடும் பொருட்டுத் தன் இரு காதுகளிலும் இரு மணிகளைத் தொங்க விட்டுக் கொண்டான். சிவபெருமானிடம் அவன் பேரன்பு பூண்டவனாதலால் அப்பெருமான், அவனுக்குச் சிவன்–விஷ்ணு என்னும் பேதமில்லை என்பதை அறிவிக்க வேண்டி அவன் முன் பாதி திருமாலாகவும், பாதி சிவன் வடிவாகவும் ஒரு நாள் காட்சி தந்தார். அவ்வமயம் அந்த பக்தன் அவர் முன் தூபங் காட்டினான். தூபத்தின் நறுமணம் திருமாலின் நாசியிற் புகுவதைக் கண்டபோது அதனுள் தனது விரலைப் புகுந்தி அக்கடவுள் அந்த நறுமணத்தை நுகர முடியாதபடி தடுக்கலானான். கண்டாகர்ணனின் முழு மூடபக்தியின் வெறி அவ்வாறிருந்தது.

* * *

**குருட்டு வெறியனாகாதே :**

குருட்டு வெறியர்களில் பலரகம் உண்டு. சிலர் மது வெறியர்கள். சிலர் புகை பிடிப்பதில் வெறியர்கள். மனிதர்கள் புகை பிடிப்பதை நிறுத்தினால் யுகப்பிரளயம் வந்து விடும் என்று சிலர் நினைக்கிறார்கள் ......சில வெறியர்கள், கணவனை இழந்த பெண்கள் மீண்டும் திருமணம் செய்து கொண்டால் எல்லாத் தீமைகளும் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள், இது குருட்டு வெறியாகும்.

நான் சிறு பையனாக இருந்தபோது வேலை செய்வதற்குத் தேவையாக இந்தக் குருட்டு வெறி முக்கியமான அம்சமாகும் என நினைத்தேன். ஆனால் வயதாக ஆக அது அப்படி யல்லவென்று கண்டுபிடித்து விட்டேன்.

......ஒருவன் எல்லோரையும் ஏமாற்றிக்கொண்டு திரியலாம்; அவனை யாரும் நம்ப முடியாது; அவனிடம் எந்தப் பெண்ணும் பத்திரமாக இருக்க முடியாது. ஆனால் ஒருவேளை இந்த அயோக்யன் மது அருந்ாதவனாக இருக்கலாம். அப்படியிருந்தால் மது அருந்துகிறவன் மகா மோசம்; அவனிடம் நல்லது எதுவுமே இல்லையென்று அந்த அயோக்யன் நினைக்கிறான்; தான் செய்கிற தீய செயல்களெல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டல்ல. இது மனிதனுக்கு இயல்பான சுய நலத் தன்மையாகும். ஓரவஞ்சனைக் குணமாகும்.

இந்தக் குருட்டுப் பிடிவாத வெறியர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுடைய ஈரல் கெட்டுப் போயிருக்கலாம். அஜீர்ணக்காரர்களாக இருக்கலாம். அல்லது ஏதாவது நோய்வாய்ப்பட்டவர்களாக இருக்கலாம். நாளடைவில் இந்தக் குருட்டு நம்பிக்கை வெறி கூட ஒரு வகை வியாதிதான் என்று வைத்தியர்கள் கண்டுபிடிக்கக் கூடும். கடவுள் என்னை அதிலிருந்து காப்பாற்றட்டும்!

என்னுடைய அநுபவங்களின் முடிவாக நான் ஒன்று நினைக்கிறேன். பிடிவாதமாக, மூடத்தனமான பலவிதச் சீர்திருத்தங்களைப் பண்ண முயலுவதை நிறுத்துவது நல்லது. அது ஒரு விதத்தில் புத்திசாலித்தனமாகும். உலகம் மெல்ல முன்னேறி வருகிறது. அதை மெல்லவே முன்னேறும்படி விட்டு விடலாமே! நாம் ஏன் அவசரப்படவேண்டும்? நன்றாகத் தூங்குங்கள்; நரம்புகள் நல்ல நிலையிலிருக்கும்படி கவனித்துக் கொள்ளுங்கள். சரியான உணவைச் சாப்பிடுங்கள்; உலகிடம் அநுதாபம் காட்டுங்கள். குருட்டு வெறியர்கள்தாம் வெறுப்பை உண்டாக்குகிறார்கள்......

......இந்த முரட்டுப் பிடிவாதக்காரர்களின் கோஷ்டியிலிருந்து நீங்கள் வெளிவந்தால் உண்மையில் அன்பு காட்டுவதும் அநுதாபம் காட்டுவதும் எப்படி யென்பதை நீங்கள் கற்றுக்கொள்ளக் கூடும்.

நீங்கள் அன்பு, அநுதாப நிலையை எய்தினுல் இந்த எளிய ஜந்துக் களைக் கண்டிப்பதற்கு மனமின்றி உங்கள் கோபசக்தி குறைந்து போகும்; அவர்களது குறை கண்டு அநுதாபந்தான் கொள்ளு வீர்கள்.

.....ஓர் அரசன் இருந்தான். அண்டைநாட்டு அரச குமாரன் தன் தலைநகர் மீது படையெடுத்து, அதை முற்றுகையிட முன்னேறி வருவதாக அவன் கேள்விப்பட்டுத் தனது சபையைக் கூட்டினுன். நாட்டை எதிரியிடமிருந்து எப்படிக் காப்பாற்றுவது என்பதற்காக யோசனைகளைக் கூறும்படி மக்களைக் கேட்டுக்கொண்டான். எஞ்சினீ யர்கள் தலைநகரைச் சுற்றி உயரமான ஒரு மண்சுவர் கட்டி, வெளி யில் ஓர் அகழி வெட்டி வைக்கவேண்டும் என்று யோசனை சொன்னுர் கள். தச்சர்கள் மரச்சுவர் எழுப்பச் சொன்னுர்கள். சக்கிலியர்கள், "தோலுக்கு இணையாக எதுவுமே இல்லை எனவே தோலால் சுவர் எழுப்பலாம்" என்ருர்கள். ஆனுல் இரும்புக்கொல்லர்கள், "நீங்கள் கூறுவதெல்லாம் சுத்தப் பிசகு, சுவரை இரும்பால் தான் கட்டவேண் டும்" என்றனர். அடுத்ததாக வழக்கறிஞர்கள் முன்வந்து நாட்டைக் காப்பதற்கு மிகச் சிறந்த வழி, எதிரியிடம் போய் மற்றவர் சொத்துக் களைத் தம் வசப்படுத்துவது நீதிக்குப் புறம்பானது, தவறு என சட்டரீதியாகச் சொல்லுவதே சிறந்த வழியென்று வாதாடினுர்கள். கடைசியாகப் புரோகிதர்கள் வந்தார்கள். எல்லோரையும் துச்சமாக நோக்கிவிட்டு அவர்கள் வெறுப்புடன் நகைத்தார்கள். "நீங்கள் எல்லாம் பைத்தியக்காரர்களைப் போலப் பேசுகிறீர்கள். முதல் முதலில் யாக யக்ஞங்களால் தேவதைகளைத் திருப்திபடுத்த வேண் டும். அப்பொழுதுதான் நம்மை யாரும் ஜெயிக்க முடியாது" என்ருர் கள். தமது நாட்டைக் காப்பதற்குப் பதிலாக அவர்கள் தமக்குள்ளே தர்க்கம் பண்ணிக்கொண்டு, தமக்குள்ளே சண்டை யிட்டுக் கொண்டார்கள். அதனிடையில் எதிரி முன்னேறி வந்து அந்த நகரத்தை தாக்கித் தகர்த்து விட்டான். மனிதர்கள் இப்படித் தான் குருட்டுப் பிடிவாதத்துடன் வாழுகிருர்கள்.

* * *

**எல்லா பலவீனத்தையும் மூடநம்பிக்கையும் கைவிடுக:**

......நான் உபதேசிக்கும், எல்லாவற்றிலும் முதல் தேவையாக ஒன்றைக் கூறுவேன். எது ஆத்மீகத்துக்கோ, அறிவுக்கோ, உட லுக்கோ பலவீனத்தை உண்டாகுகிறதோ, அதை உங்கள் கால் கட்டைவிரலால்கூடத் தொடாதீர்கள். சமயம் என்பது மனிதனிடத் தில் இயற்கையாக உள்ள வலிமையை வெளிப்படுத்துவதாகும். எல்லையில்லாத சக்தி படைத்த ஒரு "ஸ்பிரிங்" இந்தச் சிறிய உடலுக் குள்ளே சுருண்டு கிடக்கிறது. அந்த ஸ்பிரிங் மெல்ல விரிவடைந்து

வருகிறது. அது விரிந்துகொண்டே செல்லச் செல்ல, ஓர் உடலுக்குப் பிறகு மறு உடல் எடுத்து அவை ஒவ்வொன்றும் தகுதியற்றதாக ஆகும்பொழுது, அந்த உடலை எறிந்துவிட்டு. அதைவிட உயர்ந்த உடலை எடுத்துக் கொள்கிறது. இதுதான் மனிதனுடைய, சமயத்தினுடைய, நாகரிகத்தினுடைய வரலாறு ஆகும். இதுதான் முன்னேற்றம் எனப்படும்......

......சோதிடம், ரகசிய வித்தைகள் இவற்றையெல்லாம் நாடுவது பொதுவாக பலவீனமான மனத்தின் அறிகுறி என்பது உங்களுக்குத் தெரியவரும். ஆகவே நமது மனத்தில் இவை முக்கியமானதாக ஆகும்பொழுது நாம் போய் ஒரு டாக்டரிடம் உடம்பைக் காட்டி, நல்ல உணவு சாப்பிட்டு விட்டு, ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சோதிடரைப் பற்றிய பழைய கதை ஒன்று உண்டு. ஒரு நாள் அந்த மனிதர் ஓர் அரசனிடம் போய், "அரசே! நீங்கள் இன்னும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறீர்கள்" என்று சொன்னார். அரசன் நடுங்கிப் பயந்துபோய், அப்பொழுதே அங்கேயே அச்சத்தால் உயிரை விட்டுவிடுவார் போலிருந்தது. ஆனால் அவருடைய மந்திரி, புத்திசாலி. இந்தச் சோதிடர்களெல்லாம் அறிவிலிகள் என்று மன்னனிடம் மந்திரி கூறினார். ஆனால் மன்னன் அவரை நம்பவில்லை. மன்னனுக்கு இந்தச் சோதிடர்கள் அறிவிலிகள் என்பதை நிரூபிக்க வேறெந்த வழியும் புலப்படாமற் போகவே அரண்மனைக்கு அந்தச் சோதிடரை மீண்டும் ஒருமுறை மந்திரி அழைத்தார். இரண்டாம் முறை வந்தபோது, "நீங்கள் போட்ட கணக்குகளெல்லாம் சரிதானா?" என்று சோதிடரை மந்திரி வினவினார். எவ்விதத் தவறும் அதில் இருக்க முடியாது என்று கூறிவிட்டு, எதற்கும் தம்மையே திருப்திப் படுத்திக் கொள்வதற்காக, முழுக் கணக்கையும் மீண்டும் ஒருமுறை போட்டு பார்த்துவிட்டுப் பிறகு தமது முடிவு முற்றிலும் சரிதான் என்று பதிலளித்தார். மன்னனின் முகம் வெளிறிப் போய்விட்டது. மந்திரி சோதிடரைப் பார்த்து, "ஐயா, நீங்கள் எப்பொழுது மரணமடைவீர்கள்?" என்று கேட்டார், "பன்னிரண்டு ஆண்டுகளில்" என்று சோதிடர் பதிலளித்தார். அந்தக் கணமே மந்திரி தமது வாளை உருவிச் சோதிடரின் உடலிலிருந்து கழுத்தைத் துண்டித்துப் போட்டார். பிறகு மன்னனை நோக்கி, "இந்தச் சோதிடன் பொய்யன் என்பது தெரிகிறதா? இந்தக் கணமே இவன் செத்துக் கிடக்கிறான்" பாருங்கள். என்றார்.

**கஷ்டங்களைத் தைரியமாக எதிர்த்து நின்று சமாளிக்க வேண்டும் :**

...ஒரு தடவை நான் காசியில் இருந்தபோது அவ்வூரின் ஒரு பகுதியின் வழியே போய்க்கொண்டிருந்தேன். அங்கே ஒருபக்கத்தில் பெரியதொரு குளமும் மறுபுறத்தில் உயரமான சுவரும் காணப்

பட்டது. இடைவழியில் தரைமீது ஏராளமான குரங்குகள் இருந்தன. காசியிலுள்ள பருத்த உடலுள்ள மந்திகளாகும். சில சமயம் அவை வெறியுடனிருக்கும். அந்தத் தெருவழியே கடந்து செல்ல என்னை அநுமதிக்கக் கூடாது என்று அவற்றின் மனத்தில் பட்டு விட்டது போலும். ஆகவே நான் அவ்வழியாகப் போன போது அவை கூக் சலிட்டு, கீச்சிட்டுக் கத்திக்கொண்டே என் கால்களைப் பிடித்துக் கொண்டன. அவை நெருங்கிவர ஆரம்பித்தும் நான் ஓடத் துவங்கி னேன். நான் எனது வேகத்தை அதிகரிக்க அதிகரிக்க அவையும் வேகமாக ஓடி நெருங்கி வந்து கடிக்க ஆரம்பித்தன. தப்புவது அசாத்தியம் என்றே தோன்றிற்று. அந்தக் கணத்திலேயே அறி முக மில்லாத யாரோ ஒரு புதிய மனிதர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் "அந்த மிருகங்களை எதிர்த்து நில்" என்று என்னிடம் உரக்கக் கூவினர். நான் திரும்பிப் பார்த்து அந்தக் குரங்குகளை எதிர்த்து நின்றேன். அவை பின் வாங்கிவிட்டு இறுதியாக ஓடியே விட்டன. வாழ்க்கை முழுவவற்கும் அது ஒரு படிப்பினை. கஷ்டங்களைக் கண்டு நாம் எதிர்த்து நிற்கும்போது, குரங்குகளைப் போல அவை பின் வாங்கி ஓடுகின்றன.

**இரண்டு விதமான தைரியங்கள் :**

தைரியங்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று பீரங்கி முனை வாயில் அஞ்சாது எதிர்த்து நிற்பது. மற்றொன்று ஆத்மீக உறுதிப் பாடு, துணிவு. பாரதத்தின்மீது படையெடுத்து வந்த ஒரு சக்கர வர்த்திக்கு அவனது ஆசிரியர், நாட்டிலுள்ள சில ரிஷிகளைச் சந் தித்து வருமாறு கூறியிருந்தார். நெடுநேரம் தேடிய பிறகு, மிக வயது முதிர்ந்த ஒரு மனிதர் ஒரு பாறையின்மீது உட்காந்திருப் பதைச் சக்கரவர்த்தி கண்டார். சிறிது நேரம் சக்கரவர்த்தி அவ ருடன் உரையாடிய பின்னர் அம்மனிதரது ஞானத்தைக் கண்டு அவரிடம் பெருமதிப்புக் கொண்டார். தம்முடன் தம் நாட்டுக்கு வந்து விடுமாறு அந்த ரிஷியை அழைத்தார். "நான் வரமாட்டேன். எனது இந்தக் காட்டிலே நான் முழுத் திருப்தியுடன் தான் இருக் கிறேன்" என்று அந்த ரிஷி பதிலளித்துவிட்டார். அதற்கு மன்னன் "உங்களுக்கு நான் பணம் பதவி, செல்வம் எல்லாம் தருகிறேன். நான் உலகின் சக்கரவர்த்தி" என்றான். "வேண்டாம் எனக்கு அவற்றைப்பற்றி அக்கறையில்லை" என்று ரிஷி பதிலளித்தார். அதற்குச் சக்கரவர்த்தி "நீர் வராவிட்டால் உம்மைக் கொன்று விடுவேன்" என்றான். ரிஷி சிரித்தார். "சக்கரவர்த்தியே, நீ சொன்ன வார்த்தைகளில் எல்லாம் அதிக முட்டாள்தனமான சொல்லை இப்பொழுது தான் கூறினாய். உன்னால் என்னைக் கொல்ல முடியாது. என்னைச் சூரியன் உலர்த்த மாட்டான்; நெருப்பு எரிக்

காது, வாள் வெட்டாது; ஏனெனில் நான் பிறப்பு அற்றவன்; இறப்பு அற்றவன்; எப்பொழுதும் வாழுகிறவன், சர்வசக்தி வாய்ந்தவன்! எங்கும் நிறைந்த ஆத்மா நான்'' என்று மறுமொழி கூறினர். இது தான் ஆத்மீக ரீதியான தைரியம் ஆகும். மற்றது சிங்கம் அல்லது புலியின் தைரியம்...

* * *

**துணிவும் தாராள மனப்பான்மையும் பூண்டிரு :**

தென்கடல் தீவுகளில் ஏற்பட்ட ஒரு புயலில் ஒருமுறை சில கப்பல்கள் சிக்கிக்கொண்ட கதையைப் படித்தேன், "இல்லஸ்ட்ரேடட் லண்டன் நியூஸ்'' பத்திரிகையில் அந்தப் படம் வெளியாகியிருந்தது ஆங்கில நாட்டைச் சார்ந்த ஒரு கப்பல் மட்டும் புயலைச் சமாளித்து விட்டது. மற்றவையெல்லாம் உடைந்து விட்டன. மூழ்கப்போகிற மனிதர்கள் தமது கப்பலின் மேல் தட்டில் நின்றுகொண்டு புயலுக்கு மத்தியில் கப்பலை நடத்திச் செல்லுகிற மக்களுக்கு உற்சாகமூட்டி வந்த காட்சியை அப்படம் காட்டிற்று. அதுபோல நீங்களும் துணிவும் தாராள மனப்பான்மையும் கொள்ளுங்கள். நீங்கள் இருக்கிற இடத்துக்குப் பிறரைக் கீழே இழுக்காதீர்கள்...

* * *

**விருப்பத்துடன் சகித்துக் கொள்ளுங்கள் :**

உலகத்தின் பாரத்தை எல்லாம் சுமக்க நீங்கள் உண்மையிலேயே ஆயத்தம் என்ருல் தாராளமாக அதனை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனல் தயவு செய்து உங்களுடைய முக்கல் முனகல்களையும், சாபங்களையும் எங்கள் காதுகளுக்கு எட்டச் செய்ய வேண்டாம். உண்மையாகவே பாரம் சுமக்கிற மனிதன் உலகத்தை ஆசீர்வதித்து விட்டுத் தன் வழியே போகிருன். கண்டனமாகவோ, குற்றங் குறையாகவோ ஒரு சொல்கூட அவன் பேசுவதில்லை. ஏன்? உலகில் தீமை எதுவும் இல்லை என்பதனுல் அல்ல. அந்தச் சுமையை அம்மனிதன் சுய விருப்பத்துடன், தானகவே முன்வந்து ஏற்றுக்கொண்டிருப்பதால். அவன் யாரையும் கண்டிப்பதோ, குற்றம் சாட்டுவதோ இல்லை. யார் பிறரைக் காப்பாற்ற வருகிருனே—காப்பாற்றப்படுகிற மனிதனல்ல, காக்கிறவன்—அவன் தன் பாதை வழியே பெருமகிழ்வோடு போகவேண்டும்.

எதையும் நாடிச் செல்லாதே. எதையும் தவிர்க்காதே. வருவதை ஏற்றுக்கொள். எதனுலும் பாதிக்கப்படாமலிருப்பது. ஒரு பெரும் சுதந்திரமாகும். வெறுமனே சகித்துக் கொண்டிராதே, பற்றற்றிரு. இன்பம் வரும்...நல்லதுதான்; யார் தடுக்கிருர்கள்?

துன்பம் வரும்; அதனையும் வரவேற்போம். எருதின் கதையை நினைவிற் கொள்ளுங்கள். ஓர் எருதினுடைய கொம்பின்மீது ஒரு கொசுவானது நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தது. சிறிது நேரம் கழித்து அந்தக் கொசுவுக்கு மனச்சாட்சி உறுத்தவே அது "ஐயா எருதாரே! நான் நெடு நேரமாக இங்கே உட்கார்ந்திருக்கிறேன். ஒருக்கால் உங்களுக்குத் தொந்தரவாக இருக்கும், வருந்துகிறேன். போய் விடுகிறேன்'' என்று கூறிற்று. ஆனால் அந்த எருது "ஓ, அப்படியொன்றுமே இல்லை. உங்கள் குடும்ப சகிதமாகவே வந்து என் கொம்பின்மேல் தங்கிப் போங்களேன். நீங்கள் என்னை என்ன செய்துவிட முடியும்?'' என்று பதிலளித்தது.

துன்பம் வரும்போது அதனிடம் நாமும் ஏன் அவ்வாறு கூறக் கூடாது?...

* * *

**தவறுகளும் தோல்விகளும் தேவதைகளுக்குத்தான் ஏற்படாது:**

சிந்தனைதான் நம்மைத் தூண்டி வேலைசெய்ய வைக்கிற உந்து சக்தி. மனத்தை மிக உயர்ந்த சிந்தனைகளால் நிரப்பிவிடு. அவற்றைப் பற்றி நாள்தோறும் கேட்டுக்கொண்டிரு. மாதா மாதம் அவற்றைப் பற்றிச் சிந்தனைசெய். தோல்விகளை லட்சியம் பண்ணாதே. அவை மிக சகஜமானவை. தோல்விகள் வாழ்க்கையை அழகு பண்ணுகின்றன. அவையின்றி வாழ்வு எப்படியிருக்கும்? போராட்டங்கள் இல்லையென்றால் வாழ்க்கையே வாழத் தகுதியற்றதாக ஆகிவிடும். வாழ்க்கையாகிற கவிதை எங்கேயிருக்கும்? போராட்டங்களை, தவறுதல்களைப் பற்றியெல்லாம் கவலைபடாதே. பசு பொய் சொன்னதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் அது பசுதானே, மனிதனல்லவே! ஆதலால் இந்த தோல்விகளைப்பற்றி, சறுக்கி வழுக்கி வீழ்வது பற்றி சிறிதும் பொருட்படுத்தாதே. ஆயிரம் தடவைகள் வீழ்ந்தாலும் லட்சியத்தைப் பிடித்துக்கொள். ஆயிரம் தடவை தோற்றுப்போனால் மீண்டும் ஒரு தடவை முயற்சி பண்ணிப் பார்...

பூரணமாகத் தீமை வாய்ந்தது எதுவுமே இல்லை. இவ்வுலகில் தெய்வத்துக்கும் பிசாசுக்கும் இடமுண்டு. இல்லையேல் பிசாசு இங்கே இருக்காது.

நமது தவறுகளுக்கு இங்கே இடமுண்டு. முன்னேறிச் சென்று கொண்டே இரு. சரியில்லாத ஒரு செயலைச் செய்து விட்டதாக நீ நினைத்தால் திரும்பிப் பார்த்துக்கொண்டே இராதே. அதே தவறுகளை இதற்கு முன்னர் நீ செய்திராவிட்டால், நீ இன்றுள்ள நிலையில் இருப்பாய் என்று நம்புகிறாயா? ஆகவே உனது தவறுகளுக்கு நன்றி

செலுத்து! தேவதைகளுக்குதான் தவறு என்றால் என்னவென்று தெரியாது. அதிர்ஷ்டங்கள் வாழ்க! இன்பங்கள் வாழ்க! உனது பங்குக்கு எது வந்தாலும் கவலைப்படாதே. லட்சியத்தில் விடாப்பிடியாக இரு. முன்னேறிச் செல். சிறுதவறுகளையும், அற்ப விஷயங்களையும் நினைத்துத் திரும்பிப்பாராதே. இந்த நமது போர்க்களத்தில் தவறுதலாகிற புழுதி கிளம்பியே தீரும். அந்தப் புழுதியைச் சகிக்க முடியாத அளவுக்கு எவருடைய தோல் மெல்லியதாக இருக்கிறதோ அவர்கள் இந்தப் படை அணி வகுப்பை விட்டு வெளியே போய் விடட்டும்.

* * *

**உங்களது தெய்விகத் தன்மையை உணர்ந்து கொள்ளுங்கள்:**

இமாலயப் பகுதிகளில் நான் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னே மிக நீண்ட பாதை கிடந்தது. ஏழைத் துறவிகளான எங்களைச் சுமந்து செல்ல எவரையும் ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஆகவே கால் நடையாகவே முழுவதும் செல்ல நேரிட்டது. எங்களுடன் கூடக் கிழவர் ஒருவர் இருந்தார். நூற்றுக் கணக்கான மைல்களுக்கு வழி முழுவதும் ஒரே ஏற்ற இறக்கமாக உள்ளது. தமக்கு முன்னே உள்ள நீள் வழியைக் கண்டதும் அந்தக் கிழவரான துறவி, "ஓ! ஐயனே! இவ்வளவு தூரத்தை எப்படிக் கடந்து செல்வது? இனிமேல் என்னால் நடக்கவே முடியாது. எனது மார்பு வெடித்தே விடும்" என்றார். "உங்கள் காலுக்குக் கீழே பாருங்கள்" என்று கூறினேன். அவரும் பார்த்தார். "உங்களுடைய கால்களின் கீழே இருக்கிற பாதை நீங்களே கடந்து வந்த பாதையாகும். உங்கள் முன்னே நீங்கள் காணுகிற பாதையும் இதைப் போன்றதே தான். அதுவும் விரைவில் உங்களது காலின் கீழ் வந்துவிடும்" என்றேன். மிகப் பெரிய உயர்ந்த விஷயங்களெல்லாம் உங்கள் காலின் கீழ் உள்ளன. ஏனெனில் நீங்கள் தெய்விக நட்சத்திரங்கள். இவையெல்லாம் உங்கள் காலின் கீழ் கிடக்கின்றன. நீங்கள் விரும்பினால் கைப்பிடி நிறைய நட்சத்திரங்களை எடுத்து விழுங்கிவிட முடியும். உங்களது உண்மை இயல்பு அப்படிப்பட்டதாகும். வலிவுடனிருங்கள். எல்லா மூட நம்பிக்கைகளையும் கைவிட்டு விட்டு அப்பாற் செல்லுங்கள். விடுதலை பெறுங்கள்.

* * *

**ஆரவாரமில்லாத உறுதியான வேலை:**

...பெரிய பதவில் அமர்ந்திருக்கிற ஒவ்வொருவனும் பெரியவனாக இருப்பான். மேடையின்மீது பிரமாதமான வெளிச்சமுள்ள விளக்கு

கள் ஒளி வீசுகையில் கோழையும் கூடத் துணிவுள்ளவனுக ஆகி விடுவான். உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது! யாருக்குத்தான் நெஞ்சு துடிக்காது? தனது முழு சக்தியையும் காட்டி வேலை செய்கிறவரையில் யாருடைய நாடிதான் படபடவென வேகமாகத் துடிக்காது? ஆனல் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் சிறு புழுதான் உண்மையில் மிக உயர்ந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. அது மௌனமாகத் தன் கடமையைச் செய்கிறது. உறுதியாகக் கணத்துக்குக் கணம் மணிக்கு மணி அது தன் வேலையைச் செய்துகொண்டே போகிறது.

...ஒரு அணில் இருந்ததாம். அது மணலில் புரண்டுவிட்டு முன்னும் பின்னும் ஓடி பாலத்தின் மேல் சென்று தன் மீதுள்ள மணலை உதறிற்றும். இவ்வாருகச் சிறு அளவில் இராமருடைய அணையில் மணலைப் போட்டு அந்த அணில் வேலை செய்ததாம். குரங்குகள் சிரித்தன. ஏனெனில் அவை முழு மலைகளையும், முழுக் காடுகளையும் பெரிய மணல் மூட்டைகளையும் அணைக்காகச் சுமந்து வந்தன. ஆதலால் மணலில் புரண்டுவிட்டுத் தன் உடலைக் சிலிர்த்து உதறிய அச்சிறு அணிலைக் கண்டு அவை சிரித்தன. இராமர் அது கண்டு "இந்தச் சிறு அணில் வாழ்க; தனது முழுச் சக்தியுடன் தன்னுடைய வேலையை அது செய்து வருகிறது. ஆகவே உங்களிடையே மிகப் பெரியவரைப்போல, அந்த அளவுக்கு இதுவும் உயர்ந்ததாகும்" என்று கூறினர். பிறகு அந்த அணிலின் முதுகை மெதுவாக வருடினர். இராமரது விரல்பட்ட இடத்தில் கோடு உண்டாகி இன்றும் அணிலின் முதுகில் நீளமாக அது காணப்படுகிறது.

ஒவ்வொரு கடமையும் புனிதமானதுதான் :

ஒவ்வொரு கடமையும் புனிதமானதுதான். கடமையில் பக்தியுடனிருப்பது தெய்வ வழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்...

நமக்கு மிக நெருங்கியுள்ள கடமையை, நாம் இப்பொழுது ஏற்றெடுத்துள்ள கடமையைக் செம்மையாகச் செய்வதால் நம்மை நாம் மேலும் அதிகமாகப் பலப்படுத்திக் கொள்கிறேம். இவ்வாருகப் படிப்படியாக நமது பலத்தை அதிகரித்துக்கொண்டே போனல் நாம் ஒரு பெரும் நிலையைக்கூட எய்திவிடக் கூடும். அப்பொழுது வாழ்க்கையிலும், சமூகத்திலும் எல்லோரும் மிக விரும்பிப் போற்றுகிற, கௌரவிக்கிற கடமைகளைக்கூடச் செய்து முடிக்கிற நல்ல வாய்ப்பு நமக்குக் கிடைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் எந்த இடத்துக்குத் தகுந்தவர்களோ அந்த இடத்தில்தான் இருக்கிறேம். ஒவ்வொரு பந்துக்கும் "தக்கதொரு குழி உண்டு. ஒருவனுக்கு மற்றவர்களைவிட அதிகமான திறமை இருக்குமானல் உலகம் அதைக்கூடக் கண்டுபிடித்து விடும்.

ஏனெனில் இயற்கையிலேயே எங்கு பார்த்தாலும் ஒவ்வொன்றையும் பொருத்தமான இடத்தில் அமைக்கிற மாறுதல் நிகழ்ந்தே வருகிறது. ஆகவே முணுமுணுப்பதில் பயனில்லை. ஒரு பணக்காரன் தீயவனாக இருக்கலாம். இருப்பினும் அந்த மனிதனைப் பணக்காரனாக்கிய சில நல்ல குணங்கள் அவனிடம் இருந்தே தீரும். வேறொரு மனிதனுக்கும் அதே குணங்கள் ஏற்பட்டால் அவனும் பணக்காரனாக ஆகிவிடலாம். ஆகவே சண்டையிடுவதாலும் குற்றஞ் சொல்லிக் கொண்டிருப்பதாலும் என்ன பயன்? அப்படிச் செய்வதால் நமக்கு நல்ல நிலை ஏற்பட்டு விடாது.

**உனது விதியைப் பற்றி முணுமுணுக்காதே:**
**ஒவ்வொரு கடமையையும் சுவையுடன் செய்:**

...ஒரு மனிதன் தனக்குக் கிடைத்துள்ள சிறு அளவு வேலையை எண்ணி முணுமுணுப்பானாயின், அவன் எல்லாவற்றுக்குமே முணுமுணுப்பான். முணுமுணுத்துச் சிடுசிடுத்து மிகுந்த துக்கரமான வாழ்க்கையை அவன் நடத்துவான். அவன் செய்வதெல்லாம் தோல்வியிலேயே முடியும். ஆனால் தனது கடமைகளை மகிழ்வோடு செய்துகொண்டு, பணியாகிற ரதத்தின் சக்கரத்தில் தோள் கொடுத்துத் தள்ளுகிறவன், ஒளியைக் காண்பான். உயர்தரமான கடமைகள் அவன் பங்குக்குக் கிடைக்கும்.

பலனை எதிர்பார்த்து அதில் பற்றுக்கொண்டு வேலை செய்கிற மனிதன் தனக்கு கிடைத்துள்ள கடமையின் தன்மையைப் பற்றி முணுமுணுப்பான். ஆனால் பற்றற்ற ஊழியனுக்கு எல்லாக் கடமைகளுமே ஒரே மாதிரியானவை தான். எந்தக் கடமையானாலும் அது சுயநலத்தையும், சிற்றின்பத்தையும் கொன்றுவிடவும், ஆத்மாவுக்கு விடுதலை தேடித் தரவும் திறமைவாய்ந்த கருவியாகவே அமையும்...

...முணுமுணுக்கிறவனுக்கு எல்லாக் கடமைகளுமே சுவையற்றவை. எதுவும் அவனை ஒரு போதும் திருப்திப்படுத்தாது. அவனது வாழ்வு முழுவதும் தோல்வி மயமாக ஆவது திண்ணம். நாம் வேலை செய்துகொண்டே செல்வோம். நமது கடமையாக எது வந்தெய்துகிறதோ அதனைச் செய்துகொண்டே போவோம். வேலையாகிற சக்கரத்தில் நமது தோள்களைக் கொடுத்துத் தள்ள எப்போழுதும் ஆயத்தமாக இருந்து கொண்டிருப்போம். அப்படியிருந்தால் நாம் ஒளியைக் கண்டே தீருவோம்.

எந்த வேலையும் அற்பமானதல்ல. தன்னுடைய மனதுக்குப் பிடித்தமான காரியத்தை ஒரு அடிமுட்டாள் கூடச் செய்து முடித்து விட முடியும். ஆனால் எந்த வேலையையும் தனக்குப் பிடித்தமானதாக, சுவையுள்ள வேலையாக ஆக்கிக் கொள்ளுகிறவன் புத்திசாலியெனப் படுவான்.

இந்த உலகிலிருக்கிற எல்லாமே ஆலமரத்து விதைபோல நுண்ணியதாக, கடுகுபோலத் தோற்றமளித்தாலும், அதற்குள்ளே பெரிய ஆலமரம் மறைந்துள்ளது. இதைக் கவனித்துத் தெரிந்து கொண்டு, எல்லாப் பணிகளையும் உண்மையிலேயே உயர்ந்ததாக ஆக்குவதில் வெற்றி பெறுகிற மனிதனே புத்திசாலியாவான்.

**பிறரைக் குற்றஞ் சொல்லாதே: உன்னையே ஆராய்ந்து பார்:**

..... நாம் தாக்கப்படக்கூடிய நிலையில் இருந்தாலன்றி நம்மை எதுவும் தாக்கி பாதிக்காது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். என்னுடைய உடல் வியாதியால் பாதிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இராதவரை வியாதி என்னை அணுகாது. வியாதியானது கிருமிகளை மாத்திரம் பொறுத்ததல்ல. ஏற்கனவே உடலில் இருக்கிற சில தன்மைகளைப் பொறுத்ததாகும். நமக்கு ஏற்றதுதான் கிடைக்கிறது. தகுதியே இல்லாமல் துன்பம் ஏற்படாது என்பதை நாம் நமது கர்வத்தைக் கைவிட்டு உணர்ந்து கொள்வோம். தகுதியில்லாமல் நமக்குத் தாக்குதலோ அடியோ கிடையாது. எனது சொந்தக் கைகளாலேயே வழி வகுக்காமல் எந்தத் தீமையும் எனக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. நாம் அதனைத் தெரிந்துகொள்ள வேண்டும். உன்னையே நீ அலசி ஆராய்ந்து பார்த்தால், உனக்குக் கிடைத்த ஒவ்வொரு அடியும், நீ அதற்காக ஏற்பாடு செய்து வைத்திருந்ததால் தான் கிடைத்தது என்பது தெரியவரும். நீயாக செய்வது பாதி; வெளி உலகம் செய்தது பாதி; இந்த ரீதியில்தான் அடி கிடைத்தது. இப்படிச் சிந்தித்தால் நாம் சாந்தமான கம்பீரமான மன நிலைக்கு வந்து சேருவோம். அத்துடன்கூட இந்த ஆராய்ச்சியின் மூலமாக நமக்கு ஒரு நம்பிக்கை பிறக்கும். அதாவது 'வெளி உலகத்தைக் கட்டுப்படுத்த என்னால் முடியாது. ஆனால் என்னிடம் ஏது இருக்கிறதோ—அதாவது எனது சொந்த அக உலகம்—அது என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது. இந்த இரண்டும் ஒன்று சேருவதால்தான் தோல்வி ஏற்படுமாயின், இந்த இரண்டும் சேருவதன் மூலம் தான் எனக்கு அடி கிடைக்க வேண்டுமென்றால், என்னிடமிருக்கிற பங்கை நான் கூட்டிச் சேர்க்கமாட்டேன், அப்பொழுது எப்படித் தாக்குதல் வரும்? என்னை என்னால் நன்றாக அடக்கியாள முடிந்தால் தாக்குதல் ஒருபோதும் என்னை அணுகவே முடியாது.''

......ஆகவே உங்களது தவறுகளுக்காக வேறு எவரையும் குற்றஞ் சாட்டாதீர்கள். உங்களது கால்களிலே நில்லுங்கள். முழுப் பொறுப்பையும் நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள். "நான் அனுபவிக்கிற இந்தத் துன்பத்துக்கு நானே பொறுப்பு என்றால் இதனை நானே தான் நீக்கவேண்டும் என்பது நிரூபணமாகி விடுகிறது" என்று கூறுங்கள். நான் நிர்மாணித்ததை என்னால் அழிக்கவும் முடியும். வேறொருவர் உண்டாக்கியதை என்னால் ஒருக்காலும்

அழிக்க முடியாது. ஆகையால் எழுந்து நில்லுங்கள், துணிவுட னிருங்கள், வலிவுடனிருங்கள், முழு பொறுப்பையும் உங்களது தோள்மீதே, நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களது விதியை நீங்களேதான் நிர்மாணிக்கிறீர்கள். உங்களுக்குத் தேவையான சக்தி, துணை எல்லாம் உங்களிடமே உறைந்துள்ளன. ''மடிந்துபோன முற்காலம் மடிந்தவற்றைப் புதைக்கட்டும்.'' முடிவற்ற வருங்காலம் உங்கள் முன்னே உள்ளது. நீங்கள் பேசுகிற ஒவ்வொரு பேச்சும், சிந்திக்கிற சிந்தனையும், செய்கிற செயலும் வருங்காலத்தில் உங்கள் மீது பாய்வதற்கு ஆயத்தமாக, ஒரு குவியலாகச் சேர்ந்து உள்ளன. நீங்கள் செய்த கெட்ட சிந்தனைகளும், கெட்ட செயல்களும், புலிகளைப் போலப் பாய்வதற்கு ஆயத்தமாக இருப்பதைப் போலவே நம்பிக்கை யுணர்ச்சியைத் தூண்டுகிற மற்றொரு விஷயமும் உள்ளது. அதாவது நீங்கள் செய்யக்கூடிய, நல்ல சிந்தனைகளும் நல்ல செயல் களும் நூறுயிரம் தேவதைகளின் பலத்துடன் உங்களை எப்பொழுதும், எல்லாக் காலத்துக்கும் காப்பாற்றுவதற்காகக் காத்துக் கொண்டிருக் கின்றன. இதனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**நமது விதிக்கு நாமே பொறுப்பு :**

......ஒருவன் சம்பாதிக்காவிட்டால் அவனுக்கு எதுவும் கிடைக் காது. இது நிரந்தரமான சட்டம். அப்படியல்லவென்று சில சமயம் தோன்றலாம். ஆனால் நாளடைவில் அது உண்மைதா னென்று தெளிவடைகிறோம். ஒரு மனிதன் செல்வந்தன் ஆவதற் காக ஆயுள் முழுவதும் பாடுபடலாம். ஆயிரக்கணக்கான பேர்களை அவன் ஏமாற்றலாம். ஆனால் கடைசி முடிவாகத் தான் பணக்காரனு வதற்குத் தகுதியுடையவனல்லன் என்பதைத் தெரிந்து கொள்வான். அவனது வாழ்க்கையே, அவனுக்குத் தொல்லையாகவும், தொந்தர வாகவும் ஆகிவிடுகிறது. சுகபோகங்களை அநுபவிப்பதற்காக நாம் ஏராளமான பொருள்களைச் சேர்த்து வைத்துக்கொண்டே இருக் கலாம். ஆனால் நாம் எதைச் சம்பாதித்தோமோ அதுதான் உண் மையில் நமக்கு ஒட்டும். முட்டாள் ஒருவன் உலகிலுள்ள எல்லாப் புத்தகங்களையும் வாங்கலாம். அவனது நூல் நிலையத்தில் அவை இருக்கும். ஆனால், எதனைப் படிக்க அவனுக்குத் தகுதியுண்டோ அதையே தான் அவன் படிப்பான். அவனுக்குத் தகுதியை உண் டாக்குவது அவனது ''கர்மா''.

நமது தகுதி என்ன, நம்மால் எதனை ஜீரணிக்க முடியும் என் பதை நமது கர்மா முடிவு செய்கிறது. நாம் இன்றிருக்கும் நிலைக்கு நாமே பொறுப்பு. நாம் எப்படி ஆகவேண்டுமென்று விரும்பு கிறோமோ அவ்வாறு நம்மை ஆக்கிக் கொள்ளுவதற்கு நம்மிடம் ஆற்றல் உள்ளது. இன்று நாமிருக்கும் நிலை நமது பழங்காலச் செயல்களின் விளைவாக ஏற்பட்டது என்றால் அதைத் தொடர்ந்து

மற்ருெரு கருத்தும் வருகிறது. அதாவது நாம் வருங்காலத்தில் எப்படி மாற வேண்டுமென்றிருக்கிருேமோ, அந்த நிலையை இக் காலத்திய நமது நடவடிக்கைகளால் உண்டாக்க முடியும். ஆகவே எப்படிச் செயல்பட வேண்டும் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும்......

**நமக்குள்ளிருந்தே உதவியெல்லாம் கிடைக்கும் :**

......நாம் பட்டுப் புழுவைப் போலிருக்கிருேம். நமது உடலிலிருந்து வெளிப்படும் பொருளைக் கொண்டே நாம் பட்டு நூல் கூடு உண்டாக்குகிருேம். நாளடைவில் அதிலேயே சிறையிடப்படுகிருேம். ஆனல் இது நிரந்தரமானதல்ல. அந்தக் கூட்டுக்குள்ளேயே நாம் நிச்சயமாக ஆத்மஞான அநுபூதியை வளர்த்துக் கொள்வோம். பின்னர் வண்ணாத்திப் பூச்சியைப் போலச் சுதந்திரமாக வெளி வருவோம்; இந்தக் கர்ம வலையை, நம்மைச் சுற்றி நாமே தான் பின்னிக் கொண்டோம். நம்முடைய அஞ்ஞானத்தின் காரணமாக, நாம் கட்டுண்டு விட்டதாக நினைத்து உதவி கோரிக் கண்ணீர் விட்டுக் கதறுகிருேம். உதவியானது வெளியிலிருந்து வராது, நமக்குள்ளிருந்தேதான் வரும். உலகிலுள்ள எல்லாக் கடவுள்களிடமும் முறையிட்டுப்பார். பல ஆண்டுகள் கதறினேன். இறுதியாக எனக்கு உதவி யளிக்கப்பட்டதை நான் கண்டேன். ஆனல் எனக்குள்ளே யிருந்துதான் உதவி வந்தது. தவறுதல் காரணமாக நான் செய்ததையெல்லாம் திருப்பி மாற்ற வேண்டியிருந்தது. அது ஒன்றுதான் வழி. என்னைச் சுற்றிலும் நானே வீசிக் கொண்ட வலையை நான் வெட்டியெறிய வேண்டியிருந்தது. இவ்விதம் செய்வதற்கான சக்தி நமக்குள்ளேயே இருக்கிறது. ஒரு விஷயத்தை நான் நிச்சயமாக அறிவேன். அதாவது எனது அபிலாஷைகளில் ஒன்றுகூட—அது நல்வழிப் பட்டதோ, தீயவழிப்பட்டதோ, எப்படியாயினும் சரி—வீணுகவில்லை. எனது ஆயுளில் நான் எத்தனையோ தவறுகளைச் செய்திருக்கிறேன். ஆனல் கவனியுங்கள். இந்தத் தவறுகள் ஒவ்வொன்றையும் நான் செய்திராவிட்டால் நான் இன்றுள்ள நிலையில் இருக்க முடியாது என்பது திண்ணமாக எனக்குத் தெரியும். ஆகவே எனது தவறுகளைப் பற்றி எனக்கு முழுத் திருப்தி தான். அதற்காக நீங்கள் வீட்டுக்குப் போய் வேண்டுமென்றே தவறிழைக்க வேண்டுமென்று நான் கூறுவதாக நினைத்துச் சோர்ந்து போகவேண்டாம்; கடைசியில் எல்லாம் நேராகிவிடும் என்று தெரிந்து கொள்ளுங்கள். அது வேறு விதமாக ஆகமுடியாது. ஏனெனில் நல்ல தன்மை நமது இயல்பு ஆகும். தூய்மை இயற்கையான நிலையாகும். அந்த இயற்கையை ஒருநாளும் அழிக்கவே முடியாது. நமது அடிப்படையான சுபாவம் எப்பொழுதும் ஒரே விதமாகவே இருக்கும்.

* * *

**நல்லொழுக்கத்தை எப்படி நிலைநாட்டுவது?**

......மனிதனானவன் ஒரு மையப்புள்ளியைப் போல விளங்குகிறான். உலகிலுள்ள எல்லாச் சக்திகளையும் தன்னை நோக்கி இழுக்கிறான். தனது கேந்திரத்தில் எல்லாவற்றையும் உருக்கி ஒரு பெரிய சக்திச் சுழலாக வெளியில் மீண்டும் அனுப்புகிறான்......

......நல்லது—தீயது, இன்ப—துன்பம் இவையெல்லாம் அவனை நோக்கி ஓடுகின்றன. அவனைச் சுற்றிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து ஒழுக்கப் பண்பு வேளியில் அதனை வீசுகிறான். எதை வேண்டுமானாலும் உறிஞ்சி இழுத்துக்கொள்ள அவனுக்குச் சக்தி இருப்பது போல அதனை வெளியில் எடுத்து வீசவும் அவனுக்குச் சக்தி உண்டு.

......தொடர்ந்தாற்போல ஒரு மனிதன் தீய சொற்களைக் கேட்டு, தீயனவற்யையே சிந்தித்து, தீயனவற்றையே செய்து வந்தால் அவனுடைய மனம் தீய பதிவுகளால் நிரம்பிக் கிடக்கும். அவை அவனது சிந்தனையையும் வேலையையும் பாதித்து விடும்; அப்படிப் பாதிப்பதால் தீய பதிவுகள் எப்பொழுதுமே வேலை செய்து கொண்டிருக்கின்றன. அவற்றின் விளைவு தீயதாகவே இருந்து தீரும். அந்த மனிதன் தீயவனாகவே இருப்பான். அவனால் அதைத் தவிர்க்க முடியாது. அவனிடமுள்ள மனப் பதிவுகளின் மொத்தத் தொகுப்பானது, தீய காரியங்களைச் செய்வதற்கான பலமான உந்து சக்தியாகத், தூண்டுகோலாக அமைகிறது. அவன் தன்னுடைய மனப் பதிவுகளின் கையில் இயந்திரம் போல. அவை அவனை தீயவை செய்யக் கட்டாயப்படுத்தும்.

அதுபோலவே ஒரு மனிதன் நல்ல கருத்துக்களையே நினைத்து நல்லனவற்றையே செய்து வந்தால் இந்த மனப்பதிவுகளின் மொத்தத் தொகுப்பும் நல்லதாகவே இருக்கும். முன் கூறியதைப் போலவே அவன் விரும்பாவிட்டாலும்கூட அவனை நல்லதையே செய்ய அது கட்டாயப்படுத்தும். ஒரு மனிதன் இவ்வளவு தூரம் நல்ல காரியங்களைச் செய்து, இத்தனை நல்ல சிந்தனைகளைச் சிந்தித்தும் வந்ததால், நல்லனவே செய்வதற்கான மனப்போக்கு அவனுக்குத் தடுக்க முடியாததாக ஆகிவிடுகிறது. அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவனது இயல்பான போக்குகளின் மொத்தத் தொகுதியாக உள்ள அவனது மனமானது அவனைத் தவறிழைக்க விடாது. அவனது சுபாவங்கள் அவனைத் திருப்பி விட்டு விடும். அவன் பூரணமாகவே நல்ல வாசனைகளின் ஆளுகையின் கீழ் வாழ்வான். நிலைமை இப்படி ஆகும்போது ஒருமனிதனின் நல்லொழுக்கமானது ஸ்திரப் பட்டுவிட்டது என்று சொல்லப்படுகிறது.



31

......ஒரு மனிதன் வீணையில் ஒரு ராகத்தை வாசிக்கும் போது ஸ்வரப்படியில் ஒவ்வொரு இடத்திலும் கவனமான சுய நினைவுடன் ஒவ்வொரு விரலையும் வைப்பான். விரல்களின் அசைவு பழக்கமாக ஆகிறவரை அவன் இந்தச் செயலைத் திரும்பத் திரும்பச் செய்வான். பிறகு நாளடைவில் ஒவ்வொரு தனி ஸ்வரத்தையும் பற்றிக் குறிப்பாக கவனம் செலுத்தத்தேவையின்றியே அவன் ராகங்களை வாசித்து விடுவான். அதுபோலவே நமது இயல்புகளெல்லாம், மனப்போக்கெல்லாம் முற்காலத்தில் நல்ல ஞாபகத்துடன் வேண்டுமென்றே நாம் செய்த செய்கைகளின் விளைவுதான் என்பது தெரிகிறது.

**புலனடக்கத்தால் விளையும் ஆற்றல் :**

நமது உணர்ச்சிகளைக் கட்டவிழ்த்து விடும்போது, ஏராளமான சக்தியை விரயம் செய்கிறோம். நமது வரம்புகளைச் சிதற அடிக்கிறோம். மனத்தை அமைதி குலைய செய்கிறோம். அந்நிலையில் மிகக் குறைந்த அளவில்தான் வேலை நடக்கிறது. வேலையின் வடிவத்தில் வெளிச் செல்ல வேண்டிய சக்தி வெறும் உணர்ச்சியாகச் செலவாகி விடுகிறது. அதனால் எவ்விதப் பயனுமில்லை. மனமானது மிக அமைதியாக, குளிர்ந்த நிலையில் இருக்கும்பொழுது மனத்தில் முழுச் சக்தியும் நல்ல காரியங்களைச் செய்வதில் செலவாகிறது. உலகில் தோன்றியுள்ள மகத்தான ஊழியர்களின் வாழ்க்கை வரலாற்றை நீங்கள் படித்துப் பார்த்தால் அவர்கள் அபார அமைதி வாய்ந்தவர்களாக இருந்தார்கள் என்று தெரிந்து கொள்ளுவீர்கள். அவர்களது மனத்தின் சம நிலையை எதுவும் குலைக்காதுபோல் தோன்றும். அதனால்தான் கோபமடைகிற மனிதனல் பெரிய அளவில் வேலை செய்ய முடியாமற் போகிறது. எந்த ஒரு மனிதனை எதுவுமே கோபமூட்டாதோ, அவன் பெரும் காரியங்களைச் செய்கிறான். கோபம், வெறுப்பு அல்லது வேறு ஏதேனும் ஒரு உணர்ச்சிக்கு இடம் கொடுக்கிறவனல் வேலை செய்ய முடியாது. தன்னையே துண்டு துண்டாக உடைத்துக் கொள்ளுவதைத் தவிர அவனல் நடைமுறையில் எதுவும் செய்ய முடிவதில்லை. சாந்தமான, மன்னிக்கிற, சமசித்தமுள்ள, அமைதியில் ஸ்திரப்பட்ட உள்ளம்தான் பெருத்த அளவில் வேலை செய்கிறது.

மனதில் ஏற்படுகிற வெறி உணர்ச்சியின் ஒவ்வொரு அலையையும் நீ கட்டுப்படுத்துவது உன்னுடைய சேமிப்பு நிதிக் கணக்கில் சேர்ந்து விடுகிறது. ஆகையால் ஒருவர் கோபித்தால் அவரிடம் திருப்பிக் கோபிக்காமல் இருப்பது நல்ல கொள்கையாகும். எல்லா நெறியொழுக்கத்துக்கும் இது பொருந்தும். "கெட்ட தன்மைகளைத் தடுக்காதே" என்று கிறிஸ்து சொன்னர். அது நீதிநெறிப்படி நல்லதுதான் என்பதை மட்டுமின்றி அது நாம் கடைப்பிடிக்கக் கூடிய மிக உத்தமமான கொள்கையாகும் என்பதை நாமே

கண்டுப் பிடிக்கிறவரையில் நமக்குப் புரிவதில்லை. ஏனெனில் கோபத்தை வெளிக்காட்டுகிற மனிதனுடைய சக்தி நஷ்டமாகிறது. கோபமும் வெறுப்பும் கலந்த நிலைக்கு உனது மனம் செல்லுவதற்கு நீ அனுமதிக்கக் கூடாது.

......நான்கு குதிரைகள் பூட்டிய "கோச்சு" வண்டியொன்று எவ்விதத் தங்குதடையின்றி மலைச் சரிவில் பாய்ந்து வரலாம்! அல்லது கோச்சு வண்டிக்காரன் அக் குதிரைகளைக் கட்டுப்படுத்திச் சரியானபடி ஓட்டலாம். இந்த இரண்டில் எதில் சக்தி தெரிகிறது? அவற்றை ஓட விடுவதிலா, பிடித்து நிறுத்துவதிலா? வானத்தில் பறந்து செல்லுகிற ஒரு பீரங்கி குண்டானது நெடுந்தூரம் பிரயாணம் செய்துவிட்டுப் பிறகு கீழே விழுகிறது. மற்றொன்று ஒரு சுவரின் மீது தாக்க, அதன் பிரயாணம் நின்று போய் விடுகிறது. குண்டு சுவரின்மீது மோதுவதாலும் கடுமையான உஷ்ணம் உருவாகிறது. கட்டுப்படுத்தித் தடுப்பதால் சக்தி உருவாகிறது. சுயநல நோக்கத்தைப் பின் தொடர்ந்து செல்லுகிற எல்லாச் சக்தியும் விரயமாகி விடுகிறது. உன்னிடம் திரும்பி வருவதற்கான சக்தியை அது உண்டாக்காது. ஆயின் அதனைக் கட்டுப்படுத்தினால் அது நமது வளர்ச்சிக்குப் பயன்படும். இந்தப் புலனடக்கம் தன்னடக்கமானது. பலம் மிக்க மனோ சக்தியை உண்டாக்கவும், கிறிஸ்துவை அல்லது புத்தரை உருவாக்கிய ஒழுக்கப் பண்பை உண்டாக்கவும் துணை செய்யும்......

......பெரிய ஒரு கோப அலை மனதில் எழுந்தால் அதனை எப்படிக் கட்டுப்படுத்துவது? வெறுமனே அதற்கு எதிரிடையான ஒரு அலையை எழுப்புவதால் கட்டுப்படுத்தலாம். அப்பொழுது அன்பைப் பற்றி நினைக்க வேண்டும். சில சமயம் தாயார், தனது கணவனிடம் கடுங்கோபமாக இருக்கிறாள். அந்நிலையில் அவள் இருக்கும் பொழுது உள்ளே குழந்தை வருகிறது. குழந்தையை அவள் முத்தமிடுகிறாள். பழைய அலை செத்துப்போய் புதிய அலை எழுகிறது. அதுதான் குழந்தையிடம் அன்பு. முதல் அலையை இரண்டாவது அலை ஒடுக்கிவிடுகிறது. கோபத்துக்கு எதிர்ப்பான குணம் அன்புதான். அதுபோலவே திருடுகிற எண்ணம் வந்தால் திருடாமையைப் பற்றி நினைக்க வேண்டும். யாரிடமிருந்தாவது பரிசாக எதையாவது பெறவேண்டுமென்ற எண்ணம் எழுந்தால் அதற்கு எதிர்ப்பான எண்ணத்தால் எண்ணத்தை மாற்றிவிட வேண்டும்.

......மிக ஆழ்ந்த மௌனமாக இருக்கும்போது, தனிமை நிலையில் மூழ்கி இருக்கும்போது அத்த நேரத்தில் தீவிரமான நடவடிக்கையைக் கண்டுபிடித்துச் செய்யக்கூடியவன் லட்சிய மனிதனாவான், அவன் மிகத்தீவிரமான நடவடிக்கைகளுக்கிடையே பாலைவனத்திலுள்ளது போன்ற அமைதியையும் தனிமையையும் அனுபவிப்பான்.

அந்த மனிதன் புலனடக்கத்தின் ரகசியத்தைத் தெரிந்து கொண்டு தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டுள்ளான். பெரிய நகரத்தினூடே அதில் காணப்படும் போக்குவரத்துக் குழப்பக் கூக்குரலிடையே அவன் போகிறான், போகும்போது ஒரு ஒலியும் எட்ட முடியாத குகையில் இருப்பதுபோல அவனது மனம் மிகுந்த அமைதியுடனிருக்கிறது. ஆனால் அதனிடையேயும் அவன் து மனமானது எப்பொழுதுமே தீவிரமாக வேலை செய்கிறது. கர்மயோகத்தின் லட்சியம் இதுதான். இந்நிலையை நீங்கள் எய்திவிட்டால் வேலையின் ரகசியத்தை உண்மையிலேயே கற்றுக் கொண்டுவிட்டீர்கள் எனலாம்.

* * *

**உண்மையான எண்ணங்களின் ஆற்றல்:**

...கௌதம புத்தர், தாம் இருபத்தைந்தாவது புத்தரென அடிக்கடிக் கூறிக்கொள்ளுவதை அவரது வாழ்வில் நாம் படித்திருக்கிறோம். வரலாறு கண்ட புத்தர் தமக்கு முன் சென்றவர்கள் அமைத்த அஸ்திவாரத்தின் மீதுதான் தமது அமைப்பை நிறுவியிருக்க வேண்டும் என்றாலும் அவருக்கு முன்னால் வந்துபோன இருபத்துநான்கு பேர்களையும் வரலாறு அறியாது.

உத்தமமான உயர்ந்த புருஷர்கள் அமைதியாகவும், மௌனமாகவும், வெளிக்குத் தெரியாமலும் இருப்பார்கள். சிந்தனையின் சக்தியை உண்மையில் அவர்களேதான் அறிவார்கள். அவர்களுக்கு ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரியும். அதாவது அவர்கள் ஒரு குகைக்குள் சென்று, கதவுகளை அடைத்துவிட்டு ஐந்து உண்மையான கருத்துக்களை வெறுமனே நினைத்துவிட்டு, மடிந்து போய்விட்டாலும் இந்த ஐந்து எண்ணங்களும் சாசுவதமாக இருக்கும் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரியும். அத்தகைய எண்ணங்கள் மலைகளைக் குடைந்துகொண்டு, கடல்களைக் கடந்துகொண்டு, உலகமெங்கும் பிரயாணம் செய்யும். மனித இதயங்களில் அவை ஆழமாகப் புகுந்து அந்தக் கருத்துக்களை மனித வாழ்க்கையில், நடைமுறையில், வாழ்ந்து காட்டக்கூடிய ஆண்களையும், பெண்களையும் நிர்மாணித்து உயர்த்தும்.

* * *

**நீங்களே ரிஷிகளாக ஆகிவிட வேண்டும்!**

ரிஷிகள் உபதேசித்ததை மட்டும் நீங்கள் கற்றிருந்தால் போதாது. அந்த ரிஷிகள் மறைந்து விட்டார்கள். அவர்களது அபிப்பிராயங்களும் அவர்களுடன் மறைந்து விட்டன. நீங்களே ரிஷிகளாக வேண்டும். இதுவரை பிறந்துள்ள மிகப் பெரிய மனிதர்களைப் போல

நமது அவதார புருஷர்களுக்கு இணையாக நீங்களும் மனிதர்கள் தாம். வெறும் ஏட்டுப் படிப்பினால் என்ன விளைந்துவிடும்? தியாகத்தினால் கூட எதைத்தான் சாதித்துவிட முடியும்? மந்திர தந்திரங்களால் ஆவது என்ன? நீங்கள் உங்கள் கால்களிலேயே நிற்க வேண்டும்.

**உண்மையான மனிதன்:**

ஆண்மை வீர்யமுள்ளவர்களைத் தயாரிக்க இந்தப் புதிய வழிமுறையை நீங்கள் பின்பற்ற வேண்டும். உண்மையான மனிதன் சக்தியின் வடிவமாக இருக்கவேண்டும். அத்துடன் பெண்மையுள்ளமும் படைத்திருக்க வேண்டும். உங்களைச் சுற்றி வாழும் லட்சக்கணக்கான ஜீவன்களைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டும். இருப்பினும் உறுதியுடன் வளைக்க முடியாமலும் நீங்களிருக்க வேண்டும். அத்துடன் கீழ்ப் படிகிற குணமும் உங்களுக்கு இருக்க வேண்டும். வெளிப் பார்வைக்குச் சற்று முரண்பட்ட குணங்களாக இவை தோன்றினாலுங்கூட இந்த நற்குணங்கள் உங்களுக்கிருக்கவேண்டும். உங்களுக்கு மேலுள்ள அதிகாரி உங்களை ஆற்றில் குதித்து முதலையைப் பிடிக்க வேண்டுமென்று கட்டளையிட்டால் முதலில் நீங்கள் கீழ்ப்படிந்து விட்டுப் பிறகு காரணம் கேட்க வேண்டும். கட்டளை தவறாக வந்தாலும் முதலில் கீழ்ப்படிந்து விட்டுப் பிறகு அதை மறுத்துப் பேசுங்கள்.

நாம் பல சம்பிரதாய கோஷ்டிகளாகப் பிரிந்து கிடக்கிறோம். அதிலிருக்கிற தீமை யென்னவெனில், ஒருவனுக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், உடனே அவன் புதிய ஒரு சம்பிரதாயத்தை ஆரம்பிக்கிறான். காத்திருப்பதற்கு அவனிடம் பொறுமையில்லை. ஆகவே உங்கள் சங்கத்திடம் உங்களுக்கு ஆழ்ந்த மதிப்பு இருக்க வேண்டும். அதில் கீழ்ப்படியாமைக்கு இடமே இல்லை......நமது பாசறையில் துரோகிகளுக்கு இடமில்லை. காற்றைப் போல நீங்கள் சுதந்திரமாக இருக்கவேண்டும். அத்துடன் இந்தச் செடியைப் போலவும் நாயைப் போலவும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

**இந்தக் காலத்திற்குத் தேவையானவர்கள் சந்நியாசிகள்:**

சில பேர்கள் வாழ்க்கையிலிருந்து வெளிவந்து, கடவுளுக்காக மாத்திரமே வாழ்ந்து உலக நன்மைக்காகச் சமயத்தைப் பாதுகாக்க வேண்டும். ...துறந்தால், அத்துறவில் உறுதியாக நில்லுங்கள். போரில் நூறுபேர் வீழ்ந்தால் அவர்கள் கையிலுள்ள கொடியை நீங்கள் தாங்கிப் பிடித்து முன்னே கொண்டு செல்லுங்கள். கடவுள் சத்திய வடிவம். யார் தோற்றாலும் பரவாயில்லை. கீழே விழுகிறவன், மற்றொருவனிடம் கொடியைக் கொடுத்து விடட்டும். அவன் அதை கொண்டு முன்னேறட்டும். கொடி ஒருபோதும் கீழே விழாது.

...எளியவர்களான கிருகஸ்தர்கள் என்ன பண்ணுவார்கள் பாவம்! அவர்களுக்குச் சிறிய ஒரு வாழ்க்கை உள்ளது. துறவிகள், சிவனின் பூத கணங்கள்தான் இதைச் செய்யவேண்டும். 'ஹர! ஹர! சம்போ!'' என்ற முழக்கத்தால் வானத்தைக் கிழிக்க வேண்டியவர்கள் சந்நியாசிகளே.

...வருங்காலத்தைப் பற்றி எனது நம்பிக்கை இளைஞர்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஒழுக்கமுள்ள, புத்திசாலிகளான, பிறருக்குத் தொண்டு புரிவதற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து விடுகிற, கீழ்ப்படிதலுள்ள இளைஞர்கள் வேண்டும். எனது கருத்துக் களை நடைமுறையில் சாத்தியமாக்குவதற்காகத் தமது வாழ்க்கையைத் தியாகம் செய்து அதன் மூலம் நமக்கும், பொதுவாகத் தமது நாட்டுக் கும் நன்மை உண்டாக்க வேண்டும். மற்றபடி, சாதாரணத் தரத்தி லுள்ள பையன்கள் கோஷ்டி கோஷ்டியாக வந்து கொண்டிருக்கிறார் கள்; வந்து கொண்டுதானிருப்பார்கள். அவர்கள் முகத்தில் மந்த சுபாவமானது எழுதி ஒட்டப் பட்டிருக்கிறது. அவர்களது உடல் வேலைக்குப் பயனின்றி பலவீனமாக உள்ளது; மனதில் தைரியம் இல்லை. அவர்களைக் கொண்டு எதைத்தான் சாதிக்க முடியும்? நசிகே தனின் நம்பிக்கையுடன் பன்னிரண்டு சிறுவர்கள் கிடைத்தால் இந்த நாட்டின் சிந்தனையையும், அபிலாஷை நாட்டங்களையும் புதியதொரு பாதையில் என்னால் திருப்பி விட்டுவிட முடியும்.

நல்ல திறமைசாலிகளாக எனக்குத் தோன்றுகிறவர்களில் சிலர் திருமணத்தளையால் தம்மை விலங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் உலக ரீதியான பெயர், புகழ் அல்லது செல்வத்தைத் திரட்டுவ தற்தாகத் தம்மையே விற்றுக் கொண்டு விட்டார்கள். மீதியிருக்கிற பெரும்பான்மை மக்கள், எந்த ஒரு உயர்ந்த கருத்தையும் வாங்கிக் கொள்ளத் தகுதி திறமையற்றவர்களாக உள்ளனர்.

ஆயினும்கூட நான் நம்பிக்கையை முற்றிலும் இழந்து விட வில்லை என்பது உண்மைதான். ஏனெனில் இறைவன் திருவுள்ளப் படி இந்தச் சாதாரணப் பையன்களிடமிருந்தே காலப்போக் கில், பணியிலும் ஆத்மிகத்திலும் சிறந்த மகாவீரர்கள் உதித்து வருங்காலத்தில் எனது கருத்துக்களை நடைமுறையில் நடத்திக் காட்டுவார்கள்.

படித்த இளைஞர்களை ஒன்று திரட்டி இணைக்க வேண்டும்.

படித்த இளைஞர்களிடையே பணி புரியுங்கள். அவர்களை ஒன்று திரட்டி இணையுங்கள். மகத்தான செயல்களை, மகத்தான தியாகங்களின் மூலமாகவேதான் நிறைவேற்ற முடியும். ...வேலை செய்யுங்கள்; கற்பனையுள்ள கருத்தை, திட்டத்தை நடைமுறைப்

படுத்துங்கள். எனது வீரமிக்க, உயர்ந்த நல்ல ஆத்மாக்களே! சக்கரத்தில் உங்களது தோளைக் கொடுத்துத் தள்ளுங்கள். பெயர், புகழ் அல்லது வேறு எந்தப் பொருளற்ற விஷயத்தையும் எதிர்பார்த்துத் திரும்பிப் பாராதீர்கள், நில்லாதீர்கள். பரிபூரணமாக சமர்ப்பணமாகி வேலை செய்யுங்கள். "புல்லைக்கூடக் கயிருகத் திரித்துப் பின்னி இணைத்தால் அதைக்கொண்டு மத யானையையும் கட்டிப்போட்டுவிட முடியும்" என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் எனது பிரார்த்தனை !**

உலகக் குருவாகி, உலகமெல்லாம் ஒன்றுதான் என்ற இணைப்புச் செய்தியைப் பிரசாரம் செய்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் உங்களது இதய கமலத்தில் வாசம் செய்ய வேண்டும்; அதன்மூலம் உங்களது விருப்பங்களெல்லாம் ஈடேறிய பின்னர் கலங்காத உள்ளத்துடன், மோகமென்னும் பயங்கரமான பெருங் கடலிலிருந்து மற்ற மக்களை மீட்க முழு ஆற்றலுடன் நீங்கள் முயல வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

பராக்கிரமம் உங்களை ஆட்கொள்ளட்டும். கோழை அல்ல, வீரன்தான் முக்தியை எளிதில் எட்டிப்பிடித்து எய்த முடியும். வீரர்களே ! வரிந்து கச்சைக் கட்டிக்கொள்ளுங்கள். ஏனெனில் உங்கள் முன் எதிரிகள் நிற்கிருர்கள். மோக வெறியாகிற பயங்கரப் படை முன் நிற்கிறது. "மகத்தான சாதனைகளுக்கு முட்டுக்கட்டையாக ஏராளமான இடையூறுகள் நிறைந்திருக்கும்" என்பது உண்மைதான்; சந்தேகமில்லை. இருப்பினும்கூடக் குறிக்கோளை அடைய முழுச் சக்தியுடன் நீங்கள் முனைய வேண்டும்.

மேலே செல்லுங்கள் ! முன்னேறுங்கள் !! வீரமிக்க ஆன்மாக்களே !!! விலங்குகளால் கட்டுண்டுக் கிடக்கிறவர்களை விடுதலை செய்ய, துர்ப்பாக்கியமான நிலையில் வாழ்கிறவர்களுடைய துயரச் சுமையைக் குறைக்க, அறிவீனம் நிறைந்த உள்ளங்களின் காரிருளை நீக்க, ஒளியூட்ட முன்னேறுங்கள். 'அச்சமற்றிரு" என்று வேதாந்தக் கொள்கை முரசடித்து உணர்த்துகிறது பாருங்கள் ! கம்பீரமான அவ்வொலி உலகில் வாழ்கிற எல்லா மக்களுடைய உள்ளங்களிலுமுள்ள முடிச்சுச் சிடுக்குகளை அவிழ்த்து விடட்டும்.

**ஹிந்துக்களே ! மயக்கந்தெளிந்து எழுங்கள் :**

'உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வரான்னிபோதத்"—"எழுந்திரு, விழித்திரு, குறிக்கோளை அடையுமுன் நில்லாதே" என்று ஒவ்வொரு ஆத்மாவையும் அறைகூவி அழைப்போம். எழுங்கள் ! பலவீனமாகிற இந்த மனமயக்கத்திலிருந்து எழுந்திருங்கள். உண்மையில்

எவனுமே பலவீனனல்லன். ஆத்மா முடிவில்லாதது; சர்வசக்தி தான், எல்லாம் உணர்ந்ததாகும். எழுந்து நில்லுங்கள். உங்கள் சுயசக்தியை வற்புறுத்துங்கள்: உங்களுக்குள் உறைகிற தெய்வத்தைப் பிரகடனம் பண்ணுங்கள். அவரை மறக்காதீர்கள். அளவுக்கு மீறிய செயலின்மை, வரம்பு கடந்த பலவீனம், மிதமிஞ்சிய மோகன மயக்கம் - இவை நமது இனத்தவரிடையே சூழ்ந்திருந்தது; இன்றும் சூழ்ந்துள்ளது.

இன்றைய ஹிந்துக்களே! தாமாகவே மயக்கந் தெளிந்து எழுந்திருங்கள். அதற்கான வழி உங்கள் புனித நூல்களில் காட்டப்பட்டுள்ளது. உங்களது உண்மையான ஸ்வரூபத்தை நீங்களே கற்றுணருங்கள்; ஒவ்வொருவருக்கும் அவரவர்களது ஸ்வரூபத்தைக் கற்பியுங்கள். உறங்குகிற ஆத்மாவை அறைகூவி அழையுங்கள். எப்படித்தான் அது விழித்தெழுகிறது பாருங்கள்! உறங்குகிற இந்த ஆத்மா விழித்தெழுந்து வேலை செய்யத் தொடங்கினால் சக்தி வரும்; புகழ் ஓங்கும்; நல்ல குணங்களெல்லாம் தோன்றும்; மிகச் சிறந்தவையெல்லாமே வந்தெய்தும்.

**மீண்டும் இளமைத் துடிப்புப் பெற்ற, புகழ் ஓங்கிய பாரதம்:**

வருங்காலத்துக்குள் நான் புகுந்து பார்க்கவில்லை; அதில் எனக்கு அக்கறையுமில்லை. ஆனால் ஒரு காட்சியை மட்டும் தெள்ளத் தெளிவாக உயிர்த்துடிப்புடன் நான் காண்கிறேன். புராதனமான அன்னை மீண்டும் எழுந்து விட்டாள். தனது அரியணையில் அமர்ந்திருக்கிறாள். மீண்டும் இளமையெழிலுடன், முன் கண்டிராத புகழ்ச் சிறப்புடன் அமர்ந்து கொண்டிருக்கிறாள். சாந்தியும், அருளும் கலந்த மொழியால் உலகுக்கு அவளைப் பிரகடனம் செய்யுங்கள்.

31 JAN 2002
MADRAS-600